# பன்னாட்டு உறவுகள்

## Unit - I

பன்னாட்டு உறவின் இயல்புகள் - தேசிய சக்தியும் தேசிய நலன்களை வளர்க்கும் கருவிகளும் - அரசியல வெல்திறன் - முதல் உலகப்போருக்கு முன் ஐரோப்பாவின் நிலை - ஐரோப்பிய நாடுகளின் கூட்டணிகள் - முதல் உலகப்போர் - காரணங்கள் போக்கு, விளைவுகள் - ரஷ்ய புரட்சி - அமைதி உடன்படிக்கைகள் 1919 - 1924 - சர்வதேச சங்கம்.

## Unit - II

அமைதி உடன்பாட்டின் தன்மையும் - அமைதி உடன்பாட்டில் 4 வல்லரசுகளின் பங்கு - உட்நோவில்சனின் பங்கு - அமெரிக்காவும் அமைதி உடன்பாடும் - வாஷிங்டன் கடற்படை மாநாடுகள் 1921 - 1922 - போர் நஸ்ட்ட ஈட்டுத் தொகையும் கூட்டணி நாடுகளின் கடன் - ஆயுதக் குறைப்பும் - பாதுகாப்பு பிரச்சினைகளும் 1919 - 1931 - பிரன்சின் பாதுகாப்பு தேடல் - 1919 - 1924 - ஜெனிவா அறிக்கை - லொக்கார்னோ ஒப்பந்தம் 1925 - கொல்லாக் - பிரையாண்ட் ஒப்பந்தம் அல்லது பாரீஸ் ஒப்பந்தம் 1925 - மஞ்சூரியன் சிக்கல் 1931 - உலக ஆயுதம் குறைப்பு மாநாடுகள் 1931.

## Unit - III

பாஸிச்தின் எழுச்சியும் - பன்னாட்டு உறவில் அதன் தாக்கம் - நாலா சத்தின் எழுச்சியும் அதன் விளைவுகளும் - ஸ்பெயினின் உள்நாட்டுப்போர் 1936 - இரண்டாம் உலகப்போர் காரணங்கள் - போர்க்கால மாநாடுகள்.

## Unit IV

அமெரிக்க ஐக்கிய நாடுகளின் வெளியுறவுக் கொள்கை - இங்கிலாந்தின் வெளியுறவுக் கொள்ளை - இந்தியாவின் வெளியுறவுக் கொள்கை - சீனாவின் வெளியுறவுக் கொள்கை - ஜப்பானின் வெளியுறவுக் கொள்கை - ஆப்பிரிக்காவும் உலக நடவடிக்கையும் - லத்தீன அமெரிக்காவும் உலகமும் - மூன்றாவது உலக நாடுகளும் பொருளாதார நிலையும் - காஷ்மீர் பிரச்சனையும் - வியட்னாம் பிரச்சனை - 1945க்குப்பின் படைக்குறைப்பு.

## Unit - V

உலகநாடுகளின் சங்கமம் - பொதுநல அரசுகள் - பிராந்திய கூட்டுகள் - உலக அமைதி பிரச்சினை - கூட்டுச் சேரா நாடுகள் - சார்க் நாடுகளின் அமைப்பு - பிரச்சினைகளும் உலக அமைதியும் - உலக அரசு அமைத்தலின் சாத்தியக் கூறுகள் - எதிர்கால மனித இனம் - ஐரோப்பிய கூட்டமைப்பு - பன்னாட்டுறவின் புதிய உத்திகள் - வளைகுடாப் போர் - அரபுநாடுகளின் எண்ணெய் வெல்திறன்.

# பன்னாட்டுறவின் இயல்புகள்
# (NATURE OF INTERNATIONAL RELATION)

**பன்னாட்டுறவு – பொருள் விளக்கம் :**

“எந்த மனிதனும் தன்னந்தனி தீவு அல்ல. தனியாக வசிப்பவன் மிருகமாக இருக்கவேண்டும் அல்லது அசாதாரண பிறவியாக இருக்க வேண்டும். 2,500 ஆண்டுகளுக்கு முன் கிரேக்க தத்துவஞானி கூறிய இவ்வாசகம், இன்று நாடுகளுக்கும் பொருந்தும். எந்த நாடும் தன்னந்தனியாக இருக்க முடியாது. மனிதன் எவ்வாறு சமூகப் பிராணியோ அவ்வாறே நாடுகளும் உலக சமூகத்தன் பிரிக்கமுடியாத ஓர் அங்கம்தான். நாடுகள் எவ்வாறேனும் அண்டை நாடுகளுடன் உறவுகொண்டே ஆகவேண்டும். தொழிற்புரட்சியானாலும், அறிவியல் கண்டுபிடிப்புக்களாலும், போக்குவரவு சாதனங்களில் ஏற்பட்ட புரட்சியினாலும் அனைத்து நாடுகளும் அண்டை நாடுகளாகிவிட்டன. அண்டை நாடுகளுடன் கொண்ட உறவு இப்போது அகில நாடுகளோடு கொண்ட உறவாக வளர்ச்சியடைந்துவிட்டது. இவ்வாறு பன்னாட்டு உறவின் வரலாறு தொடங்குகிறது. பொருளியல் ஈடுபாடு, வாணிபத் தேவை, பன்னாட்டுத் தொடர்பு, அரசியல் ஆதிக்கம், அறிவியல் பரிமாற்றம் ஆகியவை பன்னாட்டு உறவை இராஜதந்திர உறவாக்கிவிட்டன.

தொடக்கக் காலத்தில் ‘**வலிமைதான் நீதி**’ **(Might is right)** என்ற **காட்டுச் சட்டம் (Law of Justice)** பன்னாட்டுறவில் பின்பற்றப்பட்டது. மெலியாரை வலியார் அடித்துப் பிடுங்கித் திண்பது அரசியல் நியதியாகக் கருதப்பட்டது. அதனால் பகைமையும், படையெடுப்புகளும், பஞ்சமா பாதகங்களும்தான் பன்னாட்டுறவின் நடைமுறையாக இருந்தன. நாளடைவில் இக்கருத்து வலிமை இழந்தது. பரஸ்பரம் பயனுள்ள தொடர்பு அதிகரித்தது. அதனால் பன்னாட்டுறவில் சில நெறிமுறைகள் வகுக்கப்பட்டன.

**பன்னாட்டுறவின் இயல்பு :**

**(1)** பன்னாட்டுறவானது பன்னாட்டுப் பிரச்சனைகளைத் தீர்க்கும் வழிவகை அல்ல. அப்பிரச்சனைகளுக்குத் திட்டமிட்ட பொருள் நோக்கு முறையிலான அணுகுமுறைகளைக் கொண்டதாகும் என பால்மர் & பெர்க்கின்ஸ் கூறுகின்றனர்.

**(2)** பிரிக்வி மாடிசன் என்பார், ‘நாட்டெல்லையைக் கடந்த அனைத்துப் பிரச்சனைகளும் பன்னாட்டுறவின் பாற்பட்டன’ என்று கூறுகிறார். ஆனால், ஒரு நாட்டின் வெளியுறவு மட்டும் பன்னாட்டுறவு ஆகாது.

**(3)** தனது தேசிய நலநன பாதிக்காமல், பன்னாட்டு நலநனப் பேணுவதே பன்னாட்டுறவின் அடிப்படையாகும்.

**(4)** நாடுகள் ஒன்றையொன்று எந்த அளவிற்கு அனுசரித்துச் செல்லவேண்டும் என வரையறுப்பதே பன்னாட்டுறவு.

**(5)** உரசலைத் தவிர்த்து ஒத்துழைப்பை வளர்ப்பதுதான் பன்னாட்டுறவின் பண்பு.

**(6)** உலக நாடுகளில் வாழும் மக்கள் அனைவரும் ஒரே மனித சமுதாயத்தின் அங்கங்கள் என்ற அடிப்படையில் உருவானதுதான் பன்னாட்டுறவு. உலகளாவிய சகோதரத்துவ மனப்பான்மை, அதன் உண்மையான வலிமை.

**(7)** கூட்டுறவும் ஒத்துழைப்பும் அதன் செயல்பாடுகள். வெறும் அரசியல் தொடர்பு மட்டும் பன்னாட்டுறவு ஆகாது.

**(8)** பொருளாதார உறவு, கலாச்சாரத் தொடர்பு ஆகியவைகளும் பன்னாட்டுறவின் அம்சங்கள்தான். சமயப் பரப்பாளர்களின் சுற்றுப்பயணங்கள், செய்தித் தாட்கள், வானொலி, திரைப்படம், தொலைக்காட்சி ஆகியவைகள் அத்தொடர்பை மேலும் வலுப்பெறச் செய்கின்றன.

**(9)** நாடுகளின் இறைமை, நாடுகளிடையே சமத்துவ உரிமை ஆகியவைகளும் பன்னாட்டுறவை நிர்ணயிக்கும் அம்சங்களாகும்.

**(10)** தேசியம், சர்வதேசியம் என்ற இரு தண்டவாளங்களில் செல்லும் ரயில்வண்டிதான் பன்னாட்டுறவு. இரு தண்டவாளங்கள் வளைந்தாலும் நெளிந்தாலும், ஒன்றுக்கொன்று இடையே உள்ள தூரம் மாறுபடாமல் இருந்தால் விபத்து நடக்காது. பன்னாட்டுறவு வண்டி வெற்றிப் பவனி வரும்.

தேசியம் சர்வதேசியத்திற்கு எதிரானது அல்ல. ஏனென்றால், சர்வதேசியத்தில் தேசியமும் அடங்கும்.

**(11)** பிற நாடுகளின் அதிகார உரிமைகளைப் பாதிக்காமல் ஒரு நாடு எவ்வாறு தன் அதிகார உரிமைகளைப் பாதுகாப்பது எனக் கூறுவதுதான் பன்னாட்டுறவு. சுயநலத்தில் பொதுநலம் பேணும் அரியதொரு இயல்பினையுடையது.

**(12)** பன்னாட்டுறவு என்பது பன்னாட்டு நிறுவனங்களால் கண்டுபிடிக்கப்பட்டு போதிக்கப்படுவது அல்ல. நாடுகள் ஒன்றையொன்று சார்ந்திருக்கின்றன என்ற அடிப்படை உண்மையிலிருந்து தானாகத் தோன்றி வளர்ந்ததுதான் பன்னாட்டுறவு.

**(13)** இது பகைமை உணர்வு கொண்டதாயிருக்கலாம். பண்பாடுள்ள நட்பாகவும் இருக்கலாம்.

**பன்னாட்டுறவின் பயன் :**

பன்னாட்டுறவின் முதிர்ந்த நிலைதான் பன்னாட்டு நிறுவனங்கள். ஐக்கிய நாடுகள் சபையும், யுனெஸ்கோ போன்ற அதன் சிறப்பு நிறுவனங்களும், பன்னாட்டுறவின் பரிணாம வளர்ச்சியாகும். அரபு லீக், ஆப்பிரிக்க ஒற்றுமை நிறுவனம், அமெரிக்க நாடுகள் கழகம், சார்க் ஆகியவை பன்னாட்டுறவு ஈன்றெடுத்த குழந்தைகள். ஐரோப்பியப் பொதுச் சந்தையும் அணிசேரா நாடுகள் இயக்கமும் பன்னாட்டுறவு என்னும் சோலையில் பூத்தச் சின்ன மலர்கள். ஆதிக்க வெறியும், ஆக்கிரமிப்புப் போர்களும் பன்னாட்டுறவு சீர்கெட்டுப் போனதன் விளைவுகள். உலக அமைதியும், உலக மக்கள் சமூக முன்னேற்றமும், பன்னாட்டுறவின் குறிக்கோள்.

# தேசிய சக்தியும் தேசிய நலன்களை வளர்க்கும் கருவிகளும்

## தேசிய சக்தி (National Power) :

உலக நாடுகளிடையே ஒரு நாட்டின் நிலை அதன் அரசியல் சக்தி மூலம் நிர்ணயிக்கப்படுகிறது. ஒரு முழு இறைமை வாய்ந்த நாடு தனது தேசிய நலன்களை பாதுகாப்பதற்குப் பயன்படுத்தும் வலிமைமிகு ஆற்றல்தான் அரசியல் சக்தி எனப் பேராசிரியர் ஹார்ட்மேன் கூறுகிறார். ஆனால், ஒரு நாட்டின் சக்தியானது என நிர்ணயிப்பது மிகவும் கடினம். ஏனென்றால், அது பல்வேறு ஏதுக்களையும் அம்சங்களையும் கொண்டுள்ளது. தேசிய சக்தியின் அம்சங்கள் நிலைத்து நிற்பவை அல்ல. தொழில் நுட்ப மற்றும் இயற்கை வசதிகளைப் பொறுத்து அது மாறுபடும் தன்மையுடையது. எனினும், கீழ்க்கண்ட அம்சங்கள் ஒரு நாட்டின் சக்தியை நிர்ணயிக்கின்றன.

### 1. புவியியல் :

ஒரு நாட்டின் சக்தியுடன் அதன் பன்னாட்டுறவுக் கொள்கையை நிர்ணயிப்பதும் புவியியல்தான். எனவேதான் நெப்போலியன் ஒரு நாட்டின் அயலுறவுக் கொள்கையை வகுப்பது புவியியல்தான் என்று குறிப்பிட்டுள்ளார். சான்றாக, கடலால் சூழப்பட்ட பிரிட்டன், ஜப்பான், அமெரிக்கா ஆகிய நாடுகள் வெளிநாட்டாரின் உடனடித் தாக்குதல் மற்றும் ஆக்கிரமிப்பிலிருந்து பாதுகாப்பு பெறுகின்றன. போலந்தின் புவியியல் அமைவிடம் அதன் பலவீனத்தைச் சுட்டிக் காட்டுகிறது. ஒரு இராணுவ கேத்திரலத்தில் அமைந்துள்ள நாடு வல்லரசின் கழுகுக் கண்களுக்கு இலக்காகும். மற்றும் நாட்டின் பரப்பு, தட்பவெப்ப நிலையும் அதன் சக்தியை நிர்ணயிக்கின்றன. இரஷ்யாவின் பரப்பும் தட்பவெப்ப நிலையும்தான் அன்னியப் படைகளுக்கு பெரும் இடையூறாக அமைந்தன. இந்தியாவிலுள்ள சுதேச அரசுகளெல்லாம் பிரிட்டிஷ் ஆக்கிரமிப்பிற்கு இரையான போது, நேபாளம் மட்டும் தப்பித்தது அதன் புவியியல் அமைவிடத்தினால்தான்.

### 2. மக்கள் தொகை :

ஒரு நாட்டின் மக்கள் தொகைப் பெருக்கம், அந்நாட்டின் வலிமைக்கும் பலவீனத்தற்கும் காரணமாயிருக்கிறது. ஒரு தனி மனிதனின் ஆற்றலை எந்த அளவிற்கு பயன்படுத்துவது, மேலும் ஆக்கரீதியான திறமையை வெளிப்படுத்துவதற்கு எந்தவகை வாய்ப்பு இருக்கிறது என்பதைப் பொறுத்து அந்நாட்டின் வலிமை அமைகிறது. மிகவும் மக்கள் தொகை குறைந்த இஸ்ரேல் மிகவும் வலிமைப் பெற்றுத் திகழ்வதற்குக் காரணம், மனித ஆற்றல் அனைத்தையும் பயன்படுத்துவதுதான்.

### 3. மூலவளம் :

ஒரு நாட்டின் சக்தி, அந்நாட்டின் நிலவளம், மழைவளம், சுரங்கவளம் ஆகியவற்றைப் பொறுத்து அமைகிறது. இரும்பு, நிலக்கரி ஆகியன ஒரு நாட்டின் ஆலைத் தொழில் வளர்ச்சிக்கு மூலக்காரணமாக இருக்கின்றன. பெட்ரோலியம் இன்று இன்றியமையா மூலப்பொருளாகக் கருதப்படுகிறது. அமெரிக்கா இன்று வல்லரசாக விளங்குவதற்குக் காரணம், அந்த நாட்டில் ஏராளமான அளவில் கிடைக்கும் மூலப் பொருட்கள் தாம். வறண்ட

மழையற்ற பாலைவனமான குவைத்தும், பிற வளைகுடா நாடுகளும், வளம் கொழிக்கும் நாடுகளாக விளங்கக் காரணம் அவற்றின் பெட்ரோலிய வளம்தான்.

**4. தொழில் நுட்பம் :**

தொழில் நுட்பம், செய்தி மற்றும் போக்குவரத்துச் சாதன நுண்கருவிகள், அறிவியல் நுட்பம், படைக் கருவி நுட்பங்கள் ஆகியவை ஒரு நாட்டின் சக்தியை நிர்ணயிக்கும் மிக முக்கிய ஏதுக்களாக விளங்குகின்றன. பிற மூலவளங்கள் அதிக அளவில் இல்லாத ஜப்பானும், ஜெர்மனியும் வலிமை பெற்று விளங்குவதற்கு இதுதான் காரணம்.

**5. ஒருங்கிணைக்கும் ஆற்றல் தலைமை :**

அனைத்து மனித வளங்களையும், மூல வளங்களையும், தொழில் நுட்பத் திறன்களையும் ஒன்று திரட்டி, நாட்டின் ஆக்க ரீதியான பணிகளில் ஈடுபடுத்துவது, தொலைநோக்குக் கூர்மையும், செயலாற்றல் திறனும், ஒருங்கிணைக்கும் சக்தியும், ஆற்றமிகு தலைமையும்தான். நல்லதற்கோ கெட்டதற்கோ பிரான்சில் நெப்போலியனின் தலைமையில் ஜெர்மனியில் ஹிட்லரின் தலைமையும் அந்நாடுகளை அசாதாரன சாதனை புரிய வைத்தன. இரண்டாம் உலகப்போரில் நேச நாடுகளின் இறுதி வெற்றிக்கு சர்ச்சிலின் ஒருங்கிணைக்கும் தலைமைதான் அடிப்படைக் காரணம்.

**6. தேசிய மனப்பாங்கும், ஒழுங்குணர்வும் :**

வரலாறு மற்றும் சமூகப் பழக்கவழக்கங்கள், அனுபவம் ஆகியவற்றால் இயல்பாகவே தோன்றும் ஒரு நாட்டு மக்களின் மனப்பான்மையும் தேசிய சக்தியை உருவாக்குவதில் முக்கியப் பங்கு வகிக்கின்றன. ஜப்பானியர்களின் கடின உழைப்பு மனப்பான்மையும், ஜெர்மானியர்களின் ஒழுங்கும், கட்டுப்பாடும், அந்நாட்டின் தேசிய சக்தியின் அடிப்படையகளாக விளங்கின.

தனிமனித உரிமைக்கு முக்கியத்துவம் கொடுத்து வரும் பிரிட்டன், பிரான்சு, அமெரிக்கா ஆகிய நாடுகளில் சர்வாதிகார வளர்ச்சிக்கு வாய்ப்பேயில்லை. நாட்டின் ஒருமைப்பாட்டிற்கு ஆபத்து நேரும்போது ஆக்கிரமிப்புப் போர்க் காலத்திலும் மக்கள் ஒன்று திரண்டு அரசோடு ஒருங்கிணைந்து நிற்கவேண்டுமென்றால் இயல்பான நாட்டுப்பற்று அவர்கள் உள்ளத்தில் மேலோங்கியிருக்க வேண்டும்.

**7. படை வலிமை :**

அனைத்து நாடுகளும் இறுதியாக தங்கள் சக்தியையும் ஆற்றலையும் படை நிறுவனங்கள் மூலமாகத்தான் வெளிப்படுத்த வேண்டியுள்ளன. படைப்பயிற்சி, படைக்கலன்கள், போர் நுட்பங்கள், படைத்தளங்கள் ஆகியவை படை வலிமையை நிர்ணயிக்கும் அம்சங்களாகும். சக்தி வாய்ந்த எதிரிமுன் வலிமையைப் பெருக்கிக் கொள்ள சிறு நாடுகள் கூட்டுச் சேர்ந்து கொள்ளலாம். இரஷியாவின் வலிமையைக் கண்டு அஞ்சிய மேற்கு ஐரோப்பிய நாடுகள் நேட்டோ என்ற இராணுவ அணியாக ஒன்று திரண்டமை இதற்கு தக்கதோர் எடுத்துக்காட்டு.

தேசிய சக்திக்கு அடிப்படையாக விளங்கும் புவியயல் தன்மை, மக்கள் தொகை, மூலவளம், தொழில்நுட்பம், ஒருங்கிணைக்கும் ஆற்றல் மிகு தலைமை, நல்லதொரு தேசிய

மனப்பாங்க, படைவலிமை ஆகியவற்றை செம்மைப்படுத்தி போற்றுவதன் மூலம் தேசிய சக்தியை வளர்க்கலாம்.

## அரசியல் வெல்திறன் (அரசியல் விவேகம்) (DIPLOMACY)

**“அரசியல் சூழ்ச்சி** அல்லது **விவேகம் (Diplomacy)** என்ற பதத்திற்கு பல்வேறான பொருள் விளக்கங்கள் அளிக்கப்பட்டுள்ளன. ஹெரால்டு நிக்கல்சன் என்ற அரசியல் அறிஞர், ‘‘அரசியல் விவேகம்’’ (Diplomacy) என்ற ஒரு நூல் எழுதியுள்ளார். அந்நூலில் அரசியல் விவேகம் பொதுவாக ஐந்து சொற்களை குறிப்பாகக் கொண்டுள்ளது என்று கூறியுள்ளார். (1) வெளிநாட்டுக் கொள்கையுடன் நெருங்கிய தொடர்பு கொண்டதாக இது காணப்படுகிறது. (2) நாடுகளுக்கிடையேயான பேச்சுவார்த்தையை இது குறிக்கிறது. (3) நாடுகளுக்கிடையேயான பேச்சுவார்த்தையை ஒழுங்குபடுத்தி நடத்தும் அமைப்பு முறையை இது குறிப்பிடுகிறது. (4) இது வெளிநாட்டுச் சேவை என்ற பொருளையும் உணர்த்துகிறது. (5) பன்னாட்டரங்கில் பேச்சுவார்த்தை திறம்பட நடத்தும் திறனை குறிப்பாக இச்சொல் உணர்த்துகிறது. சுதந்திர அரசுகளின் அரசாங்கங்களுக்கிடையேயான அதிகாரப்பூர்வமான உறவுகளை அறிவார்ந்த அளவில் சாதுர்யமாகச் செயல்படுத்துவதலை அரசியல் விவேகம் குறிக்கிறது என்று சர்.ஏர்னஸ்ட் சேட்டன் என்ற அறிஞர் கூறியுள்ளார்.

தற்கால நடைமுறைக்கு இப்பொருள் விளக்கங்கள் பொருந்தாது என்று பலராலும் நிராகரிக்கப்பட்டுள்ளன. பன்னாட்டு உறவுகளைபேச்சுவார்த்தைகளின் மூலம் நிர்வகிப்பது அரசியல் விவேகம் என்று தற்காலத்தில் பொருள் விளக்கம் கொடுக்கப்பட்டுள்ளது. இவ்வரசகளை தூதுவர்கள் சீரமைத்து மேலாண்மை செய்கிறார்கள். பொதுவான நிலை, விசேட நிலை என இரு நிலைகளில் அரசியல் விவேகத்திற்கு குயின்சிரைட் என்பார் பொருள் விளக்கம் அளித்துள்ளார். (1) பேச்சுவார்த்தைகளின் மூலம் இணங்க வைத்தல் அரசியல் விவேகம் என்று பொதுவான பொருள் விளக்கமும் இதற்கு அளிக்கப்பட்டுள்ளது. (2) தேசிய நலனைக் கருத்தில் கொண்டு ஈடுபாட்டுடன் பன்னாட்டு உறவினைச் செயல்படுத்துதல் அரசியல் விவேகம் என்று விசேட பொருள் விளக்கம் கூறுகிறது. போர் போன்ற பிரச்சனைகளை பேச்சுவார்த்தைகளின் மூலம் தவிர்த்தல் அரசியல் விவேகத்தின் முக்கியக் கடமையாக இருக்கிறது.

ஒரு நாட்டின் வெளியுறவுக் கொள்கையைச் செயல்படுத்தும் முறை அரசியல் விவேகம் என்று தற்காலத்தில் சொல்லப்படுகிறது. வெளியுறவுக் கொள்கையை உருவாக்கலும் அரசியல் விவேகத்தில் அடங்குகிறது. சுருங்கக்கூறின், நாடுகளுக்கிடையேயான உறவுகளை இது நிர்வகிக்கிறது. பன்னாட்டு அரசியலில் நாடுகள் தங்களுடைய நலநன வளர்க்கவும் வெளியுறவுக் கொள்கையினை எய்தவும் பல வகையான நடவடிக்கைகளை மேற்கொள்கின்றன. இவ்வகை நோக்கங்களை எய்த நடக்கும் போராட்டங்களில் அரசியல் விவேகத்தின் மூலம் கருத்து வேறுபாடுகள் அகற்றப்பட்டு சமூகநிலை தோற்றுவிக்கப்படுகிறது. ஒரு மனிதனுக்கு மூளை எவ்வளவு முக்கியமானதோ, அதைப்போன்று ஒரு நாட்டிற்கு அரசியல் விவேகம் முக்கியமான ஒன்றாகக் கருதப்படுகிறது.

இருபதாம் நூற்றாண்டின் அரசியல் விவேகத்தில் மூன்று முக்கியக் காரியங்களைப் பார்க்க முடிகிறது என்று ஹெரால்டு நிக்கல்சன் என்ற அறிஞர் கூறியுள்ளார். அவை : (1) தேசியச் சமூக அமைப்புக்களின் வளர்ச்சி, (2) பொதுமக்கள் கருத்தன் முக்கியத்துவம்,

(3) செய்தித் தொடர்பில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் என்பவையாகும். தேசிய சமூக அமைப்புகளின் வளர்ச்சி அரசியல் விவேகத்தினுடைய தேவையை உணர்த்துகிறது. பொதுமக்கள் கருத்தின் முக்கியத்துவம் அரசியல் விவேக நடவடிக்கைகளில் உயர்குடியினருக்கு இருந்த செல்வாக்கினைக் குறைத்தது. செய்தித் தொடர்புகளில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் அரசியல் விவேகிகள் அல்லது தூதுவர்களை செய்திகளை சுமந்து செல்லும் பணியாளர்களாக மாற்றியுள்ளது. தூதுவர்களின் உதவியின்றி நாட்டின் தலைவர்கள் ஒருவரோடொருவர் தொடர்புகளை ஏற்படுத்தி செய்திகளைப் பரிமாறிக் கொள்கின்றனர்.

### அரசியல் விவேகமும் வெளிநாட்டுக் கொள்கையும் :

இவ்விரண்டிற்கும் சில தொடர்புகள் இருந்தாலும் இரண்டும் ஒன்றிற்கொன்று வேறுபட்டவை. (1) வெளிநாட்டுக் கொள்கை வெளிநாட்டு உறவிற்குத் தேவையான செயல்பாட்டு அம்சங்களைக் கொடுக்கிறது. (2) வெளிநாட்டுக் கொள்கையை செயல்படுத்த உகந்த அமைப்பினையும் பணியாளர்களையும் அரசியல் விவேகம் அளிக்கிறது. வெளிநாட்டுக் கொள்கையை உருவாக்கலில் அரசியல் விவேகிகளுக்கு நேரடிப் பங்கு கிடையாது. தங்களுடைய நாடுகளின் வெளியுறவுத் துறை உருவாக்கும் கொள்கைகளை அரசியல் விவேகிகள் செயல்படுத்துகிறார்கள். அரசியல் விவேகமும் வெளிநாட்டுக் கொள்கையும் ஒன்றிலிருந்து ஒன்று வேறுபட்டிருந்தாலும் இரண்டும் ஒன்றிற்கொன்று நெருங்கிய தொடர்பு கொண்டவை. (3) வலுவற்ற அரசியல் விவேகம் ஆற்றல்மிக்க வெளிநாட்டுக் கொள்கையை செயலிழக்கச் செய்கிறது. (4) வலிமைமிக்க அரசியல் விவேகம் வெளிநாட்டுக் கொள்கையின் குறைபாடுகளை இலகுவாக அகற்றுகிறது. (5) வெளிநாட்டுக் கொள்கை வெளியுறவு சம்பந்தமான செயல் திட்டத்தை வழங்குகிறது. அரசியல் விவேகம் அச்செயல் திட்டத்தின் செயல்பாட்டிற்கான வழிமுறைகளை வகுத்தளிக்கிறது.

### அரசியல் விவேகிகள் (Diplomat) :

(1) ஒரு நாட்டின் வெளிநாட்டு தூதரகங்களில் பணிபுரிவோர் பொதுவாக அரசியல் விவேகிகள் என்றழைக்கப்படுகின்றனர். (2) ஒரு நாட்டின் விருப்பு வெறுப்புகளை வெளிநாடுகளில் பிரதிபலிக்கும் அரசாங்கத்தின் கண்களும் காதுகளுமாய் அரசியல் விவேகிகள் கருதப்படுகின்றனர். (3) பண்டையக் காலத்தில் உயர்குடியைச் சார்ந்தோர் அரசியல் விவேகிகளாக நியமனம் செய்யப்பட்டனர். இன்று சூழ்நிலை மாறிவிட்டது. (4) திறமையை அடிப்படையாகக் கொண்டு போட்டித் தேர்வுகளின் அடிப்படையில் அரசியல் விவேகிகள் சமுதாயத்தின் எல்லாப் பிரிவுகளிலிருந்தும் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். (5) ஒரு நாட்டின் அரசியல் விவேகிகள் தாங்கள் பணிபுரியும் நாட்டில் சில விசேஷ உரிமைகளையும் சலுகைகளையும் பெற்று வாழ்கின்றனர்.

பொதுவாக அரசியல் விவேகிகள் இரு வகையில் பணிபுரிகின்றனர். அவை : **(1) அரசியல் விவேகப்பணி (Diplomatic Service) (2) கான்சுலர் பணி (Consular Service)** என்றழைக்கப்படுகின்றன. பிரதிநிதித்துவம், பேச்சுவார்த்தை ஆகிய பணிகள் அரசியல் விவேகப் பணிகள் என்றும் பிற நாடுகளில் வசிக்கும் தங்களுடைய நாட்டு குடிமக்களின் நலநனைப் பேணுதல் கான்சுலர் பணி என்று வகைப்படுத்தப்பட்டுள்ளன.

அரசியல் விவேக நடவடிக்கைகளில் ஈடுபடும் அதிகாரிகள் பலதரப்பட்ட பணிகளை ஆற்றுகின்றனர். தாய்நாட்டிற்கும் பணியில் அமர்த்தப்பட்டிருக்கும் நாட்டிற்கும் இடையே கருத்துக்களை பரிமாறும் தூதுவர்களாய்ச் செயல்படுகின்றனர். இக்கருத்துப் பரிமாறல் மூலம் சில வேளைகளில் பெரிய மாற்றங்களை நாடுகளுக்கிடையே வரலாற்றில் தோற்றுவிக்கின்றனர். எனவே, இவர்கள் சில நேரங்களில் **வரலாற்றின் தொலைபேசிப் பெண்கள் (The telephone girls of History)** என்றழைக்கப்படுகின்றனர். **"தன்னுடைய நாட்டிற்காக வெளிநாட்டில் போய் பேச அனுப்பப்பட்டுள்ள உண்மையுள்ள நேர்மையான குடிமகன்தான் தூதுவன்**'' என்று ஹென்றி வாட்சன் என்பார் கூறியுள்ளார். பொதுவாக அரசியல் விவேகி மூன்று முக்கிய பணிகளை ஆற்றுகின்றனர். அவை : (1) பிரதிநிதித்துவம், (2) பேச்சுவார்த்தை, (3) செய்தி திரட்டி அறிக்கை சமர்ப்பித்தல் என்பவையாகும்.

**அரசியல் விவேகமும் பிரச்சாரமும் :**

கௌடில்யர் அர்த்த சாஸ்திரத்தில், பிரச்சாரம் அரசியல் விவேக நடவடிக்கைகளுக்கு எவ்வாறு பயன்படுகிறது என்பதை விளக்கமாகக் கூறியுள்ளார். நாட்டிற்கு உள்ளும், வெளியிலும் பொதுமக்கள் கருத்தைத் திரட்டப் பிரச்சாரம் மிகவும் தேவை. தவறானப் பிரச்சாரம் அபாயகரமான விளைவுகளை பன்னாட்டு உறவுகளில் தோற்றுவிக்கின்றது.

**அரசியல் விவேகத்தின் பரிணாம வளர்ச்சி :**

இந்தியாவில் அரசியல் விவேக நடவடிக்கைகள் வேத காலத்திலிருந்து செயல்பட்டு வருகின்றன. அரசியல் விவேக நடவடிக்கைகள் மூலம் நாடுகளுக்கிடையே உறவுகள் வரையறுக்கப்பட்டதாக இராமாணயம் மற்றும் மகாபாரதம் ஆகியவற்றில் பல இடங்களில் கூறப்பட்டுள்ளன. கௌடில்யரின் அர்த்தசாஸ்திரத்திலும் இதைப் பற்றியப் பலச் சான்றுகளைக் காணலாம். அர்த்தசாஸ்திரத்தில் தூதுவர்களின் பணிகளைப் பற்றிய விளக்கம் விரிவாக வழங்கப்பட்டுள்ளது. அப்பணிகளை இன்றும் அரசியல் விவேகிகள் புரிகின்றனர்.

அரசியல் விவேகத்தின பரிணாம வளர்ச்சி மூன்று காலகட்டங்களில் நடந்தேறியுள்ளது. முதற்காலகட்டம் 476–ஆம் ஆண்டிலிருந்து 1450–ஆம் ஆண்டிற்கு இடைப்பட்டக் காலமாகும். இக்காலக்கட்டத்தில் நாடுகள் தமக்கிடையே உறவுகளை தற்காலிகமாக ஏற்படுத்தின. பண்டைய கிரேக்க நாட்டில் பல நகர அரசுகள் காணப்பட்டன. அவைகளுக்கிடையேயான உறவுகள் நிரந்தரமான 7 அரசியல் விவேக நடவடிக்கைகள் மூலம் உறுதி செய்யப்படவில்லை. அக்காலத்தில் அரசியல் விவேக நடவடிக்கைகள் முதியவர்களால் மேற்கொள்ளப்பட்டன. பெரும்பாலும் வாய்மொழிப் பேச்சுவார்த்தைகளே நடந்தேறின. இரண்டாவது காலக்கட்டம் 1450–ஆம் ஆண்டிலிருந்து ஆரம்பமாகிறது. இக்காலக்கட்டத்தில் அரசியல் விவேக நடவடிக்கைகள் நிரந்தர அமைப்புகளால் மேற்கொள்ளப்பட்டன. 16–ஆம் நூற்றாண்டில் ஏறக்குறைய எல்லா ஐரோப்பிய அரசர்களும் நிரந்தரமான அரசியல் விவேக நடவடிக்கைக்கான நிர்வாக அமைப்புகளை ஏற்படுத்தனர். மூன்றாவது காலக்கட்டம், முதல் உலகப் போருக்குப்பின் ஆரம்பமானது. இக்காலக்கட்டத்தில் ஜனநாயக அரசியல் விவேகம் ஆரம்பமானது. லெனின், வில்சன், ஆகியத் தலைவர்கள் மறைவற்றத் திறந்த அரசியல் விவேக நடவடிக்கைகளை ஆதரித்தனர்.

தற்காலத்தில் நாடுகளுக்கிடையேயான உறவுகளை நாடுகளின் தேசிய விரும்பங்களும் தொழில்நுடபமும் பெருமளவில் மாற்றியமைத்துள்ளன. இன்று மாநாடுகளின் அடிப்படையில் அரசியல் விவேகம் முக்கியத்துவம் வாய்ந்து காணப்படுகிறது. இதனடிப்படையில் இருதுருவ அரசியல் நடவடிக்கைகள் செயலிழந்து பலமுனை அரசியல் விவேக நடவடிக்கைகள் செல்வாக்குப் பெற்றுத் திகழ்கின்றன.

**அரசியல் விவேகத்தின் வகைகள்**

அரசியல் விவேக நடவடிக்கைகள் பல வகைப்படும். ஒவ்வொரு வகையிலும் சில நன்மைகளும் தீமைகளும் காணப்படுகின்றன.

**1. இரகசிய அரசியல் விவேகக் கோட்பாடு (The Concept of Secret Diplomacy) :**

இருபதாம் நூற்றாண்டின் ஆரம்ப காலம் வரை இக்கோட்பாடு உலக அரங்கில் செல்வாக்குப் பெற்றுத் திகழ்ந்தது. இம்முறையில், நாட்டின் உயர்குடிமக்களால் அரசியல் விவேக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இம்முறையால் மேற்கொள்ளப்பட்ட இரகசிய உடன்பாடுகள் முதல் உலகப்போருக்கு முன்னரும் உலகப்போர் நடந்தும் கொண்டிருந்த பொழுதும் தாங்கொண்ணாத் துயரினை சாதாரண மனிதனுக்கு இவ்வுலகில் ஏற்படுத்தன. இதற்கு உதாரணமாக, முதல் உலகப்போர் ஏற்பட அடிப்படைக் காரணமாய் அமைந்த பிராங்கோ – இரஷ்ய உடன்பாட்டையும், முக்கூட்டு உடன்பாட்டையும் எடுத்தியம்பலாம். இரகசிய அரசியல் விவேக நடவடிக்கைகளால் ஜப்பானும், இத்தாலியும் செய்து கொண்ட இரகசிய ஒப்பந்தங்களை பாரீஸ் சமாதான மாநாடு சந்திக்க வேண்டிய நிலை பெரும் பிரச்சனைகளைத் தோற்றுவித்தது. மேலும், இரகசிய அரசியல் விவேக நடவடிக்கைகள் பன்னாட்டு அரங்கில் உலக நாடுகளுக்கிடையே சந்தேகங்களை ஏற்படுத்தின. இவ்வகையான அரசியல் விவேக நடவடிக்கைகளின் தவறுகளை அகற்ற சர்வதேசச் சங்கத்தன் சாஸனத்தில் பின்வரும் விதி இணைக்கப்பட்டது. ‘‘சர்வதேச சங்கத்தின் உறுப்பு நாடுகள் தமக்குள் உடன்பாடுகள் செய்து கொண்டால், அவ்வுடன்பாடுகளை சர்வதேசச் சங்கத்தின் செயலகத்தில் பதிவு செய்து, அதன் மூலம் அவ்வுடன்பாடுகளைப் பிரசுரித்தல் வேண்டும்.

**2. திறந்த அல்லது ஜனநாயக அரசியல் விவேகக் கோட்பாடு**
**(The Concept of open or democratic diplomacy) :**

இம்முறை 20–ஆம் நூற்றாண்டின் ஆரம்ப காலக்கட்டத்தில் திறம்பட செயல்பட ஆரம்பித்தது. மக்களுடைய பிரதிநிதிகளால் வெளிப்படையாய் நடத்தப்படும் அரசியல் விவேக நடவடிக்கைகளை இது குறிக்கிறது. இம்முறையிலும் சில குறைபாடுகள் காணப்படுகின்றன. அரசியல் விவேக சாதுர்யங்களை முழு அளவில் அறியாத சாதாரண மக்கள் பிரதிநிதிகளால் அரசியல் விவேக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவது இம்முறையின் முக்கியக் குறைபாடாகும். மேலும், இம்முறையில் அரசியல் விவேகிகள் பொதுமக்கள் கருத்தை அறிந்து அதனடிப்படையில் முடிவுகளை மேற்கொள்கின்றனர். இதனால் காலதாமதம் ஏற்படுகிறது. இக்குறைபாடுகள் இருந்தபோதிலும், பல நிறைகள் இம்முறையில் காணப்படுகின்றன. பிற நாடுகளுடன் தங்களடைய நாடு கொண்டுள்ள தொடர்பினை பொதுமக்கள் அறிய இம்முறை வாய்ப்பளிக்கிறது. பன்னாட்டு உறவுகளில் ஏற்படும் பிரச்சனைகளை பகிரங்கமாய் எடுக்கும் முடிவுகள் மூலம் சுலபமாகத் தீர்வு செய்ய முடியும்.

### 3. தனிப்பட்ட முறையிலான அரசியல் விவேகக் கோட்பாடு
### (The Concept of personal diplomacy) :

பண்டைய நாட்களில், நாட்டின் தலைவர்கள் தங்களுடைய தூதுவர்கள் அல்லது பிரதிநிதிகள் மூலம் அரசியல் விவேக நடவடிக்கைகளை மேற்கொண்டனர். இன்று செய்தி மற்றும் போக்குவரத்து தொடர்புகளின் வளர்ச்சி அந்நிலையை மாற்றியமைத்துள்ளது. இன்றைய காலக்கட்டத்தில் துரித செய்தி மற்றும் போக்குவரத்துதூ தொடர்பு வசதிகளினால் ஒரு நாட்டின் தலைவர் தனிப்பட்ட முறையில் இன்னொரு நாட்டின் தலைவரோடு நேரடித் தொடர்பு கொண்டு வருங்காலத்தைப் பற்றிய முடிவுகளை உலக அரங்கில் நேரடியாக மேற்கொள்ள முடியும். இம்முறை, இரண்டாம் உலகப்போர் நடந்துகொண்டிருந்த காலத்திலிருந்து உலகில் பிரபலமாயிற்று. இரண்டாம் உலகப்போர் நடந்துகொண்டிருந்தபோது, பலமுறை நேசநாடுகளின் தலைவர்களாகிய ஸ்டாலின், ரூஸ்வெல்ட், சர்ச்சில் ஆகியோர் சந்தித்து வருங்காலத்தைப் பற்றிய பல முக்கிய முடிவுகளை மேற்கொண்டனர். உலக அரங்கில் முக்கியமான முடிவுகளை மேற்கொள்ளும்போது சம்பந்தப்பட்ட நாடுகளுக்கு சில சலுகைகளை வழங்க வேண்டும். அச்சலுகைகளை உலக நாடுகளின் தலைவர்கள் மட்டும்தான் அறிவிக்க முடியும். தனிப்பட்ட அரசியல் விவேக நடவடிக்கைகளை நேரடியாக நாடுகளின் தலைவர்கள் மேற்கொள்ளும்போது, அவ்வப்போது சலுகைகளை அறிவித்து, முடிவுகளை துரிதமாக மேற்கொள்ள முடியும்.

### 4. மாநாட்டு அரசியல் விவேகக் கோட்பாடு
### (The Concept of diplomacy by Conference) :

குறிப்பிட்ட கால இடைவெளிகளுக்குள் சில நாடுகள் ஒருங்கிணைந்து மாநாடுகள் நடத்தி முடிவுகள் மேற்கொள்வதை இம்முறை குறிக்கின்றது. முதல் உலகப் போருக்குப்பின் உருவாக்கப்பட்ட சர்வதேசச் சங்கம் இம்முறையிலான அரசியல் விவேக நடவடிக்கைகளை உலகில் புகுத்தியது. இன்று இரண்டாம் உலகப்போருக்குப் பின் உருவாக்கப்பட்ட ஐக்கிய நாட்டு சபை இம்முறையை உறுதிப்படுத்தியுள்ளது. வடக்கு அட்லாண்டிக் ஒப்பந்த அமைப்பு, வார்சா ஒப்பந்தம் போன்றவை இம்முறையை உலக அரங்கில் நிலைபெறச் செய்துள்ளன. உலகின் பல பகுதிகளிலும் இன்று பத்தாயிரத்திற்கும் மேலான இவ்வகை மாநாடுகள் ஒவ்வொரு ஆண்டும் நடந்தேறி வருகிறது.

இவ்வாறு பன்னாட்டு அரசியலில் முக்கியத்துவம் வாய்ந்த அரசியல் விவேகத்தின் முக்கிய நோக்கம் தேசிய நலநன சமாதான முறையில் முன்னேற்றுவதாகும். உலக அரங்கில் முக்கிய நாடுகள் பிற நாடுகளின் அரசியல் நடவடிக்கைகளில் பங்கேற்பதைத் தங்கள் அடிப்படை அரசியல் நோக்கமாகக் கொண்டுள்ளன. தங்களுடைய செல்வாக்கை நிலைநிறுத்துவதன் மூலம்தான் பிறநாடுகளின் அரசியல் விவேக நடவடிக்கைகளை நிலைநிறுத்த முடியும். அமெரிக்கா 1945–ஆம் ஆண்டிற்குப் பிறகு, ஆசிய, ஆப்பிரிக்க நாடுகள் மீது தனது அரசியல் விவேக நடவடிக்கைகள் மூலம் செலுத்திய செல்வாக்கை இதற்கு உதாரணமாகக் கூறலாம். இவ்வாறு வல்லரசுகள் தங்கள் செல்வாக்கை உலக அரங்கில் அரசியல் விவேக நடவடிக்கைகள் மூலம் பரவலாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளன.

ஆனால், புதிதாய் சுதந்திரம் பெற்ற சிறிய அரசுகள் அரசியல் விவேக நடவடிக்கைகள் மூலம் தங்கள் நாட்டைப் பாதுகாப்பதையும், பொது நலநனப் பேணுதலையும் நோக்கமாகக் கொண்டுள்ளன. இவை அரசியல் விவேகத்தில் அரசியல் சார்ந்த நோக்கங்களாகும்.

பொருளாதார மற்றும் வாணிப நலன்களை அரசியல் விவேக நடவடிக்கைகள் மூலம் வளர்ப்பது அரசியல் சாராத அரசியல் விவேகமாகும். தொழிற் புரட்சிக்குப் பின், வாணிபம் சார்ந்த அரசியல் விவேக நடவடிக்கைகள் தீவிரம் அடைந்துள்ளன. அந்த நடவடிக்கைகள் மூலம் நாடுகள் சந்தைகளைப் பிடிப்பதையும், மூலப் பொருட்களைப் பெறுவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளன.

நாட்டின் முக்கியத் தலைவர்கள் பிற நாடுகளுக்கு விஜயம் செய்து, அந்நாடுகளோடு சுமூக உறவுகளை ஏற்படுத்துகின்றனர். இது அரசியல் விவேக நடவடிக்கைகளில் முக்கியமானதாகக் கருதப்படுகிறது.

சுருங்கக்கூறின், அரசியல் விவேக நடவடிக்கைகள் உலக அரங்கில் ஒரு நாட்டிற்கு நன்மதிப்பை ஏற்படுத்திக் கொடுக்கின்றன. நாடுகளிடையே சுமூக உறவை நிலைநிறுத்தி உலக சமாதானத்திற்கு வழிவகுக்கின்றன.

## முதல் உலகப் போருக்கு முன்பு ஐரோப்பிய நிலை

## EUROPE ON THE EVE OF FIRST WORLD WAR

முதல் உலகப் போருக்கு முன்பு ஐரோப்பாவில் நாடுகளுக்கிடையே போட்டியும் பொறாமையும் அதிகமாகக் காணப்பட்டன. குறுகிய தேசப்பற்றின் காரணமாக ஒன்றுக்கொன்று பகை உணர்வுடன் இருந்து வந்தன. இதற்கு முக்கியக் காரணம் ஜெர்மனியின் வலிமையும், வேகமான வளர்ச்சியுமே ஆகும். 1871—ஆம் வருடத்திற்குப் பிறகு ஜெர்மனியின் மதிப்பும் பெருமையும் உயர்ந்தது. ஏனெனில், அந்த வருடத்தில் நடைபெற்ற பிராங்கோ—பிரஷ்யப் போரில், பிரான்சைத் தோற்கடித்து நவீன ஜெர்மனியை உருவாக்கினார் பிஸ்மார்க். 1871 முதல் 1914 வரை ஜெர்மனி பின்பற்றிய கொள்கைகளே 'பெரும் போர்' என்றும், 'போரை முடித்து வைப்பதற்காக ஏற்பட்ட போர்' என்றும் வழங்கப்படும் முதல் உலகப் போருக்குக் காரணமானது.

### ஜெர்மனியின் ஆதிக்க வளர்ச்சி :1870 – 1914

1888—ஆம் ஆண்டு ஜெர்மனியின் அரசராக (கெய்சர்) இரண்டாம் வில்லியம் பதவி ஏற்றார். ஹோகர்ன் சோலன் வம்சத்தின் கடைசி அரசர் இவரே. ஜெர்மனியை மிகவும் பலமிக்க உலக வல்லரசாக்க வேண்டும் என்பதே இவரது நோக்கமாகும். ஜெர்மனி தனது ஆதிக்கத்தைப் பிறநாடுகளில் பரப்ப வேண்டும். அதற்காகத் தனது கடல் வலிமையைப் பெருக்க வேண்டும் என்ற எண்ணம் கொண்டவர் வில்லியம். ''ஜெர்மனியின் எதிர்காலமே அதன் கடல் வலிமையில்தான் உள்ளது'' என்பதனைப் புரிந்து கொண்டு, ஜெர்மனியின் கடற்படையை வலிமைப்படுத்தினார்.

பிற வலிமையற்ற நாடுகளைக் கைப்பற்றி, அவற்றை ஜெர்மனியின் குடியேற்ற நாடுகளாக மாற்றுவதில் ஆர்வம் கொண்டார். எனவேதான், அப்போது ஐரோப்பாவில் நிலவி வந்த காலனி வேட்டையில் குடியேற்றப் பேரரசை ஏற்படுத்தும் இவரது நோக்கத்திற்குச் சாதகமாகப் பல நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

**1980–**ஆம் ஆண்டு இங்கிலாந்துடன் ஏற்பட்ட ஓர் உடன்படிக்கையின் பயனாகக் கிடைத்த ஹெலிகோலாந்து ஜெர்மனியின் ஓர் முக்கியக் கடற்படைத்தளமாக இருந்தது. **1895–**ல் முடிவடைந்த கீல் கால்வாய் ஜெர்மனியின் கப்பற்படை வலிமையை அதிகமாக்கியது. இதனால் டென்மார்க் கடலைச் சுற்றிச் செல்லாமல் பால்டிக்கடல், வடகடல் வழியாக ஜெர்மானிக் கப்பல்கள் செல்ல வழி கிடைத்தது. **1897–**ல் ஜெர்மனியின் பெரிய கப்பற்கட்டும் திட்டம் ஒன்று மேற்கொள்ளப்பட்டது. நவீன வசதிகளுடன் உருவாக்கப்பட்ட ஜெர்மானியக் கப்பற்படை, ஆங்கிலக் கப்பற்படைக்கு ஓர் சவாலாக அமைந்தது. இதனால் ஜெர்மனிக்கும் இங்கிலாந்துக்குமிடையே வெறுப்புணர்வும், பகையும் வெளிப்படையாகவே வளர்ந்துவர ஆரம்பித்தது.

மேலும், ஆப்பிரிக்காவிலும் சீனாவிலும் ஜெர்மனியின் ஆதிக்க வளர்ச்சிக்கு வித்திடப்பட்டது. **1890–**ஆம் ஆண்டு சாலிஸ்பரி பிரபுவினால் முடிவு செய்யப்பட்ட ஆப்பிரிக்காவிலுள்ள சில பகுதிகளை ஜெர்மனி சேர்த்துக் கொண்டு ஆப்பிரிக்காவிலுள்ள ஜான்சிபார் பிரிவினையில் சொந்தமாக்கியது. **1897–**ல் சீனாவில் நடைபெற்ற கலகங்களைப் பயன்படுத்திக் கொண்ட கெய்சர் வில்லியம் கியாசென் பிரதேசத்தைச் சொந்தமாக்கினார். இது பிற்காலத்தில் சீனாவில் ஜெர்மனியின் வணிகப் பெருக்கத்தற்கு ஓர் அடித்தளத்தை அமைத்துக் கொடுத்தது.

அண்மைக் கிழக்குப் பகுதியில் துருக்கி சுல்தானுடன் நட்புக் கொண்டு, ஆசியாமைனர், மெசபடோமியாப் பிரதேசங்களில் ஜெர்மனியின் ஆதிக்கத்தை ஏற்படுத்தினார் கெய்சர். முதல் உலகப் போர் ஏற்பட்டபோது ஜெர்மனி பாக்தாத் இருப்புப் பாதையை அமைத்துக்கொண்டிருந்தது. ஜெர்மனியின் செல்வாக்கும், ஆதிக்க வளர்ச்சியும் இங்கிலாந்தைப் பெரிதும் அச்சமுறச் செய்தது. அதன் காரணமாக இரு நாடுகளுக்கிடையே வெளிப்படையான விரோதம் வளர்ந்து வந்தது.

**புதிய கொள்கைகள் உருவாயின :**

**1.** முதல் உலகப் போருக்கு முன்பு, ரஷ்யா, ஜெர்மனி தவிர பிற ஐரோப்பிய நாடுகளில் வல்லாட்சி முறை ஒழிந்து ஜனநாயகம் வளர்ச்சியடைந்தது. அரசியல்

சட்டத்துடன் கூடிய அரசாங்கம் அமைக்கப்படுவதில் முன்னேற்றம் ஏற்பட்டது. அரசாங்கம் உண்மையான மக்களாட்சி அடிப்படையில் நிலைத்திருக்கத் தொடங்கியது.

**2.** ஜனநாயக அரசாங்கங்களின் செயல்முறைகளிலும், கொள்கைகளிலும் மாறுதல் ஏற்பட்டது. மக்களின் உயிரைப் பாதுகாத்தலும், நாட்டின் எல்லைகளைப் பாதுகாத்தலும் மட்டுமே அரசாங்கத்தின் பொறுப்பு என்ற நிலை மாறியது. குடிமக்களின் உயிரைப் பாதுகாப்பதுடன் மட்டுமல்லாது, அவர்களின் நல்வாழ்வுக்காகவும் செயல்படவேண்டியது அரசாங்கத்தின் கடமை என்ற நிலை ஏற்பட்டது. குடிமக்களின் கல்வி, உடல் நலம், சுற்றுப்புறத் தூய்மை, தொழிலாளர் நலம், தொழிலாளர் ஊதியம் ஆகியவை பற்றியும் அரசாங்கங்கள் கவனம் செலுத்த ஆரம்பித்தன. இதற்காகப் பல சட்டங்களும் இயற்றப்பட்டன.

**3.** முதல் உலகப் போருக்கு முன்பு ஐரோப்பிய நாடுகளில் தேசியத் தலைமை வேரூன்றிது. கலப்பினங்கள் இல்லாத நாடே இல்லை. ஒவ்வொரு இனத்திற்கும் அதற்கென்று தனி அரசாங்கத்தைக் கொடுப்பதென்பது இயலாது. மேலும், ஒரு இனத்தைச் சாாந்தவர்கள் மட்டுமே தேசியத்தை ஒரு நாட்டில் வளர்க்க முடியுமென்ற நிலை கைவிடப்பட்டது. எனவே, பல இன மக்கள் வாழும் நாடும் தேசிய நாடாக இருக்க முடியும் என்பது நிலைநாட்டப்பட்டது.

**4.** ஐரோப்பிய நாடுகளில் சோஷலிசக் கொள்கையின் ஆற்றல் வளர்ந்ததுடன், அதன் அமைப்பும் சீரடைந்தது. மேற்கு ஐரோப்பாவில் ஒவ்வொரு நாட்டிலும் வலிமை பொருந்திய தொழிலாளர் இயக்கங்கள் தோன்றின. ஆனால், ஜெர்மனியில் சோஷலிசக் கொள்கையின் வளர்ச்சியைத் தடுப்பதற்கும், மக்களின் கவனத்தைத் திருப்புவதற்கும் அரசாங்கங்கள் பல நடவடிக்கைகளை மேற்கொண்டன.

**5.** இறுதியாக, பெரும் போருக்கு முன்பு ஐரோப்பிய நாடுகளிடையே ‘பன்னாட்டு ஒற்றுமை உணர்ச்சி’ தோன்றியது. விஞ்ஞானம், வியாபாரம், தொழிலாளர்களின் கூட்டமைப்பு, கலை, இலக்கியம் ஆகியவைகளால் நாடுகளுக்கிடையே நெருங்கிய தொடர்புகள் ஏற்பட்டது.

**முதல் உலகப் போருக்கு முன்பு ஏற்பட்ட இரகசிய இராஜதந்திர உடன்படிக்கைகள்:**

**1871–**ஆம் ஆண்டுக்குப் பிறகு ஜெர்மனியின் பேராதிக்கம் வளர்ச்சியடைந்தது என்பதை மறுக்க முடியாது. இதனால் இங்கிலாந்து அதிர்ச்சியடைந்தது உண்மையே. தனது அதிகாரத்துக்குச் சவால்விடும் ஜெர்மனியின் செல்வாக்கைத் தடுத்து நிறுத்த

பிரான்சுடன் கூட்டுச்சேரத் தயாராக இருந்தது. இதே நேரம் பிராங்கோ–பிரஷ்யப் போரில் தோற்றுப்போன பிரான்ஸ், ஜெர்மனி மீது போர்த்தொடுக்கும் வாய்ப்பை எதிர்பார்த்துக் கொண்டிருந்தது. தான் இழந்த அல்சேஸ்–லொரைன் பகுதிகளை மீண்டும் பெற ஆவலாக இருந்தது.

இவை தவிர, ஒவ்வொரு நாடும் தன்னைத்தானே செழிப்புடையதாக்கவும் விரும்பின. இதன் விளைவாக, முதல் உலகப் போருக்கு முன், இரண்டு வலிமையான கூட்டணிகள் ஏற்பட்டன. அந்தக் கூட்டணிகள் எவ்வாறு ஏற்பட்டன என்பதையும், அது எவ்வாறு முதல் உலகப் போருக்குக் காரணமானது என்பதையும் இனிக் காணலாம்.

**1. முப்பேரரசர்களின் சங்கம் : 1882–டிரைக்கெசர்பண்ட்**

ஜெர்மனியின் சான்சலராக இருந்த பிஸ்மார்க் தலை சிறந்ந் இராஜதந்திரி ஆவார். 1871–ல் பிராங்கோ–பிரஷ்யப் போரில் பிரான்ஸ் தோற்கடிக்கப்பட்டாலும் எதிர்காலத்தில் மற்ற வல்லரசுகளின் துணையுடன் அது ஜெர்மனியைத் தாக்கும் அபாயத்தை நன்றாகவே உணர்ந்திருந்தார். எனவே ஜெர்மனியைப் பாதுகாத்துக் கொள்ளும் முயற்சிகளில் ஈடுபட்டார். மேலும், பிரான்ஸ் நாட்டில் தோன்றி வளர்ந்த புரட்சிக் கருத்துக்களும் குடியாட்சிக் கருத்துக்களும் எங்கே ஐரோப்பா முழுவதும் பரவிவிடுமோ என்று அச்சமடைந்தார்.

இக்காரணங்களால் ஜெர்மனியையும் ஜெர்மன் முடியாட்சியையும் பாதுகாக்கும் பொருட்டு, தனக்கு அருகிலுள்ள ரஷ்யா மற்றும் ஆஸ்திரியா நாட்டுப் பேரரசர்களுடன் நட்புறவு வைத்துக் கொள்ள நினைத்தார். இதன் விளைவாக, 1882–ஆம் ஆண்டு ஜெர்மனி, ரஷ்யா, ஆஸ்திரிய நாட்டுப் பேரரசர்கள் மூவரும் உடன்படிக்கை ஒன்றைச் செய்துகொண்டனர். அதுவே ‘முப்பேரரசர்களின் சங்கமாகும்’. ஆனால் கருத்து வேறுபாடுகள் காரணமாக இது சரியாகச் செயல்படவில்லை.

**2. முக்கூட்டு உடன்படிக்கை (Triple alliance) : 1883**

முப்பேரரசர்களின் சங்கம் நீடித்திருக்க முடியவில்லை. காரணம், ரஷ்யாவும் ஆஸ்திரியாவும் பால்கன் பகுதியில் அதிகாரம், செல்வாக்கு ஆகியவற்றைப் பெறுவதற்குப் போட்டியிட்டுக் கொண்டிருந்தன. இதனால் இரு நாடுகளுக்கிடையே போட்டியும், பகுமையும் இருந்துகொண்டே வந்தது. இதனைப் பயன்படுத்திக் கொண்ட பிஸ்மார்க், 1879–ல் ஆஸ்திரியாவுடன் தனியாக ‘இரட்டை ஒப்பந்தம்’ ஒன்றைச் செய்து கொண்டார்.

இதற்கிடையில் இத்தாலியில் உள்நாட்டு அமைதியில்லை. நாட்டின் உள்ளேயும் வெளியேயும் பகைவர்கள் அரசாங்கத்தை எதிர்த்து நின்றனர். எனவே, மத்திய ஐரோப்பாவில் இராணுவ முறையில் அமைத்திருந்த முடியாட்சி நாடுகளின் ஆதரவை நாடியது இத்தாலி. மேலும், பிரான்ஸின் ஆதிக்கப் பரவலும் இத்தாலிக்கு அச்சத்தை அளித்தது. இத்தாலியின் தெற்குக் கடற்கரைக்கு டுனிஸை பிரான்ஸ் வசப்படுத்திக் கொண்டதாலும், தனக்கு ஒரு வலிமையான துணையை நாடியது.

எனவே 1883–ல் ஜெர்மனி–ஆஸ்திரிய இரட்டை ஒப்பந்தத்தில் இத்தாலியும் சேர்ந்துகொண்டது. இதனால் முக்கூட்டு உடன்படிக்கை ஏற்பட்டது. இந்த உடன்படிக்கை, முறையாகத் தொடர்ந்து 1891, 1903, 1912 ஆகிய ஆண்டுகளில் புதுப்பிக்கப்பட்டது. ஐரோப்பாவில் அமைதியை நிலைபெறச் செய்வதே தங்கள் நோக்கமென்று முக்கூட்டு உடன்படிக்கை நாடுகள் அறிவித்தன.

**3. மூவர் மனமார்ந்த நேச உடன்படிக்கை : (Triple Entente) 1907**

**a) பிரெஞ்சு–ரஷ்ய உடன்படிக்கை : 1893**

முக்கூட்டு உடன்படிக்கையால் ஐரோப்பிய அரசியல் விவகாரங்களில், தான் தனித்து வைக்கப்பட்டு விட்டதாகக் கருதியது பிரான்ஸ். முக்கூட்டு உடன்படிக்கை நாடுகளின் சமாதான நோக்கங்களில், பிரான்ஸ் நம்பிக்கை வைக்கவில்லை. தான் இராணுவ வலிமையற்று இருப்பதையும், அல்சேஸ் லொரைன் பகுதிகளை மீட்கப் போதிய பலமற்று இருப்பதையும் உணர்ந்தது. இச் சமயத்தில்தான் பிரான்சுக்கு ரஷ்யாவின் உதவி கிடைத்தது. அதனுடன் உடன்படிக்கை செய்துகொள்ளக்கூடிய கட்டாய நிலைக்கு பிரான்ஸ் தள்ளப்பட்டது. அதே நேரம், ரஷ்ய சார் மூன்றாம் அலெக்ஸாந்தருக்கு தனது பொருளாதார சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்த பணம் தேவையாக இருந்தது. அதற்கு பிரான்ஸ் பணம் கொடுத்து உதவியது. இவ்வாறு இரண்டு நாடுகளும் நெருங்கி வந்தன.

இவை தவிர........ ஜெர்மனியின் மீது பிரான்சும் ரஷ்யாவும் கொண்டிருந்த பகைமை இரு நாடுகளையும் ஒன்று சேர வைத்தது. பிரான்ஸின் தாராளக் குடியரசுக் கொள்கைகளும், ரஷ்யாவின் எதேச்சதிகார முடியரசுக் கொள்கைகளும் நேர் எதிராக இருந்தாலும், இரு நாடுகளும் உடன்படிக்கை செய்து கொள்ள அவை தடையாக இல்லை. 1891–ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் ரஷ்யாவும் (மூன்றாம் சார் அலெக்ஸாந்தர்)

பிரான்சும் ஏற்படுத்திக் கொண்ட 'மனமார்ந்த நேச ஒப்பந்தம், (Entente cordiale) கீழ்க்கண்ட ஷரத்துக்களைக் கொண்டது :

a) அமைதிக்கு ஆபத்து ஏற்படுத்தும் எல்லாப் பிரச்சனைகளிலும் இரண்டு நாடுகளும் ஒன்றையொன்று கலந்து ஆலோசித்துக் கொள்ள வேண்டும்.

b) தங்கள் நாட்டின் அமைதிக்கு ஏதேனும் வெளி ஆக்கிரமிப்பு மூலம் ஆபத்து ஏற்பட்டால், இரண்டு நாடுகளும் ஒன்று சேர்ந்து உறுதியான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஆனாலும், இந்த நேச ஒப்பந்தத்தை வெளிப்படையாகச் செயல்படுத்த மூன்றாம் சார் அலெக்சாந்தர் தயங்கினார். எனவே, நேச ஒப்பந்தத்திற்கு வலிமையூட்டும் விதத்தில் 1893 டிசம்பர் 27–ஆம் தேதி இரண்டு நாடுகளும் மீண்டும் ஒரு இரட்டை ஒப்பந்தத்தை ஏற்படுத்திக் கொண்டன. அதன்படி,

1. ரஷ்யா எதிரிகளால் தாக்கப்பட்டால் அதற்கு உதவி செய்வதாக பிரான்சும், பிரான்ஸ் தாக்கப்பட்டால் உதவி செய்வதாக ரஷ்யாவும் ஒப்புக்கொண்டன.

2. ஜெர்மனி அல்லது ஜெர்மனி ஆதரவுடன் இத்தாலி பிரான்சைத் தாக்கினால் எட்டு இலட்சம் வீரர்களுடன் உதவி செய்வதாக ரஷ்யா உறுதியளித்தது.

3. ஜெர்மனி அல்லது ஜெர்மனி ஆதரவுடன் ஆஸ்திரியா ஹங்கேரி ரஷ்யாவைத் தாக்கினால் பதிமூன்று இலட்சம் போர் வீரர்களுடன் உதவி செய்வதாக பிரான்ஸ் உறுதியளித்தது.

இவ்வாறு செய்து கொள்ளப்பட்ட இரட்டை ஒப்பந்தம் (Dual alliance) 1995 வரை ரகசியமாக வைக்கப்பட்டிருந்தது. முக்கூட்டு உடன்படிக்கைக்கு எதிராக ஏற்பட்ட பிராங்கோ–ரஷ்யா உடன்படிக்கை அவ்வளவு வலுவலானதாக இல்லை. ஆனால், இந்த உடன்படிக்கை பிரான்ஸின் தனிமைக்கு முற்றுப்புள்ளி வைத்தது. ஜெர்மனியின் ஆதிக்க விரிவாக்கத்திற்குச் சரியான சவாலாக அமைந்தது.

**b) ஆங்கிலோ–பிரெஞ்சு நேச உடன்பாடு (Anglo French entente cordiale) : 1909**

ஜெர்மனியின் ஆதிக்கப் போட்டியால் இங்கிலாந்து பெரிதும் பாதிக்கப்பட்டிருந்தது. வணிகத்தில், தொழில் உற்பத்தியில், குடியேற்ற நாடுகளை அமைப்பதில், கடற்படை வலிமையில் இங்கிலாந்து தனது ஏகபோக உரிமையை ஜெர்மனியின் போட்டியால் இழந்தது. எனவே ஜெர்மனியின் செல்வாக்கைத் தடுத்து நிறுத்த தனது பரம்பரைப் பகை நாடான பிரான்சுடன் கூட்டுச் சேரத் தயாராக இருந்தது.

**1902** ஜனவரி **30–**ஆம் தேதி இங்கிலாந்துக்கும் ஜப்பானுக்குமிடையே ஒரு கூட்டு ஒப்பந்தம் ஏற்படவே, ஐரோப்பிய வரலாற்றில் பல மாறுதல்கள் ஏற்பட்டது. கொரியாவிலும், சீனாவிலும் இருந்த பிரச்சனைகள் இந்த உடன்படிக்கை மூலம் தீர்த்துக் கொள்ளப்பட்டன. தன் நிலை வலுவடைந்த நிலையில், பிரான்சுடன் நெருங்கி வந்தது இங்கிலாந்து. இதன் விளைவாக **1904–**ல் ஆங்கில, பிரெஞ்சு ஒப்பந்தம் ஏற்பட்டது.

**பெஷோடா நிகழ்ச்சி (Feshoda incident): 1898**

**19–**ஆம் நூற்றாண்டின் இறுதியில் இங்கிலாந்துக்கும் பிரான்சுக்குமிடையே தகராறுகள் குறைந்து, எகிப்து, சூடான், ஆப்பிரிக்கா, சியாம், நியுபவுண்ட்லாந்து ஆகிய இடங்களைப் பற்றி மட்டுமே கருத்து வேறுபாடு இருந்தது. ஆனால், **1898–**ல் பெஷோடா பிரச்சனை குறித்து பிரான்சும் இங்கிலாந்தும் போருக்கு ஆயத்தமாயின. பிரெஞ்சு வெளிநாட்டு மந்திரி ஹானோடாக்சின் அறிவிப்பின் மூலம் மார்ச்சண்ட் (Captain Marchand) என்ற பிரெஞ்சு படைத்தலைவர் எகிப்திய சூடான் பகுதிக்குள் நுழைந்து பெஷோடா என்ற கிராமத்தில் பிரெஞ்சுக் கொடியை ஏற்றினார். அத்துடன் பஹ்ரல் காசால் என்ற பகுதியை பிரான்சுக்கு உரியது என்று பிரகடனப்படுத்தினார். இதனை எதிர்த்த இங்கிலாந்து தளபதி கிச்சனர் (General Kitchener) தலைமையில் அங்கு ஒரு பலம் வாய்ந்த படையை அனுப்பியது. எனவே இரு நாடுகளுக்கிடையே போர் ஏற்படுவது தவிர்க்க முடியாததாகிவிட்டது.

இச்சூழ்நிலையில் பிரான்சில் புதிதாகப் பதவியேற்ற பிரெஞ்சு வெளிநாட்டு மந்திரி ‘தியோபில் டெல்காசி’, பிரெஞ்சுப் படைகளை திரும்பப் பெறச் செய்து போர் ஏற்படுவதைத் தடுத்தார். **1899–**ல் ஏற்பட்ட உடன்படிக்கையின்படி எகிப்திய சூடான் பகுதியை இங்கிலாந்துக்கு பிரான்ஸ் விட்டுக்கொடுத்தது. இந்த உடன்படிக்கைதான் **1904–**ல் இரண்டு நாடுகளுக்குமிடையே ஏற்பட்ட நேச உடன்பாட்டுக்கு முன்னோடியாக விளங்கியது. டெல்காசி இங்கிலாந்துடன் நட்புறவை ஏற்படுத்த மேலும் பல நடவடிக்கைகளை மேற்கொண்டார்.

**1903–**ல் இங்கிலாந்தின் மன்னர் ஏழாம் எட்வர்ட் பிரான்சுக்கு விஜயம் செய்தார். பிரெஞ்சு மக்கள் அவருக்கு அமோக வரவேற்பளித்தனர். அதே போல் பிரெஞ்சு குடியரசுத் தலைவர் எமில்லூபட் இங்கிலாந்து சென்றபோது உற்சாகத்துடன் வரவேற்கப்பட்டார். இதனால் இரு நாடுகளுக்கிடையே பகைமை உணர்ச்சி மறைந்து

நட்பு ஏற்பட்டது. அதன் விளைவாக 1904–ஆம் ஆண்டு ஏப்ரல் 8–ஆம் தேதி ஆங்கில–பிரெஞ்சு நேச உடன்படிக்கை (Entente cordiale) ஏற்பட்டது. அதன்படி,

1. ஆங்கிலேயர் பிரெஞ்சுக்காரர்களை மொராக்கோவில் ஆதிக்கம் செலுத்த அனுமதித்தனர்.

2. அதற்குப் பதிலாக எகிப்தின் மீது இங்கிலாந்திற்கு இருந்த பாதுகாப்பு உரிமையை பிரான்ஸ் ஒத்துக்கொண்டது.

3. மேற்கு ஆப்பிரிக்கா, சியாம், நியுபவுண்ட்லாந்து ஆகியவை குறித்த தகராறுகளும் சுமூகமாகத் தீர்த்துக் கொள்ளப்பட்டன.

இந்த ஆங்கில–பிரெஞ்சு நேச ஒப்பந்தம், ஜெர்மனிக்கு எதிராகவே செய்து கொள்ளப்பட்டது. உதவியற்றுக்கிடந்த பிரான்சுக்கு புத்துதுயர் கிடைத்தது. பிரான்சும், இங்கிலாந்தும் தங்கள் வேறுபாடுகளை நேசமுறையில் தீர்த்துக்கொண்ட நல்ல உடன்பாடாகும். இந்த உடன்பாடு ஐரோப்பிய வரலாற்றில் ஒரு திருப்புமுனையாக அமைந்துவிட்டது.

**c) ஆங்கில–ரஷ்ய நேச ஒப்பந்தம் (Anglo-Russian entente) : 1907**

19–ஆம் நூற்றாண்டில், பால்கன் பகுதியிலும், மத்திய ஆசியாவிலும் ரஷ்யாவின் விரிவாக்கத்தைக் கடுமையாக எதிர்த்து வந்தது இங்கிலாந்து. பெர்லின் மாநாட்டிற்குப் பிறகு ரஷ்யா தனது கவனத்தைத் தூரக்கிழக்கு நாடுகளின் பக்கம் திருப்பியதால் பகைமை உணர்வு சிறிது குறைந்தது. தூரக்கிழக்கில் மஞ்சூரியாவில் ரஷ்யா தனது விரிவாக்கத்தை மேற்கொண்டபோது ஜப்பானுடன் 1904–ல் போர் ஏற்பட்டது. அப்போரில் ரஷ்யா தோற்கடிக்கப்பட்டு மதிப்பை இழந்தது. அப்போரின் போது, தவறுதலாக, வடகடல் பகுதியில் நின்ற ஆங்கிலக் கப்பலைத் தாக்கி சேதப்படுத்தியது ரஷ்யா. இதனால் மீண்டும் இரண்டு நாடுகளுக்குமிடையே பகைமை உணர்வு ஏற்பட்டது. ஆனால், பிரெஞ்சு வெளி உறவு அமைச்சர் டெல்காசியின் முயற்சியினால் இரண்டு நாடுகளுக்குமிடையே சமரசம் ஏற்பட்டது. தங்கள் வேறுபாடுகளை மறந்து 1907, ஆகஸ்ட் 3–ல் இரண்டு நாடுகளும் ஆங்கில ரஷ்ய நேச ஒப்பந்தம் செய்து கொண்டன. இதன்படி பெர்சினா, ஆப்கானிஸ்தான், திபெத் ஆகிய பகுதிகளில் தாங்கள் போட்டியிடுவதில்லை என்று உடன்பாடாயிற்று.

இவ்வாறு தனித்தனியாக நேச உடன்படிக்கைகளைச் செய்துகொண்ட பிரான்ஸ், இங்கிலாந்து, ரஷ்யா ஆகிய நாடுகள் ஒன்றாக இணைந்து உருவானதுதான் ‘மூவர்

மனமார்ந்த நேச உடன்படிக்கை'யாகும். **1907–**ல் ஆங்கில–ரஷ்ய நேச ஒப்பந்தம் ஏற்பட்டதுடன் மூவர் மனமார்ந்த நேச உடன்படிக்கை' நிறைவடைந்தது. இது 'முக்கூட்டு உடன்படிக்கை'க்கு எதிராக அமைக்கப்பட்டது ஆகும். தங்களிடையே ஒற்றுமை, நட்புறவு உடன்பாடு ஏற்படுத்திக் கொண்ட இந்த மூன்று நாடுகளும், அதன்பின், ஒன்றையொன்று கலந்து ஆலோசித்து செயல்பட ஆரம்பித்தன. ஜெர்மனியின் மீது இருந்த பகைமையும், அச்சமுமே இந்த 'மூவர் மனமார்ந்த நேச உடன்பாடு' ஏற்பட முக்கிய காரணமாகும்.

இவ்வாறு முதல் உலகப்போருக்கு முன்பு ஐரோப்பிய நாடுகள் இரண்டு இராணுவக் கூட்டுகளாகப் பிரிந்து எதிரெதிராக அணிவகுத்து நின்றன. முக்கூட்டு உடன்படிக்கை நாடுகள்' மைய நாடுகள் (Central Powers) எனவும், மூவர் மனமார்ந்த நேச உடன்படிக்கை நாடுகள் 'நேச நாடுகள் (Allied Nations) எனவும் அழைக்கப்பட்டன.

இந்த இரண்டு இராணுவக் கூட்டு நாடுகளுக்கிடையே போட்டியும் பொறாமையும், அவநம்பிக்கையும், விரோதமும், வெறுப்புணர்வும் வேகமாக வளர்ந்து வந்தன. எல்லா நாடுகளும் ஆயுத உற்பத்திப் போட்டியில் ஈடுபட்டன. போர் எப்போது ஏற்படும் என்ற பீதியில் மக்கள் வாழ்ந்து வந்தனர். **1914**, ஜூலை **28–**ல் சிறிய போராக ஆரம்பித்துப் பின்னர் உலகம் முழுவதும் பரவி உலகப் போராக மாறியது. **1565** நாட்கள் நடைபெற்ற முதல் உலகப்போர் அளவிலும், நடைமுறையிலும் இணையில்லாத போர். பேரழிவை ஏற்படுத்தியப் போர். அதற்கான காரணங்களை அடுத்த அத்தியாயத்தில் விரிவாகக் காணலாம்.

## முதல் உலகப் போர் (FIRST WORLD WAR – 1914-1918)

இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் உலகம் ஒரு மாபெரும் போரில் சிக்குண்டு பல இன்னல்கட்கு ஆளானது. ஐரோப்பிய நாடுகளுக்கிடையே ஏற்பட்ட பகைமையும் வெறுப்புணர்வும் பெரிய உலகப்போரை ஏற்படுத்திவிட்டன. ஐரோப்பாவில் பல ஆண்டுகளாக ஏற்பட்ட பல்வேறு நிகழ்ச்சிகளின் கூட்டு விளைவாகவே ஏற்பட்டதே முதல் உலகப்போர் எனலாம். இந்தப் போருக்கான காரணங்கள் 19–ஆம் நூற்றாண்டின் இறுதியிலேயே நிகழ்ந்திருக்கின்றன. உலக வரலாற்றில் நாடுகளுக்கிடையே போர் ஏற்படுவது புதுமை அல்ல என்றாலும், வரலாற்றில் முதல் உலகப்போர் மனிதனுக்கும் மனித நாகரிகத்திற்கும் பேரழிவை உண்டு பண்ணியது.

முதல் உலகப்போரில் 6 கோடியே 50 இலட்சம் மனிதர்கள் பங்கு கொண்டார்கள். இவர்களில் ஐந்து பேரில் ஒருவர் போரில் கொல்லப்பட்டார்கள். மூன்று பேரில் ஒருவர் காயம் அடைந்தார். சுமார் 70 இலட்சம் பேர் நிரந்தர ஊனம் அடைந்தார்கள். உலகத்தில் முக்கால் பங்கிற்கு மேல் நிலப்பரப்பு இப்போரில் ஈடுபட்டிருந்தது. ஜெர்மனியின் தலைமையிலான நாடுகள் ஐரோப்பாவிலும் உலகத்திலும் தங்கள் ஏகாதிபத்தியத்தை ஏற்படுத்தவும், இங்கிலாந்து, பிரான்ஸ், தலைமையிலான நாடுகள் உலகத்தில் ஜனநாயகம் மற்றும் தேசிய சுய நிர்ணய உரிமையைப் பாதுகாப்பதற்காகவும் போரிட்டன.

**போருக்கான காரணங்கள் :**

**1. ஐரோப்பிய நாடுகளுக்கிடையே ஏற்பட்ட இரகசிய உடன்படிக்கைகள் :**

முதலாம் உலகப் போருக்கு முன்பாக ஐரோப்பிய நாடுகள் தங்கள் நாட்டு மக்களுக்குத் தெரியாமல் இரகசிய உடன்படிக்கைகள் செய்துகொண்டன. 1871–ஆம் வருடம் முடிவடைந்த பிராங்கோ பிரஷ்யப் போருக்குப் பின்பு இவ்வித இரகசிய உடன்படிக்கைகள் செய்து கொள்ளும் முறை வளர்ச்சியடைந்தது. இதுவே முதல் உலகப் போருக்கான முக்கிய காரணம் ஆகும். ஜெர்மனி, இத்தாலி, ஆஸ்திரியா, ஆகிய நாடுகள் ஒன்றுசேர்ந்து தங்களுக்குள் முக்கூட்டு உடன்படிக்கையை 1882–ல் ஏற்படுத்திக் கொண்டன. இந்த உடன்படிக்கைக்கு எதிராக, பிரான்ஸ், இங்கிலாந்து, இரஷ்யா, ஆகிய நாடுகள் சேர்ந்து ‘மூவர் நேச ஒப்பந்தம்’ ஒன்றை 1907–ல் ஏற்படுத்திக்கொண்டன. இவ்விதம் ஐரோப்பாவானது இரண்டு இராணுவப் பிரிவுகளாகப்

பிரிக்கப்பட்டது. இவைகளுக்கிடையே ஏற்பட்ட விரோதமே முதல் உலகப்போருக்கு முக்கியக் காரணமாக விளங்கியது.

**2. ஏகாதிபத்திய உணர்வு :**

ஏகாதிபத்திய உணர்வு ஐரோப்பிய நாடுகளுக்கிடையே அளவுக்கு அதிகமாகக் காணப்பட்டது. ஒவ்வொரு ஐரோப்பிய நாடும் தன்னைத்தானே செழிப்புடையதாக்கவும், வலிமை மிக்கதாக்கவும், தனது ஆதிக்கத்தைப் பிற நாடுகளில் பரப்பவும் முயற்சித்தது. இதனாலேயே உலகப்போர் மூண்டது என்று கூறலாம். ''ஜெர்மானியப் பண்பாடு உலகமெங்கும் பரவ நாகரிகக் காப்புப் போராட்டம் (Kultur Campf) நடத்துவதே தங்கள் கடமை' என்றும் ஜெர்மனியர்கள் கூறினார்கள். அதே போன்று பிற்போக்கான நாடுகளில் நாகரிகத்தைப் பரப்புவது வெள்ளையர் பொறுப்பு'' என்று ஐரோப்பிய நாடுகள் கருதின. இப்படி ஏகாதிபத்திய ஆதிக்கத்தைப் பரப்ப ஒவ்வொரு நாடும் நினைத்தது. இதில் போட்டி ஏற்பட்டு இறுதியில் அது போராக முடிந்தது.

**3. ஐரோப்பிய நாடுகளிடையே காணப்பட்ட படைபெருக்கம் :**

**1870–**ஆம் ஆண்டிற்குப் பிறகு, போர்க்கருவிகளைச் சேகரிப்பதிலும் படை பலத்தைப் பெருக்குவதிலும் ஐரோப்பிய நாடுகளு.கிடையே கடும் போட்டி ஏற்பட்டது. ஐரோப்பிய நாடுகள் செய்து கொண்ட இரகசிய உடன்படிக்கைகள் இப்போட்டியை மேலும் அதிகரித்ன. ஒவ்வொரு நாடும் தனது வரவு–செலவுத் திட்டத்தில் இராணுவச் செலவிற்கு அதிக அளவு பணம் ஒதுக்கியது. கெய்சர் வில்லியம் பல போர்க் கப்பல்களைத் தயார் செய்தார். கப்பற்படையை வலிமையாக்கினார். இவரது நோக்கத்தைப் புரிந்து கொண்ட இங்கிலாந்தின் பிரதமர் வின்ஸ்டன் சர்ச்சில் பெருமளவில் இராணுவ உபயோகத்திற்காக இரஷ்யாவுடன் சேர்ந்து பல புதிய இரயில் பாதைகளை அமைத்தார். துப்பாக்கிகளை தயாரிப்பதிலும் எரி பொருட்களைச் சேமித்து வைப்பதிலும் ஐரோப்பிய நாடுகளுக்கிடையே போட்டி ஏற்பட்டது. இவ்வித ஆயுத உற்பத்திப் போட்டி முதல் உலகப் போருக்கு முக்கியக் காரணமானது.

**4. குறுகிய தேசிய உணர்வு :**

ஒரு நாட்டின் மீதுள்ள பற்றானது பிற நாட்டின் மீது பகைமையை ஏற்படுத்தியது. ஜெர்மனி மீதுள்ள அன்பானது ஜெர்மானிய மக்கள் பிரான்சை வெறுக்கவும், இதே போன்று பிரான்ஸ் ஜெர்மனியை வெறுக்கவும் காரணமானது. குறுகிய தேசப்பற்றின் விளைவாக மக்கள் தங்கள் நாடுகளின் மீது அளவு கடந்த பக்தி வைத்தார்கள்.

'உலகத்தின் மையமாக விளங்குவதே இங்கிலாந்துதான்' என்று பிரெஞ்சு மக்களும், ''கடவுளின் உலகப்படத்தின்மையமே ஜெர்மனிதான்'' என்று ஜெர்மனியர்களும் கருத்துக் கொண்டிருந்தார்கள். இது நாடுகளுக்கிடையே பகைமையை வளர்த்தது.

**5. இரண்டாம் கெய்சர் வில்லியத்தின் ஏகாதிபத்திய வெறி :**

ஜெர்மானியப் பேரரசர் இரண்டாம் வில்லியம் ஆணவம் மிக்க ஏகாதிபத்திய வெறி கொண்டவர். ஜெர்மனியை உலக வல்லரசாக்கத் திட்டம் தீட்டினார். ''ஜெர்மானிய இனமே உலகை ஆளப்பிறந்தது'' என்றும் ''உலகை ஆள்வது அல்லது வீழ்வது'' என்றும் கொக்கரித்தார். ஆங்கிலேயரின் வலிமையைத் தப்புக்கணக்கிட்டு இங்கிலாந்தை வீழ்த்தக் கனவு கண்டார். உலக விவகாரங்களில் அதிகமாகத் தலையிட்டு புதிய ஜெர்மனியின் புகழைப் பரப்ப நினைத்தார். இதற்காக ஜெர்மனியின் இராணுவ வலிமையை அதிகப்படுத்தினார். இவரது ஏகாதிபத்திய வெறியே முதல் உலகப்போருக்கு வழி நடத்தியது.

**6. மக்களின் எண்ணத்தை மாற்றிய செய்தித்தாள்கள் :**

செய்தித்தாள்கள் மக்களின் உணர்ச்சிகளைத் தூண்டி, பிற நாட்டின் மீது வெறுப்பை வளர்த்தன. அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிலுள்ள பத்திரிக்கைகள் உலகச் செய்திகளைத் திரித்துக் கூறி மக்களைத் தவறாக வழிநடத்தின. சுதந்திரமாகச் செயல்பட்ட பிரெஞ்சுப் பத்திரிக்கைகளோ, ஜெர்மனியின் மீதான வெறுப்பை அள்ளித் தெளித்தன. காலையில் வெளிவந்த செய்தித்தாள்கள் வெளியிட்ட செய்திகளை மையமாக வைத்துதான் உலகமே சுழல்வது போன்ற நிலை ஏற்பட்டது. திரித்துக் கூறப்பட்ட செய்திகள், அடிப்படையற்ற வதந்திகள், முழுப் பொய்கள் ஆகியவற்றின் மூலம் நாட்டு மக்களிடையே பகைமை உணர்ச்சியை வளர்த்தன செய்தித்தாள்கள்.

**7. அமைதியை ஏற்படுத்த சமாதான ஸ்தாபனம் இல்லாமை :**

போரிடுவதற்காக ஐரோப்பாவில் பல அமைப்புகள் இருந்தன. ஆனால், பகைமையைக் கட்டுப்படுத்தவும், நாடுகளுக்கிடையே ஏற்படும் சிறுசிறு பிரச்சனைகளைத் தீர்த்து வைக்கவும் மனநிறைவு ஏற்படுத்தும் நிலையில் ஒரு அகில உலகச் சமாதான ஸ்தாபனம் இல்லாதது முதல் உலகப் போருக்குக் காரணமானது. **1898**–ல் இரஷ்ய மன்னர் சமாதானத்தை ஏற்படுத்தும் நோக்கத்துடன் ஐரோப்பிய வல்லரசுகளைப் படைக்குறைப்பு பற்றி விவாதிக்க ஹேகுவில் கூட்டப்படும் மாநாட்டில் கலந்து கொள்ள அழைத்தார். அந்த மாநாடு தோல்வியடைந்தது. **1907**–ல் மாநாடு

மீண்டும் கூடினாலும் பயனேதும் ஏற்படவில்லை. ஒரு அகில உலக சமாதான ஸ்தாபனத்தை ஏற்படுத்தும் மனநிலை ஐரோப்பிய அரசுகளிடம் காணப்படவில்லை. இது போருக்குக் காரணமானது.

**8. அல்சேஸ், லொரைன் பிரச்சனை :**

**1871–**ல் முடிவடைந்த பிராங்கோ–பிரஷ்யப் போரின் இறுதியில் ஏற்பட்ட பிராங்பர்ட் ஒப்பந்தத்தின்படி பிரான்ஸ் நாட்டின் வளமிக்க அல்சேஸ், லொரைன் பகுதிகளை ஜெர்மனி பெற்றது. இப்பகுதிகளை மீண்டும் பெற பிரான்ஸ் தக்கத் தருணத்தை எதிர்நோக்கிக் கொண்டிருந்தது. காரணம் லொரைன் பகுதி அதிகமாக இரும்புத் தாது வளங்களைக் கொண்டது. **1871–**க்குப் பிறகு ஜெர்மனியின் தொழில் வளர்ச்சிக்கு லொரைனின் இரும்புச் சுரங்கங்களே காரணம் என பிரான்ஸ் நம்பியது. எனவே அல்சேஸ்–லொரைனை மீண்டும் பெற பிரான்ஸ் துடித்தது. இப்பிரச்சனை ஜெர்மனிக்கும் பிரான்சுக்குமிடையே பகைமையை வளர்த்தது. இதுவே உலகப் போருக்கு காரணமானது.

**9. குடியேற்றங்களை அமைப்பதில் போட்டி :**

ஐரோப்பாவின் மேற்குப் பகுதியில் ஆதிக்கத்தை நிறுவவும், கடல் கடந்த வாணிகத்திலும், குடியேற்றங்களை நிறுவுவதிலும் உயர்ந்த இடத்தைப் பெறவும், ஜெர்மனிக்கும் பிரெஞ்சு–பிரிட்டிஷ் கூட்டுக்குமிடையே ஏற்பட்ட போட்டியே போராக வடிவெடுத்தது. குடியேற்ற நாடுகள் தங்கள் தாய்நாட்டின் தொழில் வளர்ச்சிக்கு வேண்டிய மூலப் பொருட்களை அனுப்புவதோடு மட்டுமல்லாமல், தாய் நாட்டின் உற்பத்திப் பொருட்களின் விற்பனைத் தளங்களாகவும் மக்கள் தொகைப் பெருக்கத்தைச் சமாளிக்கும் இடங்களாகவும் இருந்ததால் குடியேற்ற நாடுகளைப் பெறுவதற்கு ஐரோப்பிய நாடுகள் ஒன்றோடு ஒன்று போட்டியிட்டன.

**1871–**ல் முடிவடைந்த ஜெர்மானிய ஐக்கியத்திற்குப் பிறகு ஜெர்மனி தொழில் உற்பத்தியில் அதிக வளர்ச்சியடைந்தது. நாட்டின் முக்கியத்துவத்தை வெளிப்படுத்தவும், உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களை விற்பதற்கும் பெருகி வரும் மக்கள் தொகை மற்றும் பொருளாதாரச் சிக்கல்களைக் குறைப்பதற்கும் தனக்கு குடியேற்ற நாடுகள் அவசியம் தேவை என்பதை ஜெர்மனி உணர்ந்தது. அதனால், இங்கிலாந்து, பிரான்ஸ் ஆகிய நாடுகளுடன், புதிய உலகு ஆப்பிரிக்கா மற்றும் ஆசிய நாடுகளில், குடியேற்றங்களை நிறுவுவதில் ஜெர்மனி போட்டியிட்டது. ஆனால்,

இங்கிலாந்து தனது குடியேற்றங்களை விட்டுக் கொடுக்கவோ, புதிய குடியேற்றங்களை ஜெர்மனி பெற்றுக் கொள்ளவோ விரும்பவில்லை. இந்தக் குடியேற்றப் போட்டியே முதல் உலகப் போருக்கு காரணமாக அமைந்தது.

**10. மொராக்கோ பிரச்சனை : (அகாடிர் பிரச்சனை)**

மொராக்கோ வடமேற்கு ஆப்பிரிக்காவிலுள்ள ஓர் சுதந்திரமான நாடு. அதன் அருகில் இருந்த அல்ஜீரியா பிரெஞ்சுப் பகுதி ஆகும். எனவே, மொராக்கோ உள்நாட்டு விவகாரத்தில் பிரான்ஸ் அடிக்கடி தலையிட்டு வந்தது. இதைக்கண்ட கெய்சர் வில்லியம், ‘‘மொராக்கோ ஓர் சுதந்திர நாடென்றும், மற்ற நாடுகளைப் போலவே ஜெர்மனிக்கும் மொராக்கோவில் சலுகைகள் பெற உரிமை உண்டு’’ என்றும் வாதாடினார்.

மொராக்கோவிலிருந்த பிரெஞ்சு பொருளாதார நலன்களைப் பேணும் பொருட்டு மொராக்கோ சுல்தானிடம் பிரான்ஸ் அதிக சலுகைகளைக் கேட்டது. இதற்கு இங்கிலாந்து ஆதரவு அளித்தது. ஆனால், ஜெர்மனி எதிர்ப்புத் தெரிவித்து மொராக்கோவின் சுதந்திரத்தை நிலைநாட்டப் போவதாகக் கூறியது. பிரச்சனையைத் தீர்க்க **1906**–ல் ஸ்பெயினிலுள்ள அல்ஜிசரஸில் சர்வதேச மாநாடு ஒன்று கூட்டப்பட்டது. மாநாட்டு முடிவின்படி, மொராக்கோ ஓர் சுதந்திர நாடு என்று மீண்டும் அங்கீகரிக்கப்பட்டது. எல்லா வல்லரசு நாடுகளிலிருந்தும் வியாபாரிகள் முதலீட்டாளர்கள் இங்கு வந்து போகலாம். ஆனால், மொராக்கோவின் துறைமுகப் பட்டிணங்கள் பிரெஞ்சு கட்டுப்பாட்டில் வைக்கப்பட்டன.

**1911**–ல் மொராக்கோவில் மீண்டும் நெருக்கடி ஏற்பட்டது. அங்கு ஏற்பட்ட உள்நாட்டுக் கலவரத்தை அடக்க பிரான்ஸ் தனது கப்பற்படையை அனுப்பியது. இதனை வன்மையாகக் கண்டித்த ஜெர்மனி, தனது எதிர்ப்பைத் தெரிவிக்கும் பொருட்டும் மொராக்கோவில் ஜெர்மானிய நலன்களைப் பாதுகாக்கவும் ‘பேன்தார்’ என்ற யுத்தக்கப்பலை மொராக்கோவிலுள்ள அகாடிர் துறைமுகத்திற்கு அனுப்பியது. இதனால் பதட்ட நிலை ஏற்பட்டது. ஐரோப்பாவை போர் அபாயம் சூழ்ந்தது. இந்தப் பிரச்சனையில் பிரான்சுக்கு ஆதரவாகச் செயல்பட்டது இங்கிலாந்து. எனவே போரைத் தவிர்ப்பதில் நாட்டம் கொண்டது ஜெர்மனி. பிரெஞ்சுக்காரர்களின் கொள்கைகளை தான் எதிர்க்கவில்லை என்று ஜெர்மனி கூறிது. பிரான்சும், ஜெர்மானிய வியாபாரிகளை முன்பு போல் மீண்டும் அனுமதிக்க ஒத்துக் கொண்டது.

இந்த அகாடிர் பதட்ட நிலை மூன்று முக்கிய விளைவுகளை ஏற்படுத்தியது. அவை பின்வருமாறு :

1. இந்த நிகழ்ச்சி ஜெர்மானியர்கட்கு எதிரான உணர்வை பிரான்சில் தோற்றுவித்தது.
2. பிரான்சுக்கும் இங்கிலாந்துக்குமிடையே உறவு வலுவடைந்தது.
3. மொராக்கோவில் தனக்குள்ள ஆர்வத்தை இங்கிலாந்து பங்கப்படுத்திவிட்டதாகக் கருதி அதன் மீது பகைமை கொண்டது ஜெர்மனி. இவை உலகப் போரை நோக்கி இரண்டு நாடுகளையும் நேராக வழிநடத்திச் சென்றது.

**11. பால்கன் பகுதியில் ஏகாதிபத்தியப் போட்டி :**

ஐரோப்பாவின் கிழக்குப் பகுதியான பால்கன் பகுதியில் ஆதிக்கத்தை நிறுவ ஸ்லாவிய மக்களுக்கும், டியூட்டானிக் இன மக்களுக்குமிடையில் ஏற்பட்ட போட்டியே உலகப் போராக மாறியது எனலாம். **1878–**ஆம் வருட பெர்லின் உடன்படிக்கைப்படி பால்கன் பகுதியிலிருந்த போஸ்னியா, ஹெர்சிகோவினா ஆகிய நாடுகளின் பாதுகாப்பாளராக மட்டுமே இருக்குமாறு ஆஸ்திரியா கேட்டுக்கொள்ளப்பட்டது. ஆனால், **1908–**ல் ஜெர்மனியின் ஆதரவுடன் அந்த இரண்டு நாடுகளையும் தனது நாட்டுடன் இணைத்துக் கொண்டது ஆஸ்திரியா.

இந்த ஆக்கிரமிப்பு பால்கன் பகுதியிலிருந்த செர்பியாவுக்கு பேரதிர்ச்சியைக் கொடுத்தது. ஏனெனில் போஸ்னியா ஹெர்சிஹோவினாவிலுள்ள மக்கள் செர்பியாவிலுள்ள ஸ்லாவ் இனத்தைச் சார்ந்தவர்கள். இந்த இரண்டு பகுதிகளை இணைத்துக் கொள்ள எண்ணம் கொண்டிருந்தது செர்பியா. எனவேதான் ஆஸ்திரியாவின் வளர்ச்சியைக் கண்டு அதிர்ச்சியடைந்தது. பால்கன் பகுதியில் தனது செல்வாக்கை நிலைநாட்ட முயற்சி செய்த ரஷ்யா செர்பியாவுக்கு ஆதரவளித்தது. ஆனால், அண்மையில் நடந்த ரஷ்ய–ஜப்பானியப் போரில் ரஷ்யா தோல்வியடைந்து பலவீனமடைந்ததால் செர்பியாவுக்கு படையுதவி செய்யும் நிலையிலில்லை ரஷ்யா. ரஷ்யாவின் ஆதரவில்லாமல் ஆஸ்திரியாவை ஜெயிக்க முடியாது என்று உணர்ந்த செர்பியா எந்த நடவடிக்கையிலும் ஈடுபடாததால் நெருக்கடி தணிந்தது. ஆனால், செர்பியாவும் ரஷ்யாவும், ஆஸ்திரியா, ஜெர்மனி ஆகிய நாடுகளின் மீது வெறுப்புற்று பழி தீர்த்துக் கொள்ள வழி தேடியது. இத்தகைய பழிவாங்கும் உணர்வும், பதட்ட நிலையும்

முதல் உலகப் போர் ஏற்படுவதற்கு ஏற்றதாக இருந்தது. மேற்கண்ட பதினொரு காரணங்களை ஆராயும்போது 'முதல் உலகப் போர் வல்லரசுகளின் சமநிலைப் போர்' என்று நாம் கருத்தில் கொள்ளலாம்.

**உடனடிக் காரணம் :**

**12. சராஜிவோ படுகொலை :**

1908–ல் ஆஸ்திரியா போஸ்னியாவை இணைத்துக் கொண்டதிலிருந்து, அங்கிருந்து ஸ்லாவ் இனத்தைச் சேர்ந்த மக்கள் ஆஸ்திரியாவின் ஆட்சியை அகற்றவும், சகோதர நாடான செர்பியாவுடன் ஒன்றுபடவும் கிளர்ந்தெழுந்தனர். இந்த தேசிய உணர்வினை அடக்க ஆஸ்திரியா–ஹங்கேரி எதிர் நடவடிக்கைகளை எடுத்து வந்தது.

இச்சூழ்நிலையில்தான் ஆஸ்திரியாவின் பட்டத்து இளவரசரும், பேரரசர் பிரான்சிஸ் ஜோசப்பின் மருமகனுமான ஆர்ச்டியூக் பிரான்சிஸ் பெர்டினாண்டு தனது மனைவியுடன் போஸ்னியாவிலுள்ள சராஜிவோ என்ற நகருக்கு 1914 ஜுன் 28–ஆம் தேதி விஜயம் செய்தார். அப்போது கவ்ரில்லோ பிரின்ஸீப் (Cavrilo Princip) என்ற 24 வது செர்பிய இளைஞனால் ஆர்ச்டியூக் பெர்டினாண்டும் அவர் மனைவியும் காலை 10:15 மணி அளவில் சுட்டுக் கொல்லப்பட்டனர். இந்தப் படுகொலைதான் ஐரோப்பாவை உடனடியாகப் போரில் தள்ளிய நிகழ்ச்சியாகும்.

ஜுலை 23–ஆம் தேதி செர்பியாவுக்கு இறுதி எச்சரிக்கை ஒன்றை விடுத்தது ஆஸ்திரியா. அதன்படி, 'செர்பியாவில், ஆஸ்திரியாவுக்கு எதிரான பிரச்சாரத்தை நிறுத்த வேண்டும். செர்பியாவிலுள்ள ஆஸ்திரியா விரோத அதிகாரிகளைப் பதவி நீக்கம் செய்ய வேண்டும். செர்பியப் பள்ளிக்கூடங்களில் உள்ள ஆஸ்திரிய விரோதப் பாடப் புத்தகங்களை ஒழிக்க வேண்டும். இந்தப் படுகொலையைப் பற்றி விசாரிக்க ஆஸ்திரிய அதிகாாகளை செர்பியாவினுள் நுழைய அனுமதிக்க வேண்டும். செர்பியாவில் செயல்படும் ஆஸ்திரிய விரோத இயக்கங்களை நசுக்க ஆஸ்திரியாவுக்கு செர்பியா ஒத்துழைப்பு தர வேண்டும்' போன்ற நிபந்தனைகளை வைத்து 48 மணி நேரத்திற்குள் இந்தக் கோரிக்கைகள் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் என்று கெடு வைத்தது ஆஸ்திரியா.

ஜுலை 25–ஆம் தேதி செர்பிய அரசு பதிலளித்தது. செர்பிய ஒற்றுமைக்கும், சுதந்திரத்திற்கும், ஆளுமைக்கும் பாதகமில்லாத நிபந்தனைகளை ஏற்றுக் கொள்வதாகவும், பிரச்சனைக்குரிய நிபந்தனைகளை ஹேகுவிலுள்ள பன்னாட்டு

நீதிமன்றத்திற்கு விட்டுத் தீர்த்துக் கொள்ளலாம் என்றும் தனது பதிலில் செர்பியா கூறியது. அதே நேரம் படைத் திரட்டுவதற்கான உத்திரவையும் செர்பிய அரசாங்க. பிறப்பித்தது. 'செர்பியாவின் பதில்கள் ஏற்றுக்கொள்ள முடியாதது, ஏமாற்றமளிக்கிறது' என்று ஆஸ்திரியா கூறி செர்பியாவுடனான உறறவத் துண்டித்தது. அத்துடன் படை திரட்டுவதற்கான ஏற்பாடுகளையும் ஆரம்பித்தது.

நிலைமை மோசமாகவே **1914** ஜூலை **26–**ல் இங்கிலாந்தின் வெளியுறவு மந்திரி சர். எட்வர்ட் கிரே (Sir.Edward Grey)இப்பிரச்சினையைப் பற்றி விவாதிக்க மாநாடு ஒன்றைக் கூட்டுமாறு இத்தாலி, பிரான்ஸ், ஜெர்மனி, ரஷ்யா, ஆகிய நாடுகளிடம் கேட்டுக்கொண்டார். இந்த யோசனையை ஜெர்மனி உறுதியாக மறுத்தது. ஜெர்மனியின் உறுதியைக் கண்ட ஆஸ்திரியா ஜூலை **28–**ல் செர்பியா மீது போர் தொடுத்தது. இவ்வாறு முதல் உலகப் போர் மூண்டது.

## <u>போரின் போக்கு</u>

ஏற்கனவே செர்பியாவின் அத்துமீறிய செயல்களால் ஆத்திரம் கொண்டிருந்த ஆஸ்திரியர்கள் தங்கள் இளவரசர் படுகொலை செய்யப்பட்டதைக் கேட்டு அதிர்ந்து போயினர். உடனே செர்பியாவிற்கு பத்து நிபந்தனைகள் அடங்கிய இறுதி எச்சரிக்கையை விடுத்து, அதற்கு விளக்கமும் கோரினர். செர்பியா அவற்றில் எட்டு நிபந்தனைகளை ஏற்றுக் கொண்டு மீதி இரண்டினை சர்வதேச நடுவர் தீர்ப்பிற்கு விடத்தயார் என்று கூறியது. இந்த விளக்கத்தினால் திருப்திதடையாத ஆஸ்திரியா ஜூலை **28–**ஆம் தேதி செர்பியா மீது போர் தொடுத்தது.

ஏற்கனவே செர்பியாவிற்கு ரஷ்யாவும், ஆஸ்திரியாவிற்கு ஜெர்மனியும் வெற்றுக் காகிதத்தில் கையெழுத்திட்ட ஆதரவை அளித்திருந்தனர். செர்பியாவிற்கு எதிராக ஆஸ்திரியாவின் ஆக்கிரமிப்பை ரஷ்யா ஒரு போதும் அனுமதியாது என்று அறிவித்தது. ரஷ்யா உடனே படை திரட்டும் ஆணையைப் பிறப்பித்தது. அது கண்ட ஜெர்மனி, ரஷ்யா மீது போர் பிரகடனம் செய்தது. ரஷ்யாவுடன் நட்புறவு உடன்படிக்கையில் பிணைக்கப்பட்டிருந்த பிரான்ஸ், ஜெர்மனி மீது போர் தொடுத்தது. பிரான்சின் மீது பாய்வதற்கு ஏற்கனவே வகுத்திருந்த திட்டப்படி பெல்ஜியத்தின் வழியாக ஜெர்மனி தன் படைகளை அனுப்பியது.

போரில் கலந்து கொண்ட இருதரப்பு நாடுகள்

| **மூவர் கூட்டுறவு நாடுகள்** | **மூவர் நட்புறவு நாடுகள்** |
|---|---|
| ஜெர்மனி,<br>ஆஸ்திரியா,<br>ஹங்கேரி,<br>பல்கேரியா,<br>துருக்கி | பிரான்ஸ்<br>ரஷியா (1917–ல் போரில் இருந்து விலகியது)<br>பிரிட்டன், செர்பியா<br>இத்தாலி (1915–ல் போரில் இறங்கியது)<br>ஜப்பான், அமெரிக்கா, சீனா, பெர்ஜியம், ருமேனியா, பிரிட்டிஷ் பேரரசு நாடுகள் |

1. பெல்ஜியத்தின் வழியாகப் பிரான்சினுள் நுழைந்த ஜெர்மன் படைகள் பாரிசை நோக்கி முன்னேறின. ஆனால், மார்ன் நதிக்கரையில் அவை தடுத்து நிறுத்தப்பட்டன. வெர்டுன் கோட்டையைப் பிடிப்பதற்கு ஜெர்மன் செய்த பகீரத முயற்சிகள் பலிக்கவில்லை. அதன்பின் இரு தரப்பாரும் பதுங்கு குழியில் பதுங்கியிருந்து ஒருவரை ஒருவர் தாக்கிக் கொண்டனர்.
2. கிழக்கில் ரஷியப் படைகள் ஜெர்மனி மீதும் ஆஸ்திரியா மீதும் படையெடுத்து வந்தன. ஆனால், அப்படைகள் படுதோல்வியுற்று பின்வாங்கியது.
3. இதற்கிடையில் பால்கன் பகுதியில், துருக்கியும் பல்கேரியாவும் ஜெர்மன் ஆஸ்திரிய நாடுகளுக்கு ஆதரவாகப் போரில் இறங்கின. உடனே நேச நாட்டு கப்பற்படைடள் டார்டனல்ஸ் நீர்ச்சந்தி வழியாக ஊடுருவி கருங்கடலினுள் செல்ல முயன்றன. ஆனால், அந்த முயற்சி தோற்கடிக்கப்பட்டது. கலிபோலியில் படைகளை இறக்கச் செய்த முயற்சியும் தோல்வியில் முடிந்தது. ஆனால், பின்னர் மெசபடோமியா, பாலஸ்தீனம், ஆகிய துருக்கிய மாநிலங்களில் பிரிட்டிஷ் படைகள் ஊடுருவி வெற்றி பெற்றன.
4. இது பெல்ஜியத்தின் நடுநிலைக்கு வல்லரசுகள் அளித்த உறுதிமொழிக்கு எதிரானது என்று கருதிய பிரிட்டன் ஜெர்மனி மீது போர் தொடுத்தது. இவ்வாறு செராஜிவோவில் தெறித்த சிறு பொறி பெரு நெருப்பாக மாறியது.

**ஜப்பான் போரிலிறங்குதல் :** தூரக்கிழக்கில் பிரிட்டனின் நட்பு நாடான ஜப்பான் நேச நாடுகளுக்கு ஆதரவாகப் போரில் இறங்கியது. சீனாவில் ஜெர்மனிக்குச் சொந்தமான இடங்களையும், பசிபிக் கடலில் ஜெர்மனிக்குச் சொந்தமான தீவுகளையும் கைப்பற்றியது.

**இத்தாலி கட்சி மாறுதல் :** போர் தொடங்கியதும் இத்தாலி போரில் இறங்கவில்லை. இத்தாலியின் மனோநிலையை உணர்ந்த நேச நாடுகள் இரகசியமாகத் தொடர்பு கொண்டன. அதன் பயனாக **1915–**ல் இலண்டனில் இரகசிய உடன்படிக்கை செய்துகொள்ளப்பட்டது. அதன்படி நேச நாடுகள் இத்தாலிக்கு தெற்கு டைராய், டிராண்டினோரி, டிரிஸ்டி டால்மேஷியா பகுதிகளை அளிப்பதாக ஆசை காட்டின. எனவே நேச நாடுகள் சார்பில் போரிலிறங்கியது.

**கடற்போர்**: போர் தொடங்கியதும் பிரிட்டனின் கடலாதிக்க வலிமை காரணமாக ஜெர்மன் கடல் முற்றுகையிடப்பட்டது. அதன்படி குடியேற்றங்கள் கைப்பற்றப்பட்டன. ஜட்லாந்து என்ற இடத்தில் நடைபெற்ற கடற்போரில் இரு தரப்பிலும் கடும் சேதம் உண்டானது. அதன்பின், ஜெர்மனி நீர்மூழ்கிக் கப்பல் மூலம் நேச நாட்டு கப்பல்களைத் தாக்கத் தொடங்கியது.

**அமெரிக்கா போரிலிறங்குதல் :** ஜெர்மெனியின் நீர்மூழ்கிக் கப்பல் தாக்குதல் அமெரிக்காவைப் பாதித்தது. **1915–**ல் லூஸிடானியா என்ற கப்பலை ஜெர்மன் படகுகள் மூழ்கடித்தன. அதில் பயணம் செய்த **128** அமெரிக்கர்கள் உயிரிழந்தனர். தொடர்ந்து ஜெர்மனி தடையற்ற நீர்மூழ்கிக் கப்பல் போரைத் தொடங்கியது. அதனை எதிர்த்து அமெரிக்கா போரில் இறங்கியது.

**இரஷியா போரிலிருந்து விலகுதல் :** போரில் ரஷ்யா பெற்ற படுதோல்விகள் உள்நாட்டில் குழப்பங்களை உண்டுபண்ணியது. மக்கள், உணவு, அமைதி, நிலம் கேட்டு புரட்சியிலிறங்கினர். போர் வீரர்களும் மக்களுடன் சேர்ந்துகொண்டனர். புரட்சி காரணமாக ஜார் மன்னரது ஆட்சி ஒழிக்கப்பட்டு, லெனின் தலைமையில் போல்ஷ்விக் ஆட்சி ஏற்பட்டது. அவ்வரசு ஜெர்மனியுடன் பிரஸ்ட்லிட்டோவ்ஸ்க் உடன்படிக்கை **(1918)** செய்து கொண்டு போரில் இருந்து விலகியது.

**போரின் முடிவு : 1918** ஏப்ரலில் ஜெர்மன் கடும் தாக்குதல் ஒன்றை மேற்கொண்டது. நேச நாட்டுப் படைகள் அனைத்திற்கும் ஃபோஷ் என்பவர் தலைமைத் தளபதியாக நியமிக்கப்பட்டார். அவரது தலைமையில் நேச நாட்டுப் படைகள் ஜெர்மன்

தாக்குதல்களை முறியடித்தன. போரில் நேச நாடுகள் வெற்றி பெற்றன. தொடர்ந்து பிரான்சில் ஜெர்மனி ஆக்கிரமித்த பகுதிகளை மீட்டு ஜெர்மன் எல்லையை நெருங்கினர். ஜெர்மன் கடற்படை, அரசு ஆணைக்குப் பணிய மறுத்தன. கெய்சர் பதவி துறந்து ஹாலந்திற்குத் தப்பியோடினார். ஜெர்மன் படைகள் போர் நிறுத்தத்திற்கு இணங்கினர்.

**போரின் விளைவுகள் :** போரில் ஒரு கோடிக்கு மேற்பட்ட வீரர்கள் கொல்லப்பட்டனர். இரண்டு கோடிப் பேர் காயமடைந்தனர். ஐரோப்பிய நாடுகளின் பொருளாதார அமைப்பு சீர்குலைந்தது. ரஷ்யா, ஜெர்மனி, ஆஸ்திரியா, துருக்கி, ஆகிய நான்கு ஐரோப்பியப் பேரரசுகள் அழிந்தன. உலகில் இத்தகைய கொடிய போரை தடுக்கவும், உலக அமைதியைப் பேணவும் ஒரு நிறுவனம் தேவை என உணர்ந்தன. எனவே, சர்வதேச சங்கம் தோற்றுவிக்கப்பட்டது. போருக்குப் பின் ஐரோப்பாவில் ஏற்பட்ட பொருளாதார அரசியல் நெருக்கடிகள் பல்வேறு நாடுகளில் சர்வாதிகார அரசுகள் தோன்ற வழி ஏற்படுத்தின. **(உ.ம்.)** ஜெர்மனியில் நாஸிஸம், இத்தாலியில் பாஸிஸம். இப்போர் ரஷ்யாவில் பெரும் புரட்சி ஏற்படக் காரணமாகி பொதுவுடைமை ஆட்சி ஏற்படவும் வழி வகுத்தது. செக்கோஸ்லோவாகியா, யூகோஸ்லோவியா, போலந்து, முதலிய அரசுகள் தோன்றின.

## வெர்செய்ல்ஸ் உடன்படிக்கை

## (TREATY OF VERSAILIES, 1919)

முதல் உலகப்போர் முடிவடைந்த பின்னர் ஜெர்மனியுடனும், அதன் கூட்டு நாடுகளுடனும் உடன்படிக்கை செய்து கொள்வதற்காக பிரான்ஸ் நாட்டின் தலைநகரான பாரிசுக்கு அருகிலுள்ள 14–ஆம் லூயி கட்டிய புகழ்பெற்ற வெல்செய்ல்ஸ் மாளிகையில் உள்ள புகழ்ப்பெற்ற ‘கண்ணாடி மாளிகையில்’ மாநாடு ஒன்று 1919 ஜனவரி 18–ம் தேதி கூட்டப்பட்டது. பிரான்ஸ் நாட்டின் கிளமன்சோ தலைமை வகித்தார். அதில் 32 நாடுகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டார்கள். 1871–ஆம் ஆண்டு இதே நாளான ஜனவரி 18–ல் வெர்செய்ல்ஸிலுள்ள இதே கண்ணாடி மாளிகையில்தான் பிராங்கோ பிரஷ்யப் போரில் பிரான்சைத் தோற்கடித்தபின் அரசர் முதலாம் வில்லியம் ஜெர்மானியப் பேரரசராக முடிசூட்டப்பட்டார். பிரான்சுக்கு எதிராக பிஸ்மார்க் அப்போது பல முடிவுகளை எடுத்தார். 48 வருடங்களுக்குப் பிறகு அதே நாளில், அதே கண்ணாடி மாளிகையில் பிஸ்மார்க் எடுத்த முடிவுகளையெல்லாம் மாற்றியமைக்கவும் தோற்கடிக்கப்பட்ட ஜெர்மனிக்கு எதிராக பல முடிவுகளை எடுக்கவும் மாநாடு ஆரம்பமானது. அந்த வெர்செய்ல்ஸ் மாநாட்டில் கலந்துகொண்ட முக்கிய நாடுகளின் பிரதிநிதிகள் வருமாறு :-

பிரான்ஸ் – ஜார்ஜ் கிளாமன்ஸோ, ஸ்டீபன்பிகோன்,
இங்கிலாந்து – டேவிட் லாயிட் ஜார்ஜ், ஆர்தர் பெல்போர்,
அமெரிக்கா –உட்ரோவில்சன், ராபர்ட் லேன்சிங்,
இத்தாலி –விட்டோரியா ஆர்லண்டோ, சிட்னி சோனிகோ,
ஜப்பான் –நொபுகி மஹினோ, இமோசி சயோஞ்சி

போரில் தோற்கடிக்கப்பட்ட நாடுகளான ஜெர்மனி, ஆஸ்திரியா, ஹங்கேரி, பல்கேரியா, துருக்கி, ஆகிய நாடுகள் அமைதி மாநாட்டில் கலந்து கொள்ள அழைக்கப்படவில்லை. ரஷ்யப் புரட்சிக்குப் பின் ஜெர்மனியுடன் உடன்படிக்கை செய்து கொண்ட ரஷ்யா மாநாட்டிற்கு வரவில்லை. மாநாட்டில் 32 நாடுகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டாலும் கிளமன்ஸோ, லாயிட் ஜார்ஜ், உட்ரோ வில்சன் ஆகியோரே முக்கிய முடிவுகளை எடுத்தார்கள். சுமார் ஆறு மாதங்கள் விவாதித்து

உடன்படிக்கையின் நகலைத் தயாரித்தனர். **1919** மே மாதம் **7–**ஆம் தேதி உடன்படிக்கையின் நகலை ஜெர்மனியில் புதிதாக அமைக்கப்பட்டிருந்த வெய்மார் குடியரசின் பிரதிநிதிகளிடம் காண்பித்தனர்.

உடன்படிக்கை நகலைப் படித்துப் பார்த்த பிரநிதிகள் அதிர்ச்சியடைந்தனர். வில்சனின் பதினான்கு அம்சத்திட்டத்தின் அடிப்படையிலேயே அமைதி உடன்படிக்கை அமைந்திருக்கும் என்று நினைத்திருந்த அவர்கள், மிகக் கடுமையான ஷரத்துக்களை எதிர்பார்க்கவே இல்லை. கடுமையான ஷரத்துக்களை சிறிது மாற்றியமைக்குகுமபடி கேட்டனர். ஆனால், நேச நாடுகள் அதை ஏற்றுக் கொள்ளாதது மட்டுமல்ல, கையெழுத்திட மறுத்தால் மீண்டும் போரை ஆரம்பித்து பெர்லினை முற்றுகையிடுவோம் என்று பயமுறுத்தினர். வேறு வழியில்லாமல் ஜெர்மானியப் பிரதிநிதிகள் **1919** ஜூன் **28–**ஆம் தேதி உடன்படிக்கையில் கையெழுத்திட்டனர். இவ்வாறு ஆர்ச்ட்யூக் பெர்டினாண்டு கொல்லப்பட்ட சரிகா ஐந்தாவது வருட தினத்தில் முதல உலகப் போர் முடிவடைந்தது. வெர்செய்ல்ஸ் உடன்படிக்கை **400** ஷரத்துக்களைக் கொண்டது. **80,000** வார்த்தைகளைக் கொண்டது. வெர்செய்ல்ஸ் உடன்படிக்கையின் ஷரத்துக்கள் பின் வருமாறு :

## வெர்செய்ல்ஸ் உடன்படிக்கையின் ஷரத்துக்கள்

### 1. நிலப்பகுதிகள் சம்பந்தப்பட்ட ஷரத்துக்கள் :

- 1871–ஆம் ஆண்டு இழந்த அல்சேஸ் லொரைன் பகுதிகளைப் பிரான்ஸ் பெற்றுக் கொண்டது. யூபென், மால்மடி, ஆகிய பகுதிகளைப் பெல்ஜியம் பெற்றது. போஸனில் பெரும் பகுதியும், மேற்கு பிரஷ்யாவும், கேஷ்யூப்ஸ் மாவட்டமும் போலந்துக்குக் கொடுக்கப்பட்டது.
- பால்டிக்கடல் பகுதியிலுள்ள டான்சிக் துறைமுகம் ஜெர்மனியிடமிருந்து பிடுங்கப்பட்டு சுதந்திர நகரமாக்கப்பட்டு சர்வதேச சங்கத்தின் பாதுகாப்பில் வைக்கப்பட்டது.
- ஜெர்மனியின் வளமிக்க சார் சமவெளி (Saar Valley) பிரான்சிற்குக் கொடுக்கப்பட்டது. பிரான்ஸ் போரில் தான் இழந்த சுரங்கங்களுக்கு ஈடாக சார் பகுதியிலுள்ள நிலக்கரிச் சுரங்கங்களை பதினைந்து ஆண்டுகளுக்கு உபயோகப்படுத்திக் கொள்ளலாம். பதினைந்தாவது ஆண்டு முடிவில் அங்கு

வாக்கெடுப்பு நடத்தப்பட்டு சார்பகுதி சர்வதேச சங்கத்தின் கட்டுப்பாட்டின் கீழ் தொடர்வதா அல்லது ஜெர்மனியுடன் இணைக்கப்பட வேண்டுமா அல்லது பிரான்சுடன் இணைக்கப்பட வேண்டுமா என்பது முடிவு செய்யப்படவேண்டும்.

- மேமல் பகுதியை முதலில் நேச நாடுகள் பெற்றுக் கொண்டன. ஆனால், **1921–**ல் மேமல் லிதுவேனியாவிற்குக் கொடுக்கப்பட்டது.
- பெல்ஜியம் ஒரு நடுநிலை நாடாக அறிவிக்கப்பட்டது. போலந்து, செக்கோஸ்லோவேகியா, ஆகிய நாடுகளின் சுதந்திரம் அங்கீகரிக்கப்பட்டது.
- ஜெர்மனியின் குடியேற்றப் பகுதிகள் அனைத்தும் பறித்துக் கொள்ளப்பட்டது. சர்வதேச சங்கம் அந்தப் பகுதிகளை இங்கிலாந்து, பிரான்ஸ், பெல்ஜியம், நியுசிலாந்து, ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளிடம் விருப்பம் போல் பிரித்த் ஒப்படைத்தது. அப்படிக் கொடுக்கப்பட்ட அந்த பகுதிகட்கு ‘‘மாண்டேட்டுகள்’’ என்று பெயர். காமரூன் டோகோலாந்துது டங்ங்னியா ஆகியவை இங்கிலாந்திடமும், ஜெர்மனியின் தென் மேற்கு ஆப்பரிக்கப் பகுதிகள் தென் ஆப்பிரிக்காவிடமும், சாமோவன் தீவுகள் நியுசிலலந்திடமும், மார்ஷல் தீவுகள் ஜப்பானிடமும், நியுகினியாத் தீவுகள் ஆஸ்திரேலியாவிடமும் ஒப்படைக்கப்பட்டன.
- கீல் (Kiel) கால்வாய் எல்லா நாடுகளுக்கும் பொதுவாக்கப்பட்டது.

மேற்கண்ட மாற்றங்களின் விளைவாக, ஜெர்மனி **60** இலட்சம் மக்கள் தொகையையும், இருபத்தைந்தாயிரம் சதுர மைல் பரப்பளவு உள்ள நிலப்பகுதிகளையும் இழந்தது. **10,27,000** சதுர மைல் பரப்பளவு குடியேற்றப் பகுதிகளையும் ஜெர்மனி இழந்தது.

### II பொருளாதார சம்பந்தப்பட்ட ஷரத்துக்கள்:

1. வெர்செய்ல்ஸ் உடன்படிக்கையின் முக்கிய நோக்கமே பொருளாதார ரீதியாக ஜெர்மனியைப் பலவீனப்படுத்துவதே ஆகும். உடன்படிக்கையின் **231–**வது பிரிவின் படி ஜெர்மனி மீது **5000,000,000** கோடி டாலர் நஷ்டஈடு விதிக்கப்பட்டது. இது ஜெர்மனியால் தாங்க முடியாத தொகையாகும்.

2. எஞ்சியிருந்த ஜெர்மனியின் பெரிய கப்பல்கள் இங்கிலாந்துக்கும் பிரான்சுக்கும் கொடுக்கப்பட்டது. மேலும், நஷ்ட ஈடாக தனது சொந்த செலவில் புதிய கப்பல்களை அடுத்த ஐந்து வருடங்களுக்குள் கட்டிக் கொடுக்கவேண்டும்.
3. அடுத்த பத்து ஆண்டு காலத்திற்கு 70 இலட்சம் டன் நிலக்கரியை பிரான்சிற்கும், 80 இலட்சம் டன் பெல்ஜியத்திற்கும், 77 இலட்சம் டன் இத்தாலிக்கும் ஜெர்மனி கொடுக்க வேண்டும்.
4. அடுத்த ஆண்டு காலம் வரை ஜெர்மனியின் ஏற்றுமதி இறக்குமதி வாணிபத்தின் நேச நாடுகள் அதிக உரிமையையும், சலுகைகளையும் பெற்றுக் கொள்வார்கள். வெளிநாட்டிலுள்ள ஜெர்மன் சொத்துக்கள் அனைத்தும் பறிமுதல் செய்யப்படும்.
5. ஜெர்மனியின் எல்ப், ஒடர், நீமென், டான்யூப் நதிகள் பன்னனட்டுக் கட்டுப்பாட்டில் வைக்கப்பட்டது. கீல் கால்வாயில் எல்லா நாடுகளின் வியாபார மற்றும் போர்க்கப்பல்கள் சென்று வர உரிமையளிக்கப்பட்டது.

**III இராணுவ சம்பந்தப்பட்ட ஷரத்துக்கள் :**

1. ஜெர்மனியின் இராணுவபலம் வெகுவாகக் குறைக்கப்பட்டது. ரைன் நதியின் இரு புறங்களிலும் 50 கிலோ மீட்டர் வரையில் ஜெர்மனி இராணுவத்தை வைத்துக் கொள்ளக்கூடாது. நதியின் மேற்குப் பகுதியை நேச நாடுகள் 15 ஆண்டுகள் தங்கள் வசம் வைத்திருக்கும்.
2. ஜெர்மனியின் படை வீரர்களின் எண்ணிக்கை ஒரு இலட்சமாகக் குறைக்கப்பட்டது. உள்நாட்டுச் சட்டம் ஒழுங்கைப் பாதுகாக்க மட்டுமே இராணுவத்தைப் பயன்படுத்த வேண்டும் என்று ஜெர்மனி கேட்டுக் கொள்ளப்பட்டது.
3. ஜெர்மனி, நச்சுவாயு, டாங்கிகள், இராணுவ ஊர்திகள் ஆகியவைகளைத் தயாரிக்கக்கூடாது. போர்த் தளவாடங்களை ஏற்றுமதி செய்யவோ இறக்குமதி செய்யவோ கூடாது.
4. ஜெர்மனியின் எல்லா நீர்மூழ்கிக் கப்பல்களும் பறிமுதல் செய்யப்பட்டன. ஜெர்மானியக் கப்பற்படை 15 ஆயிரம் வீரர்களையும் சில போர்க்கப்பல்களையும் மட்டுமே கொாண்டதாகக் குறைக்கப்பட்டது.

**IV. சட்ட சம்பந்தப்பட்ட ஷரத்துக்கள் :**

உடன்படிக்கையில் **231–**வது பிரிவுப்படி பன்னாட்டுச் சட்ட திட்டங்களையும், உடன்பாடுகளையும் மீறியதற்காகவும், போரை ஆரம்பித்து பேரழிவை ஏற்படுத்தியதற்காகவும், ஜெர்மனி குற்றவாளி என்று கூறப்பட்டது. ஜெர்மானியப் பேரரசர் இரண்டாம் கெய்சர் வில்லியம் போர்க் குற்றவாளி என்று அறிவிக்கப்பட்டார். Hang the Kaiser, make Germany to pay Shilling for Shilling and ton for ton' என்று லாயிட் ஜார்ஜ் முழங்கினார். ஆனால், பேரரசர் நெதர்லாந்தில் தஞ்சம் அடைந்துவிட்டதால் அந்த நாடு அவரை விசாரணைக்கு அனுப்ப மறுத்துவிட்டது. சுமார் நூறு குற்றவாளிகள் மட்டும் லீப்சிக் நகரில் விசாரிக்கப்பட்டு தண்டிக்கப்பட்டார்கள்.

**V. உடன்படிக்கையின் பிற ஷரத்துக்கள் :**

போலந்து, யூகோஸ்லேவியா, செக்கோஸ்லோவோக்கியா, ஆகிய நாடுகளின் சுதந்திரம் அங்கீகரிக்கப்பட்டது. **1871–**ஆம் வருடம் பிராங்கோ பிரஷ்யப் போரின்போது, பிரான்சிலிருந்து ஜெர்மனி எடுத்துச் சென்ற வரலாற்றுச் சிறப்பு மிக்க பொருட்கள், வெற்றிக் கேடயங்கள், கலைப்பொருட்கள், அரசியல் ஆவணங்கள், ஆகியவற்ற்ற ஆறு மாதத்திற்குள் பிரான்சிடம் கொடுத்து விட வேண்டும். இந்த உடன்படிக்கையை செயல்படுத்தவும், பன்னாடு அமைதியை நிலை நாட்டவும் சர்வதேச சங்கத்திற்கு அதிகாரம் அளிக்கப்பட்டது.

**வெர்செய்ல்ஸ் உடன்படிக்கையைப் பற்றிய மதிப்பீடு :**

வெர்செய்ல்ஸ் உடன்படிக்கை ஜெர்மனி மீது மிகக் கடுமையான நிபந்தனைகளை விதித்தது. அவைகள் மிகக்கொடூரமானதாகவும் ஜெர்மனியை அவமானப்படுத்துவதாகவும் அமைந்தன. ஜெர்மனியின் மதிப்பு, பெருமை, புகழ், ஆகியவை அழிந்தது. அதன் இறைமை கட்டுப்படுத்தப்பட்டது. எனவேதான் இந்த உடன்படிக்கையில் கையெழுத்திட்ட ஜெர்மானியப் பிரதிநிதி லகிட்மான் ‘‘இந்த உடன்படிக்கையில் கையெழுழுததிடு. எனது கை அழியட்டும்'' என்று கூறினார். உடன்படிக்கையின் ஷரத்துக்களைப் பின்னர் ஒவ்வொன்றாக ஹிட்லர் மீறியபோதுதான் இரண்டாம் உலகப் போர் ஆரம்பித்தது. எனவே, இரண்டாம் உலகப் போருக்கு வெர்செய்ல்ஸ் உடன்படிக்கையே அடிப்படைக் காரணம் என்று கூறலாம்.

வெர்செய்ல்ஸ் உடன்படிக்கையின்படி ஜெர்மனி பலமற்ற நாடாக ஆக்கப்பட்டது. மேற்கிலும் வடக்கிலும் தனது எல்லைகளை ஜெர்மனி இழந்தது. 25 ஆயிரம் சதுர மைல் நிலப்பரப்பையும் 70 இலட்சம் மக்களையும் இழந்தது. ஐந்தில் இரண்டு பங்கு நிலக்கரி வளத்தையும் மூன்றில் இரண்டு பங்கு இரும்புத்தாது வளத்தையும் இழந்தது. இது ஜெர்மனியின் தொழில் வளர்ச்சி, வியாபாரம் ஆகியவற்றை வெகுவாகப் பாதித்தது. மேலும், குடியேற்ற நாடுகள் அனைத்தையும் இழந்தது. ஜெர்மனியின் இராணுவ வலிமை ஒடுக்கப்பட்டது. கடற்படை அழிக்கப்பட்டது. அதன் விமானங்களும் கப்பல்களும் பறித்துக்கொள்ளப்பட்டன. இவ்வாறு ஜெர்மனி படைவலிமையில் முடக்கப்பட்டு பொருளாதாரத்தில் நசுக்கப்பட்டு, அரசியலில் அவமானப்படுத்தப்பட்டு ரத்தமில்லாத மனிதனைப் போல பாரிசு மாநாட்டிலிருந்து வெளியேறியது.

வெர்செயல்ஸ் உடன்படிக்கை ஒரு ‘‘திணிக்கப்பட்ட உடன்படிக்கை’’ என்றும், ‘‘முரண்பட்ட உடன்படிக்கை’’ என்றும், ‘‘பெரும் திருட்டு’’ என்றும் ஜெர்மானிய மக்களால் குற்றம் சாட்டப்பட்டது. உடன்படிக்கையில் ஜெர்மனி கையெழுத்துப் போடுவதற்குக் காலக் கெடு விதிக்கப்பட்டது. இந்த உடன்படிக்கையை ஜெர்மனி ஏற்றுக் கொண்டிருந்ததால் அது ஐரோப்பிய வரைபடத்திலிருந்தே மறைந்து போயிருக்கும். எனவேதான் ஜெர்மனி தனது வருங்கால முன்னேற்றத்தைச் சர்வாதிகாரத்தில் கண்டது. மக்களின் மனநிலையை உணர்ந்து ஹிட்லர் மக்களின் ஆதரவுடனே உடன்படிக்கையின் ஷரத்துக்களை ஒவ்வொன்றாக மீறினார். உலக வரலாற்றில் வேறு எந்த உடன்படிக்கையும் இதைப் போல மீறப்பட்டது கிடையாது. உட்ரோவில்சனின் கற்பனைத்திறனும், பிரெஞ்சு அதிபர் கிளமன்சோவின் தேசியமும், இங்கிலாந்துப் பிரதமர் லாயிட் ஜார்ஜின் சந்தர்ப்பவாதமும் இந்த உடன்படிக்கையில் காணப்பட்டன. ஜெர்மனி தன் மீது விதிக்கப்பட்ட தாங்கமுடியாத போர் இழப்பீட்டுத் தொகையைத் திரும்பச் செலுத்த முடியாமல் தத்தளித்தது. 1933–ல் ஹிட்லர் அதிபர் ஆனதும் போர் இழப்பீட்டுத் தொகையைச் செலுத்த முடியாது என்று அறிவித்தார். அப்போதுதான் இரண்டாம் உலகப் போருக்கான போர் மேகங்கள் தென்பட்டன.

இவ்வாறு வெர்செய்ல்ஸ் உடன்படிக்கை ஒரு நிரந்தர அமைதியை ஏற்படுத்தத் தவறிவிட்டது. அமைதி ஒரு குறுகிய காலமே நீடித்தது. நேச நாடுகளின் கொள்கைகளும், ஜெர்மனியின் மீறுதல் நடவடிக்கைகளும் இரண்டாம் உலகப்போருக்கு

இழுத்துச் சென்றது. எனவேதான், ‘‘இரண்டாம் உலகப்போருக்கான மூல காரணங்கள் வெர்செய்ல்ஸ் உடன்படிக்கையிலேயே விதையாகத் தூவப்பட்டது’’ என்று கூறலாம்.

**பிற உடன்படிக்கைகள் :**

**1. செயின்ட் ஜெர்மைன் உடன்படிக்கை :**

**(Treaty of St.Germain)** செப்.10, 1919

நேச நாடுகள் தோற்கடிக்கப்பட்ட ஆஸ்திரியாவுடன் செயின்ட் ஜெர்மைன் என்ற இடத்தில் 1919 செப்டம்பர் 10–ஆம் தேதி உடன்படிக்கை செய்துகொண்டன. இதன்படி ஆஸ்திரியாவும் ஹங்கேரியும் தனித்தனி நாடுகளாகப் பிரிக்கப்பட்டன. உடன்படிக்கையின் 88–வது பிரிவின்படி அவை திரும்ப இணைவது தடுக்கப்பட்டது. மேலும் நேச நாடுகளுக்கு ஏற்படுத்திய இழப்புகளுக்கு ஆஸ்திரியா பொறுப்பேற்க வேண்டும். மூன்று இயந்திரப் படகுகள் தவிர ஆஸ்திரியாவின் கப்பற்படை முழுவதும் பறித்துக்கொள்ளப்பட்டது. ஆஸ்திரிய படைகளின் எண்ணிக்கை முப்பது ஆயிரமாகக் குறைக்கப்பட்டது. புதிதாகப் படையில் வீரர்கள் சேர்த்துக் கொள்ளப்படக்கூடாது. ஆஸ்திரியாவின் குடியேற்ற நாடுகள் அனைத்தும் அதனிடமிருந்து எடுக்கப்பட்டது. ஆஸ்திரியா நேச நாடுகட்குப் பூர்த்தி செய்யப்படாத காசோலையை போர் இழப்பீடாக அளித்தது. மேலும் ஆஸ்திரியப் போர்க் கைதிகளை விசாரணை செய்யவும் அனுமதியளித்தது. செயின்ட் ஜெர்மைன் உடடன்படிக்கையின் விளைவாக ஆஸ்திரியாவுக்கு பெரும் பொருளாதாரச் சிக்கல் ஏற்பட்டது. தனது வளமான பகுதிகளை இழந்து பிற நாடுகளிடம் கடன் வாங்கும் அவல நிலைக்குத் தள்ளப்பட்டது. தனது பழைய பேரரசின் பாதிப்பகுதிகளை ஆஸ்திரியா இழந்தது.

**2. டிராயனான் உடன்படிக்கை : (Treaty of Trianon)** ஜூன் 4, 1920

நேச நாடுகள் ஹங்கேரியுடன் வெர்செய்ல்ஸிலுள்ள டிரயனான் மாளிகையில் உடன்படிக்கை ஒன்று 1920, ஜூன் 4–ஆம் தேதி செய்துகொண்டன. ஆஸ்திரியாவைப் போன்றே ஹங்கேரியும் கடுமையாகத் தண்டிக்கப்பட்டது. ஹங்கேரி ஆஸ்திரியாவிடமிருந்து பிரிக்கப்பட்டது. 1,25,000 சதுர மைலும், 22 மில்லியன் மக்கள் தொகையும் கொண்ட ஹெங்கேரி 30,000 சதுர மைல் கொண்டதாகவும் எட்டு மில்லியன் மக்கள் தொகை கொண்டதாகவும் குறைக்கப்பட்டது. அதன் பிரான்ஸில் வேனியாப் பகுதி ருமேனியாவிற்கும், குரேஷியா யுகோஸ்லேவியாவிற்கும், ஸ்லோவேக்கியா, செக்கோஸ்லேவியாவிற்கும் கொடுக்கப்பட்டது. ஹங்கேரியப் படை

வீரர்களின் எண்ணிக்கை 35 ஆயிரமாகக் குறைக்கப்பட்டது. அதன் போர்க் கப்பல்களின் எண்ணிக்கையும் குறைக்கப்பட்டது. இவை தவிர ஹங்கேரி போர் இழப்பீட்டுத் தொகையும் நேச நாடுகளுக்குக் கொடுக்க வேண்டும்.

**3. நியுலி உடன்படிக்கை : (Treaty of Neuilly)** ஜுன் 27, 1919

பாரிசு அமைதி மாநாட்டில் பல்கேரியா ஒரு வேண்டுகோள் விடுத்தது. போரில் பல்கோயா இறங்குவதற்கு முடிதுறந்து ஓடிய மாஜி அரசர் பெர்டினாண்டுதான் காரணம் என்றும், எனவே பல்கேரியா தண்ண்க்கப்படக்கூடாது என்றும் கேட்டுக்கொண்டது. அதை நேச நாடுகள் ஏற்றுக்கொள்ளவில்லை. 1919 நவம்பர் 27—ஆம் தேதி பல்கேரியாவுடன் நியுலி உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்டது. இதன்படி பல்கேரியா பெரும் நிலப்பரப்பை இழந்தது. பல்கேரியர்கள் அதிகமாக வாழ்ந்த மேற்குப் பகுதி யூகோஸ்லேவியாவிற்கும், மேற்கு திரேஸ், ஈஜியன் கடற்கரைப் பகுதிகள் கிரீஸுக்கும் கொடுக்கப்பட்டது. பல்கேரியப் படைகளின் எண்ணிக்கை இருபது ஆயிரமாகக் குறைக்கப்பட்டது. அதன் கடற்படை ஒழிக்கப்பட்டது. பல்கேரியா மீது பெருமளவில் போர் இழப்பீட்டுத் தொகை விதிக்கப்பட்டது. இவ்வாறு நியுலி உடன்படிக்கை பல்கேரியாவை பால்கன் பகுதியில் ஒரு வலிமையற்ற நாடாக்கியது.

**4. செவ்ரஸ் உடன்படிக்கை (Treaty of Sevres)** ஆகஸ்ட் 20, 1920

தோற்கடிக்கப்பட்ட துருக்கியுடன் உடன்படிக்கை செய்துகொள்வதில் நேச நாடுகளுக்குப் பல பிரச்சனைகள் ஏற்பட்டது. எனவே பேச்சுவார்த்தை நீடித்து இறுதியாக 1920 ஆகஸ்ட் 20—ஆம் தேதி துருக்கியுடன் செவ்ரஸ் உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்டது. இதன்படி சிரியா பாலஸ்தீனம், மெசபடோமியா ஆகிய நாடுகளையும், எகிப்தின் மீது கொண்டிருந்த ஆதிக்கத்தையும் துருக்கி இழந்துவிட்டது. ஆசியாமைனர், திரேஸ், அட்ரியநோபிள், கலிபோலி ஆகியவை கிரீஸ் நாட்டிற்குக் கொடுக்கப்பட்டன. துருக்கியப் படைகளின் எண்ணிக்கை ஐம்பது ஆயிரமாகக் குறைக்கப்பட்டது. அதன் விமானப்படை முழுவதையும் நேச நாடுகள் எடுத்துக் கொண்டன. கான்ஸ்டாண்டி நோபிள், அலெக்ஸாண்டிரியா ஆகிய நகரங்கள் பன்னாட்டுக் கட்டுப்பாட்டின் கீழ் வைக்கப்பட்டன.

**5. சிறுபான்மையோர் பற்ற்றய உடன்படிக்கைகள் (Minority treaties)**

முதல் உலகப்போரின் விளைவாக போலந்து, செக்கோஸ்லேவேகியா, ருமேனியா, கிரீஸ், போன்ற பல புதிய சுதந்திர நாடுகள் தோன்றின. அந்த நாடுகள் தங்கள்

ஆட்சியின் கீழ் வாழ்ந்து வந்த சிறுபான்மை மக்களின் இன, சமய, மொழி, அரசியல் சுதந்திரங்களைக் காக்கும் பொருட்டு, நேச நாடுகளுடன் உடன்படிக்கை செய்து கொள்ள வேண்டுமெனக் கேட்டுக் கொள்ளப்பட்டன. வெர்செய்ல்ஸ் உடன்படிக்கையிலும் சிறுபான்மையினரின் உரிமை பாதுகாக்கப்படவேண்டும் என்று கூறப்பட்டது. ஆனாலும், போலந்து, செக்கோஸ்லோவேகியா, யுகோஸ்லேவியா, ஆகிய நாடுகளில் வாழ்ந்து வந்த சிறுபான்மை ஜெர்மானியர்கட்குப் பாதுகாப்பு அளிக்கப்படவில்லை. இது இரண்டாம் உலகப்போர் ஏற்படும் சமயம் பெரும் பிரச்சனையை ஏற்படுத்தியது.

## ரஷ்யப் புரட்சி (THE RUSSIAN REVOLUTION, 1917)

இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற வரலாற்று நிகழ்ச்சிகளில் முதன்மையானது **1917–**ஆம் ஆண்டில் நடைபெற்ற ரஷ்யப் புரட்சியாகும். இங்கிலாந்தில் ஏற்பட்ட தொழிற் புரட்சியைக் காட்டிலும், பிரான்சு நாட்டில் ஏற்பட்ட பிரெஞ்சுப் புரட்சியைக் காட்டிலும், அவைகளின் தன்மையிலும் தாக்கத்திலும் மிகுந்த அளவு மாறுதல்களை ஏற்படுத்தியது ரஷ்யப் புரட்சியாகும். இது மனக்குறைவுற்ற ஏழை மக்களின் புரட்சி. பண்பாடற்ற சார் மன்னர்களின் அரசியல் போலித்தனத்திற்கும், பழமைவாதிகளின் குருட்டு நம்பிக்கைகளுக்கும் சமாதி கட்டிய புரட்சிதான் ரஷ்யப் புரட்சி. இது பொதுவுடைமைக் கோட்பாட்டிற்குக் கிடைத்த முதலாவது வெற்றி. இது ரஷ்யாவில் பழைய நாகரிகத்தை ஒழித்து புதிய சமுதாயத்தை ஏற்படுத்தியது. ரஷ்யாவில் மட்டுமல்லாது உலக அரசியலில், பெரும் மாறுதல்களை ஏற்படுத்தியது.

### புரட்சி ஏற்படக் காரணங்கள் :

### 1. சார் மன்னர்களின் எதேச்சதிகாரம் :

ரஷ்ய நாட்டுப் சார் மன்னர்கள் ஆட்சி வல்லாட்சியாகவேயிருந்தது. இரண்டாம் அலக்ஸாந்தர் **(1855 – 1881)** முதல் இரண்டாம் நிக்கோலஸ் **(1894 – 1917)** வரை அனைவரது ஆட்சியும் எதேச்சதிகாரத்துக்கும், கொடுங்கோன்மைக்கும் பெயர் பெற்றது. மன்னர்களே அரசியல் தலைவராகவும், சமயத் தலைவராகவும் விளங்கினர். ஏழ்மையினாலும், நோயினாலும் வாடும் மக்களைப் பற்றிக் கவலை கொள்ளவில்லை. உதட்டளவில் வெளியிடப்பட்டு, பெயரளவில் செயல்படுத்தப்பட்ட சீர்திருத்தங்கள் மக்களுக்கு எவ்வகையிலும் பலனளிக்கவில்லை. புரட்சிக் கருத்துக்களையும், புதுமை

இயக்கங்களையும் இரும்புக்கரம் கொண்டு நசுக்கினார்கள் இந்த சார் மன்னர்கள். அடிக்கடி போர்களில் ஈடுபட்டு அதில் தோல்வியும் அடைந்து நாட்டிற்கு அவமானத்தை ஏற்படுத்தினார்கள். எனவே, சார் மன்னர்களின் எதேச்சதிகார ஆட்சிதான் ரஷ்யப் புரட்சிக்கு அடிப்படைக் காரணமாகும்.

**2. பிரதிநிதி சபைகள் மீது மக்களுக்கு ஏற்பட்ட பற்றுதல் :**

ரஷ்யப் பாராளுமன்றமான டூமாவின் (Duma) அதிகாரத்தை சார் மன்னர்கள் பறித்துக் கொண்டார்கள். தங்களுடைய கருத்துக்களை ஏற்காத டூமாவைக் கலைத்தார்கள். சார் இரண்டாம் நிக்கோலஸ் அதிக சீர்திருத்தங்களைக் கேட்ட முதலாவது டூமாவை **1906** ஜூலை **22**–ல் கலைத்தார். பின்னர் ஏற்பட்ட டூமாக்கள் அரசர்களுக்கு ஆதரவாகவே செயல்பட்டது. ஐரோப்பிய நாடுகளில் காணப்பட்ட மக்களாட்சி முறை போன்று தாங்களும் ஆட்சியில் பங்கு கொள்ள விரும்பினார்கள் ரஷ்ய மக்கள். எனவே மக்களாட்சி முறைக் கோட்பாடுகளின் அடிப்படையில் பிரதிநிதி சபைகள் அமைக்கப்படவேண்டும் என்று முற்போக்கு சிந்தனை கொண்ட ரஷ்ய மக்கள் கேட்டபோது சார் மன்னர்கள் அவற்றை வெறுத்தார்கள். மக்களின் அதிருப்தி புரட்சியாக வெடித்தது.

**3. குடியானவர்களின் தாழ்ந்த பொருளாதார நிலை :**

ரஷ்ய சமுதாயத்தில் பெரும்பான்மை மக்கள் கல்வியறிவு அற்ற விவசாயிகளாக இருந்தார்கள். சமூக பொருளாதார வளர்ச்சியில் மிகவும் பின்தங்கிய நிலையில் இருந்தார்கள். அவர்களுக்கு நிலமில்லாத காரணத்தினால் குலக்குகள் என்றழைக்கப்பட்ட விவசாய முதலாளிகளிடம் அடிமைகளாக வாழ்ந்தார்கள். நிலமில்லாத பண்ணை அடிமைகளின் அவல நிலை நாட்டின் பொருளாதார நிலையைப் பெரிதும் பாதித்தது. பசியும், பட்டினியும் தலை விரித்தாடியது. பருவ மழை பெய்யாதபோது பட்டினியால் ஆயிரக்கணக்கில் இறந்தார்கள். ஆனால், நில பிரபுக்களும் செல்வந்தர்களும் மேலும் செல்வந்தர்களானார்கள். இரண்டாம் அலெக்ஸாந்தரின் விடுதலைச் சட்டங்கள் வெறும் காகித விடுதலையை அளித்ததே தவிர வறுமையிலிருந்து விடுதலை பெற நிலம் அளிக்கவில்லை. சமுதாயத்தில் மோசமாகப் பாதிக்கப்பட்ட குடியானவர்கள் இதனால் புரட்சியில் இறங்கினார்.

**4. தொழிலாளர்களின் துன்பங்கள் :**

தொழிற் புரட்சியின் விளைவாக ரஷ்யாவில் பல மாற்றங்கள் ஏற்பட்டது. புதிய தொழிற்சாலைகள் நவீன இயந்திரங்கள் ஆகியவற்றால் தொழில் வளர்ச்சியடைந்தது. இந்த வளர்ச்சியினால் தொழிலாளர் வர்க்கம் என்ற புதிய பிரிவு ஏற்பட்டது. வேலை தேடி நகரம் வந்த ஏழைத் தொழிலாளர்களை, முதலாளிகள் குறைந்த கூலிக்கு அமர்த்தினர். சுகாதாரமற்ற நிலையில் அதிக வேலை வாங்கினார்கள். தங்களது நலன்களைப் பாதுகாக்க தொழிலாளர்கள் சங்கம் அமைத்தபோது முதலாளிகள் அவற்றை ஒழித்தனர். இதனால் தொழிலாளி – முதலாளி என்ற புதிய அமைப்பு உருவானது. உழைப்புக்குத் தகுந்த ஊதியம், தொழில் பாதுகாப்பு, வேலை உயர்வு ஆகியவை கிடைக்காத காரணத்தினால் தொழிலாளர்கள் ஏழ்மையில் வாடினார்கள். பிரச்சனைகட்குத் தீர்வு புரட்சிதான் என தொழிலாளர்கள் முடிவு செய்தார்கள்.

**5. கார்ல் மார்க்ஸின் தாஸ் காபிடல் :**

அறியாமை இருட்டில் அமைதி கிட்டாது அல்லலுற்ற மக்களை தட்டியெழுப்பி உயர் கருத்தை அவர்கள் உள்ளத்தில் பதித்து புரட்சிப் பாதையை நோக்கி அவர்களை இட்டுச் செல்ல, கார்ல் மார்க்ஸ், டால்ஸ்டாய், மாக்சிம் கார்க்கி, பிரடரிக் எங்கல்ஸ், போன்ற எழுத்தாளர்கள் புரட்சிக் கருத்துக்களை மக்களிடையே பரப்பினார்கள். பிரெஞ்சு எழுத்தாளர்களான வால்டர், ரூசோ, போன்று புகழ் பெற்றவர் கார்ல் மார்க்ஸ் (Karl Marx) ஆவார்.

கார்ல் மார்க்சின் ‘தாஸ் காபிடல்’ (மூலதனம்) என்ற நூல் முதலாளித்துவத்தின் தீமையையும், ரஷ்யாவில் தொழிலாளர்களின் அவல நிலைமையும் சுட்டிக் காட்டியது. அவர், ‘‘மூலதனத்தை மட்டும் வைத்துக் கொண்டு எவ்வித வேலையும் செய்யாமல் முதலாளிகள் லாபம் பெறுவதையும், ஏழை மேலும் ஏழையாக மாறுவதையும் செல்வந்தர்கள் மேலும் பணக்காரர்கள் ஆவதையும்’’ பற்றிக் குறிப்பிட்டார். முக்கியமாகத் தொழிலாளர்களின் உழைப்பை முதலாளிகள் எவ்வாறு சுரண்டுகிறார்கள் என்பதைத் தெளிவாக விளக்கினார்.

தாஸ் காபிடலில் புரட்சிக்குப் பின்னர் செல்வந்தர்களின் சொத்துக்களை என்ன செய்வது என்று கார்ல் மார்க்ஸ் எடுத்துக் கூறினார். முதல், நிலம், வீடு, சுரங்கங்கள், தொழில்சாலைகள் அனைத்தும் அரசாங்கத்திற்கே சொந்தமாக்கப்படவேண்டும் என்றார். மூலதனம் எல்லோராலும் சொந்தமாக்கப்படுகின்ற ஆங்கில வார்த்தையான

“Common” என்ற சொல்லிலிருந்த பிறந்த (Communism) ‘‘கம்யூனிசம்’’ என்ற கருத்தை வெளியிட்டார். கம்யூனிச அரசாங்கம் ஒன்றைப் புரட்சியின் மூலமே அமைக்க முடியுமென்றார்.

கார்ல் மார்க்ஸின் தாஸ் காபிடல் ரஷ்யப் புரட்சியின் வேதநூல் என்று அழைக்கப்படுகிறது. இது தவிர தன்னுடைய கருத்துக்களைக் கட்டுரையாகவும் புத்தகங்களாகவும் வெளியிட்டார். இவரது ‘பொதுவுடைமைக் கொள்கை அறிக்கை’ (Communist manifesto) சோசலிச அறிக்கைகளில் அனைத்திலும் தலைசிறந்ததாகக் கருதப்படுகிறது. ‘‘உலகத் தொழிலாளர்களே ஒன்றுபடுங்கள். நீங்கள் இழக்கவிருப்பது உங்கள் அடிமைத்தளங்களை மட்டுமே. நீங்கள் வெல்லவோ இப்பாருலகமே காத்து நிற்கிறது’’ என்ற மார்க்ஸின் முழக்கம் தொழிலார்களின் தாரக மந்திரமாயிற்று. இதனை ஏற்றுக்கொண்ட மக்கள் புரட்சிக்குத் தயாராயினர்.

**6. சார் இரண்டாம் நிக்கோலஸின் எதேச்சதிகாரம் : 1894 – 1917**

முதல் உலகப் போர் ஆரம்பித்த போது ரஷ்யாவின் மன்னராக இருந்தவர் இரண்டாம் நிக்கோலஸ் ஆவார். இவர் திறமையற்றவர். மக்களின் நிலையை உணராமல் தன்னிச்சைப்படிச் செயல்பட்டார். இவரது அழகிய மனைவி அலக்ஸாந்திரா பியோதரவ்னா (Alexandra Fyodoroyna) நாட்டின் அரசியலில் ஆதிக்கம் கொண்டிருந்தார். ஆனால் இருவரும் கிரிகோரி ரஸ்புதின் என்ற செர்பியத் துறவியின் ஆலோசனைப்படியே ஆட்சி புரிந்தனர். ரஸ்புதின் ஹிப்னாடிச முறையில் நோய்களைக் குணப்படுத்தும் வல்லமை கொண்டவர். இவர் நிக்கோலஸின் மகனை நோயிலிருந்து குணப்படுத்தியதால் அரச குடும்பத்தின் மதிப்புமிக்க நண்பரானார்.

ரஸ்புதின் பொறுப்பும் திறமையும் வாய்ந்த அதிகாரிகளையும் தளபதிகளையும் பதவி நீக்கம் செய்து தனக்குச் சாதகமானவர்களை அப்பதவியில் அமர்த்தினர். தனக்கு எதிராக எழுந்த எதிர்ப்புகள் அனைத்தையும் ஈவு இரக்கமின்றி நசுக்கினர். ரஷ்ய முடியாட்சியின் சீர்கேட்டிற்கு இந்த ‘கிறுக்குத்துறவியே’ காரணம் என்று உயர்குடியினர் நம்பினர். எனவே ரஸ்புதினை ஒழித்துக்கட்டத் திட்டம் தீட்டினர். பல கொலை முயற்சிகட்குத் தப்பிய ரஸ்புதீன், 1916 டிசம்பர் 17–ல் படுகொலை செய்யப்பட்டார். இதனால் கோபமடைந்த நிக்கோலஸ் மக்களைக் கொடுமைப்படுத்தினார். எனவே மக்கள் அரசுக்கெதிராகப் புரட்சியில் ஈடுபட்டனர்.

**7. முதல் உலகப் போரில் ரஷ்யாவின் பங்கு :**

முதல் உலகப் போரில் ரஷ்யா நேச நாடுகளின் ஆதரவில் ஜெர்மனியை எதிர்த்துப் போரிட்டது. ஆனால் போரில் ரஷ்யா ஈடுபட்டதின் விளைவுகளை மக்கள் நேரடியாக அனுபவிக்க வேண்டியதாயிற்று. சண்டையிட்ட ரஷ்யப்படைகள் பல இடங்களில் தோல்வியடைந்தது. இது சார் ஆட்சியின் பலவீனத்தை வெளிப்படுத்தியது. அத்தியாவசியப் பொருட்களின் விலை ஏறியது. பயிரிடுவோரே போர்க்களமும் செல்லவேண்டியதிருந்ததால் உணவுப் பொருட்களின் உற்பத்தி குறைந்தது. தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்ததால் தொழில்துறை உற்பத்தியும் சரிந்தது. படையில் பணி புரிய பலர் மறுத்தனர். படை வீரர்களின் மன வலிமையும், உடல் வலிமையும் குன்றியது. எனவே அவர்கள் புரட்சியாளர்களோடு சேர்ந்து கொண்டு மன்னரை எதிர்த்தார்கள். புரட்சி ஆரம்பமானது.

**8. லெனினின் பிரச்சாரம் :**

கார்ல் மார்க்ஸின் கொள்கைகளைப் பின்பற்றிய ரஷ்ய புரட்சியாளர் லெனின் ஆவார். இளமையிலேயே அறிவுக் கூர்மையும் நல்லொழுக்கமும் நிரம்பப் பெற்றவர். மார்க்சிய சிந்தனைகளை ஆழ்ந்து படித்த லெனின் ‘‘சார் மன்னர்களின் கொடுங்கோன்மையிலிருந்து ரஷ்ய நாட்டை விடுவிக்க வேண்டுமானால் பாட்டாளி மக்களை ஒன்று திரட்டி ஒரு சோசலிசப் புரட்சியை நடத்துவதின் மூலமே முடியும்’’ என்ற முடிவிற்கு வந்தார். தூங்கிக் கிடந்த ரஷ்ய சமுதாயத்தை தனது புரட்சிக் கருத்துக்கள் மூலம் தட்டி எழுப்பினார். பொதுவுடமை சமுதாயத்தை ரஸ்யாவில் ஏற்படுத்த அயராது உழைத்தார். இவரது புரட்சிக் கருத்துக்களை விரும்பாத அரசாங்கம் லெனினை நாடு கடத்தயது. வெளிநாடுகளில் இருந்துகொண்டே ரஷ்ய மக்களைப் புரட்சிக்கு ஆயத்தப்படுத்தினார். முதல் உலகப் போர் நடந்து கொண்டிருந்த சமயத்தில், நாட்டில் அதிருப்தி மேலோங்கி இருந்த சமயம் பார்த்து சிங்கம் போல ரஷ்யாவினுள் நுழைந்து புரட்சியை ஏற்படுத்தினார். போர் வீரர்கள் போர் செய்ய மறுத்தனர். தொழிலாளர் வேலை செய்ய மறுத்தார்கள். புரட்சி வெடித்தது.

**பிப்ரவரிப் புரட்சியின் போக்கு :**

ரஷ்யப் புரட்சி இரண்டு கட்டங்களாக நடைபெற்றது. முதல் புரட்சி **1917** பிப்ரவரி மாதம் **23–**ஆம் தேதி தொடங்கியது. அப்போது **6,70,000** தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டார்கள். கலகங்கள், தெருக் கிளர்ச்சிகள், விவசாயிகளின்

போராட்டங்கள், ஊர்வலங்கள் என சங்கிலித் தொடராக நடைபெற்றன. பெட்ரோகிரேட் தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். பிப்ரவரி 27–ஆம் தேதி பெட்ரோகிரேட் தொழிலாளர்களுடன் மன்னரின் படைகள் சேர்ந்துகொண்டன. புரட்சிப் படையினர் தங்கள் துப்பாக்கிகளை மன்னராட்சி மீது திருப்பினர். பிப்ரவரி 28–ல் பெட்ரோகிரேட் நகர் முழுவதும் புரட்சியாளர் கட்டுப்பாட்டில் வந்தது. ஒரு தற்காலிக சட்டமன்ற ஆட்சிக்குழு அமைக்கப்பட்டது. அதில் மென்சிவிக்குகளும், சமதர்மப் புரட்சியாளர்களும் பெரும்பான்மையினராக இருந்தனர்.

சட்டமன்றப் பிரதிநிதிகள் இரண்டு பேர் நிக்கோலஸைச் சந்தித்து பதவி துறக்குமாறு வற்புறுத்தினர். 1917 மார்ச் 2–ஆம் தேதி மாலை தனது சகோதரர் மைக்கேலை அரசராக நியமித்துவிட்டு முடிதுறப்புப் பத்திரத்தில் கையெழுத்திட்டார். அப்பத்திரத்தைக் கொண்டு வந்த பிரதிநிதி தலைநகர் திரும்பியபோது 'மன்னர் மைக்கேல் நீடூழி வாழ்க' என்றார். இதைப் பற்றி ட்ராட்ஸ்கி குறிப்பிட்டபோது, ''முடியாட்சியை வெகுவேகமாக நாடுவாந்தி எடுத்துவிட்டது. அது மீண்டும் மக்கள் தொண்டைக்குள் ஒரு போதும் இறங்காது'' என்றார். மைக்கேல், மன்னர் பதவியை ஏற்க மறுத்து விட்டார். இவ்வாறு முதல் புரட்சியில் ரஷ்யாவில் மன்னர்களின் பரம்பரை ஆட்சி முடிவுற்றது. மார்க்ஸிய கருத்துக்களும் ஜனநாயகக் கருத்துகட்குமிடையிலான ஒரு மிதவாத கருத்துக் கொண்ட அரசு ஏற்படுத்தப்பட்டது.

**புதிய அரசு :**

1917, மார்ச் 3–ஆம் தேதி ஜார்ஜ் லிவாவ் (George Lvov) தலைமையில் தற்காலிக அரசு ஒன்று பதவி ஏற்றது. மில்யுகோவ் வெளிநாட்டு அமைச்சராகவும், குக்கோவ் போர்த்துறை அமைச்சராகவும் தரஸ்செங்கோ நிதியமைச்சராகவும், நெக்ரசோவ் செய்தித்துறை அமைச்சராகவும், பெட்ரோகிரேட் சோவியத்தின் துணைத் தலைவரான கெரன்ஸ்கி நீதித்துறை அமைச்சராகவும் பதவி ஏற்றனர். அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்ஸ், இத்தாலி, போன்ற நட்பு நாடுகள் இந்த அரசாங்கத்தை அங்கீகரித்தன.

ஆனால் இந்த அரசு 'பெட்ரோகிரேட் சோவியத்துடன் இணைந்தே செயல்பட வேண்டும் என்று கூறப்பட்டது. நாடெங்கிலும் 'சோவியத்' என்ற அமைப்புகள் உருவாயின. அரசின் ஆணைகளை நடைமுறையில் செயல்படுத்தும் அதிகாரம் இந்த சோவியத்களிடமே இருந்தது. ஆட்சி பீடத்தில் அமர்ந்த தாராளத் தன்மைக் கொண்ட புதிய அரசு எதையும் செயலாற்றிடும் வகையின்றி இருந்தது. சமுதாயத்தைக்

கட்டுப்பாட்டில் வைக்கத் தவறியது. படையினரின் ஒழுங்கும் கட்டுப்பாடும் சீர்குலைந்து போயிற்று. இச்சூழ்நிலையில் மில்யுகோவ், குக்கோவ் ஆகியோர் ராஜினாமா செய்துவிட்டனர். அமைச்சரவை மாற்றியமைக்கப்பட்டபோது ஆறு பேர் இடம் பெற்றனர். அதில் கெரன்ஸ்கி, தரஸ்செங்கோ, நெக்ரசோவ் ஆகியோரே வலிமை பெற்றிருந்தனர்.

புதிய போர்த்துறை அமைச்சரான கெரன்ஸ்கி சிறந்த சொற்பொழிவாளர். நல்ல வழக்கறிஞர். தனது மின் காந்தச் சொற்பொழிவுகள் மூலம் மக்களைக் கவர்வதில் வல்லவர். ஆட்சியில் அமர்ந்தவர்களிடையே வேற்றுமையும், குழப்பமும் காணப்பட்ட போது கெரன்ஸ்கி பிரபலமானார். பிரதமர் ஜார்ஜ் லிவாவ் பதவி விலகிய பின் கெரன்ஸ்கி புதிய பிரதமரானார். அக்டோபர் புரட்சியின் போது ரஷ்ய பிரதமராக இருந்தவர் கெரன்ஸ்கி ஆவார்.

**அக்டோபர் புரட்சி :**

ரஷ்யாவில் இரண்டாவது புரட்சி **1917** அக்டோபரில் ஏற்பட்டது. இதுதான் அக்டோபர் புரட்சி என்றும், கம்யூனிசப் புரட்சி என்றும் அழைக்கப்படுகிறது. ஆட்சி பீடத்தில் அமர்ந்த தாராளத் தன்மை கொண்ட புதிய மிதவாத அரசு எளிதில செயலாற்றிடும் வகையின்றி இருந்தது. சுவிட்சர்லாந்திலிருந்த லெனின், **1917**, மார்ச் **27**–ல் புறப்பட்டு ஏப்ரல் **3**–ஆம் தேதி பெட்ரோகிரேட் வந்து சேர்ந்தார். ‘சமதர்மப்புரட்சி வாழ்க’ என்ற முழக்கத்துடன் உரை நிகழ்த்தினார்.

புதிய அரசாங்கத்தில் மக்கள் அதிக நம்பிக்கை வைக்கவில்லை. முதல் உலகப் போரைத் தொடர்ந்து நடத்தியது புதிய அரசு. போர் வீரர்கள் சலிப்படைந்தனர். போர் நீடித்ததின் காரணமாக மீண்டும் உணவுப் பஞ்சமும் உற்பத்தித் தடையும் ஏற்பட்டன. அரசாங்கத்தின் மிகுந்த வெறுப்பை லெனின் தலைமையிலான இடது சாரி அமைப்பான போல்சிவிக்குகள் பயன்படுத்திக் கொண்டனர். மக்களுக்கு சமாதானம், உணவு, நிலம் (Peace, Bread and Land) ஆகியவற்றை வழங்குவதாக வாக்குறுதி அளித்தனர். தொழிலாளர்களின் அரசை அமைப்பதாகக் கூறினார் லெனின். “மிதவாதிகளின் ஜனநாயகமும், பாராளுமன்றமும், குடியரசும் நமக்குத் தேவையில்லை. நமக்கு வேண்டிய அரசாங்கம் விவசாயிகளாலும் தொழிலாளர்களாலும் தான் அமைக்கப்படவேண்டும்” என்றார்.

ட்ராட்ஸ்கி என்பவர் பெட்ரோகி ரேட் சோவியத்தின் தலைவர். இவர் லெனின் கொள்கைகளின் தீவிர ஆதரவாளராக மாறினார். கெரன்ஸ்கியின் ஆட்சியைக்

கடுமையாக சாடினார். பெட்ரோகிரேடில் அமைக்கப்பட்ட இராணுவப்புரட்சிக் குழுவுக்கு அவர் தலைவரானார். புதிய புரட்சிக்கான ஏற்பாடுகளை ட்ராடஸ்கியே விரைந்து செயலாற்றினார். அக்டோபர் **2–**ஆம் தேதி பெட்ரோகிரேட் வந்த லெனின் புரட்சியை உடனடியாகத் துவக்கினார். அக்டோபர் **24–**ஆம் தேதி ஆயுதம் தாங்கிய **25,000** போல்சிவிக் கட்சியினர் புரட்சியில் கலந்து கொண்டனர். புரட்சியின் மையமான குளிர்கால மாளிகை தாக்கப்பட்டது. அரசாங்க படைகள் புரட்சியாளர்களுடன் சேர்ந்து கொண்டன. கெரன்ஸ்கி தப்பி ஓடினார். மாளிகை வீழ்ந்தது. இதுவே அக்டோபர் புரட்சியாகும். 'தொழிலாளர்களின் சர்வாதிகார அரசு' (government of the Proletariate) ஒன்று லெனின் தலைமையில் அமைக்கப்பட்டது. இவ்வாறு உலகத்தின் முதல கம்யூனிச அரசாங்கம் தோன்றியது.

**ரஷ்யப் புரட்சியின் விளைவுகள் :**

1. ரஷ்யாவில் பரம்பரை மன்னராட்சி ஒழிக்கப்பட்டது. **1918** ஜுலை **16–**ம் தேதி கடைசி மன்னரான இரண்டாம் நிக்கோலசும் அவரது குடும்பத்தினரும் கொலை செய்யப்பட்டனர்.
2. இதுவரை கொள்கையளவிலேயே இருந்து வந்த 'பொது உடமைத் தத்துவம்' முதல் முதலாக நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டது. கார்ல் மார்க்ஸின் தத்துவங்களின் அடிப்படையில் ரஷ்யாவில் அரசியல் பொருளாதார மாற்றங்கள் கொண்டு வரப்பட்டன.
3. ரஷ்யாவில் தொழிலாளர்களின் நிலை உயர்ந்தது. அவர்கள் உழைப்பிற்கேற்ற ஊதியம் பெற்றார்கள். கூட்டுப் பண்ணை விவசாயம் மூலம் உணவு உற்பத்தி அதிகரிக்கப்பட்டது.
4. எல்லாத் துறைகளிலும் வளர்ச்சி பெற்று உலக அளவில் ரஷ்யா மாபெரும் வல்லரசாக விளங்குவதற்கு ரஷ்யப் புரட்சி வழி வகுத்தது.
5. கம்யூனிசக் கருத்துக்களை உலகம் முழுவதும் பரப்புவதற்கு ரஷ்யா பல வழிகளைக் கையாண்டது. அதன் விளைவாக உலக நாடுகள் கம்யூனிச நாடுகள் என்றும் முதலாளித்துவ நாடுகள் என்றும் இரு அணியாகப் பிரிந்தது.
6. பொதுவுடைமை இயக்கத்திற்கு எதிராக பல இயக்கங்கள் தோன்றின. இத்தாலியில் பாசிசமும், ஜெர்மனியில் நாநிசமும் கம்யூனிசத்தை எதிர்த்துத் தோன்றின.

7. இறுதியாக ரஷ்யப் புரட்சியின் விளைவாக ரஷ்யாவில் அறியாமை ஒழிக்கப்பட்டு புதிய சமுதாயம் அமைக்கப்பட்டது. விஞ்ஞானம் மற்றும் கலைத்துறைகளில் முன்னேற்றம் ஏற்பட்டது.

## சர்வதேசச் சங்கம் (LEAGUE OF NATIONS)

முதல் உலகப் போரினால் மக்களின் உயிர், உடமை அனைத்திற்கும் பேரழிவு ஏற்பட்டது. எனவே, போர் ஏற்பாடாமல் உலகத்தைக் காக்கவும், உலக நாடுகளிடையே சமாதானத்தை ஏற்படுத்தவும் உலகத் தலைவர்கள் விரும்பினார்கள். அதன் விளைவாகத் தோன்றியதே சர்வதேச சங்கம். அமெரிக்க குடியரசுத் தலைவர் உட்ரோ வில்சனின் பதினான்கு அம்சங்களில் கடைசியானது சர்வதேச சங்கம் அமைப்பதாகும். அவரது சீரிய முயற்சியினாலேயே சர்வதேசச் சங்கம் நிறுவப்பட்டது. எனவே சர்வதேசச் சங்கம் ‘‘உட்ரோ வில்சனின் சிந்தனையில் பிறந்த குழந்தை’’ (Brain child of Woodrow Wilson) என்று சொல்லப்படுகிறது.

**சர்வதேசச் சங்கத்தின் நோக்கம் :**

சர்வதேச சங்கத்தின் சாசனம், பாரிசு அமைதி மாநாட்டில் உருவாக்கப்பட்டது. அதன் நோக்கங்கள் வெல்செய்ல்ஸ் உடன்படிக்கையில் முதல் ஆறு ஷரத்துக்களுடன் இணைக்கப்பட்டது. **1920** ஜனவரி **10–**ந் தேதி பாரிஸ் நகரில் முறைப்படி தொடங்கி வைக்கப்பட்டது. இதன் அலுவலகம் ஸ்விட்சர்லாந்திலுள்ள ஜெனிவாவில் அமைக்கப்பட்டது. சர்வதேசச் சங்கம் உருவாக்கப்பட்டபோது **42** நாடுகள் உறுப்பினராக இருந்தன. **1935–**ல் அதன் உறுப்பினர் எண்ணிக்கை **62** ஆக உயர்ந்தது. இச்சங்கம் **1936–**ஆம் ஆண்டு வரைதான் செயலாற்ற முடிந்தது. சர்வதேசச் சங்கம் கீழ்க்கண்ட நோக்கங்களைக் கொண்டது.

**1)** உலக நாடுகளிடையே கூட்டுறவு மனப்பான்மையை வளர்த்து உலக சமாதானத்தை நிலைநாட்டுவது. **2)** உலக நாடுகள் தங்களுக்குள் ஏற்படும் தகராறுகளைத் தீர்ப்பதற்குப் போரில் ஈடுபடாமல் சமாதான முறையில் தீர்த்துக் கொள்ள வேண்டும். **3)** வலுச்சண்டைக்குச் செல்லும் நாட்டுடன் உறுப்பினர் நாடுகள் வாணிபத் தொடர்பை நிறுத்திக் கொள்ள வேண்டும். **4)** உறுப்பினர் நாடு ஒன்று ஆக்கிரமிக்கப்பட்டால் அது பிற உறுப்பு நாடுகளையும் ஆக்கிரமித்தது போன்றே எண்ணப்படும். ஆக்கிரமிப்பு நாட்டுக்கு விரோதமாக படைபலம் கொண்டு நடவடிக்கை

எடுக்கப்படும். உறுப்பினர் நாடுகள் ஒன்றுக்கொன்று மரியாதையுடனும், நட்பு மனப்பான்மையுடனும் நடந்து கொள்ள வேண்டும். உலகின் பின்தங்கிய நாடுகளை முன்னேற்ற வேண்டும்.

**பொதுச் சபை (General Assembly) :**

பொதுச் சபைக்கு அங்கத்தினர் நாடுகள் ஒவ்வொன்றும் மூன்று பிரதிநிதிகளை அனுப்பும். ஆனால், ஒவ்வொரு நாட்டிற்கும் ஒரு வாக்கு தான் உண்டு. இச்சபை ஜெனிவாவில் ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் மாதத்தில் முதல் திங்கட் கிழமை கூடும். அங்கத்தினர் நாடுகளின் அரசியல், சமூக அரசியலமைப்பு, மற்றும் பொதுவான பிரச்சனைகள் பற்றி விவாதித்து முடிவெடுக்கும், பன்னாட்டு நீதிமன்றத்தின் நீதிபதிகளையும் பொதுச்சபையே தேர்ந்தெடுக்கும்.

**பாதுகாப்புச் சபை (Security Council) :**

இதுதான் சர்வதேச சங்கத்தின் நிர்வாகச் சபையாகும். இதில் அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்ஸ், இத்தாலி, ஜப்பான் ஆகிய ஐந்து நிரந்தர உறுப்பினர்களும், நான்கு நிரந்தரமற்ற உறுப்பினர்களும் இருந்தார்கள். நிரந்தரமற்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை 1936–ல் பதினொன்று ஆக்கப்பட்டது. இந்த சபை, ஆண்டுக்கு மூன்று அல்லது நான்கு முறை கூடி உலக அமைதியையும் பாதுகாப்பையும் பற்றி விவாதிக்கும். சங்கத்தின் பொதுச் செயலரை நியமணம் செய்வது பாதுகாப்புச் சபையே ஆகும். சங்கத்தின் சட்டங்களை மீறி நடக்கும் உறுப்பினர்களை வெளியேற்றும் உரிமை பாதுகாப்புச் சபைக்கு உண்டு.

**சர்வதேச நீதிமன்றம் (International Court of Justice) :**

ஒரு நிரந்தர சர்வதேச நீதிமன்றம் நெதர்லாந்திலுள்ள ஹேக் நகரிலுள்ள ‘அமைதி மாளிகை’யில் நிறுவப்பட்டது. இதில் 15 நீதிபதிகள் பணியாற்றினார்கள். அவர்களின் பதவிக்காலம் ஆறு ஆண்டுகள் ஆகும். உறுப்பினர் நாடுகளிடையே ஏற்படும் தகராறுகளைத் தீர்த்து வைப்பது, பாரிசு மாநாட்டில் செய்யப்பட்ட உடன்படிக்கைகளுக்கு விளக்கம் அளித்து அவை சம்பந்தப்பட்ட பிரச்சனைகளைத் தீர்ப்பது, பன்னாட்டுச் சட்டங்களுக்கு விளக்கம் மனிதாபிமானத்துடன் கூடிய நேர்மைக்குப் புகலிடம் கொடுப்பது போன்ற முக்கிய நோக்கங்களைக் கொண்டிருந்தது.

**தலைமைச் செயலகம் (Secretariat) :**

சர்வதேசச் சங்கத்தின் தலைமைச் செயலகம் ஒரு பொதுச் செயலரையும், மற்றும் 600 பன்னாட்டு அதிகாரிகளையும் கொண்டிருந்தது. சர்வதேசச் சங்கத்தன் முதல் பொதுச் செயலர் எரிட் ட்ருமாண்ட் என்பவராவார். சங்கத்தின் நிர்வாக அலுவல்கள் முழுவதும் தலைமைச் செயலகமே செய்து வந்தது. மாண்டேட்டுகளின் நிர்வாகம், சிறுபான்மையோர் பிரச்சனைகள், படைக்குறைப்பு ஆகிய அலுவல்களைக் கவனித்து வந்தது. மேலும் பொதுச்சபை பாதுகாப்புச் சபை செயல்படுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதும், அதன் முடிவுகளைச் செயல்படுத்துவதும் இதன் முக்கியப் பணிகளாகும்.

**பன்னாட்டுத் தொழிலாளர் அமைப்பு (ILO) :**

இது ஒரு பொதுக்குழுவையும், நிர்வாகக் குழுவையும் பன்னாட்டுத் தொழிலாளர் அலுவலகத்தையும் கொண்டது. இது ஜெனிவாவில் அமைக்கப்பட்டது. உலகத் தொழிலாளர்களின் நலம், ஊதியம், உழைப்பு மற்றும் அவர்களின் பாதுகாப்பு சம்பந்தப்பட்ட பிரச்சனைகளை ஆராய்ந்து அவர்கள் நலன்களைப் பேணும் சட்டத் திட்டங்களை இயற்றும். 1940–ல் இதன் தலைமையிடம் ஜெனிவாவிலிருந்து மாண்ட்ரீல் நகருக்கு மாற்றப்பட்டது. பின்னர் தோன்றிய ஐ.நா.சபை இதனை தனது அங்கமாக அப்படியே ஏற்றுக் கொண்டது.

**மாண்டேட்டுகள் (Mandates) :**

ஜெர்மனியின் பழைய குடியேற்ற நாடுகளும், துருக்கியிடமிருந்து மீட்ட பாலஸ்தீனம் உட்பல சில பகுதிகளும் மாண்டேட்டுகள் என்று அழைக்கப்பட்டன. அவை தென்மேற்கு ஆப்பிரிக்கா, மேற்கு ஆப்பிரிக்கா, கிழக்கு ஆப்பிரிக்கா, மத்தியக் கிழக்கு மற்றும் பசிபிக் கடற்கரைப் பகுதியிலும் இருந்தன. இந்தக் குடியேற்ற நாடுகள் அனைத்தும் நேச நாடுகளின் பாதுகாப்பில் பிரித்து வைக்கப்பட்டன. இதுவே 'மாண்டேட்' முறையாகும். நேச நாடுகள் இவைகளைப் பராமரிக்கும் உரிமை பெற்றிருந்தனவே தவிர, அப்பகுதிகளைச் சொந்தமாக வைத்துக்கொள்ள அனுமதியில்லை. அவை ஆண்டு தோறும் தங்கள் நிர்வாகம் பற்றிய அறிக்கையை சர்வதேசச் சங்கத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும்.

**சர்வதேசச் சங்கத்தின் சாதனைகள் (Achievements) :**

சமாதானத்தைக் கட்டிக்காக்கும் பெரும் நோக்கத்துடனும், போரைத் தடுக்கும் எண்ணத்துடனும் சர்வதேசச் சங்கம் தோற்றுவிக்கப்பட்டது. முதல் உலகப் போர் முடிவடைந்தப் பிறகு நேச நாடுகளிடம் காணப்பட்ட போர்க்கால ஒற்றுமை மறைந்தது. அவைகளிடம் பல பிரச்சனைகள் தோன்றின. சர்வதேசச் சங்கம் சுமார் நாற்பது அரசியல் பிரச்சனைகளைத் தீர்த்து வைத்தது. பல பொருளாதார சமுதாய மனிதாபிமான நடவடிக்கைகளையும் மேற்கொண்டது.

1. யூபென், மால்மெடி ஆகிய பகுதிகள் பெல்ஜியத்துடன் இணைவதை எதிர்த்து, சங்கத்திடம் முறையிட்டது ஜெர்மனி. இதனை விசாரித்து இறுதியாக, பெல்ஜியத்துடன் இரண்டு பகுதிகளும் இணைவதைச் சங்கம் அங்கீகரித்தது.

2. 1920–ல் ஆலந்து தீவுகள் மீது ஆளுகை செலுத்துவதில் பின்லாந்திற்கும், ஸ்வீடனுக்கும் சர்ச்சை ஏற்பட்டது. இது பற்றி விசாரிக்க சங்கம் ஒரு குழுவை அமைத்தது. அக்குப நேரடி விசாரணை செய்து ஒரு அறிக்கையை சமர்ப்பித்தது. அதன்படி, ஆலந்து தீவுகள் மீதான பின்லாந்தின் உரிமை ஏற்றுக் கொள்ளப்பட்டது. அதே சமயம் அங்கு வாழ்ந்து வந்த ஸ்வீடன் மக்களின் தனித்தன்மை பாதுகாக்கப்பட வேண்டும். இதனை இரண்டு நாடுகளும் ஏற்றுக் கொண்டன.

3. 1920–ல் லிதுவேனியாவிற்கும் போலந்திற்குமிடையே வில்னா என்ற பகுதியைக் குறித்து பிரச்சனை வலுத்தது. 1927–ல் லிதுவேனியர்கள் வில்னாவிலிருந்து விரட்டப்பட்டனர். இதனை சர்வதேசச் சங்கம் விசாரித்து, இரண்டு நாடுகளுக்கிடையிலான பதட்ட நிலையைத் தணித்தது.

4. 1923–ல் இத்தாலிக்கும் கிரீசுக்குமிடையே போர் ஏற்படும் சூழ்நிலை காணப்பட்டது. எல்லைப்புற நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த இத்தாலியத் தளபதி டெலினி என்பவரும் மேலும் மூன்று அதிகாகளும் கிரேக்கத் தீவிரவாதிகளால் கொல்லப்பட்டனர். கோபமடைந்த இத்தாலி பதில் நடவடிக்கையாக கிரீசுக்குச் சொந்தமான கொர்பு (Corfu) தீவைக் கைப்பற்றியது. மேலும் ஐந்து மில்லியன் இத்தாலிய நாட்டின் கரன்சி கொடுக்கப்பட வேண்டும் என்றது. இதனை எதிர்த்து கிரீஸ் சர்வதேசச் சங்கத்திடம் முறையிட்டது. அதனை விசாரித்த சங்கம், கொர்பு தீவை கிரீசுக்குத் திரும்பக் கொடுத்தது. இத்தாலி கேட்ட நஷ்டத் தொகையை கிரீஸ் கொடுக்கச் சம்மதித்தது. போர் ஏற்படுவது தடுக்கப்பட்டது.

**5.** கிரீசுக்கும் பல்கேரியாவிற்கும் **1925–**ல் ஏற்பட்ட பிரச்சனையை தீர்த்து வைத்தது. கிரேக்க இராணுவத் தளபதி ஒருவர் பல்கேரியர்களால் எல்லைப் பகுதியில் கொல்லப்பட்டதால், கிரேக்கப் படைகள் பல்கேரியப் பகுதிக்குள் நுழைந்தன. இதனை எதிர்த்து பல்கேரியா சர்வதேசச் சங்கத்திடம் முறையிட்டது. இதனைப் பற்றி விசாரிக்கச் சங்கம் ஒரு விசாரணைக் குழுவை அனுப்பி பிரச்சனையைத் தீர்த்து வைத்தது.

**6.** உலகத்தில் கொடிய வியாதிகளைக் கட்டுட்ப்படுத்த நிரந்தர சுகாதார நிறுவனம் ஒன்றை **1923–**ல் சர்வதேசச் சங்கம் ஏற்படுத்தியது. அதே ஆண்டு மலேரியா தடுப்புக் குழு ஒன்றும் ஏற்படுத்தப்பட்டது. **1931–**ல் இந்தச் சுகாதார நிறுவனம் ஒரு மாநாடு கூட்டி கிராமப்புற சுகாதாரம் பற்றி ஆய்வு செய்தது. அதில் இருபத்தி மூன்று நாடுகள் கலந்து கொண்டன.

7. சார் பள்ளத்தாக்கில் நேர்மையான வாக்கெடுப்பு நடத்தி அதனை ஜெர்மனிக்கு மீண்டும் அளித்தது. டான்சிக் பட்டணத்தை வெற்றிகரமாக நிர்வகித்தது. மாண்டேட் நிர்வாகத்தையும் திறமையாக மேற்கொண்டது சர்வதேசச் சங்கம்.

8. இலட்சக்கணக்கான போர்க் கைதிகள் சர்வதேசச் சங்கத்தால் பாதுகாக்கப்பட்டுப் பராமரிக்கப்பட்டனர்.

**சர்வதேசச் சங்கத்தின் தோல்விக்கான காரணங்கள் :**

சுமார் இருபது வருடங்கள் பல நற்காரியங்கள் செய்து உலக அமைதியை ஏற்படுத்தினாலும் இறுதியில் சர்வதேசச் சங்கம் வீழ்ச்சியடைந்தது. இதற்கு முக்கியக் காரணம் அது நல்ல முறையில் இயங்குவதற்கு வழிமுறைகள் இல்லாமல் போனதேயாகும். கீழ்க்கண்டவை சர்வதேசச் சங்கத்தின் தோல்விக்கு முக்கியமான காரணங்களாகும்.

**1. சங்கத்தின் சாசனம் வெர்செய்ல்ஸ் உடன்படிக்கையுடன் இணைக்கப்பட்டிருந்தது :**

வெர்செய்ல்ஸ் உடன்படிக்கை பழிவாங்கும் உணர்வு, சுயநலம், பேராசை ஆகியவற்றின் அடிப்படையில் உருவாக்கப்பட்டது. அதனுடன் சர்வதேசச் சங்கத்தின் சாசனம் இணைக்கப்பட்டது துரதிஷ்டமாகும். மேலும் வெர்செய்ல்ஸ் உடன்படிக்கையை நடைமுறைப்படுத்தும் பொறுப்பும் சங்கத்திற்குத் தரப்பட்டிருந்தது. எனவே கட்டாயப்படுத்தி ஏற்றுக் கொள்ள வைக்கப்பட்ட உடன்படிக்கையை ஜெர்மினி மீறியது. அது சங்கத்தின் தோல்விக்கு வழி வகுத்தது.

**2. சங்கத்தின் அமெரிக்கா சேராமல் விலகி நின்றது :**

அமெரிக்க குடியரசுத் தலைவர் உட்ரோவில்சனின் பதினான்கு அம்சத் திட்டத்தின் அடிப்படையிலேதான் சர்வதேசச் சங்கம் உருவாக்கப்பட்டது. ஆனால, அவரது அமைதித் திட்டத்தை அமெரிக்கக் காங்கிரஸ் ஏற்றுக் கொள்ளவில்லை. எனவே சங்கத்தில் அமெரிக்கா அங்கம் வகிக்கவில்லை. அதனால் அமெரிக்காவின் அரசியல் ஆலோசனை மற்றும் பொருளாதார உதவி கிடைக்காத சர்வதேசச் சங்கம் 'மாலுமி இல்லாத கப்பல்' போன்று காட்சியளித்தது.

**3. சங்கத்தின் விதிமுறைகளில் காணப்பட்ட குறைபாடுகள் :**

சர்வதேசச் சங்கம் தோல்வியடைய முக்கியக் காரணம் அதன் விதிமுறைகளில் காணப்பட்ட குறைபாடுகளே காரணம் ஆகும். முக்கியமாகப் பாதுகாப்புச் சபையில் எல்லாத் தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட வேண்டும் என்ற விதி முக்கியத் தீர்மானங்களை உடனடியாக எடுக்க முடியாதபடி செய்துவிட்டது. உறுப்பினர் நாடுகளுக்குச் சங்கம் வெறும் ஆலோசனை மட்டுமே கூற முடியும். சங்கத்தில் எந்த நாடும் பிரச்சனை குறித்து முறையிட்டால்தான் சங்கம் நடவடிக்கை எடுக்க முடியும். எது ஆக்கிரமிப்புப் போர், எது தற்காப்புப் போர் என்று தெளிவாக சங்க விதிமுறைகள் வரையறுத்துக் கூறவில்லை. மேலும் எந்த நாடும் எந்த நேரத்தில் சங்கத்திலிருந்து விலகலாம் போன்ற விதிகள் சங்கத்தின் அழிவுக்கு வழிவகுத்தது.

**4. ஆயுதக் குறைப்பை ஏற்படுத்துவதில் தோல்வி :**

சர்வதேசச் சங்கத்தில் உறுப்பினராகச் சேர்ந்த நாடுகள் போர் ஆயுதங்களை உற்பத்தி செய்வதைக் குறைத்துவிடுகிறோம் என்று உறுதிமொழிப் பத்திரத்தின் மூலம் வாக்குறுதியளித்தன. ஆனால் இந்த வாக்குறுதியை எல்லா நாடுகளும் கடைபிடிக்கவில்லை.

**5. படை வலிமை இல்லை :**

சர்வதேசச் சங்கத்திடம் தனது முடிவுகளைச் செயல்படுத்த தற்கால ஐ.நா. சபையிடம் உள்ளது போல பன்னாட்டு இராணுவமோ கப்பற்படையோ இல்லை. மேலும் அப்படி செயல்படுத்த உறுப்பினர் நாடுகள் ஒத்துழைத்தால்தான் முடியும் என்ற நிலையிருந்ததால், சங்கத்தினால் தனது முடிவுகளை செயல்படுத்த முடியவில்லை.

**6. ஜெர்மனியின் வெறுப்புணர்வு :**

சர்வதேசச் சங்கத்தில் ஜெர்மனி **1926–**ல் தான் சேர்த்துக் கொள்ளப்பட்டது. தன்னைப் பழிவாங்க வேண்டுமென்ற நோக்கத்துடன் ஏற்படுத்தப்பட்டதே சர்வதேசச் சங்கம் என்று கருதி அதன் புனிதமான சட்டதிட்டங்களை மதிக்காமல் தனது மனம் போனபடி செயல்பட்டது. ஜெர்மனியின் மீது விதிக்கப்பட்ட நிபந்தனைகளை ஹிட்லர் ஒவ்வொன்றாக மீறியபோது சர்வதேசச் சங்கத்தனால் கண்டிக்க முடியவில்லை. ஹிட்லரின் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள் சங்கத்திற்கு சாவுமணி அடித்தது.

**7. அனைத்து நாடுகளின் சங்கமாகக் காணப்படவில்லை :**

சர்வதேசச் சங்கம் ஆரம்பிக்கப்பட்டபோது அமெரிக்கா அதில் சேரவில்லை. **1926–**ல் ஜெர்மனி சேர்ந்தது. ஆனால் **1933–**ல் சங்கத்திலிருந்து விலகியது. ஜப்பான் **1937–**ல் மஞ்சூரியப் படையெடுப்பிற்குப் பின் விலகியது. இத்தாலி **1937–**ல் விலகியது. ரஷ்யா **1934–**ல் தான் சேர்ந்தது. ஆனால் பின்லாந்தை ஆக்கிரமித்ததால் சங்கத்திலிருந்து அது விலக்கப்பட்டது. இவ்வாறு அனைத்து நாடுகளும் ஒரே நேரத்தில் சங்கத்தில் அங்கம் வகிக்காதது அதன் தோல்விக்கு முக்கிய காரணம் ஆகும்.

**8. ஐரோப்பாவில் சர்வாதிகார ஆட்சிகளின் தோற்றம் :**

முதல் உலகப் போருக்குப் பின்னர் இத்தாலி, ஜப்பான், ஜெர்மனி ஆகிய நாடுகளில் தோன்றிய எதேச்சதிகார அரசுகள் ஐரோப்பியக் கூட்டுப் பாதுகாப்பு முறை செயல்படாமல் செய்துவிட்டன. இந்த நாடுகள் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டன. ஜெர்மனி ஹிட்லரின் தலைமையிலும், இத்தாலி முசோலினியின் தலைமையிலும் ஆக்கிரமிப்பு செயல்களில் ஈடுபட்டன. **1936–**ல் ஸ்பெயினிலும் ஜனநாயகம் வீழ்ச்சியடைந்து பிராங்கோ தலைமையில் இராணுவ ஆட்சி ஏற்பட்டது. ஜப்பான் தூரக் கிழக்குப் பகுதியில் வலிமையடைந்தது. அது சங்கத்தின் விதிமுறைகளை மீறி சீனாவில் உள்ள மஞ்சூரியாவைக் கைப்பற்றியது. இந்த நிகழ்ச்சிகள் சர்வதேசச் சங்கத்தின் வலிமையின்மையையும், அதன் தோல்வியையும் காட்டுகின்றன.

**9. பலம் பொருந்திய நாடுகளின் ஆதிக்கம் :**

சர்வதேசச் சங்கம் பெரும்பாலும் பலம் பொருந்திய நாடுகளான இங்கிலாந்து, பிரான்ஸ் ஆகிய நாடுகளை நம்பியே இருந்தது. ஆனால் அந்த நாடுகள் அதிகமான குடியேற்ற நாடுகளைக் கொண்டிருந்ததால், சங்க நடவடிக்கைகளில் அதிக அக்கரை

காட்டவில்லை. மேலும், சீனா, எத்தியோப்பியா, அலபேனியா போன்ற நாடுகள் உதவியற்ற நிலையிலிருந்தன. சிறிய நாடுகளுக்குப் பாதுகாப்பு இல்லை. எனவேதான் சா்வதேசச் சங்கம் "League of Victors' என்றும், "An association of Satisfied' என்றும், "a conspiracy of the west against Russia' என்றும் பலவாறாகக் குற்றம் சாட்டப்பட்டது.

மேற்கண்ட பல காரணங்களால் சா்வதேசச் சங்கம் **1938–**க்கு முன்பே செயலற்று, இதயமற்ற உடலாகக் காட்சியளித்தது. இரண்டாம் உலகப் போருக்கு முன்பாகவே அது வீழ்ச்சியடைந்தது எனலாம். சா்வதேசச் சங்கம் தோல்வியடைந்தாலும் **1945–**ல் ஐக்கிய நாடுகள் சபை தோற்றுவிக்கப்படுவதற்கு அது வழி கோலியது. ''League of Nations is dead; Long live United Nations" என்று கூறினாா் செசில்பிரபு (Lord Cecil).

**படைக்குறைப்பு**

உலகப் போருக்கான காரணங்களுள் படைப்பெருக்கம் முக்கியமானதொன்றாகும். எனவே, உலக அமைதிக்கு படைக் குறைப்பு இன்றியமையாததாகக் கருதப்பட்டது. எனவேதான், உட்ரோவில்சன் தமது பதினான்கு அம்சத் திட்டத்தில் நான்காவது அம்சமாக படைக் குறைப்பைக் குறிப்பிட்டுள்ளாா். படைப் பெருக்கம் மூன்று பெரும் அபாயங்களுக்குக் காரணமாயிருக்கிறது.

**i)** படைப் பெருக்கம் போரூக்கத்தை அதிகரிக்கிறது. போா் ஆா்வத்தை உண்டுபண்ணுகிறது. அண்டை நாடுகளில் பதட்ட நிலையை ஏற்படுத்துகிறது. போா் அபாயத்தைத் தோற்றுவிக்கிறது.

**ii)** படைப் பெருக்கம் நாட்டின் வருவாயில் பெரும் பகுதியை விழுங்கிவிடுகிறது. வளா்ச்சித் திட்டங்களுக்குப் பணப்பற்றாக்குறையை ஏற்படுத்திவிடுகிறது. வறுமைக்கோட்டிற்கும் கீழே நாற்பது சதவிகிதத்திற்கு மேற்பட்டோா் வாழும் நாடுகூட, வருவாயில் பாதிப்பகுதியை படைக்குச் செலவிடுகிறது.

**iii)** மனித தொழில் நுட்ப அறிவாற்றலும் அறிவியல் ஆய்வுகளும், மனித இன மேம்பாட்டிற்கான புதிய கண்டுபிடிப்புகளில் ஈடுபடுவதை விடுத்து, புதிய போா்க்கருவிகள் கண்டுபிடிப்புகளுக்கு திசை திருப்பப்படுகிறது. சுருங்கக் கூறின் படைப்பெருக்கம், பண விரயம், அறிவு விரயம் ஏற்படுவதோடு, மனித இன அழிவையும் விரைவுபடுத்துகிறது.

**திஹேக் மாநாடுகள் :**

எனவே, பழங்காலத்திலிருந்தே படைக்குறைப்பிற்கு இராஜதந்திரிகள் முயற்சிகள் எடுத்துள்ளனர். அவற்றுள் ரஷிய ஸார் இரண்டாம் நிக்கோலஸ் எடுத்த முயற்சி குறிப்பிடத்தக்கது. அவரது முயற்சிகளின் பயனாக **1898**–ல் திஹேக் நகரில் படைக்குறைப்பு மாநாடு கூட்டப்பட்டது. **28** நாடுகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். ஆகாயத்திலிருந்து குண்டு வீசுவது, நச்சுப்புகை பயன்படுத்துவது தவிர்க்கப்படவேண்டும் என கூறப்பட்டது. **1907**–ல் இரண்டாவது முறையாக படைக்குறைப்பு மாநாடு கூட்டப்பட்டது. விஷ ஆயுதங்களைப் பயன்படுத்தக்கூடாது எனக் கேட்டுக்கொள்ளப்பட்டது. எனினும் திட்டவட்டமான ஏற்பாடு எதுவும் செய்யப்படவில்லை.

**வெர்செயில்ஸ் ஒப்பந்தமும் படைக் குறைப்பும் :**

வெர்செயில்ஸ் ஒப்பந்தத்தின் எட்டாவது விதி, நாடுகளின் படைகள் உள்நாட்டு அமைதியை நிலைநாட்டுவதற்குப் போதிய அளவில் குறைக்கப்படவேண்டும் என்று குறிப்பிட்டது. போரில் தோல்வியுற்ற நாடுகளான ஜெர்மனி, ஹங்கேரி, ஆஸ்திரியா, பல்கேரியா, துருக்கி ஆகியவற்றின் படைகள் அளவு நிர்ணயிக்கப்பட்டன. வெற்றி பெற்ற நாடுகளின் படைக்குறைப்பு, பன்னாட்டுக் கழகத்தின் பொறுப்பாக்கப்பட்டது.

**படைக்குறைப்பிற்கு பன்னாட்டுக் கழகத்தின் முயற்சி :**

பன்னாட்டுக் கழகத்தின் முதல் விதி **2**–ஆம் பிரிவு படைக்குறைப்பு சம்பந்தமாக கழகம் கூறும் ஒழுங்குமுறைகளை கழக உறுப்பினர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கூறியது. படைக்குறைப்பு சம்பந்தமாக பல பூர்வாங்க ஏற்பாடுகளைச் செய்தது. அவை :

**i) நிரந்தர ஆலோசனைக் குழு (Permanent Advisory Commission) :**

படைக்குறைப்பு சம்பந்தமாக திட்டம் வகுப்பதில் துணை புரிவதற்கு **1920** ஜனவரியில் இக்குழு நிறுவப்பட்டது. இதன் உறுப்பினர்கள் பலர் அனுபவம் மிகுந்த போர் தளபதிகளாயிருந்தனர்.

**ii) தற்காலிகக் கலப்புக்குழு (Temporary Mixed Commission) :**

இக்குழு உறுப்பினர்கள் படைச்சார்பற்றவர்களாயிருந்தனர். இந்தக்குழு நிரந்தர ஆலோசனைக் குழுவோடு கலந்தாய்ந்து பணிபுரிந்தது. ஆண்டுதோறும் நாடுகளின் படைபலம் பற்றி நூல் வெளியிட்டது. இக்குழு படைக்குறைப்பு சம்பந்தமாக நான்குத் திட்டங்களை வெளியிட்டது.

**1.** தரைப்படைகளை நாட்டின் தேவைகளுக்கேற்றபடி நிர்ணயிக்கும் திட்டம்.

**2.** கப்பற்படை சம்பந்தமாக **1922–**ஆம் ஆண்டு வாஷிங்டன் மாநாட்டு தீர்மானங்களை பிற நாடுகளும் பின்பற்றுதல்.

**3.** கூட்டுப் பாதுகாப்பு முறைப்படி ஆக்கிரமிப்பிற்குள்ளாகும் நாட்டிற்கு பரஸ்பரம் உதவி புரியும் தீர்மானம் (Draft Treaty for Mutual Assistance). இதன் மூலம் நாடுகள் தங்கள் படைகளைக் குறைக்கும் வாய்ப்பு ஏற்பட்டது.

**4.** **ஜெனீவா முதற்குறிப்பு (Geneva Protonote 1924)** தயாரிக்கப்பட்டது. அதன் மூலம் கட்டாய நடுவர் தீர்ப்பிற்கு தகராறுகளை விடுவதற்கு நாடுகள் இணங்க வேண்டும். ஆக்கிரமிப்பு புரியும் நாடுகளுக்கெதிராக பொருளாதார முற்றுகை செய்ய வேண்டும். இதனால் நாடுகள் தங்கள் பாதுகாப்புப் பற்றி கவலைப்படாது படைக்குறைப்புச் செய்யலாம்.

இந்த நான்கு முயற்சிகளுக்கும் சில நாடுகளின் எதிர்ப்பு காரணமாகத் தோல்வியில் முடிவுற்றது.

**முன் தயாரிப்பு குழு (1925) (Preparatory Commission) :**

மேலே குறிப்பிட்ட முயற்சிகள் தோல்வியுற்றபின், பன்னாட்டுக் கழகமானது அனைத்து நாடுகளின் படைக்குறைப்பு மாநாடு ஒன்று கூட்ட ஏற்பாடு செய்தது. அம்மாநாட்டில் பரிசீலனைக்கு வைக்க வேண்டிய படைக்குறைப்பு சம்பந்தமான ஒழுங்குமுறைகளை வகுப்பதற்கு முன்தயாரிப்புக் குழு ஒன்று நிறுவியது. அக்குழு கீழ்க்கண்ட முன்வரைவை மாநாட்டுப் பரிசீலனைக்காகத் தயாரித்தது.

**i)** நாடுகளின் படை அதிகாரிகளின் எண்ணிக்கை குறைக்கப்படவேண்டும். படைவீரர்களின் பணிக்காலமும் குறைக்கப்படவேண்டும்.

**ii)** நாட்டின் நிதிநிலைக்குத் தகுந்தவாறு தரைப்படைக் கருவிகள் குறைக்கப்படவேண்டும்.

**iii)** வாஷிங்டன் **(1922)** மற்றும் இலண்டன் **(1930)** கப்பற்படை மாநாடுகளின் தீர்மானப்படி கப்பற்படை குறைக்கப்படவேண்டும்.

**iv)** குதிரைச் சக்தி கணக்கிட்டு அந்த அடிப்படையில ஆகாய விமானப்படை குறைக்கப்பட வேண்டும்.

**v)** இரசாயண மற்றும் கிருமி போர்க்கருவிகள் முற்றிலும் அழிக்கப்படவேண்டும்.

**vi)** நிலையான படைக்குறைப்புக்குழு நிறுவப்படவேண்டும்.

**ஜெனீவா உலகப் படைக்குறைப்பு மாநாடு (1932 – ’34) :**

முன்தயாரிப்புக் குழுவின் முன்வரவை பரிசீலிக்க **1932–**ல் ஜெனீவாவில் உலகப் படைக்குறைப்பு மாநாடு கூட்டப்பட்டது. அம்மாநாட்டில் ஆர்தர் ஹெண்டர்சன் தலைமை தாங்கினார். அம்மாநாட்டில் **57** நாடுகளின் **230** பிரதிநிதிகள் கலந்துகொண்டனர். பன்னாட்டுக் கழகத்தில் உறுப்பினராயில்லாத அமெரிக்காவும் ரஷியாவும் கலந்து கொண்டன. அவர்கள் **35** தீர்மானங்களை தயாராய் வைத்திருந்தனர். நாடுகள் ஒவ்வொன்றும் தங்கள் தேசிய நலன்களை பாதுகாப்பதை நோக்கமாகக் கொண்ட ஆலோசனைகளை வழங்கின.

பிரான்ஸ், படைக்குறைப்பிற்கு முன் நாடுகளுடன் பாதுகாப்பிற்குப் போதிய ஏற்பாடுகள் செய்யப்படவேண்டும் என்று கூறியது. பன்னாட்டுக் கழக ஆதரவில் உலகப் போர்ப்படை நிறுவப்படவேண்டும் என்றும் ஆலோசனை தெரிவித்தது.

ஜெர்மனி, பிற நாடுகளும் தன்னைப் போல் படைக்குறைப்பு செய்ய வேண்டும், அல்லது பிற நாடுகளைப் போல் படை வைத்துக் கொள்வதற்குத் தன்னை அனுமதிக்க வேண்டும் எனக் கோரியது. அதாவது படைபலத்தில் சமத்துவம் வேண்டும் என்று கோரியது.

ரஷியா, நாடுகள் தங்கள் படைகளனைத்தையும் கலைத்துவிடவேண்டும் என்று ஆலோசனை தெரிவித்தது. அதாவது முழுப்படைக் குறைப்புத் தேவை என்று கூறியது.

பிரிட்டன், போர்க் கருவிகளை ஆக்கிரமிப்பிற்குப் பயன்படுபவை, பாதுகாப்பிற்குப் பயன்படுபவை என இரு பிரிவுகளாகப் பிரித்து அதனடிப்படையில் படைக்குறைப்புத் திட்டத்தை வகுக்க வேண்டும் என்று கருத்து தெரிவித்தது.

**மக்டொனால்டு திட்டம் :**

பிரான்ஸ், ஜெர்மனி, இத்தாலி ஆகிய நாடுகள் சம அளவிலும், ரஷ்யா சற்று கூடுதலான அளவிலும் படைகள் வைத்துக் கொள்ளலாம் என்று குறிப்பிட்டது.

மாநாடு கூடிய நேரம் படைக்குறைப்பு திட்டங்களக்கு சாதகமானதாக இல்லை. உலகம் முழுவதும் பெருமந்தம் காரணமாக கடுமையான பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவித்தது. ஜப்பான் மஞ்சூரியாவில் தன் ஆக்கிரமிப்புப் பணிகளை முழுமை பெறச் செய்தது. படைப் பெருக்கத்தின் மூலம் எத்தகைய காரியங்களைச் சாதிக்கலாம்

என்று உலக நாடுகளுக்குச் சொல்லாமல் சொல்லிக்கொண்டிருந்தது. ஜெர்மனியில் நாஜிக்கட்சித் தலைவர் ஹிட்லர் அப்போதுதான் சான்ஸ்லராக நியமிக்கப்பட்டிருந்தார்.

எனினும் மாநாடு படைக்குறைப்பு சம்பந்தமாகக் கீழ்க்கண்ட ஆலோசனைகளை அங்கீகரித்தது.

**i)** ஆகாய விமானத்தின் மூலம் குண்டு வீசுதல் கூடாது.

**ii)** இரசாயண மற்றும் கிருமி போாக்கருவிகள் தவிர்க்கப்படல் வேண்டும்.

**iii)** பன்னாட்டுப் படைக்கலன் விற்பனை கண்காணிக்கப்பட வேண்டும்.

**iv)** நாடுகள் தங்கள் படை சாாந்த நிதிநிலை அறிக்கையை வெளியிடவேண்டும்.

**1933–ல்** படைக்குறைப்பு மாநாட்டிலிருந்து வெளியேறுவதாக ஜெர்மனி அறிவித்தது. அடுத்து, ஜப்பான் வெளியேறியது. இவை, படைக்குறைப்பு மாநாட்டை நிலைகுலையச் செய்தன. **1934–ல்** மாநாடு ஒத்தி வைக்கப்பட்டது. மீண்டும் அது கூட்டப்படவேவில்லை.

**வாஷிங்டன் மாநாடு (1921 – 1922) :**

பசிபிக் பெருங்கடல் பகுதியில் தீவிரமாக நடைபெற்றுக்கொண்டிருந்த கப்பற்படைப் பெருக்கத்தை ஒரு வரையறைக்குள் கொண்டு வருவதற்கும், வெர்செயில்ஸ் மாநாட்டில் தமது நியாயமான கோரிக்கைகள் புறக்கணிக்கப்பட்டதால் விரக்தியடைந்திருந்த சீனாவைத் திருப்திப்படுத்துவதற்கும் **1921–ல்** வாஷிங்டனில் ஒரு மாநாடு கூட்டப்பட்டது. பசிபிக் வல்லரசுகளான பிரிட்டன், பிரான்சு, அமெரிக்கா, ஜப்பான், சீனா ஆகிய நாடுகளும், கிழக்காசியாவில் வாணிபத் தொடர்புள்ள இத்தாலி, பெல்ஜியம், ஹாலந்து, போர்ச்சுகல் ஆகிய நாடுகளும் கலந்து கொண்டன. அதன் பயனாக கீழ்க்கண்ட கப்பற்படைக் குறைப்பு ஒப்பந்தம் கையெழுத்தானது.

**ஐந்து வல்லரசுகளின் கப்பற்படை ஒப்பந்தம் :**

இதன்படி பசிபிக் பகுதியில் கப்பற்படை வைத்திருந்த ஐந்து வல்லரசுகளான பிரிட்டன், அமெரிக்கா, ஜப்பான், பிரான்சு, இத்தாலி ஆகிய நாடுகளின் கப்பற்படைப் பலம் முறையே **5: 5: 3 : 1.7 : 1.7** என்ற விகித அளவில் இருக்க வேண்டும் என நிர்ணயிக்கப்பட்டது. மேலும், வல்லரசுகள் பசிபிக் கடலில் புதிதாக கப்பற்படைத் தளம் எதுவும் அமைக்கக்கூடாது எனவும் ஒப்புக்கொள்ளப்பட்டது.

எனினும் ஜப்பான் தனக்கு பிரிட்டன் மற்றும் அமெரிக்காவிற்கு இணையான கப்பற்படை விகிதம் அளிக்கப்படவில்லை என குறை கூறியது. **1933–**ல் இலண்டனில் கூட்டப்பட்ட கப்பற்படை குறைப்பு மாநாட்டில் அக்குறையை நிவர்த்திக்குமாறு கோரியது. அதற்கு அமெரிக்காவும் பிரிட்டனும் இணங்காததால், ஜப்பான் மாநாட்டை விட்டு வெளியேறியது. இனி வாஷிங்டன் ஒப்பந்தம் தன்னைக் கட்டுப்படுத்தாது எனவும் அறிவித்தது.

**தோல்விக்கான காரணங்கள் :**

முதலில் வெளிப்படையாக நாடுகள் தங்கள் தேசிய நலன்களுக்குத்தான் முக்கியத்துவமளித்தன. குறிப்பாக பிரான்ஸ், ''படைக்குறைப்பு பின் பாதுகாப்பு முன்'' என்று வலியுறுத்தியது. ஜெர்மனியின் சமத்துவக் கோரிக்கை ஐரோப்பிய நாடுகளுக்கு அதிர்ச்சியளித்தது. இரண்டாவதாக தாக்குதலுக்குரியப் படைக்ககலன்கள் எவை, பாதுகாப்பிற்குரிய படைக்கலன்கள் எவை எனத் தெளிவாக வரைறை செய்ய இயலவில்லை. நீர்மூழ்கிக் கப்பல் தாக்குதலுக்குரிய படைக்கலன் எனப் பிரிட்டன் திட்டத்தை பிற நாடுகள் மறுத்தன. மூன்றாவதாக, படைக்குறைப்பை வலியுறுத்தியத் தலைவர்கள் அதற்குரிய மக்களின் மனோபாவத்தை உருவாக்க மறந்துவிட்டனர். நாட்டு மக்களின் உளவியல், பொருளியல் கண்ணோட்டத்துடன் பிரச்சனையை அணுகாதது ஒரு பெருங்குறை. இறுதியாக, ஜெர்மனி ஒப்பந்த விதிகளை மீறி தன் படைபலத்தை அதிகரித்தபோது பன்னாட்டுக் கழகம் அதனைத் தடுத்திட இயலவில்லை.

படைக்குறைப்பு முயற்சி தோல்வியுற்றதன் விளைவாக பன்னாட்டுக் கழகமும் தோல்வியுற்றது. இரண்டாம் உலகப் போரை தவிர்க்கும் முயற்சியும் தோல்வியுற்றது.

## Unit - 2

### சர்வதேச சங்கம் (பன்னாட்டுக் கழகம்)

முதல் உலகப் போரின் விளைவுகளும், மிகவும் முக்கியமானது பன்னாட்டுக்கழகம் (League of Nations) நிறுவப்பட்டது ஆகும். அமெரிக்கக் குடியரசுத் தலைவர் உலக அமைதிக்காக வெளியிட்ட 14 அம்சத்திட்டத்தில் 14வது அம்சம் பன்னாட்டு கழகம் நிறுவுவது பற்றியது ஆகும். உலகப் போரை முடிவிற்குக் கொண்டு வந்த வெர்செயிலில் உடன்படிக்கையின் ஒரு அம்சமாக பன்னாட்டுக்கழகம் பற்றிய ஒப்பந்தம் (Covenant of the League) இணைக்கப்பட்டது.

அக்கழகத்தின் நோக்கங்களாவன?

i) நாடுகளிடையே கூட்டுறவு, அமைதி, பாதுகாப்பு ஆகியவவற்றை வளர்ப்பது
ii) போரில் ஈடுபடமாட்டோம் என்ற கொள்கையை ஏற்றுக் கொள்வது.
iii) நாடுகளிடையே வெளிப்படையான நேர்மையான கௌரவமான உறவுகளை வளர்ப்பது.
iv) நாடுகளிடையிலான தொடர்புகளில் பன்னாட்டுச் சட்டங்களை பின்பற்றுதல்.
v) உடன்படிக்கை நிபந்தனைகளைக் கௌரவிப்பது.

**பன்னாட்டுக் கழகத்தின் அமைப்பு :**

பன்னாட்டுக் கழகமானது பேரவை, கவுன்சில், செயலகம் என்ற மூன்று முக்கிய உறுப்புகளையும் பன்னாட்டு நீதிமன்றம் பன்னாட்டு தொழிலாளர் நிறுவனம் என்ற மற்றுமிரு நிறுவனங்களையும் கொண்டிருந்தது.

**பேரவை (Assembly) (அல்லது) பொதுச் சபை :**

பன்னாட்டுக் கழக உறுப்பினர்கள் அனைவரும் பேரவையின் உறுப்பினர்களாகக் கருதப்பட்டனர்.கழகம் தொடங்கியபோது 43 உறுப்பினர்கள் இருந்தனர். ஒரு காலக்கட்டத்தில் அது 65 ஆக உயர்ந்தது. இது ஆண்டிற்கொருமுறை கூடி உலக அமைதிக்காக பிரச்சனைகளை ஆராயும் இங்கு ஒரு நாட்டிற்கு ”ஒரு வாக்கு” என்ற முறை கடைபிடிக்கப்பட்டது.

**முக்கியப் பொறுப்புகள் :**

i) புதிய உறுப்பினர்களை சேர்ப்பது.
ii) கவுன்சிலின் நிரந்தரமில்லா உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பது.
iii) பன்னாட்டு நீதிமன்ற நீதிபதிகளை தேர்ந்தெடுப்பது.
iv) கவுன்சில் பரிந்துரை செய்த பன்னாட்டுக் கழகச் செயலாளரை.
v) கவுன்சில் பரிந்துரை செய்த பன்னாட்டுக் கழகச் செயலாளரை நியமிப்பது.
vi) ஆண்டு நிதிநிலை அறிக்கையை ஏற்றுக்கொள்வது.

**கவுன்சில் (Council) :**

பன்னாட்டுக்கழகத்தின் செய்றகுழுபோல் கவுன்சில் செயல்பட்டது. இது ஐந்து நிரந்தர உறுப்பினர்களையும் நான்கு நிரந்தரமில்லா உறுப்பினர்களையும் கொண்டது. பிரிட்டன், பிரான்சு, அமெரிக்கா, இத்தாலி, ஜப்பான் ஆகிய வல்லரசுகள் நிரந்தர உறுப்பினர்கள். மீதி நால்வர் மூன்று வருட காலத்திற்கு பேரவையால் தேர்ந்தெடுக்கப்படுவர். நாடுகளிடையே ஏற்படும் சிக்கல்களைத் தீர்க்கும் வழிகளை ஆராய்தல், படைக்குறைப்பிற்கான திட்டங்கள் வகுத்தல், ஆக்கிரமிப்பு மற்றும் நாடுகளின் சுதந்திரத்திற்கு ஆபத்து ஏற்பபட்டடால் என்ன நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என உறுப்பு நாடுகளுக்கு பரிந்துரை செய்வது ஆகியவை இதன் முக்கிய பொறுப்புகளாகும்.

**செயலகம் (Secretariat) :**

பன்னாட்டுக்கழக நிர்வாக காரியங்களைக் கவனிப்பதற்கு ஜெனீவாவில் செயலகம் நிறுவப்பட்டது. கவுன்சிலால் பரிந்துரை செய்யப்பட்டு பேரவையால் நியமிக்கப்படும் பொதுச் செயலாளர் தலைமையில் இச்செயலகம் இயங்கும்.

**பன்னாட்டு நீதிமன்றம் (International Court of Jutice) :**

இது திஹேக் நகரில் இயங்கியது. 11 நீதிபதிகளையும் 4 துணை நீதிபதிகளையும் கொண்டது. இவர்கள் பொதுச் சபையால் 9 ஆண்டு காலத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இது பன்னாட்டுச் சட்டங்கள், உடன்படிக்கைகள், பரஸ்பரம் கட்டுப்பாடுகள் சம்பந்தமாக எழும் தகராறுகள் விசாரித்து தீர்ப்பு வழங்கும். ஆனால் நீதிமன்ற தீர்ப்பிற்கு கட்டுப்படுவதற்காக இசைவு தெரிவிக்கும் நாடுகள் சார்ந்த வழக்குகளைத் தான் இது விசாரித்தது.

**பன்னாட்டு தொழிலாளர் நிறுவனம் (ILO) :**

பன்னாட்டுக் கழக உறுப்பினர்களனைவரும் இந்த நிறுவனத்திலும் உறுப்பினர்களாவார்கள். இந்நிறுவனம் 32 நிர்வாக உறுப்பினர்களைக் கொண்ட குழவால் நிர்வாகிக்கப்பட்டது. இது தொழிலாளர்களின் வேலை நேரம், ஊதியம், பிணிகாயம், முதுமை ஆகியவற்றிலிருந்து பாதுகாப்பு ஆகியவை பற்றிய கருத்துகளைத் தெரிவிக்கின்றன மற்றும் வளர்ச்சியடையா பல நாடுகளுக்குத் தொழில் நுட்ப உதவி பற்றியும் பரிந்துரை செய்கிறது.

1920 முதல் 1929 வரை 44 தகராறுகள் கழகத்தின்முன் கொண்டு வரப்பட்டன. அவைகள் சுமூகமாகத் தீர்த்து வைக்கப்பட்டன. எனவே அக்காலத்தை சர்வதேச சங்கத்தின் பொற்காலம் என்று கூறினால் மிகையாகாது.

**என்ஸெலி பிரச்சனை (1920) :**

காஸ்பியன் கடலில் பாரசீகத்திற்குச் சொந்தமான என்ஸெலி துறைமுகத்தை ரஷ்ய கப்பற்படை தாக்கிக் கைப்பற்றியது. இதனை பாரசீகம் கழகத்தின் கவனத்திற்கு கொண்டு வந்தது. அதே சமயத்தில் ரஷ்யாவுடன் நேரடி பேச்சு வார்த்தையும் நடத்தி வந்தது. பேச்சு வார்த்தையின்மூலம் இப்பிரச்சனை தீர்ந்தது.

**ஆலந்து தீவுகள் தகராறு (1920):**

பால்டிக் கடலில் உள்ள ஆலந்து தீவு உரிமை பற்றி ஸ்வீடனுக்கும் பின்லாந்திற்குமிடையல் ச்சரவு மூண்டது. இது கவுன்சிலின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது. கவுன்சில் அச்சிக்கலை நன்கு பரிசீலித்து அத்தீர்வுகள் பினலாந்திற்கு சொந்தம் என அறிவித்தது. அதே சமயத்தில் அங்கு வாழும் ஸ்வீடிஷ் இனமக்களின் உரிமை பாதுகாக்கப்படுவதற்கு ஏற்பாடு செய்தது.

**ஆர்மீனியன் சிக்கல் (1920) :**

துருக்கிக்கும் ர்ஷ்யாவிற்கும் இடையில் அமைந்திருந்த ஆர்மினியா தன் சுதந்திரத்தைப் பிரகடனம் செய்தது. ஆதனை நேச நாடுகள் அங்கீகரித்தன. ஆண்டை நாடுகள் இரண்டும் ஆர்மினாயவை நெருக்கிய தால் அதனை ஒரு மாண்டேட் பகுதியாக மாற்றுமாறு கழகத்திற்கு விண்ணப்பம் செய்யப்பட்டது. பன்னாட்டுக் கழகம் அப்பிரச்சனையில் தலையிடுவதற்குள் ஆர்மீனியா ஆக்கிரமிக்கப் பட்டுவிட்டது. அப்பிரச்சனையும் கைவிடப்பட்டது.

**யூபன், மால்மடி சிக்கல் (1921) :**

வெர்செயில்ஸ் ஒப்பந்தத்தின்படி ஜெர்மனி இப்பகுதிகளை பெல்ஜிய்திற்கு அளிக்க வேண்டும். ஜெர்மனி அவ்வாறு செய்ய மறுத்து கவுன்சிலுக்கு மேல் முறையீடு செய்தது. ஆனால் அம்முறையீடு தள்ளுபடி செய்யப்பட்டது.

**மேல் சைலீஷியா சிக்கல் (1921) :**

மேல் சைலீஷியா எல்லை குறித்து ஜெர்மனிக்கும் போலந்துக்கும் கருத்து வேறுபாடு எழுந்தபோது கவுன்சில் சரியான எல்லையை வரையறுத்தது.

**கோர்ப்யூ சிக்கல் (1923) :**

அல்பேனியா, கிரீஸ் எல்லையை வரையறுக்கச் சென்ற இத்தாலியர்கள் கிரேக்க மண்ணில் படுகொலை செய்யப்பட்டனர். உடனே இத்தாலி கிரீசிற்கு சொந்தமான கொர்ப்யூ என்ற தீவை குண்டு வீசி தாக்கி கைப்பற்றியது. கிரீஸ் பன்னாட்டுக் கழகத்தில் முறையிட்டது. ஆனால் இத்தாலி, நாடுகளின் தூதர்கள் மாநாடு கூட்டு கிரீசிடமிருந்து பெருந்தொகை ஒன்றை இழப்பீடாகப் பெற்றது.

**கிரீஸ்-பல்கேரியா எல்லைத் தகராறு (1924) :**

கிரீஸ்-பல்கேரியா நாடுகளுக்கிடையிலான சர்ச்சைக்குரிய எல்லைப் பகுதியில் இரு கிரேக்க காவலர்கள் கொல்லப்பட்டனர். உடனே கிரீஸ் பல்கேரியா மீது படையெடுத்தது. பல்கேரியா பன்னாட்டுக் கழகத்தில் முறையிட்டது. கழகம் போர் நிறுததத்திற்கு உடனே ஏற்பாடு செய்தது. இரு நாட்டுப் படைகளையும் பழைய எல்லைக்கு திரும்பிப் போகுமாறு செய்தது. பின் ஐவர் குழு ஒன்றை நிறுவி எல்லைப் பகுதிக்குச் சென்று விசாரணை நடத்துமாறு செய்தது. அக்குழு அறிக்கையின்படி கிரீஸ் இழப்பீடு அளிக்குமாறு கோரப்பட்டது. இங்கு கழகமானது போரை நிறுத்தி அமைதி ஏற்பாடு செய்தது குறிப்பிடத்தக்கது.

**போலந்து-லிதுவேனியா தகராறு (1924) :**

வில்னா என்ற நகர் குறித்து போலந்து லிதுவேனியா நாடுகளிடை சர்சரவு மூண்டது. போலந்து இத்தகராறை பன்னாட்டுக் கழகத்திற்கு எடுத்துச் சென்றது. குழகம் அந்நகரை போலந்திற்களித்தது.

**மோசூல் சிக்கல் (1924 - 25) :**

மோசூல் மாவட்டம் குறித்து துருக்கியும் ஈராக்கும் சச்சரவிட்டன. ஈராக், பிரிட்டிஷ் மாண்டேட் பகுதியாக இருந்தது. பன்னாட்டுக் கழக கவுன்சில் பிரஸ்ஸல்ஸல் கூடி இரு நாடுகளுக்கிடையிலான எல்லையை வரையறை செய்தது. இது துருக்கிக்கு மனநிறைவு அளிக்கவில்லை. பின்னர் 1926ல் பிரிட்டனுக்கும் துருக்கிக்குமிடையில் உடன்பாடு காணப்பட்டது. அதன்படி மோசூலில் ஒரு சிறுபகுதி

துருக்கிக்கு அளிக்கப்பட்டதுடன் மோசூல் எண்ணெய் வயலிலிருந்து உரிமைத் தொகை (சுழலயடவல) அளிக்கவும் ஒப்புக் கொள்ப்பட்டது.

**கிரான் சாக்கோ சிக்கல் :**

பொலிவியா, பராகுவே என்ற இரு தென்னமெரிக்க நாடுகளுக்கிடையேயுள்ள கிரான்சாக்கோ பிரதேசம் குறித்து இரு நாடுகளுக்கிடையே சர்சரவு மூண்டது. பன்னாட்டுக் கழகம் அப்பிரச்சனையில் தலையிட்டு போர் நிறுத்தத்தற்கு வழிவகுத்தது. எனினும் சிக்கல் தீரவில்லை. உடனே ஒரு விசாரணைக்குழு அனுப்பப்பட்டது. எனினும் சச்சரவு நிற்கவில்லை. அமெரிக்க நாடுகள் தலையிட்டு அப்பிரச்சனைக்கு இறுதியில் தீர்வு கண்டன.

**லெற்றிசியா சிக்கல் :**

கொலம்பியாவிற்கும் பெரு நாட்டிற்கும் லெற்றிசியா பிரதேசம் குறித்து சச்சரவு மூண்டன. பெரு அப்பகுதியைக் கைப்பற்றிக் கொண்டது. பன்னாட்டுக் கழகம் அப்பகுதியிலிருந்து பெரு நாட்டுப் படையை வெளியேற்றியது. அங்கு பன்னாட்டு நிர்வாகத்தை ஏற்படுத்தியது. பின்னர் இரு நாடுகளுக்குமிடையில் நேரடிப் பேச்சு வார்த்தைக்கு ஏற்பாடு செய்தது. இறுதியில் அப்பகுதி கொலம்பியாவிடம் ஒப்படைக்கப்பட்டது.

**மஞ்சூரியா சிக்கல் (1931) :**

மஞ்சூரியா, சீனாவின் வடகிழக்கு மாநிலம். அங்கு ஜப்பான் இருப்புப்பாதை அமைத்திருந்தது. அப்பாதையில் 1931 செப்பம்பரில் வெடி வைத்து தகர்க்கப்பட்டது. இந்த வெடி விபத்து சீனர்களால் ஏற்படுத்தப்பட்டது என்று கூறி ஜப்பான் மஞ்சூரியாவிற்குள் படைகளை அனுப்பியது. அப்படைகள் மஞ்சூரியாவின் நகரங்களைக் கைப்பற்றின. சீனா உடனே பன்னாட்டுக் கழகத்தில் முறையிட்டது. சம்பந்தப்பட்ட நாடுகள் தங்கள் படைகளைத் திரும்ப அழைத்துக்கொள்ளவேண்டுமென்று கவுன்சில் கேட்டுக் கொண்டது. ஜப்பான் அதனைப் பொருட்படுத்தாது தொடர்ந்து ஆக்கிரமிப்பில் ஈடுப்பட்டது. பன்னாட்டுக் கழகம் லிட்டன் என்பார் தலைமையில் ஒரு குழுவை நிறுவி மஞ்சூரியச் சிக்கலை ஆராய்ந்து அறிக்கை தரப்பணித்தது. இதற்கிடையில் ஜப்பான் மஞ்சூரியா முழுவதையும் கைப்பற்றி அதனை மஞ்சுகோ என்ற சுதந்திர நாடாகப் பிரகடனப்

படுத்தியது. இதனைக் கண்டித்த பன்னாட்டுக் கழகத்தை விட்டு ஜப்பான் வெளியேறியது.

மஞ்சூரியச் சிக்கலில் ஒரு வெளிப்படையான ஆக்கிரமிப்பை அகற்ற பன்னாட்டக் கழகத்தால் இயலவில்லை. இது அக்கழகத்தின் செல்வாக்கை கடுமையாகப் பாதித்தது.

**அபிசீனியா ஆக்கிரமிப்பு (1935) :**

ஆப்பிரிக்காவின் ஒரே சுதந்திர நாடான அபிசீனியாவை (எத்தியோப்பியாவை) இத்தாலி ஆக்கிரமித்தது. இவ்விஷயம் பன்னாட்டுக் கழகத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டது. கூட்டுப்பாதுகாப்பு முறைப்படி இத்தாலி மீது பொருளாதார முற்றுகை விதிக்கப்பட்டது. இதனை பொருட்படுத்தாது இத்தாலி தன் ஆக்கிரமிப்பை நடத்தி முடித்தது. அதனைக் கண்டித்த பன்னாட்டுக் கழகத்திலிருந்து வெளியேறியது. கூட்டுப்பாதுகாப்பு முறையிலான பொருளாதார முற்றுகை ஒரு வலுவற்ற ஆயுதம் என்பது நிரூபிக்கப்பட்டது.

**ஸ்பெயின் உள்நாட்டுப் போர் :**

இப்போரில் பாசிச மற்றும் நாஜி அரசுகள் வெளிப்படையாக பிராங் கோவிற்கு ஆதரவாக தலையிட்டன. இதனை எதிர்த்த ஸ்பெயின் குடியரசு பன்னாட்டு கழகத்தில் முறையிட்டபோது உருப்படியான நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை.

**ஹிட்லரின் ஆக்கிரமிப்புகள் :**

ஹிட்லரின் ஆக்கிரமிப்புகள்தாம் பன்னாட்டுக்கழகத்திற்கு பெருஞ்சோதனையாக அமைந்தன. 1934ல் பன்னாட்டுக் கழகத்தை விட்டு வெளியேறிய ஜெர்மமி மறு ஆண்டில் வெர்செயில்ஸ் ஒப்பந்தத்தை மீறி படையைப் பெருக்கியது. 1936ல் ரைன்லாந்தை மீண்டும் படை மயமாக்கியது. 1938ல் ஆஸ்திரியாவை இணைத்துக் கொண்டது. செக்கோஸ்லோவாகியாவை விழுங்கியது. அப்போதெல்லாம் பன்னாட்டுக் கழகம் வெறும் கண்டனத் தீர்மானங்களையும் எச்சரிக்கைகளையும் தான் விடுத்தது. இது அக்கழகத்தின் ஒன்றுமில்லாத் தன்மையை எடுத்துக்காட்டியது.

**நிர்வாகப் பணிகள்:**

போரைத் தவிர்த்து அமைதியை நிலைநாட்டுதல் என்ற முதன்மைப் பணியைத் தவிர வெர்செயில்ஸ் உடன்படிக்கை சார்ந்த சில நிர்வாகப் பணிகளையும் மேற்கொள்ள வேண்டியிருந்தது.

அவைகள்

i) மாண்டேட் பகுதிகளை சம்பந்தப்பட்ட வல்லரசுகள் முறையாக நிர்வகிக்கிறார்களா என மேற்பார்வையிடல்.

ii) சிறுபாண்மையினர் நலன்களைப் பாதுகாக்கக மூன்று உறுப்பினர்கள் கொண்ட குழுவை நியமித்தது.

iii) ஸார் பிரதேசத்தை 1920 முதல் 1935 வரை நிர்வகித்தது மக்கள் கருத்தறியும் வாக்கெடுப்பு நடத்தியது.

**சமூக, பொருளியல், மனிதாபிமானப் பணிகள்:**

i) ஆரோக்கியமான பொருளியல் கொள்கைகள் உருவாக பன்னாட்டுக் கழகம் ஆவனபுரிந்து, அதற்காக 1927லும் 1932லும் ஜெனிவாவில் பன்னாட்டுப் பொருளாதார மாநாடுகளைக் கூட்டியது. அக்கழகத்தின் பொருளியல் மற்றும் நிதிக்குழு உள்ள நாணயம், போலி வாணிபச் சான்றிதழ்கள் போன்ற தவறான பொருளியல் பழக்கங்கள் நீங்குவதற்கு வழிவகை கண்டது. ஆஸ்திரியா, ஹங்கேரி, பல்கேரியா ஆகிய நாடுகள், பொருளியல் நெடுக்கடியில் சிக்கித் தவித்தபோது அந்நாடுகளுக்கு நிதி உதவி புரிந்தது.

ii) பல வழிகளில் சமூகத்தில் இயங்கிவந்த அடிமை முறையை ஒழிக்க 1923ல் நிரந்தர அடிமை ஆணையம் நிறுவப்பட்டது. 1923வட உவக சுகாதார நிறுவனத்தை உருவாக்கி மலேரியா, அம்மை புற்றுநோய் தொழுநோய், பிளேக் போன்ற கொடிய நோய்களை ஒழிக்க நாடுகளிடையே ஒத்துழைப்பு ஏற்படுத்தியது.

போர்க் கைதிகள் பரிவர்த்தனை, அகதிகள் குடியமைப்பு போன்ற பணிகளையும் புரிந்தது. அகதிகளை குடியமர்த்துவதற்கு நான்சேன் என்பார் உயர் ஆணைராக நியமிக்கப்பட்டார்.

போதை மருந்து தடுப்பு, பெண்கள் மற்றும் குழந்தைகள் நலன் பாதுகாப்ப ஆகிய துறைகளிலும் ஆக்கரீதியான பணிகள் புரிந்தது.

அறிவியல் மற்றும் தொழில் நுட்ப அறிவு அனைத்து நாடுகளுக்கு எட்டுவதற்கு அறிவியல் கூட்டுறவிற்கான பன்னாட்டுக் குழு நிறுவப்பட்டது.

**மதிப்பீடு :**

போரற்ற உலகை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்ட பன்னாட்டுக்ககழகம் உண்மையிலே மனித சமுதாயத்தின் உயரிய படைப்பு. உலகளாவிய சகோதரத்துவ உணர்வை ஊட்டியது. நாடுகளுக்கிடையே கூட்டுறவையும் ஒத்துழைப்பையும் தொடங்கி வைத்து பல பன்னாட்டு நிறுவனங்கள் உருவாகக் காரணமாயிருந்தது. பன்னாட்டுச் சட்டம் தொகுப்புகள் உருவாக்ககப்பட்டன. பன்னாட்டு சமூக, பொருளியல், மனிதாபிமான செயற்பாடுககள் மூலம் உலக சகோதர நேயத்திற்கும் உலக அமைதிக்கும் சாதகமான சூழ்நிலையை உருவாக்கியது. தன் நலன்களையும் பாதுகாப்பையும் சிறுதும் விட்டுக்கொடுக்க விரும்பாத முழு ஆதிக்கக உரிமையுள்ள நாடுகளின் கழகம் இந்த அளவிற்கு நாடுகளிடைடயே ஒத்துழைப்பு பரிசோதனை தோல்வியில் முடிந்தது. எனினும் அந்த பரிசோதனை நிறுவனம் அமைக்கும் மனப்பக்குவம் ஏற்பட்டது. ஐ.நா சபை அதன் நோக்கம், அமைப்பு செயல்பாடு ஆகிய அனைத்திற்கும் பன்னாட்டுக் கழககத்திற்கு பெரிதும் கடன்பட்டிருக்கிறது. எனவேதான் செசில் பிரபு பன்னாட்டுக் கழகம் செத்துவிட்டது. ஐ.நா. சபை நீடுழி வாழ்க என்று குறிப்பிட்டுள்ளார்.

**உட்ரோவில்சனின் பதினான்கு அம்சத் திட்டம்:**

அமெரிக்க குடியரசுத் தலைவர் உட்ரோவில்சனின் போர் நோக்கம் பதினான்கு அம்சத் திட்டமாக அறிவிக்கப்பட்டது. அவர் 1918 ஜனவரி 8-ல் அமெரிக்கக காங்கிரசிற்கு அனுப்பிய செய்தியில் அது அடங்கியிருந்து. ஜெர்மனி 1918 நவம்பர் 11ல் இந்த பதினான்கு அம்சத் திட்டத்தின் கீழ் போர் நிறுத்தத்திற்கு இணங்கியது. பதினான்கு அம்சத் திட்டங்களாவன.

1. நாடுகளுக்கிடையிலான அமைதி ஒப்பந்தங்கள் வெளிப் படையாகச் செய்து கொள்ளப்பட வேண்டும். இரகசிய இராஜ தந்திரங்கள் கூடாது.
2. போர்க் காலத்திலும் அமைதி காலத்திலும் கடல் பரப்புக்களில் சுதந்திரமாக கலம் செலுத்தும் உரிமை வேண்டும்.

3. நாடுகளுக்ககிடையிலான பொருளாதாரத் தடைகள், வாணிபத் தடைகள் அகற்றப்பட வேண்டும்.
4. உள்நாட்டு அமைதியைப் பாதுகாப்பதற்கு எந்த அளவு படை தேவையோ அந்த அளவிற்கு நாடுகளின் படைகள் குறைக்கப்பட வேண்டும்.
5. குடியேற்ற நாடுகளில் வாழும் மக்கள் விருப்பமறிந்த பார பட்சமற்ற முறையில் அவற்றின் நாடுகளின் படைகள் குறைக்கப்பட வேண்டும்.
6. ரஷ்ய பகுதிகளிலிருந்து அனைவரும் வெளியேறி அயல் நாட்டினர் தலையீடின்றி அந்நாடு தனக்குரிய அரசியல் முறையை தானே வகுத்துக்கொள்ள வாய்ப்பளிக்க வேண்டும்.
7. பெல்ஜியத்தின் மீதான ஆக்கிரமிப்பு அகற்றப்பட்டு அதன் முழு இறைமை மீண்டு நிலைநாட்டப்பட வேண்டும்.
8. பிரெஞ்சுப் பகுதிகள் மீதான ஆகிரமிப்பு அகற்றப்படுவதுடன் அல்சாஸ், லொரைன் பகுதிகள் மீண்டும் வழங்கக்ப்பட வேண்டும்.
9. தேசிய முறைப்படி இத்தாலியின் எல்லைகள் மாற்றி அமைக்கப்பட வேண்டும்.
10. ஆஸ்திரிய ஹங்கேரிப பேரரசில் வாழும் தேசிய இனங்களுக்க சுய நிர்ணய உரிமை வழங்கப்பட வேண்டும்.
11. ருமெனியா, செர்பியா, மாண்டி நீக்ரோ பகுதிகளின் மீதான ஆக்கிரமிப்பு அகற்றப்பட வேண்டும். செர்பியாவிற்கு கடற்கரைப் பகுதிகள் வழங்கப்பட வேண்டும். வரலாற்றுப் பராம்பரியங்களின் படி பால்கள் நாடுகளின் எல்லைகள் வரையறை செய்யப்பட வேண்டும்.
12. துருக்கிப் பேரரசில் வாழும் தேசிய இனங்களுக்கு சுய ஆட்சி வழங்கப்படுவதுடன் உதுமானியப் பேரரசில் அமைந்துள்ள துரக்கியப் பகுதிகளின் இறைமை உறுதி செய்யப்பட வேண்டும்.
13. போலந்து மக்கள் வாழும் பகுதிகள் அடங்கியுள்ள போலந்து நாடு புதுப்பிக்கப்பட வேண்டும். எளிதில் கடலுடன் தொடர்ப கொள்ள வசதி செய்யப்பட வேண்டும்.
14. சிறிய பெரிய நாடுகளில் பராந்திய ஒருமைப்பாட்டிற்கும், அரசியல் சுதந்திரத்திற்கும் உறுதி செய்யவல்ல நாடுகளின் பொதுவான சங்கம் ஒன்று திட்டவட்டமான உடன்படிக்கையின்படி உருவாக்கப்பட வேண்டும்.

**பதினான்கு அம்சமும் வெர்செயில்ஸ் உடன்படிக்கையும் :**

ஏற்கனவே குறிப்பிட்டபடி ஜெர்மனி 1918ல் வில்சனின் பதினான்கு அம்சத்தின்படி போர் நிறுத்தம் செய்ய முன்வந்தபோது நேசநாடுகள் அதனை ஏற்றுக் கொள்ள மறுத்தன. எனவே வெர்செயில்ஸ் உடன்படிக்கைக்கு இது ஒரு வழிகாட்டியாக அமையவில்லை.

1. வெளிப்படையான பேச்சு வார்த்தைகள் மூலம் வெளிப்படையான உடன்படிக்கைகளுக்கான வழிவகைகள் செய்யப்படவில்லை. வெர்செயில்ஸ் உடன்படிக்கையை சார்ந்த முக்கிய முடிவுகள் கூட இரகசிய பேச்சு வார்த்தைகள் மூலமாகத்தான் எடுக்கப்பட்டன.
2. கடலில் தடையின்றி கலம் செலுத்தும் உரிமை பெறப்படவில்லை.
3. துடைகளற்ற வாணிபம் பகற்கனவானது.
4. தோற்ற நாடுகளே படைக்குறைப்பு செய்யுமாறு கட்டாயப்படுத்தப்பட்டன. பிற நாடுகள் படைக்குறைப்பு, பன்னாட்டுக் கழகத்தின் மூலம் செய்யப்பட வேண்டும் என்பது நேர்மையானதன்று.
5. குடியேற்ற நாடுகள் மக்கள் விருப்பப்படி பாகுபாடற்ற முறையில் ஆட்சி நிறுவ அனுமதிக்கப்படவில்லை. மாண்டேட் முறையின்படி அவை மீண்டும் வல்லரசுகள் ஆதிக்கத்தின்கீழ் விடப்பட்டன.
6. வேளியார் தலையீடின்றி ரஷ்யா தனது அரசியலைப்பை நிர்ணயித்துக் கொள்ள அனுமதிக்கப்படவில்லை. 1919 முதல் 1922 வரை ரஷ்யாவில் நடைபெற்ற உள்நாட்டுப் போரில் பிரிட்டன். பிரான்சு, செக்கோஸ் லோவாகியா, ஜப்பான் போன்ற அரசுகள் வெளிப்படையாகவே தடையிட்டன.
7. இத்தாலிய எல்லையை மாற்றியமைப்பிலும் ஆஸ்திரிய ஹங்கேரிப் பேரரசில் வாழும் மக்களுக்கு சுயநிர்ணய உரிமை அளித்ததிலும் பால்கன் நாடுகளின் எல்லையை மாற்றியமைத்ததிலும் தேசிய இனங்களின் உணர்வுகள் முற்றிலும் புறக்கணிக்கப்பட்டு அவ்வின மக்கள் சிறுபான்மையினராய் வேற்று நாடுகளில் வாழும் அவலநிலை ஏற்பட்டது.
8. போலந்து புதுப்பிக்கப்பட்டது. ஆனால் அதற்கு கடல்வழிப்பாதை கொடுத்தது ஜெர்மன் உணர்வுகளை புறக்கணித்ததோடு அந்நாட்டின் ஒரு பகுதியை தொடர்பற்ற தனிப்பிரதேசமாக்கியது. இந்தக்கடல் வழிப்பாதை பிரச்சனைதான் இரண்டாம் உலகப் போருகிகு உடனடிக் காரணமாயிற்று.

9. துருக்கியர்கள் அனடோலியாவில் கூட முழு இறைமையுடன் ஆட்சிபுரிய முடியாது போயிற்று. அதனால் முஸ்தபா கமால் பாஷா அதற்கு "இராணுவத்தீர்வு" காண வேண்டியதாயிற்று.
10. பன்னாட்டுக் கழகம் நிறுவப்படுவது வெர்செயில்ஸ் உடன்படிக்கையின் ஒரு அம்சமாக ஆக்கியது தொலை நோக்கற்ற இராஜ தந்திரமற்ற செயல். அது வெற்றி பெற்ற நாடுகள் தங்கள் வெற்றியின் பயனை நிரந்தரமாகப் பாதுகாப்பதற்கென்று உருவாக்கப்பட்ட கழகம் எனக் கருதப்படலாயிற்று.
11. மேலும் பதினான்கு அம்சங்களில் காணப்படாத சில கருத்துக்கள் வெர்செயில்ஸ் உடன்படிக்கையில் சேர்க்கப்பட்டன. சான்றாக ஜெர்மனியை போர்க் குற்றவாளியாக்கி, இழப்பீடு கோரியது பதினான்கு அம்சத்தில் காணப்படாத ஒன்றாகும்.

## பிரெஞ்சுப் பாதுகாப்பு

1919 ஆம் ஆண்டிற்குப் பின் வந்த காலங்களில் ஐரோப்பிய அரசியலில் மிக முக்கியமான நிலைத்து நின்ற ஒரு தனிப்பட்ட அம்சம் பிரான்சு பாதுகாப்பு பற்றிய கோரிக்கையாகும் என்று ஈஹெச்கார் குறிப்பிட்டுள்ளார். நாட்டுப் பாதுகாப்பு குறிப்பாக தனது கிழக்கு எல்லை பாதுகாப்புதான் அதன் வெளிநாட்டுக் கொள்கையின் ஒரே அம்சமாக விளங்கியது. போரில் வெற்றி பிரான்சு போருக்குப் பின் செய்து கொள்ளப்பட்ட வெர்செயில்ஸ் ஒப்பந்தத்தின் மூலம் பலசாதகமான நிபந்தனைகளைப் பெற்ற பின்னவரும், தன் பாதுகாப்பு குறித்து காரணங்கள்.

முதலாவது ஒரு தலைமுறை காலத்திற்குள் இருமுறை ஜெர்மன் படைவீரர்கள் தன் நாட்டினுள் வெற்றி பவனி வந்ததை அது மறக்கவில்லை.

இரண்டாவது, என்னதான் வெர்செயில்ஸ் ஒப்பந்தத்தின் மூலம் ஜெர்மனி சின்னாவின்னப்படுத்தப்பட்டாலும் எதிர்காலத்தில் அது மீண்டும் சீருற்று வலிமை பெற்று எழுச்சியுற்றுவிட்டால் என்ன செய்வது என்ற அச்சம் அதன் சிந்தையை சித்ரவதை செய்தது.

மூன்றாவது, பிரான்சின் இந்த அச்சத்தைப் போக்குவதற்காகத் தான் ரைன்லாந்து படைகளற்ற பகுதியாக ஆக்கப்பட்டது. ஜெர்மனி அங்கு படைகளையோ போர்க்கருவிகளையோ நிறுவுதல் கூடாது என கண்டிப்புடன் கூறப்பட்டது. மேலும்

அந்த கிழக்கு எல்லை மீறப்பட்டு ஆக்கிரமிப்பு நடத்தப்பட்டால் பிரிட்டனும் அமெரிக்காவும் துணைக்கு வரும் என்று ஏற்றுக் கொள்ளப்பட்டது. இது பிரான்சிற்கு மன நிறைவு அளித்தது. ஆனால் வெர்செயில்ஸ் ஒப்பந்தத்தை அமெரிக்க செனட் அங்கீகரிக்க மறுத்து விட்டதால் அமெரிக்கா அளித்த வாக்குறுதி கைவிடப்பட்டதாகிவிட்டது. அதனைத் தொடர்ந்து தான் மட்டும் துணைக்கு வருவது என்பது இயலாது காரியம் என்று பிரிட்டன் கைவிரித்துவிட்டது. எனவே பிரான்சை மீண்டும் பாதுகாப்பு பற்றிய பயம் பிடித்தாட்டியது.

**பிரான்சின் பாதுகாப்பு ஒப்பந்தங்கள்:**

ஜெர்மன் ஆக்கீரமிப்பு பற்றீய அளவுக்கு மீறிய பயம் காரணமாக பிரான்சு அண்டை நாடுகளுடன் பாதுகாப்பு ஒப்பந்தம் செய்து தன்னை பலப்படுத்திக் கொள்ள முயன்றது. பிரான்சைப் போலவே ஜெர்மன் எழுச்சி பற்றிய அச்சம் கொண்டிருந்த அண்டை நாடுகள் பாதுகாப்பு ஒப்பந்தம் செய்து கொள்ள முன்வந்தன.

i) 1920-ல் பெல்ஜியத்துடன் ராணுவ ஒப்பந்தம் செய்து கொண்டது
ii) 1921-ல் போலந்துடன் உடன்படிக்கையொன்று செய்து கொண்டது.
iii) 1924ல் அதே போல் செக்கோஸ்லோவாகியாவுடன் உடன்படிக்கை செய்து கொண்டது.
iv) 1926ல் ருமேனியாவுடனும் 1927-ல் யூகோஸ்லாவியாவுடனும் நட்பு உடன்படிக்கை செய்து கொண்டது.

**பரஸ்பர உதவிபுரியக்கோரும் உடன்படிக்கை**

**(Draft Treaty of Mutual Assistance 1923) :**

இதன்படி ஆக்கிரமிப்புப் போர்கள் சர்வதேச குற்றமாக அறிவிக்கப்பட்ட வேண்டும். பன்னாட்டுக் கழக கவுன்சில் ஆக்கிரமிப்பு நடைபெற்ற நான்கு நாட்களுக்குள் ஆக்கிரமிப்பாளர் யார் என அறிவிக்க வேண்டும் அதன்பின் உறுப்பு நாடுகள் ஆக்கிரமிப்பிற்குள்ளான நாட்டிற்கு படை மற்றும் பொருளாதார உதவி பாதிய வேண்டும். இந்த உடன்படிக்கையை 18 நாடுகள் ஏற்றுக் கொண்டன. ஆனால். பிரிட்டன் அதனை எதிர்த்ததனால் அவ்வுடன் படிக்கை நிறைவேறவில்லை.

**ஜெனீவா ஒப்பந்தம் (Geneva Protocol 1924)**

1924 ——ல் கிரேக்க மற்றும் செக்கோஸ்லோவாகியா பிரதிநிதிகள் ஜெனிவாவில் கூடி ஒரு ஒப்பந்தத்தை தயாரித்தனர். இது நடுவர் தீர்ப்பை நாடுகள் கட்டாயமாக ஏற்றுக் கொள்ள வேண்டும். என்று கூறியது அதன் முக்கிய அம்சஙகளாவன.

1) நாடுகளுக்கிடையில் எழும் தகராறுகள் நீதிமன்றத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு அதன் தீர்ப்பு கட்டாயமாக ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும்.
2) சட்ட சம்பந்தமான சிக்கல்கள் பன்னாட்டு நீதிமன்றத்திற்கு எடுத்துச் செல்லப்பட்ட அதன் தீர்ப்பு கட்டாயமாக ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும்.
3) அரசியல் தகராறுகள் பன்னாட்டுக்கழக கவுன்சிலுக்கு எடுத்துச் செல்லப்பட வேண்டும். கவுன்சில் தகராறைத் தீர்த்து வைக்க இயலாவிட்டால் அது நடுவர் குழுவிற்கு எடுத்துச் செல்லப்பட வேண்டும். அதன் தீர்ப்பே இறுதி முடிவாக கருதப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும்.
4) நடுவர் குழுவில் விசாரணை நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது உறுப்பு நாடுகள் படைதயாரிப்பில் ஈடுபடக் கூடாது.
5) நடுவர் தீர்ப்பை ஏற்றுக் கொள்ளாத நாடு " ஆக்கிரமிப்பாளர்" என அறிவிக்கப்பட வேண்டும்.
6) பன்னாட்டுக் கழக கவுன்சில் ஆக்கிரமிப்பாளருக்கு எதிராக எடுக்கப்பட வேண்டிய பொருளியல் மற்றும் படை நடவடிக்கைகளை அறிவிக்க வேண்டும்.
7) நாடுகளின் பாதுகாப்பிற்கும் படைக்குறைப்பிற்கும் நெருங்கிய தொடர்பிருப்பதால் 1925ல் படைக்குறைப்பிற்கான மாநாடு கூட்டப்பட வேண்டும்.
8) உள்நாட்டில் ஏழும் சிக்கல்களை பன்னாட்டுக் கழக கவுன்சில் தீர்த்தி வைக்க முயற்சி எடுக்க வேண்டும்.

நடுவர் தீர்ப்பைக் கட்டாயமாக ஏற்றுக் கொள்ள வற்புறுத்திய ஜெனீவா ஒப்பந்தம் ஆக்கிரமிப்பை அகற்றுவதில் பன்னாட்டுக் கழக கவுன்சிலின் நடவடிக்கைகளை தெளிவாக்கியது. இதனைப் பொதுவாக உலக நாடுகள் வரவேற்றன. ஆனால் மீண்டும் பிரிட்டன் ஆக்கிரமிப்பை அகற்றுவதில் தனக்குள் பொறுப்பை தட்டிக்கழிக்க முயன்றது. எனவே ஜெனீவா ஒப்பந்தமும் **நடைமுறைக்கு வரவில்லை.**

**லொக்கார்னோ உடன்படிக்கை (1925):**

இச்சமயத்தில் ஜெர்மன் சான்ஷ்லர் ஸ்ட்ரஸ்மென் ஜெர்மன் பிரான்சு நாடுகளின் எல்லைப் பாதுகாப்பிற்கு பிரிட்டன் இத்தாலி ஆகிய வல்லரசுகளின் உத்திரவாதத்துடன் கூடிய ஒப்பந்தம் ஒன்று செய்து கொள்ளலாம் என்ற யோசனை தெரிவித்தார். இதனை வரவேற்ற பிரஞ்ச வெளிநாட்டமைச்சர் பெல்ஜியம், போலந்து, செக்கோஸ்லோவாகியா ஆகிய நாடுகளையும் அந்த ஒப்பந்தத்தில் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். அதன்படி லொக்கர்னோவில் பிரிட்டன், பிரான்சு, இத்தாலி, ஜெர்மனி, செக், பெல்ஜியம், போலந்து ஆகிய நாடுகளின் பிரதிநிதிகள் கூடி ஏழு ஒப்பந்தங்கள் செய்து கொண்டனர். அதன்படி ஜெர்மனி பிரான்சுடனான தனது மேற்கு எல்லையை அங்கீரிப்பதாகவும் தகராறு மூண்டால் நடுவர் குழு தீர்ப்பிற்கு விட இணங்குவதாகவும் கூறியது.

லொக்கார்னோ உடன்படிக்கை எல்லைப் பாதுகாப்பு பற்றி அளவிற்கு மீறிய அச்சம் கொண்டிருந்த பிரான்சிற்கு நிறைவளித்தது.

**கெல்லாக் - பிரையாண்ட் ஒப்பந்தம் (1928) :**

பேரைத் தவிர்த்து அமைதியை நிலைநாட்டுவதற்கு அமெரிக்க வெளிநாட்டமைச்சர் கெல்லாக், பிரெஞ்சு வெளிநாட்டமைச்சர் பிரையாண்ட் ஆகியோர் ஒரு திட்டத்தை 1928ல் வெளியிட்டனர். அது அவர்கள் பெயரால் கெல்லாக் பிரையாண்ட் ஒப்பந்தம் எனப்பட்டது. அதன்படி போர், சட்டத்திற்குப் புறம்பானது என அறிவிக்கப்பட்டது. நாடுகளிடையே எழும் தகராறைத் தீர்ப்பிற்குப் போரை ஒரு கருவிழயாகப் பயன்படுத்தக் கூடாது என வலியுறுத்தப்பட்டது. இந்த ஒப்பந்தத்தில் 62 நாடுகள் கையெழுத்திட்டன. இதில் கையெழுத்திட்ட இத்தாலியும், ஜப்பானும் வெளிவப்படையாகவே ஆக்கிரமிப்புச் செய்தபோது இந்த ஒப்பந்தம் அதனை தடுத்து நிறுத்த உதவவில்லை.

**ரஷ்யாவுடன் உடன்படிக்கை (1935) :**

ஜெர்மனியில் ஹிட்லரின் நாஜிக்கட்சி அதிக்கம் ஏற்பட்டபின் பிரான்சு தனது பாதுகாப்பு பற்றி பெரிதும் அச்சமுற்றது. அதன் பயனாக 1935ல் ரஷ்யாவுடன் பரஸ்பர உதவி செய்யும் ஒப்பந்தம் செய்து கொண்டது. ஏதாவது ஒரு ஐரோப்பிய அரசினால் ஆக்கிரமிப்பு அச்சுறுத்தல் நிகழும்போது இரு அரசுகளும் ஒருவருக்கொருவர் உதவிபுரிய வேண்டும் என்றும் ஏற்றுக்கொள்ளப்பட்டது. ஆனால் நடை முறையில் இந்த உடனபடிக்கை உயிரற்றதாகவே இருந்தது.

**பிரான்சு - இத்தாலி உடன்படிக்கை (1935):**

நாஜி ஜெர்மனி ஹிட்லரின் தலைமையில் எழுச்சியுற்றது கண்டு அஞ்சிய பிரான்சு இத்தாலியுடன் நட்பு பாராட்ட முயன்றது. ஆப்பிரிக்கா குடியேற்ற நாட்டுக் கொள்கையில் இத்தாலிக்கு ஒரு பங்கு அனைத்து தாஜா செய்ய முயன்றது. அபிசீனியாவில் இத்தாலி புரிந்த ஆக்கிரமிப்பைக் கண்டும் காணாதவாறு இருந்து விட்டது. பன்னாட்டுக் கழகம் இத்தாலி மீது மேற்கொண்ட பொருளாதார முற்றுகையையும் முழு மனதோடு கடைப்பிடிக்கவில்லை. இவற்றின் மூலம் நாஜி ஜெர்மனியும் பாசிச இத்தாலியும் ஒன்று சேர்வதை தடுக்க இயலவில்லை.

**பிராங்கோ ___ பிரிட்டிஷ் உடன்படிக்கை :**

இறுதியாக பிரான்சு 1938ல் பிரிட்டனோடு கூட்டுடன்படிக்கை செய்து கொண்டது இரு நாடுகளின் ராஜதந்திர நடவடிக்கைகளில் ஒத்துழைப்பு ஏற்படுத்தியதோடு இரு நாடுகளின் ராணுவக் கட்டுப்பாடுகளையும் ஒருங்கிணைத்தது.

**முடிவுரை :**

இவ்வளவு முன்னெச்சரிக்கையுடன் எல்லைப் பாதுகாப்பிற்கு எத்தனையோ உடன்படிக்கைகளில் கையெழுத்திட்டும் 1940-ல் அந்த பாதுகாப்பிற்கு ஆபத்து வரும்போது அதனைத் தடுத்து நிறுத்த இயலவில்லை. 1940-ல் மீண்டும் ஜெர்மனியின் நாஜிப்படைகள் பிரான்சில் வெற்றி பவனி வந்தன.

**லொக்கார்லோ உடன்படிக்கை 1925**

வெர்செயில்ஸ் உடன்படிக்கை பிரான்சிற்கு மனநிறைவு அளிக்கவில்லை. என்று கருதியது. ஜெர்மனி மீண்டும் புத்துயிர் பெற்று வலிமையடைந்து பழிவாங்க முனைந்துவிடுமோ என்று அஞ்சியது. தன்னை போன்றே பதைபதைத்து அஞ்சி நிறை போலந்து செக்கோஸ் லோவாகியா, பெல்ஜியம் ஆகிய நாடுகளுடன் கூட்டு சேர்ந்து பாதுகாப்பு ஒப்பந்தம் செய்து கொண்டது. ஜெர்மனியை நிரந்தரமாக பலவீனப் படுத்தும் நோக்குடன் இழப்பீட்டுத் தவணையை வசூலிப்பதில் ஈவிரக்க மற்ற உறுதிகாட்டியது. தவணை தவறிய ஜெர்மனியை இழிவுபடுத்தும் முறையில் ரூர் பகுதியை ஆக்கிரமிபபு செய்தது. தவணைத்தொகை எதுவும் வசூல் செய்ய இயலவில்லை. ஆனால் ஜொம்மனியர் மீது வெந்த புண்ணில் வேல் பாய்ச்சும்

பணியை கச்சிதமாக செய்து முடித்தனர். அதன் பின் வேதயைில் துடிக்கும் ஜெர்மனி வேகத்துடன் பழிவாங்க முயன்றிடுமோ என்றும் துடித்தனர். ஜெர்மனியை அடித்து நொறுக்கவும் இயலாமல் அரவணைத்துச் செல்லவும் மனமில்லாமல் தவித்த பிரான்சிற்கு கிடைத்த நல்லதொரு வாய்ப்புதான் 1925-ல் செய்து கொள்ளப்பட்ட லொக்கார்னோ உடன்படிக்கை.

**லொக்கார்னோ உடன்படிக்கைக்கு இட்டுச் சென்ற சூழ்நிலைகள் :**

1) 1922ல் ஜெர்மனியும் ரஷ்யாவும் செய்து கொண்ட ரபேல்லோ ஒப்பந்தம் பிரான்சு போன்ற ஐரோப்பிய நாடுகளை அதிர்ச்சியுறச் செய்தது. இதில் கம்யூனிச் அபாயமும் ஜெர்மன் இராணுவ எழுச்சியின் அபாயமும் இருப்பதாக அஞ்சின. எனவே ஜெர்மனியை ரஷிய அரவணைப்பிலிருந்து விடுவிக்க வேண்டிய அவசியத்தை உணர்ந்தன. அதனால் ஜெர்மனியோடு ஒரு உடன்பாட்டிற்கு வர முயன்றனர்.
2) நேசநாடுகளின் ரூர் ஆக்கிரமிப்பு ஜெர்மனியின் பொருளாதாரத்தை அழிவுப் பாதாளத்தில் தள்ளிவிட்டது. அதிலிருந்து மீள்வதற்கு மேற்கு நாடுகளுடன் ஒரு உடன்பாட்டிற்கு வரவேண்டியது அவசியத்தை உணர்ந்தது.
3) இத்தகைய உணர்வு அலைகள் ஜெர்மனி, பிரான்சு, பிரிட்டன் நாடுகளின் இராஜதந்திரிகளின் இதயக் கதவுகளைத் தொட்டன. 1) ஜெர்மன் சான்ஸ்மலர் ஸ்ட்ராஸ்மென் மேற்கு நாடுகளின் ஒத்துழைப்பைப் பெற்றுத்தான் ஜெர்மனியின் அழிவையும் இழிவையும் துடைக்கலாம் என்று கருதினார். 2) ஜெர்மனியர் தரமாக மன்வந்து மனப்பூர்வமாக அளிக்கும் உத்திரவாதம்தான் பிரான்சின் உண்மையான பாதுகாப்பு என பிரெஞ்சு வெளிநாட்டு அமைச்சர் பிரையாண்ட் கருதினார். 3) இந்த இரு நாடுகளும் இவ்வாறு இறங்கி வரும்போது தமது பங்கிற்குக் கை கொடுத்து உதவுவதுதான் நேர்மையான ராஜதந்திரம் என பிரிட்டன் வெளி நாட்டமைச்சர் ஆஸ்டின் சேம்பர்லின் எண்ணினார். 4) இத்தாலி கூட தனது நல்லெண்ண ஆதடரவை நல்க முன்வந்தது.
4) எனவே ஜெர்மன் சான்ஸ்லர் ஸ்ட்ராஸ்மென் 1925 ஜனவரி 10-ல் பிரான்சு, ஜெர்மனி பிரிட்டன், இத்தாலி ஆகிய நாடுகள் பிரெஞ்சு ஜெர்மனி எல்லைக்கு கூட்டாக உத்திரவாதம் அளிக்கும் ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொள்ளலாம் என்று அறிவித்தார். உடனே பிரெஞ்சு அமைச்சர் பிரையாண்டு அதனை வரவேற்றதுடன் அந்த ஒப்பந்தத்தில் பங்குபெற பெல்ஜியம், போலந்து

செக்கோஸ்லோவாகியா ஆகிய நாடுகளுக்கும் அழைப்பு விடுக்க வேண்டுமெனக் கேட்டுக் கொண்டார்.

**லொக்கார்னோ உடன்படிக்கை:**

எனவே 1925-ல் பிரிட்டன், பிரான்ஸ், இத்தாலி, ஜெர்மனி பெல்ஜியம், போலந்து, செக்கோஸ்லோவாகியா ஆகிய ஏழு நாடுகளின் பிரதிநிதிகள் ஸ்விட்சர்லாந்தில் உள்ள லொக்கார்னோ என்ற இடத்தில் கூடி ஏழு ஒப்பந்தங்கள் செய்து கொண்டனர்.

**1.பரஸ்பர உத்தரவாதமளிக்கும் ஒப்பந்தம் (Treaty of Mutual Guarantee):**

இவ்வொப்பந்தம் பெல்ஜியம், பிரான்சு, பிரிட்டன், ஜெர்மனி, இத்தாலி ஆகிய நாடுகளிடையே செய்து கொள்ளப்பட்டதாகும், இதன்படி

1. ஜெர்மனி, பெல்ஜியம்,பிரான்சு ஆகிய நாடுகளுகள் பொர் முயற்சிக் களை கைவிடுவது என்று அவைகளுக்கிடையில் எழும் தகராறுகூகளை அமைதியான வழிவகைகள் மூலம் தீர்த்துக் கொள்ளுவதென்றும் உறுதி கூறின.
2. வெர்செயில்ஸ் உடன்படிக்கை வரையறுத்த ஜெர்மன், பிரான்ஸ் எல்லைகளையும் ஜெர்மன், பெல்ஜியம் எல்லைகளையும் ஏற்றுக்கொள்வதாக அறிவித்தன.
3. ரைன்லாந்துப்பகுதயை படைகளற்ற பகுதியாக வைத்துக் கொள்வதாக ஜெர்மனி உறுதியளித்தது.
4. இந்த ஒப்பந்தம் சார்ந்த மீறல்கள் பன்னாட்டுக் கழக குழுவிற்கு எடுத்துச் செல்லப்படவேண்டும்.

**2. நடுவர் மன்றத் தீர்ப்பு ஒப்பந்தம் : (Arbirtration Treaties):**

ஜெர்மனி- போலந்து மற்றும் ஜெர்மனி ___ செக்கோஸ்மேலாவாகியா நாடுகளிடையே எழும் தகராறுகசளை கட்டாயமாக நடுவர் மன்றத் தீர்ப்பிற்கு விட வேண்டும். என்று இரு தனித்தனி ஒப்பந்தங்கள் செய்து கொள்ளப்பட்டன. இதுபோல் ஜெர்மனி ___ பிரான்சு மற்றும் ஜெர்மனி ___ பெல்ஜியம் நாடுகளிடையே எழும் தகராறுகளை கட்டாய நடுவர் மன்றத் தீர்ப்புக்கு விடுவதென்று தனித்தனியே ஒப்பந்தங்கள் செய்து கொண்டன.

**3. பிரான்சு —— போலந்து மற்றும் பிரான்சு —— செக்கோஸ் லோவாகிபா உத்திரவாத ஒப்பந்தங்கள் :**

பிரான்சு இவ்விரு நாடுகளுடன் தனித்தனி ஒப்பந்தங்கள் செய்து கொண்டு அவற்றின பாதுகாப்பிற்கு உத்தரவாதமளித்தது.

## வாஷிங்டன் மாநாடு 1921 —— 1922

பசிபிக் பெருங்கடல் பகுதியில் தீவிரமாக நடைபெற்றுக் கொண்டிருந்த கப்பற்படை பெருக்கத்தை ஒரு வரையறைக்குள் கொண்டு வருவதற்கும் வெர்செயில்ஸ் மாநாட்டில் தனது நியாயமான கோரிக்கைகள் புறக்கணிக்கப்பட்டதால் வெறுப்பும் விரக்தியும் அடைந்த சீனாவை திருப்திப்படுத்துவதற்கும் 1921-22ல் வாஷிங்டனில் ஒரு மாநாடு கூட்டப்பட்டது. இம்மாநாடு கூட்டப்படுவதற்கு அமெரிக்க குடியரசுத் தலைவர் ஹார்டிஞ் தொடக்க முயற்சி எடுத்தார். பசிபிக் வல்லரசுகளான பிரிட்டன், பிரான்சு, அமெரிக்கா, ஜப்பான், சீனா ஆகிய நாடுகளும் கிழக்காசியாவில் வாணிபத் தொடர்புள்ள இத்தாலி, பெல்ஜியம், ஹாலந்து, போர்ச்சுக்கல் ஆகிய நாடுகளும் கலந்து கொண்டன. சம்பந்தப்பட்ட பிரச்சனைகளுக்கேற்ப நாடுகளும் தனித்தனியே இணைந்து தனித்தனி ஒப்பந்தங்கள் செய்து கொண்டன.

**மாநாடு கூடுவதற்கான காரணங்கள்:-**

**i) அமெரிக்க —— ஜப்பான் போட்டி:-**

பசிபிக் பெருங்கடலில் கிழக்கிலிருந்த ஜப்பானும் மேற்கிலிருந்த அமெரிக்காவும் ஆதிக்கப் பெருக்கத்தில் ஈடுபட்டன. ஜப்பான் பார்மோசாத் தீவுகள், தெற்கு சகாலின் தீவு, மஞ்சூரியா, கொரியா ஆகிய ஹவாய் தீவுகள், பிலிப்பைன் தீவுகள் ஆகிய இடங்களிலும் கடற்படைத் தளங்களை நிறுவியது. கடையில்லா வாணிபம் நடைபெற முயன்றது. உலகப் போரின் போது அமெரிக்கா தெரிந்தோ தெரியாமலோ ஜப்பானுக்கு சீனாவில் சிறப்புச் சலுகைகள் உண்டு என்று கூறும் லான்சிங் இஷி ஒப்பந்தத்தைச் செய்து கொண்டு விட்டது. தேவையற்ற ஒப்பந்தத்தை கைகழுவ அமெரிக்கா விரும்பியது. ரஷ்யாவில் போல்ஷ்விக் அரசிற்கு எதிரான உள்நாட்டுப் போரில் ஜப்பான் தலையிட்டு கிழக்கு சைபீரியாவைக் கைப்பற்றியிருந்தது. இது அமெரிக்காவின் கண்களை உறுத்தியது.

**ii) ஆங்கிலோ-ஜப்பானிய உடன்படிக்கையைக் கைவிடுதல்:-**

1902ல் செய்து கொள்ளப்பட்ட ஆங்கிலோ-ஜப்பானிய உடன்படிக்கை அதன் நோக்கத்தை நிறைவேற்றி சீனாவில் ரஷ்யாவின் ஆதிக்கப் பெருக்கத்திற்கு முற்றுப்புள்ளி வைத்தது. இனியும் அந்தக் காலங்கடந்த உடன்படிக்கை நீடித்தால் தனக்கு தர்ம சங்கடம் ஏற்படக் கூடும் என பிரிட்டன் அஞ்சியது. எனவே அதனை கைகழுவி விட விரும்பியது.

**iii) சீனா குமுறல்:-**

முதல் உலகப் போரில் சீனா நேசநாடுகள் சார்பில் ஜெர்மனிக்கு எதிராகப் போரிலிறங்கியது. ஆனால் தனது நாட்டில் ஜெர்மனிக்குரிய ஷாண்டுங் தீபகற்பத்தையும் வாணிப குத்தகை உரிமைகளையும் ஜப்பான் ஏற்கனவே அபகரித்துக் கொண்டதை எண்ணி வேதனையுற்றது. இருபத்தியொரு கோரிக்கைகளை சீனா ஏற்றுக் கொள்ளுமாறு ஜப்பான் நிர்பந்தித்தது. இவை தவிர மேற்கு நாடுகள் தன் மீது சுமத்திய ஒருதலைப்பட்சமான உடன்படிக்கையை ஒழித்துக் கட்டி சுதந்திர அரசாய் பவனி வர விரும்பியது வெர்செயில்ஸ் மாநாட்டில் தன் வேதனைகள் தீர வழி பிறக்கும் என நம்பி ஏமாந்தது. அந்த ஏமாற்றம் மே நான்காம் நாள் இயக்கமாக (May Fourth Movement) வெடித்தது. அதனால் மாநாட்டிலிருந்து வெளியேறியது. எனவே சீனாவை அமைதிப்படுத்த வல்லரசுகள் விரும்பின.

கடற்படைக் குறைப்பு சீனாவின் பிரச்சனை ஆகியவை பற்றி வல்லரசுகளும் தனித்தனியே கூடி தனித்தனி உடன்படிக்கைகள் செய்து கொண்டன.

**1. ஐந்து வல்லரசுகளின் கப்பற்படை ஒப்பந்தம்:-**

இதன்படி பசிபிக் பகுதியில் கப்பற்படை வைத்திருந்த ஐந்து வல்லரசுகளான பிரிட்டன், அமெரிக்கா, ஜப்பான், பிரான்சு, இத்தாலி ஆகிய நாடுகளின் கப்பற்படை பலம் முறையே 5:5, 3:1, 1:7, 1:7 என்ற விகித அளவில் இருக்க வேண்டும் என நிர்ணயிக்கப்பட்டது. மேலும் வல்லரசுகள் பசிபிக் கடலில் புதிதாக கப்பற்படை தளம் எதுவும் அமைக்கக்கூடாது எனவும் ஒப்புக் கொள்ளப்பட்டது.

**2. நான்கு வல்லரசுகளின் உடன்படிக்கை:-**

கிழக்காசியா சம்பந்தப்பட்ட பிரச்சனைகளில் பிரிட்டன், அமெரிக்கா, பிரான்சு, ஜப்பான் ஆகிய நான்கு வல்லரசுகளும் கலந்து பேசி முடிவு எடுக்க வேண்டும் என ஒப்புக் கொள்ளப்பட்டது. இதன் மூலம் தேவைக்கதிகமாகவே நீடித்த ஆங்கிலோ

ஜப்பானிய உடன்படிக்கையும், தேவையில்லாமல் செய்து கொள்ளப்பட்ட லான்ஷிங் இஷி ஒப்பந்தமும் காலாவதியாயின.

**3. ஒன்பது நாடுகள் ஒப்பந்தம்:-**

வாஷிங்டன் மாநாட்டில் கலந்து கொண்ட ஒன்பது நாடுகளும் சீனாவின் ஆதிக்க உரிமையை மதிக்க வேண்டும். சீனாவில் திறந்த வாயில் கொள்கை கடைப்பிடிக்கப்பட்டு அனைத்து நாடுகளுக்கும் சம வாணிப உரிமை அளிக்கப்பட வேண்டும். அந்நாடுகள் சீனாவிடம் தனிச்சிறப்புச் சலுகைகள் பெற முயற்சிக்கக் கூடாது. அதன் உள்நாட்டு விவகாரங்களில் தலையிடக்கூடாது என ஒப்புக் கொண்டன.

**4. சீன —— ஜப்பானிய உடன்படிக்கை:-**

வாஷிங்டன் மாநாட்டின் போது சீனாவும் ஜப்பானும் தனியே சந்தித்து தங்களுக்கிடையிலான சில பிரச்சனைகளை தீர்த்துக் கொண்டன. ஷான்டுங் தீபகற்பத்தை சீனாவிற்கு அளிக்க ஜப்பான் இணங்கியது. ஆனால் இருபத்தியோரு கோரிக்கைகளை கைவிட மறுத்தது.

**5. பிற உடன்படிக்கைகள்:-**

மேற்கு நாடுகள் சில ஏற்கனவே உடன்படிக்கைகள் மூலம் பல சலுகைகளைப் பெற்றிருந்தன. அவற்றுள் சிலவற்றை கைவிட முன் வந்தன.

i) சீனா அஞ்சலகத்துறை மீதான அன்னியக் கட்டுப்பாடு ஒழிக்கப்பட்டது.

ii) வானொலி நிலையம் உட்பட பல செய்தித் தொடர்பு சாதனங்களை நியாயமான விலைக்கு விற்க ஒப்புக் கொள்ளப்பட்டது.

iii) சீனா தன் விருப்பப்படி காப்பு வரிகளை விதித்துக் கொள்ள அனுமதிக்கப்பட்டது.

iv) சிறப்பு பிரதேச உரிமையைக் கைவிடுவது பற்றி ஆலோசிக்க ஒரு குழு நியமிக்கப்பட வேண்டும்.

v) நிலைமை சீரான பின் பாக்சர் ஒப்பந்தப்படி சீனாவில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த அன்னியப் படைகள் வெளியேற வேண்டும்.

ஆனால் சீனா மீது திணிக்கப்பட்ட ஒருதலைப்பட்சமான உடன்படிக்கைகள் கைவிடப்படவில்லை.

**திறனாய்வு:-**

(1) பன்னாட்டுக் கழகம் பலமுறை முயன்றும் முடியாத படைக்குறைப்பு பிரச்சனையை வாஷிங்டன் மாநாடு பசிபிக் பெருங்கடல் கப்பற்படையைப் பொருத்த அளவிலாவது வெற்றிகரமாகச் செய்து முடித்தது. கப்பற்படைப் பெருக்கத்தில் நடைபெற்ற அழிவைத் தரக்கூடிய ஆபத்தான போட்டிக்கு ஒரு முடிவு செய்யப்பட்டது. (2) சீனாவிற்கு இழைக்கப்பட்ட அநீதிகள் பல நீக்கப்பட்டன. அதன் இறைமை அங்கீகரிக்கப்பட்டது. ஷான்டுங் தீபகற்பத்தை மீண்டும் சீனா பெற்றமை அதற்கு மன நிறைவை அளித்தது. (3) திறந்த வாயில் கொள்கை அங்கீகரிக்கப்பட்டமை அமெரிக்காவிற்கு கிடைத்த ராஜதந்திர வெற்றியாகும். (4) ஜப்பான் தனக்கு பிரிட்டன் மற்றும் அமெரிக்காவிற்கு இணையான கப்பற்படை விகிதம் அளிக்கப்படவில்லை என்று குறைபட்டுக் கொண்டது. (5) 1933ல் லண்டனில் கூட்டப்பட்ட கப்பற்படை குறைப்பு மாநாட்டில் அக்குறையை நிவர்த்திக்குமாறு கோரியது. அதற்கு அமெரிக்காவும், பிரிட்டனும் இணங்காததால் ஜப்பான் மாநாட்டை விட்டு வெளியேறியது. இனி வாஷிங்டன் ஒப்பந்தம் தன்னைக் கட்டுப்படுத்தாது எனவும் அறிவித்தது.

ஹிட்லர், லொக்கார்னோ ஒப்பந்தத்தை மீறியது போல் ஜப்பானும் வாஷிங்டன் ஒப்பந்தத்தை மீறியது. 1931-ல் மஞ்சூரியாவை ஆக்கிரமித்தது. 1937ல் சீனா மீது பிரகடனம் செய்யா போர் தொடங்கியது. 1941-ல் அமெரிக்கக் கடற்படைத்தளமான பெர்ல் துறைமுகத்தைத் தாக்கி அழித்தது. அதனால் கிழக்காசியாவில் இரண்டாம் உலகப்போர் மூண்டது.

## மஞ்சூரியப் பிரச்சனை (1931)

மெய்ஜி புரட்சி ஜப்பானை ஒரு நவீன நாடாக மாற்றியது என்றால் 1904-1905-ல் நடைபெற்ற ரஷிய —— ஜப்பானியப்போர் அந்நாட்டை ஒரு வல்லரசாக உயர்த்தியது. வல்லரசுகளுக்குரிய ஆக்கிரமிப்பு மனோபாவம், பொருளாதார ஏகாதிபத்தியம் ஆகிய பண்பு நலன்களும் கூடவே வளர்ச்சியுற்றன. "கிழக்கத்திய பிரிட்டன்" எனப் பெருமை பெற்ற அந்நாடு கிழக்கில் பிரிட்டனைப் போ ஒரு பேரரசை நிறுவ திட்டமிட்டு முயற்சியில் ஈடுபட்டது.

1892-ல் சீனாவைத் தோற்கடித்து பர்மோசாத் தீவைப் பெற்றதோடு பல வாணிபச் சலுகைகளையும் பெற்றது.

1902-ல் இங்கிலாந்தோடு ஓர் உடன்படிக்கை செய்து கொண்டு தன் அந்தஸ்தை உயர்த்திக் கொண்டதோடு ஆக்கிரமிப்பிற்கு ஊக்கமும் பெற்றது.

1905-ல் ரஷியாவைத் தோற்கடித்து தெற்கு சகாலின் தீவு, லியோடுங் தீபகற்பம் ஆகியவற்றை பெற்றது. தெற்கு மஞ்சூரியாவை தன் செல்வாக்கு மண்டலமாக ஆக்கிக் கொண்டது.

1910-ல் கொரியாவை இணைத்துக் கொண்டது.

**முதல் உலகப்போரும் ஜப்பானும்:-**

முதல் உலகப்போர் காரணமாக வல்லரசுகள் ஐரோப்பாக் கண்டத்தில் கடுமையான போரில் ஈடுபட்டுக் கொண்டிருந்ததால் கிழக்கு ஆசியாவில் ஜப்பான் எவ்வித எதிர்ப்புமின்றி தன் ஆதிக்க விஸ்தரிப்பைச் செய்யத் துணிந்தது. முதலில் ஜெர்மனிக்கு விரோதமாக போரிலிறங்கியது. சீனாவில் ஜெர்மனியின் செல்வாக்கு மண்டலமான ஷாண்டுங் தீபகற்பத்தையும் அங்குள்ள குத்தகை துறைமுகமான கியாவோசௌ என்ற துறைமுகத்தையும் கைப்பற்றிக் கொண்டது. பசிபிக் பெருங்கடலில் ஜெர்மனிக்குச் சொந்தமான மரியன், கரோலின், மார்ஷல் தீவுகளையும் எடுத்துக் கொண்டது.

இரண்டாவதாக, சீனாவில் தன் மேலாதிக்கத்தை நிலை நாட்டும் நோக்குடன் இருபத்தியொரு கோரிக்கைகளை (Twenty One Demands) தயாரித்து அதனை ஏற்றுக் கொள்ளுமாறு சீனாவை நிர்ப்பந்தித்தது. வேறு வழியின்றி சீனா அவற்றள் பெரும்பாலானவற்றை ஏற்றுக் கொண்டது.

மூன்றாவதாக, இதுவரை கிழக்காசியாவில் ஜப்பானின் ஆதிக்க விரிவாக்கத்தை கடுமையாக எதிர்த்து வந்த அமெரிக்கா கூட போர்க்கால நெருக்கடி காரணமாக சீனாவில் ஜப்பானுக்குரிய சிறப்பு அந்தஸ்தை ஏற்றுக் கொள்ள நேர்ந்தது.

இறுதியாக, போருக்குப்பின் நடைபெற்ற வெர்செயில்ஸ் மாநாட்டிலும் ஜப்பான் வல்லரசுக்குரிய செல்வாக்கோடு திகழ்ந்தது. அதன் மூலம் சீனாவின் வேண்டுகோள்கள் புறக்கணிக்கப்பட்டன. பன்னாட்டுக் கழகத்தில் ஜப்பானுக்கு வல்லரசு அந்தஸ்து அளிக்கப்பட்டது.

**வாஷிங்டன் மாநாடு (1922):-**

கிழக்காசியாவில் கப்பற்படைப் பெருக்கப் போட்டியைத் தவிர்க்கும் பொருட்டு பிரிட்டன், பிரான்சு, அமெரிக்கா, இத்தாலி, ஜப்பான் ஆகிய வல்லரசுகளடங்கிய மாநாடு கூட்டப்பட்டது. அதில் அமெரிக்கா மற்றும் பிரிட்டனுக்கு அடுத்தபடியாக கப்பற்படை வைத்துக் கொள்ள ஜப்பான் அனுமதிக்கப்பட்டது. சீனாவுடன் செய்து கொண்ட தனி ஒப்பந்தத்தின்படி ஷாண்டுங் தீபகற்ப உரிமையை சீனாவிற்கு விட்டுக் கொடுத்தது.

**தனாக்கா அரசிதழ் (Tanaka Memorials):-**

வாஷிங்டன் மாநாட்டிற்குப் பின் ஜப்பான், ஆக்கிரமிப்புகளில் ஈடுபடவில்லை. அதனால் அக்கொள்கையைக் கைவிட்டதாகக் கொள்ளக் கூடாது. தனாக்கா என்ற ஜப்பானியப் பிரதமர் ஜப்பானின் எதிர்கால கொள்கைபற்றி ஒரு அறிக்கை தயாரித்தார். அதில் மஞ்சூரியா, மங்கோலியா ஆகியவை ஜப்பானின் பாதுகாப்பிற்கும் வளர்ச்சிக்கும் தேவையானவை என்று குறிப்பிடப்பட்டிருந்தது. அதனையொட்டி ஜப்பானிய மன்றோ கொள்கை எனப்படும் ஒரு ஆதிக்க விஸ்தரிப்பு திட்டமும் 1934-ல் வெளியிடப்பட்டது. அது சீனா என்றும் அங்கு ஐரோப்பிய வல்லரசுகள் தலையிடக் கூடாது எனவும் வலியுறுத்தியது. இக்கொள்கையை செயல்படுத்தும் வகையில் மஞ்சூரியாவில் ஜப்பான் ஊடுருவல் செய்தது.

**மஞ்சூரியச் சிக்கல் (1931):-**

மஞ்சூரியா் சீனாவின் வடகிழக்கு மாநிலமாகும். இங்கு ஏற்கனவே ஜப்பனர் இருப்புப்பாதை அமைக்கும் உரிமை பெற்றிருந்தது. படிப்படியாக தன் பொருளாதார ஆதிக்கத்தை அங்கு விரிவாக்கிக் கொண்டிருந்தது. இறுதியாக தன் அரசியல் ஆதிக்கத்தையும் நிலை நாட்டத் திட்டமிட்டது. அதற்கான காரணங்கள்:

i) மஞ்சூரியா பல நிலக்கரி, இரும்புச் சுரங்கங்களைக் கொண்டிருந்தது. வளர்ந்து வரும் ஜப்பானியர் ஆலைத்தொழிலுக்கு அவை இன்றியமையா மூலப்பொருட்களாகும்.

ii) பெருகிவரும் மக்கள் தொகையைக் குடியமர்த்துவதற்கு மஞ்சூரியா தகுந்ததோர் இடமாகக் கருதப்பட்டது.

iii) 1929-1930-ல் உலகெங்கும் பரவிய பெருமந்தம் காரணமாக நாடுகளில் கடும் பொருளாதார நெருக்கடி தோன்றியது. ஐரோப்பிய வல்லரசுகள் அதனைச் சமாளிக்க முடியாது திணறின. அந்த நெருக்கடியால் ஜப்பானின்

பொருளாதாரமும் பாதிக்கப்பட்டது. அரசியலில் குழப்பம் ஏற்பட்டது. பொருளாதாரத்தை சீர்படுத்துவதற்கும் அவதியுறும் மக்களின் கவனத்தைத் திருப்புவதற்கும் மஞ்சூரியாவை ஆக்கிரமித்தல் அத்தியாவசியமாயிற்று.

iv) ஜப்பானின் அரசியலில் ராணுவத்தின் செல்வாக்கு அதிகரித்தது. ராணுவத்தளபதிகள் அரசியல் தலைவர்களை நிர்பந்திக்க தொடங்கினர். ராணுவத்தினர் அரசியல் தலைவர்களைப் படுகொலை செய்து ஆட்சியைக் கைப்பற்ற சதி செய்தனர். ராணுவத்தின் கெடுபிடி நடவடிக்கைகள் மஞ்சூரியா ஆக்கிரமிப்பிற்க வழி வகுத்தன.

**ஆக்கிரமிப்பின் தொடக்கம்:-**

1931 செப்டம்பரில் முக்டன் நகருக்கு அருகில் ஜப்பானுக்கு சொந்தமான இருப்புப்பாதை வெடி வைத்து தகர்க்கப்பட்டது. ஆக்கிரமிப்பு செய்வதற்கு சாக்கு போக்கு கிடைக்காதா என்று தேடியலைந்த ஜப்பானிய ராணுவத்தினருக்கு இது ஒரு வாய்ப்பாக அமைந்தது. தங்கள் இருப்புப்பாதை உடைமைகளைப் பாதுகாப்பதற்கு படைகளை அனுப்பியது. அந்தப் படைகள் முக்டன் உட்பட முக்கிய நகரங்களைக் கைப்பற்றின. போர்ப்பிரகடனம் செய்யாமல் பாதுகாப்பு நடவடிக்கை என்ற பெயரில் ஆக்கிரமிப்பை தொடர்ந்து நடத்தினர் ஜப்பானியர். இதனைப் போர் என்றோ ஆக்கிரமிப்பு என்றோ கூறாது மஞ்சூரிய நிகழ்ச்சி என்றே குறிப்பிட்டனர்.

**பன்னாட்டுக் கழக நடவடிக்கை:-**

உடனே சீனா பன்னாட்டுக் கழக கவுன்சில் முறையிட்டது. தன் வடகிழக்கு மாநிலமான மஞ்சூரியாவில் ஜப்பான் புரிந்த ஆக்கிரமிப்பை அகற்ற உதவுமாறு கோரியது. கவுன்சிலின் எந்த ஒரு தீர்மானமும் ஏகமனதாகத்தான் நிறைவேற வேண்டும். அக்கவுன்சிலில் ஜப்பான் ஒரு உறுப்பினராக இருந்ததால் அதனை எதிர்த்தோ கண்டித்தோ எந்தவித தீர்மானமும் இயற்ற முடியவில்லை.

”கூட்டுப்பாதுகாப்பு” (Collective Security) கொள்கைப்படி கழக உறுப்பு நாடுகள் ஆக்கிரமிப்பு செய்த நாட்டின் மீது பொருளாதார முற்றுகை போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும். அப்போது உலகில் கடுமையான பொருளியல் நெருக்கடி நிலவியதால் பொருளாதார முற்றுகையை வல்லரசுகள் விரும்பவில்லை. ஜப்பானின் ஆக்கிரமிப்பை அகற்ற எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

**லிட்டன் குழு:-**

மஞ்சூரிய சிக்கல் சம்பந்தப்பட்ட விஷயங்களை நேரில் சென்று ஆராய்ந்து எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகளைப் பரிந்துரை செய்ய லிட்டன் என்பவர் தலைமையில் ஐந்து நாடுகளின் பிரதிநிதிகளடங்கிய குழு நியமிக்கப்பட்டது. அக்குழு சீனாவிற்கென்று நிலையை ஆராய்ந்து அறிக்கை தயாரித்தது. அந்த அறிக்கை ஜப்பான் ஆக்கிரமிப்பை தாஜா செய்வதாகவே இருந்தது. ஜப்பான் ஆக்கிரமிப்பு செய்தது என்று நேரடியாக கூறாது பூ மெழுகியது.

**மஞ்சூரிய ஆக்கிரமிப்பின் முடிவு:-**

லிட்டன் குழு அறிக்கை தயாரித்துக் கொண்டிருந்த 11 மாதங்களில் ஜப்பான் மஞ்சூரியா முழுவதையும் ஆக்கிரமித்துக் கொண்டது. பின் அதனை மஞ்சுகோ என்ற சுதந்திர நாடாக அறிவித்தது. சீனாவின் கடைசி மஞ்சப் பேரரசரான பூயி என்பவரை அதன் மன்னனாக்கியது. ஆனால் உண்மையில் மஞ்சுகோ ஜப்பானின் பொம்மை அரசாகவே விளங்கியது. அந்நாட்டை உறுப்பினர்கள் அங்கீகரிக்கக்கூடாதென, பன்னாட்டுக் கழகம் அறிவித்தது. எனவே ஜப்பான் அக்கழகத்திலிருந்து விலகியது.

**மஞ்சூரிய சிக்கலின் முக்கியத்துவம்:-**

முதல் உலகப் போருக்குப்பின் பன்னாட்டரசியல் உறவில் பெரும் நெருக்கடியைத் தோற்றுவித்தது மஞ்சூரிய சிக்கலாகும். வெளிப்படையான இந்த ஆக்கிரமிப்பிற்கு எதிராக பன்னாட்டுக் கழகம் உறுதியான நடவடிக்கை எடுக்காதது அதன் மீதுள்ள நம்பிக்கையைப் போக்கடித்தது. கூட்டுப் பாதுகாப்பு முறையை சோதனை செய்து பார்க்கும் நல்லதொரு வாய்ப்பை கழகம் நழுவவிட்டுவிட்டது. அதே போல் வல்லரசுகளான பிரான்சும், பிரிட்டனும் நழுவல் கொள்கையைத் தான் கடைபிடித்தன. உலக அமைதியை நிலை நாட்டுவதற்கான பொறுப்பினை ஏற்க மறுத்தன. எந்தவொரு நாடும் துணிந்து ஆக்கிரமிப்பில் ஈடுபட்டால் அதனை எதிர்க்க எந்தவொரு சக்தியும் இல்லை என்ற நிலை ஏற்பட்டது. இது ஆக்கிரமிப்பளர்களுக்கு உற்சாகத்தையும் ஊக்கத்தையும் அளித்தது.

**மஞ்சூரிய சிக்கலின் விளைவு:-**

**i) இரண்டாம் சீன ___ ஜப்பானியப் போர்:-**

மஞ்சூரிய ஆக்கிரமிப்பினால் ஊக்கமடைந்த ஜப்பான் மேலும் சீனாவில் ஆக்கிரமிப்பு செய்ய திட்டமிட்டது. அதனால் ஷாங்கை துறைமுகத்திற்கு படையனுப்பியது. ஜெஹோல் என்ற மாநிலத்தையும் கைப்பற்றியது. இதனைத் தடுக்க இயலாத சீன அரசு 1933ல் டாகூ என்ற இடத்தில் போர் நிறுத்த ஒப்பந்தம் செய்து கொண்டது. எனினும் 1937ல் மார்க்கோபோலோ பாலம் அருகே சீனப்படைகளுக்கும் ஜப்பானியருக்குமிடையில் நிகழ்ந்த சிறு மோதலைத் தொடர்ந்து அந்நாட்டின் கரையோர மாநிலங்கள் அனைத்தையும் கைப்பற்றியது. இந்தப் பிரகடனம் செய்யாப் போர் 1941ல் இரண்டாம் உலகப்போரோடு இணைந்தது.

**ii) ஜெர்மனி மற்றும் இத்தாலி நாடுகளின் ஆக்கிரமிப்பு:-**

ஜப்பானின் ஆக்கிரமிப்பால் உற்சாகமடைந்த நாஜி ஜெர்மனியும் பாசிச இத்தாலியும் பன்னாட்டு விதிகளைப் புறக்கணித்து ஆக்கிரமிப்புச் செயல்களில் ஈடுபட்டன. மேற்கு வல்லரசுகள் ஆக்கிரமிப்பை எதிர்த்து கண்டனக் குரல் தான் எழுப்புமேயன்றி போர் நடவடிக்கையில் இறங்காது என அந்நாடுகள் கண்டுகொண்டன. எனவே ஹிட்லர் வெர்செயில்ஸ் உடன்படிக்கை நிபந்தனைகளைப் புறக்கணித்து ரைன்லாந்தை படைமயமாக்கினார். முசோலினி அபிசீனிய ஆக்கிரமிப்பிற்கு தயாரானார்.

**iii) ரோம் - பெர்லின் - டோக்கியோ அச்சு:-**

மஞ்சூரிய ஆக்கிரமிப்பை அமெரிக்கா, ரஷ்யா, பிரிட், பிரான்சு போன்ற நாடுகள் கண்டித்ததால் அந்நாடுகள் மீது வெறுப்புற்ற ஜப்பான் தன்னைப் போல் ஆக்கிரமிப்பில் நாட்டங்கொண்ட ஜெர்மனி, இத்தாலி ஆகிய நாடுகளோடு கம்யூனிச எதிர்ப்பு ஒப்பந்தம் செய்து கொண்டது. இது ”ரோம்-பெர்லின்-டோக்கியோ அச்சு” எனப்பட்டது.

**iv) இரண்டாம் உலகப்போர்:-**

மஞ்சூரியாவில் கிடைத்த வெற்றி காரணமாக ஜப்பான் தனது கிழக்காசிய திட்டத்தை செயல்படுத்த முனைந்தது. அதன் விளைவாக பெர்ல் துறைமுகத்தை தாக்கத் துணிந்தது. ஒரு வேளை மஞ்சூரிய சிக்கலில் வல்லரசுகள் உறுதியான நடவடிக்கை மேற்கொண்டு ஆக்கிரமிப்பை எதிர்த்திருந்தால் ஹிரோஷிமாவும் நாகசாகியும் அணுகுண்டுத் தாக்குதல்களுக்கு உள்ளாகியிராது.

**கெல்லாக் - பிரையாண்ட் ஒப்பந்தம் (1928)**

முதல் உலகப் போருக்குப்பின் உலகில் போரைத் தவிர்த்து அமைதியை நிலைநாட்ட பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. பன்னாட்டுக்கழகம் அத்தகைய நோக்கத்ததுடன் நிறுவப் பட்டாலும், அதன் விதிமுறைகள் காரணமாக அந்நோக்கத்தை நடைமுறையில் செயல்படுத்த இயலவில்லை. எனவே பன்னாட்டுக் கழகத்திற்கு வெளியே போரை ஒழிப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அதற்கு தகுந்ததோர் எடுத்துக்காட்டு லொக்கார்னோ உடன்படிக்கையாகும். இவ்வுடன்படிக்கை ஏற்படுத்திய சுமூகமான சூழ்நிலையில் மேலும் பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அவற்றுள் ஒன்றுதான் கெல்லாக் - பிரையாண்ட் ஒப்பந்தமாகும்.

**1.கொல்லாக் - அமெரிக்க வெளியுறவு அமைச்சர்**

**2. பிரையாண்ட் - பிரெஞ்சு வெளியுறவு அமைச்சர்.**

அவ்வொப்பந்தத்தின் நோக்கம் போரை சட்டத்திற்குப் புறம்போக்குவது (To out Law War) ஆகும்.

**ஒப்பந்தத்தின் தோற்றம் :**

1927ல் பிரெஞ்சு வெளிநாட்டாமைச்சர் பிரையாண்ட் அமெரிக்க வெளியறவு அமைச்சர் கெல்லாக்கிற்கு ஒரு கருத்தினை தெரிவித்தார். ஒரு நாடுகளும் தங்கள் தேசிய கொள்கைகளிலிருந்து போரை அறவே நீக்கிவிடுவதென்றும் தங்களுக்கிடையே எழும் சிக்கல்களை அமைதியான முறையில் தீர்த்துக் கொள்வது என்று ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டும் என்று அக்கருத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது. ஆனால் அவ்விரு நாடுகளுக்கிடையில் சச்சரவு மூளுவதற்கு வாய்ப்பில்லாததால் இப்படியொரு ஒப்பந்தம் தேவையில்லை என்று வாய்ப்பில்லாததால் இப்படியொரு ஒப்பந்தம் தேவையில்லை என்று கெல்லாக் பதிலளித்தார். அதே சமயத்தில் இப்படியொரு ஒப்பந்தத்தை உலகில் அனைத்து நாடுகளும் செய்து கொண்டால் உலகில் அனைத்து நாடுகளும் செய்து கொண்டால் உலகில் இனிெ போரே மூளாது என்றும் யோசனை தெரிவித்தார். எனவே அவ்விருவரும் போரைத் தவிர்க்கும் ஒப்பந்தம் ஒன்று தயாரித்தனர். அது அவர்கள் பெயரால் ”கெல்லாக் - பிரையாண்ட்” ஒப்பந்தம் என வழங்கப்படுகிறது.

**ஒப்பந்தத்தின் முக்கியக் கருத்துக்கள் :**

i) நாடுகளுக்கிடையில் ஏழும் தகராறுகளைத் தீர்ப்பதற்காகப் போரை ஒரு கருவியாக பயன்படுத்தக் கூடாது.

ii) தங்களுக்கிடையே எழும் தகராறுகளை அமைதியான வழியில் தீர்த்துக் கொள்ள வேண்டும்.

iii) தேசிய நலன்களைக் காப்பாற்ற போரை நாடினால் அந்நாடுகளுக்கு இவ்வொப்பந்ததின் பயன் மறுக்கப்படும்.

**ஒப்பந்தத்தின் முக்கியத்துவம்:**

கெல்லாக் - பிரையாண்ட் ஒப்பந்ததத்தில் தொடக்கத்தில் (1928) அமெரிக்கா, பிரிட்டன், பிரான்சு, ஜெர்மனி, இத்தாலி ஆகிய வல்லரசுகள் உள்பட 15 நாடுகள் பாரிசில் கையெழுத்திட்டன. இரு ஆண்டுகளுக்குள் உலகின் சுதந்திர நாடுகள் அனைத்து (62 நாடுகள்) அதில் கையெழுத்திட்டன. எனவே முதன் முதல் உலகில் பெரும்பாலான நாடுகள் கையெழுத்திட்ட ஒப்பந்தம் என்ற வகையில் இது வரலாற்று முக்கியத்துவம் பெறுகிறது.

இரண்டாவதாக, பன்னாட்டுக் கழகத்தில் உறுப்பினராக இல்லாத இரு பெரும் வல்லரசுகளான அமெரிக்காவும், ரஷ்யாவும் இதில் கையெழுத்திட்டதால் அதன் முக்கியத்துவம் மேலும் அதிகரித்தது.

மூன்றாவதாக, உலகநாடுகள் போரை விரும்பவில்லை அமைதியைத் தான் விரும்புகின்றன என்ற உண்மையை அதிகார பூர்வமாக பறைசாற்றியது.

ஒரு நாடு பிற நாடுகளுடன் வைத்துக் கொள்ளுகின்ற உறவுமுறை தொடர்பான கொள்கையை முக்கிய வெளிஉறவுக் கொள்கை எனலாம். பன்னாட்டு அரசியலிலும், உறவுகளிலும் வெளிஉறவுக் கொள்கை முக்கிய அம்சமாகத் திகழ்கிறது. பன்னாட்டு அரங்கத்தின் ஒரு நாட்டின் வெளிஉறவுக் கொள்கையின் அடிப்படையில்தான் அமைகிறது. அமெரிக்காவில் வெளிநாட்டுக்கொள்கை உலக அளவில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது. இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு அமெரிக்கா வலிமை பெருகி ஒரு வல்லரசாக மாற்றியது. அமெரிக்கா பின்பற்றும் வெளிஉறவுக் கொள்கை பன்னாட்டுறவில் மிகப் பெரிய தாக்கத்தை ஏற்படுத்துகிறது.

**பொது உடைமைக் கொள்கையைப் பரவவிடாமல் தடுத்தல்**

இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு அமெரிக்கா வல்லரசு அரசியல் மேற்கொண்டது. பொது உடைமைக் கொள்கையை கட்டுப்படுத்துதல் அல்லது அதனைப் பரவவிடாமல் தடுத்தல் என்பதே அமெரிக்காவின் வெளிஉறவுக் கொள்கையாக அமைந்தது. இதன் காரணமாகவே உலகில் அமெரிக்காவுக்கும் சோவியத் யூனியனுக்கும் இடையே கெடுப்பிடிபோர் ஏற்பட்டு உலகில் பதட்ட நிலை காணப்பட்டது.

அமெரிக்க குடியரசுத் தலைவர் ஹாரி ட்ருமன் காலத்தில் பல முக்கிய முடிவுகள் எடுக்கப்பட்டன. உலகில் பரவி வரும் கம்யூனிசத்தைத் தடுக்க பல முயற்சிகள் எடுக்கப்பட்டன. கிரிசிலும், துருக்கியிலும் கம்யூனிசம் பரவுவதைத் தடுக்கவும், அந்த நாடுகளின் சுதந்திரத்தைப் பாதுகாக்கவும், ட்ருமன் 1947 மார்ச் 12–ல் தனது திட்டத்தை அமெரிக்க காங்கிரசில் சமர்ப்பித்தார். அதுவே ட்ருமன் கொள்கை எனப்படுகிறது. உலகம் முழுவதும் கம்யூனிசம் பரவவிடாமல் தடுக்கும் அமெரிக்காவின் வெளிஉறவுக் கொள்கைக்கு ட்ருமன் கொள்கை செயல் விபரம் கொடுத்தது.

மேலும், கம்யூனிசம் பரவவிடாமல் தடுப்பதற்காக மார்ஷல் திட்டடம 1947 ஜுன் 5–ல் வெளியிடப்பட்டது. இது கம்யூனிசத்தற்கு எதிராக அமெரிக்காவின் முக்கியமான திட்டமாகும். இது தவிர, ட்ருமன் காலத்தில்தான் ஜெர்மானியப் பிரச்சனையின் முக்கிய அம்சமான பெர்லின் சிக்கல் ஏற்பட்டது. பெர்லின் சிக்கலின் விளைவாகவே கெடுப்பிடிப்போர் மேலும் தீவிரமடைந்தது.

**பிராந்திய கூட்டுப் பாதுகாப்பு ஒப்பந்தங்கள்**

கம்யூனிசத்தை ஒழித்துக் கட்டுவதற்காக அமெரிக்கா இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு பல பிராந்திய கூட்டுப் பாதுகாப்பு ஒப்பந்தங்களைச் செய்துகொண்டது. **1947** – ஆகஸ்ட் **15–**ல் அமெரிக்க நாடுகள் அனைத்தும் பங்கு கொண்ட மாநாடு ஒன்று கூட்டப்பட்டது. அதன் இறுதியில் லியோ உடன்படிக்கை ஆக்கிரமிப்பு போர்களைத் தடுப்பதற்கும், ஆக்கிரமிப்பு செய்யும் நாடுகள் மீது நடவடிக்கை எடுக்கவும் வழி செய்தது. இது அமெரிக்காவின் புதிய வெளிநாட்டுக் கொள்கையை வெளிப்படுத்தியது.

மேற்கு ஐரோப்பாவில் கம்யூனிசம் பரவ விடாமல் தடுப்பதற்காக அட்லாண்டிக் கடல் பகுதியில் உள்ள நாடுகளுடன் அமெரிக்கா **1949** – ஏப்ரல் **4–**ஆம் தேதி வட அட்லாண்டிக் ஒப்பந்தம் ஒன்றை ஏற்படுத்திக் கொண்டது. இந்த நேட்டோ நாடுகளின் கூட்டுப்படை ஒன்றும் உருவாக்கப்பட்டது. இது தவிர ஆன்சுங் ஒப்பந்தம், சீட்டோ, பாக்தாத் உடன்படிக்கை என்று பல உடன்படிக்கைகளை கம்யூனிசம் பரவவிடாமல் தடுத்து நிறுத்துவதற்காக அமெரிக்கா செய்துகொண்டது.

**கம்யூனிசத்தைத் தடுப்பதற்காக செய்த போர்கள்**

கெடுப்பிடிப்போர் காலத்தில் அமெரிக்கா கொரியாவில் நேரடியாகவே தலையிட்டது. **1950–**ல் ஏற்பட்ட கொரியப் போரில் அமெரிக்கா தன் கொரியாவை ஆதரித்தது. அமெரிக்காவின் முயற்சியால் கொரியாவுக்கு ஐ.நா. படைகள் அனுப்பப்பட்டன. வட கொரியப் படைகள் தோற்கடிக்கப்பட்டு விரட்டப்பட்டன. கொரியப் போர் நின்றாலும் கொரியா இரண்டாகப் பிரிந்தே உள்ளது.

ரஷ்யாவின் ஆதரவுடன் வடவியட்நாமிய அரசு, தெற்கு வியட்நாமில் கம்யூனிசத்தைப் பரப்ப முயற்சி எடுத்தது. இதனைத் தடுப்பதற்காக அமெரிக்கா வடவியட்நாம் மீது படையெடுத்தது. **1964–'65**ல் வியட்நாம் போர் நடைபெற்றது. இப்போரில் **1** இலட்சம் அமெரிக்க வீரர்கள் கொல்லப்பட்டனர். வடவியட்நாம் அமெரிக்காவைத் தோற்கடிக்க முடியவில்லை. **1968–**ல் போர் முடிவடைந்தது.

**1960 முதல் 1980 வரை அமெரிக்காவின் வெளிஉறவுக் கொள்கை**

**1960–**ல் பதவிக்கு வந்த ஜான் கென்னடி வெளிஉறவுக் கொள்கையில் ஒரு முன்னோக்கு கொள்கையைப் பின்பற்றினார். பிரச்சினைகைளச் சமாதானமாகவே தீர்த்துக் கொள்ள வேண்டும் என்று அவர் கூறியபோதிலும், கம்யூனிச ஆதிக்கங்களுக்கெதிராக கடினமான போக்கையே பின்பற்றினார். இவரது ஆட்சிக்

காலத்தில் கியூபாவில் இருந்த பிடல் கேஸ்ட்ரோவின் அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்கானத் திட்டங்களை மேற்கொண்டார். **1962–**ல் ரஷ்யா உதவியுடன் கியூபா ஏவுகணைத் தளங்களை அமைக்க முயற்சித்தது. இதனை அமெரிக்கா எதிர்க்கவே, நெருக்கடி ஏற்பட்டது. ஒரு அணுஆயுதப் போர் ஏற்படும் சூழல் உருவானது. ஆனால், கென்னடி அப்பிரச்சினையைத் திறமையாகக் கையாண்டு சோவியத் யூனியனுடன் ஏற்பவிருந்த நேரடி மோதலைத் தவிர்த்தார்.

கென்னடி ஆட்சிக் காலத்தில் இலத்தீன் அமெரிக்கா நாடுகளுடன் 'முன்னேற்றத்தற்கான உடன்பாடு' திட்டம் ஒன்று ஏற்படுத்தப்பட்டது. இதன்படி இலத்தீன் அமெரிக்க நாடுகளுக்கு பொருளாதார உதவி செய்ய முடிவு செய்யப்பட்டது. **1962–** ஜுலை மாதம் கூடிய இரண்டாவது ஜெனிவா மாநாட்டில் அமெரிக்காவும் **13** நாடுகளும் சேர்ந்து லாவோசின் சுதந்திரத்தையும், நடுநிலையையும் அங்கீகரித்தன. **1963 –** ஜுலை மாதம் அமெரிக்காவும் சோவியத் யூனியனும் சேர்ந்து அணு ஆயுத சோதனைத் தடை ஒப்பந்தம் ஒன்றை ஏற்படுத்திக் கொண்டன. கென்னடி, மக்களாட்சி நாடுகளுடன் நல்லுறவை வளர்க்க முற்பட்டார். இவர் காலத்தில் இந்தியாவுடன் நல்லுறவு ஏற்படுத்தப்பட்டது. இந்தியா போன்ற வளர்ச்சியடையாத நாடுகளுக்கு P.L. **480** என்ற திட்டத்தின் கீழ் ஏராளமான னபாருளாதார உதவி கொடுக்கப்பட்டது.

**1963–**ல் பதவிக்கு வந்த லிண்டன் ஜான்சன் காலத்தில் பிற நாடுகளின் விவகாரங்களில் தலையிடுவதன் மூலம், அமெரிக்கா தனது செல்வாக்கைத் தொடர்ந்து பாதுகாக்கவேண்டும் என்ற கொள்கையை அமெரிக்கா பின்பற்றியது. இலத்தீன் அமெரிக்காவில் உள்ள லடாமிலிக்கன் குடியரசு நாட்டில் நேரடியாக அமெரிக்கா தலையிட்டு தனது ஆதிக்கத்தை நிலைநாட்டியது. மத்திய அமெரிக்க குடியரசான குவாட்டி மாலாவில் **1964–**ல் அமெரிக்க உணவு நிறுவனம் அமெரிக்காவுக்கு ஆதரவான ஒரு பிற்போக்கு இராணுவ ஆட்சியை நிறுவியது. இவர் காலத்தில்தான் அமெரிக்கா வியட்நாம் போரில் **1965–**ல் ஈடுபட்டது.

பின்னர் பதவிக்கு வந்த ரிச்சர்ட் நிக்சன் 'நிக்சன் கோட்பாடு' என்ற தனது வெளிஉறவுக் கொள்கையை **1969** ஜுலை மாதம் வெளியிட்டார். அதன்படி தனது நட்பு நாடுகளின் பாதுகாப்பிற்காக அமெரிக்க உதவும் என்றும், அதே சமயம் உலகின் சுதந்திர நாடுகளின் பாதுகாப்புக்காக அனைத்து நடவடிக்கைகளையும், திட்டங்களையும் அமெரிக்கா மட்டுமே மேற்கொள்ளமுடியாது என்று நிக்சன் கோட்பாடு குறிப்பிட்டது.

இவரது காலத்தில்தான் வியட்நாம் போரை முடித்து அமைதியை நிலைநாட்டும் ஒப்பந்தம் **1973 –** ஜனவரி **27–**ல் கையெழுத்தாகியது.

நிக்சன் காலத்தில் அமெரிக்காவுக்கும் சீனாவுக்குமிடையே நெடுங்காலமாக இருந்து வந்த பகைமை உணர்வு மறைந்து நட்பு உணர்வு மலர்ந்தது. **1971** – ஏப்ரல் மாதம் அமெரிக்க மேஜை பந்தாட்டக் குழு ஒன்று சீனா வந்தது. அதனை வரவேற்ற சீனா தலைவர் ஒ.என்லாய் அமெரிக்க சீன நட்புறவு ஏற்படும் என்று நம்பிக்கை தெரிவித்தார். அப்போது அமெரிக்க வெளிஉறவுச் செயலராக இருந்த ஹென்றி கிஸ்ஸிங்கன் அமெரிக்க சீன நட்புறவு ஏற்பட காரணமானார். **1971–**ல் சீனாவை ஐ.நா. சபையில் சேர்த்துக் கொண்டு தைவான் வெளியேற்றும் தீர்மானத்தை அமெரிக்கா ஆதரித்தது. **1972** பிப்ரவரியில் ‘அமைதிக்கான சீனப் பயணத்தை’ மேற்கொண்டார் நிக்சன். இந்தப் புதிய சீனக் கொள்கையின் விளைவாக அமெரிக்காவும் சீனாவும் பன்னாட்டுப் பிரச்சினைகளை போர் வலிமை மூலம் தீர்ப்பதில்லை என்று ஒப்புக்கொண்டன.

**1972–**ல் மே மாதம் நிக்சன் சோவித் யூனியனுக்கு விஜயம் செய்தார். அப்போது சால்ட் – I ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டது. இந்த உடன்படிக்கையின்படி கண்டம் விட்டு கண்டம் தாண்டும் ஏவுகணை கட்டுப்படுத்தப்பட்டது.

ஜெரால்ட் போர்ட் ஆட்சிக் காலத்தில் **1975–**ல் அமெரிக்கா சோவியத் யூனியன் உட்பட **15** நாடுகள் ஹெல்சிங்கியில் நடைபெற்ற பாதுகாப்பு மற்றும் ஒத்துழைப்பு மாநாட்டில் கலந்து கொண்டன. இதில் மேற்கத்திய நாடுகளுக்குமிடையிலான பதட்ட நிலையைக் குறைக்க முடிவு செய்யப்பட்டது.

அமெரிக்க வெளிஉறவுக் கொள்கையின் மிகப் பெரிய சாதனையாக கருதப்படுவது **1978–**ல் இஸ்ரேலுக்கும் எகிப்துக்கும் இடையே செய்துகொள்ளப்பட்ட கேம்ப் டேவிட் ஒப்பந்தமாகும். **1977–**ல் பதவிக்கு வந்த ஜிம்மி காாட்டர் மத்தியக் கிழக்கில் சமாதானத்தை ஏற்படுத்த முயற்சிகளை மேற்கொண்டார். அமெரிக்காவில் உள்ள கேம்ப் டேவிட் என்ற இடத்தில் நடைபெற்ற **13** நாள் பேச்சுவார்த்தைக்குப் பிறகு எகிப்துக்கும் இஸ்ரேலுக்கும் இடையே ஒப்பந்தம் கையெழுத்தானது. **31** வருடங்களாக எகிப்துக்கும் இஸ்ரேலுக்கும் இருந்து வந்த போர் நிலை இதன் மூலம் முடிவுக்கு வந்தது.

**1980 முதல் இன்று வரை வெளிஉறவுக் கொள்கை**

**1981–**ல் பதவிக்கு வந்த ரொனால்ட் ரீகனின் வெளிஉறவுக் கொள்கை பழமைவாதம் சார்ந்ததாகக் கருதப்படுகிறது. ரீகன் ஆட்சிக் காலத்தில் பன்னாட்டு

பயங்கரவாதம் உச்சக்கட்டத்தை அடைந்தது. **1983** – ஏப்ரலில் பெய்ரூட்டிலிருந்த அமெரிக்க தூதரகம் குண்டு வைத்து தகர்க்கப்பட்டது. அக்டோபர் மாதம் பெய்ரூட்டிலிருந்த அமெரிக்க கப்பற்படை தலைமையகம் தகர்க்கப்பட்டது. **1988–**ல் அமெரிக்க விமானம் தகர்க்கப்பட்டு **259** பேர் கொல்லப்பட்டனர். இந்த பயங்கரவாத நடவடிக்கைகளுக்கெல்லாம் மூல காரணம் லிபியாதான் என்று ரீகன் குற்றம் சாட்டி லிபியா தலைநகர் திரிபோலியில் தாக்குதல் நடத்தப்பட்டது. அதன் பிறகே லிபியா தனது பயங்கரவாத நடவடிக்கைகளை நிறுத்திக்கொண்டது.

அமெரிக்க வெளிஉறவில் **1989–**ல் பதவியேற்ற ஜார்ஜ் புஷ் சிறப்பு மிக்க பல சாதனைகளைப் படைத்தார். இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு அமெரிக்காவின் வெளிஉறவுக் கொள்கையின் முக்கிய அம்சமாக விளங்கியது, 'கம்யூனிசம் உலக நாடுகளில் பரவவிடாமல் தடுபூபதேயாகும்'. ட்ரூமன் முதல் ரீகன் வரையிலான குடியரசுத் தலைவர்கள் சோவியத் யூனியனின் இந்தப் பேராபத்தைத் தடுப்பதிலேயே தங்கள் முழு நேரத்தையும் செலவிட்டனர். அதனுடைய பலன், புஷ் காலத்தில்தான் கிடைத்தது.

**1990** – ஆகஸ்ட் **2–**ஆம் தேதி ஈராக்கியப் படைகள் குவைத்தை ஆக்கிரமித்தபோது புஷ் கடுமையாக எதிர்த்தார். குவைத்தை மீட்பதற்கான சமாதான முயற்சிகள் தோல்வியடைந்ததால் அமெரிக்காவின் தலைமையிலான பன்னாட்டுப் படைகள் ஈராக் மீது போர் தொடுத்தன. இப்போரின் இறுதியில் குவைத் விடுவிக்கப்பட்டது. இதனால் அமெரிக்காவின் வலிமையும் உறுதித்தன்மையும் பன்னாட்டரங்கில் உயர்ந்தது.

**1993–**ல் பதவியேற்ற பில் கிளிண்டன் காலத்தில் இந்தியாவுக்கும் அமெரிக்காவுக்குமிடையே நட்புறவு மலர்ந்தது. **1999–**ல் இந்தியாவில் உள்ள கார்கில் பகுதியை பாகிஸ்தான் ஆக்கிரமித்த போது, அதனை கடுமையாகக் கண்டித்தார் கிளிண்டன். கார்கில் போருக்குப் பிறகு அமெரிக்காவுக்கும் இந்தியாவுக்கும் இடையே நெருக்கமான உறவு ஏற்பட்டது. **2000–**ல் கிளிண்டன் இந்தியாவுக்கு நட்பு முறையிலான பயணத்தை மேற்கொண்டு வந்தார். இந்தப் பயணம் இந்திய அமெரிக்க நடபுறவை மேலும் வலுப்படுத்தியதும், கிளிண்டன் காலத்தில் நடைபெற்ற முக்கியமான நிகழ்ச்சி **1993** – செப்டம்பரில் இஸ்ரேலுக்கும் பாலஸ்தீனியர்களுக்கும் இடையே செய்துகொள்ளப்பட முக்கியக் காரணமாக விளங்கியவன் கிளிண்டன் ஆவார்.

**2001–**ல் பதவியேற்ற ஜார்ஜ் வில்லியம் புஷ் காலத்தில் அமெரிக்க வெளிஉறவுக்கொள்கை கடுமையான சோதனைகளை எதிர்நோக்கி இவர் பதவி ஏற்ற வருடத்திலேயே உலகத்தையே உலுக்கிய பயங்கரமான நிகழ்ச்சி நடபெற்றது. **2001** செப்டம்பர் **11–**ஆம் நாள், இஸ்லாமிய பயங்கரவாதிகளால் நியூயார்க் நகல் இருந்த **110** மாடிகளைக் கொண்ட உலக வர்த்தக மையக் கட்டிடம் தலைமட்டம் ஆக்கப்பட்டது. ஆறாயிரம் பேர் இறந்தனர். இதற்குக் காரணமான அலகைதா பயங்கரவாதிகளின் புகலிடமாக விளங்கிய ஆப்கானிஸ்தான் மீது அமெரிக்கா தாக்குதல் நடத்தியது. பயங்கரவாதத்தற்கெதிரான அமெரிக்காவின் உலகளாவிய போர் ஆரம்பமானது.

**2003** – மார்க் **20–**ஆம் நாள் அமெரிக்காவையும் அதன் நட்பு நாடுகளையும் அச்சுறுத்துவதாகவும், மனித குலத்தை அழிக்கக்கூடிய இரசாயன ஆயுதங்களை உற்பத்தி செய்து வைத்திருப்பதாகவும் கூறி, ஈராக் மீது அமெரிக்கா படையெடுத்தது. ஈராக் அதிபர் சதாம் உசேன் ஆட்சியிலிருந்து விரட்டப்பட்டார். தலைமறைவான சதாம், பின்னர் கண்டுபிடிக்கப்பட்டு தூக்கிலிடப்பட்டார்.

ஜார்ஜ் புஷ் ஆட்சிக் காலத்தில் நடைபெற்ற முக்கியமான நிகழ்ச்சி **2008** – அக்டோபர்

**11–**ல் இந்தியாவும் அமெரிக்காவும் செய்து கொண்ட ‘இந்திய அமெரிக்க சிபிலியன் அணு ஒப்பந்தம்’ ஆகும். இந்த ஒப்பந்தத்தின்படி இரு நாடுகளும் அமைதி முயற்சிகளுக்காக சர்வதேசச் சட்டங்களுக்கு உட்பட்டு அணு சக்தியைப் பயன்படுத்தும்.

தற்போது அமெரிக்க குடியரசுத் தலைவராக உள்ள பராக் ஒபாமா, உலக நாடுகளுக்கிடையே தூதரக ரீதியான உறவு, அரசு முறையிலான உறவு ஆகியவற்றை வளர்க்கவும், உலக மக்களிடையே நல்லுறவை பேணிப் பாதுகாக்கவும் முயற்சிகள் எடுத்து வருகிறார். இஸ்லாமிய நாடுகளுடன் உள்ள இடைவெளியைக் குறைத்து நல்லுறவுக்கான முயற்சிகளை எடுத்து வருகிறார். அணு ஆயுதம் இல்லாத உலகத்தை உருவாக்க வேண்டும் என்ற இவரது தொலைநோக்கு உலகத்தை உருவாக்க வேண்டும் என்ற இவரது தொலைநோக்கு கண்ணோட்டம், அணுஆயுதப் பரவல் தடை மற்றும் ஆயுதக் கட்டுப்பாட்டு பேச்சவார்த்தைகளுக்கு உத்வேகம் அளித்துள்ளது.

## ரஷ்யாவின் வெளிநாட்டுக் கொள்கை (Foreign Policy of Russia)

இரண்டாம் உலகப் போரில் நாஜி ஜெர்மனியைத் தோற்கடிப்பதில் பெரும்பங்கு வகித்த சோவியத் யூனியன் போருக்குப் பிறகு வலிமைமிகு வல்லரசாகத் திகழ்ந்தது. ரஷ்யாவின் சர்வாதிகாரியாக இருந்த ஸ்டாலின் ரஷ்ய நலன்களையும், கம்யூனிஸ்ட் நலன்களையும் அடிப்படையாகக் கொண்ட வெளிநாட்டுக் கொள்கையை வகுத்தார். அதில் தனது தனிநபர் செல்வாக்கு முத்திரையையும் மதிப்பளிக்கத் தவறவில்லை. அதுவே ஸ்டாலினிசம் என்று அழைக்கப்பட்டது. **1959–**ஆம் ஆண்டு வரை இரும்புத்திறை நாடாக இருந்த சோவியத் யூனியனில் கம்யூனிசம் வீழ்ச்சியடைந்தது. அதற்குப் பிறகு சோவியத் யூனியனில் இருந்த குடியரசுகள் சுதந்திர நாடுகளாயின. ரஷ்யா தனி நாடாக உதயமானது.

**ஸ்டாலினிசம்**

இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு ரஷ்யா உலகம் முழுவதுமூ கம்யூனிசத்தைப் பரப்ப முயற்சி எடுத்தது. இதற்காக ஸ்டாலின் உருவாக்கிய கொள்கைதான் ஸ்டாலினிசம் எனப்படுகிறது.

**இதன் நோக்கங்கள் பின்வருமாறு :**

a) ரஷ்ய எல்லையிலுள்ள நாடுகளை குறிப்பாக கிழகூகு ஐரோப்பிய நாடுகளை தம் செல்வாக்கு மண்டலத்திற்குள் கொண்டு வருதல். அந்த நாடுகளில் மேற்கத்திய முதலாளித்துவ ஜனநாயக நச்சுக் கருத்துகூகள் பரவவிடாதபடி இரும்புத் திரையிட்டு மறைத்தல்.

b) முடிந்தால் தன் செல்வாக்கு மண்டல எல்லையை நைல் நதி வரை விஸ்தரித்தல். அதன்மூலம் வலுவற்ற ஜெர்மனியை உருவாக்கி அதனையும் கம்யூனிசமயமாக்குதல்.

c) மேற்கு ஐரோப்பிய நாடுகளில் மட்டுமல்லாமல் உலகின் பிற பகுதிகளில் உள்ள நாடுகளிலும் கம்யூனிஸ்ட் கட்சியினரின் நடவடிக்கைகளை ஊக்குவித்து குழப்பம், புரட்சிகள் மூலம் அவற்றையும் கம்யூனிசமயமாக்குதல். இக்கொள்கையை ரஷ்யா கடைப்பிடித்ததன் காரணமாக, அமெரிக்காவுடன் மோத வேண்டிய நிலை ஏற்பட்டது.

**ரஷ்யாவும் கெடுபிடிப்போரும்**

இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு அமெரிக்காவும் சோவியத் ரஷ்யாவும் வலிமை மிக்க வல்லரசுகளாக விளங்கின. ரஷ்யா, உலகம் முழுவதும் கம்யூனிசத்தைப் பரப்ப முயற்சி எடுத்தது. ஆனால், கம்யூனிசம் பரவுவதைத் தடுக்க அமெரிக்கா முயற்சி எடுத்தது. இதனால் ரஷ்யா அமெரிக்காவுடனும், அமெரிக்காவின் நட்பு நாடுகளுடனும் விரோதப் போக்கைக் கடைபிடித்தது. மேலும், யார் பெரியவன் என்றும், உலகளாவிய ஆதிக்கத்தை யார் பெறுவது என்றும் ரஷ்யாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையே ஆதிக்க வெறி ஏற்பட்டது. இதனால் உலகில் **1947** முதல் **1965** வரை பதட்ட நிலை ஏற்பட்டது. இதுவே கெடுபிடிப்போர் ஆகும்.

கெடுபிடிப்போர் காலத்தில் ரஷ்யா அமெரிக்கா மற்றும் அதன் நட்பு நாடுகளுடன் மோதல் போக்கைப் பின்பற்றியது. இரண்டாம் உலகப் போரில் தோற்கடிக்கப்பட்ட ஜெர்மனி நான்கு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு கிழக்குப் பகுதியில் ரஷ்யா தனது ஆதிக்கத்தை ஏற்படுத்தியது. அதுவே கிழக்கு ஜெர்மனி ஆகும். பின்னர் மேற்கத்திய நாடுகளுக்கு ஒதுக்கப்பட்ட மேற்கு பெர்லின் பகுதி தனது பகுதியான கிழக்கு ஜெர்மனியில் இருப்பதாகக் கூறி மேற்கு ஜெர்மனிக்கும் மேற்கு பெர்லினுக்குமிடையிலான நில நீர் மார்க்கங்களை ரஷ்யா அடைத்துவிட்டது. ஆனால், அமெரிக்கா ரஷ்யாவின் இந்த பயனற்ற முற்றுகையை முறியடித்துவிட்டது.

சோவியத் யூனியனுக்கு எதிராக அமெரிக்கா பல இராணுவ நடவடிக்கைகளை செய்துகொண்டதால் ரஷ்யாவுக்கும் கிழக்கு ஐரோப்பிய கம்யூனிச நாடுகளுக்கும் ஆபத்து ஏற்பட்டுள்ளதாக கருதியது. எனவே, தனது நட்பு நாடுகளுடன் **1955** மே மாதம் வார்சா ஒப்பந்தம் ஒன்றை செய்து கொண்டது. ரஷ்யா கெடுபிடிப்போர் காலத்தில் கொரியாவிலும், வியட்நாமிலும் நேரடியாகத் தலையிட்டது ரஷ்யா. இரண்டாவது உலகப்போருக்குப் பிறகு இரண்டாகப் பிரிக்கப்பட்ட கொரியாவின் வடபகுதியில் ரஷ்யா ஆதிக்கம் கொண்டது. அதே போல வடவியட்நாமில் ஹோசிமின் தலைமையில் ஒரு கம்யூனிச அரசு அமைக்கப்பட்டது. தென் கொரியாவிலும், தென் வியட்நாமிலும் கம்யூனிசம் பரவ ரஷ்யா முயற்சித்த போது, அதனை அமெரிக்கா எதிர்த்தது. இதனால் ஏற்பட்டதுதான் கொரியாப் போரும், வியட்நாம் போரும் ஆகும். இறுதியாக **1962–**ல் ஏற்பட்ட கியூபா ஏவுகணை நெருக்கடியால் கெடுபிடிப்போர் உச்சக்கட்டத்தை அடைந்தது. ஆனால், அந்த நெருக்கடியின் விளைவாக ஏற்பட இருந்த போா தடுத்து

நிறுத்தப்பட்டது. **1991–**ல் ஏற்பட்ட சோவியத் யூனியனின் சிதரலுக்குப் பிறகு கெடுபிடிப்போர் மறைந்தது.

**கோமின்பார்ம்**

இரண்டாம் உலகப் போரின்போது ஐரோப்பிய நாடுகளில் பெரும் பொருளாதாரப் பாதிப்புகள் ஏற்பட்டன. எனவே அந்த நாடுகளின் பொருளாதார மேம்பாட்டை ஏற்படுத்த அமெரிக்க மார்ஷல் திட்டத்தை அறிவித்தது. இந்தத் திட்டத்தின் பல நோக்கங்களில் கம்யூனிசத்தின் வளர்ச்சியை தடுத்து நிறுத்துதல் ஆகும். ரஷ்யா இந்தத் திட்டத்தை நிராகரித்தது. அத்துடன் தனது ஆதிக்கத்தில் உள்ள கிழக்கு ஐரோப்பிய நாடுகளை அந்தத் திட்டத்தில் சேர அனுமதிக்கவில்லை. மார்ஷல் திட்டத்திற்கு எதிராகத் தன்பக்கம் உள்ள நாடுகளை இணைத்து ‘கோமின் பார்ம்’ என்ற அமைப்பை உருவாக்கி மார்ஷல் திட்டத்தை முறியடிக்க முற்பட்டது.

**ரஷ்யாவும் சீனாவும்**

சீனாவில் கம்யூனிச ஆட்சி ஏற்பட ரஷ்யா பெரிதும் உதவி செய்தது. **1940** அக்டோபர் **1–**ல் பீகிங் நகரில் கம்யூனிச ஆட்சி அமைந்த போது ரஷ்யா உடனடியாக அதனை அங்கீகரித்தது. சீனாவில் கம்யூனிசம் பெற்ற இந்த வெற்றி, பிற ஆசிய நாடுகளிலும் எதிரொலித்தது. **1950–**ல் ரஷ்யா சீனாவுடன் ‘முப்பதாண்டு நட்பு மற்றும் பரஸ்பர உதவி உடன்பாடு’ ஒன்றை செய்துகொண்டது. ஆனால், இந்த உறவு அந்தக் காலம் நீடிக்கவில்லை. எல்லைத் தகராறு கோட்பாடு வேறுபாடுகள் ஆகியவற்றின் காரணமாக குழுக்களுக்கிடையே பகைகை ஏற்பட்டது. இது கம்யூனிச உலகையே இரு பிரிவாக பிரித்துவிட்டது. ரஷ்யாவின் அரசியல் ராஜதந்திரத்திற்கு இது ஒரு சோதனையாக அமைந்துவிட்டது.

**ரஷ்யாவும் மேற்கு ஆசிய சிக்கலும்**

மேற்கு ஆசியாவில் இஸ்ரேலுக்கும் அரபு நாடுகளுக்கும் இடையே நடைபெற்று வரும் சச்சரவுகளில் ரஷ்யா தொடர்ந்து இன்று வரை அரபு நாடுகளையே ஆதரித்து வந்துள்ளது. அரபு மக்களின் உரிமைகளைக் காக்க உருவாக்கப்பட்ட பாலஸ்தீன விடுதலை இயக்கத்தற்கு முழு ஆதரவு கொடுத்து வருகிறது.

**ரஷ்யாவும் ஆப்கானிஸ்தானமும்**

ஆப்கானிஸ்தானத்தின் தெற்கு எல்லையில் அமைந்துள்ள ஒரு நாடு ஆப்கானிஸ்தானம் ஆகும். அந்த நாட்டில் தனது ஆதிக்கத்தை ஏற்படுத்த 19–ஆம் நூற்றாண்டிலிருந்தே பலமுறை முயற்சி செய்தது. ஆனால், அந்தத் திட்டம் 1979–ல் தான் நிறைவேறியது. அப்போது ஆப்கானிஸ்தானில் ஆட்சி அமைத்து கம்யூனிசக் கட்சி ஆதரவாளரான பாப்ராக் நார்மலுக்கு ஆதரவாக தனது நாட்டின் 85000 படை வீரர்களை அனுப்பியது ரஷ்யா. இதனை மேற்கத்திய நாடுகள் கடுமையாக எதிர்த்தன. ஐ.நா. சபையில் ரஷ்யாவுக்கு எதிராகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. மாஸ்கோவில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டியை 63 நாடுகள் புறக்கணித்தன. ஆப்கானிஸ்தானில் தோல்வி அடைந்த ரஷ்யா 1989–ல் வெளியேறியது.

**ரஷ்ய அதிபர் கோாபசேவின் வெளிஉறவுக் கொள்கை**

1985 – மார்ச் மாதம் சோவியத் யூனியன் அதிபராகப் பதவி ஏற்ற கோர்பசேவ் காலத்தில் ரஷ்ய வெளிஉறவுக் கொள்கையில் பெரிய மாற்றம் ஏற்பட்டது. இவர் பதவி ஏற்றவுடன் ‘கிளாஸ்நாஸ்ட்’ என்ற தனது வெளிஉறவுக் கொள்கையை அறிவித்தார். கிளாஸ்நாஸ்ட் என்றால் வெளிநாட்டுறவில் வெளிப்படையான கொள்கையைக் கடைப்பிடிப்பது ஆகும். கோர்பசேவ் தனது வெளிநாட்டுகூ கொள்கையை அறிவிப்பதில் உண்மையாகவும் செயல்படுத்துவதில் நேர்மையாகவும் நடந்துகொண்டார். இவர் படைக்குறைப்பு முயற்சிகளை மேற்கொண்டார். இதன் மூலம் அமெரிக்காவுக்கும் ரஷ்யாவுக்கும் இடையே பலஅணுஆயுதக் குறைப்பு ஒப்பந்தங்கள் செய்து கொள்ளப்பட்டன.

**சோவியத் யூனியனின் கலைப்பு**

கோர்பசேவின் தாராள சீர்திருத்தங்களும் ஜனநாயக நடவடிக்கைகளும் சோவியத் யூனியனின் 15 குடியரசுகளிலும் எதிரொலித்தன. இதனால் இந்த குடியரசுகள் சுதந்திரமடைய ஆவல் கொண்டன. 1991 – மார்ச்சில் லாட்வியா, எஸ்தோனியா, விதுவேணியா ஆகிய குடியரசுகள் சுதந்திரமடைந்தன. பின்னர் மீது உள்ள குடியரசுகளும் சுதந்திரம் பெற்று 1991 – டிசம்பர் 17–ல் சோவியத் யூனியனை கலைத்துவிடுவது என்று முடிவு செய்தன. ரஷ்யாவில் கம்யூனிசம் ஒழிந்தது. பல கட்சிமுறை அரசியல் அறிமுகப்படுத்தப்பட்டது. தற்போது ரஷ்யா மேற்கத்திய நாடுகளுடன் சுமூகமான வெளிஉறவுக் கொள்கையையே பின்பற்றி வருகிறது.

## இங்கிலாந்தின் வெளிநாட்டுக் கொள்கை (Foreign Policy of England)

இங்கிலாந்து 1945–ஆம் ஆண்டு வரை உலக அரசியலில் முக்கிய பங்கு வகித்தது. கடல்களின் அரசி என்ற சிறப்பினைப் பெறும் வகையில் வலிமையான கடற்படையைப் பெற்றிருந்தது. முதல் உலகப் போரில் அமெரிக்காவின் உதவியுடன் வெற்றி பெற்றது. இரண்டாவது உலகப் போரிலும் அமெரிக்க உதவி காரணமாகவே வெற்றிபெற்றது. ஆனால், இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு உலகின் மாபெரும் வல்லரசு என்றத் தகுதியை இங்கிலாந்து இழந்துவிட்டது. அதன்பிறகு உலக அரசியலில் அமெரிக்க ஆதரவுக் கொள்கையையே பின்பற்றி வருகிறது.

**இங்கிலாந்தின் அமெரிக்க ஆதரவு வெளிஉறவுக் கொள்கை**

இரண்டாவது உலகப் போர் நடந்த காலத்தில் இங்கிலாந்து மிகப் பெரிய பேரரசாக விளங்கியது. ஆசியாவிலும் ஐரோப்பாவிலும் அதற்குப் பல குடியேற்ற நாடுகள் இருந்தன. ஆனால், இரண்டாவது உலகப் போருக்குப் பிறகு அவை ஒவ்வொன்றாக சுதந்திரம் அடைந்தன. பிரிட்டிஷ் பேபரரசு களைந்துவிட்டது. இரண்டாவது உலகப் போர் இங்கிலாந்தின் பொருளாதாரத்தை பெரிதும் பாதித்து விட்டது. பன்னாட்டு அரசியலிலும் அதன் வலிமை போய்விட்டது.

இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு உலக அரசியலில் தரமாகவும், ரஷ்யாவும் வல்லரசு நாடுகளாக எழுச்சியடைந்தன. உலக அரங்கில் அவற்றுக்குக் கிடைக்கும் முக்கியத்துவம் மற்ற நாடுகளுக்கு கிடைக்காது என்ற நிலை ஏற்பட்டுவிட்டது. மேலும், அமெரிக்கக் கொள்கையை அப்படியே ஆதரித்தாக வேண்டும் என்ற கருத்து பிரிட்டனில் வலுப்பெற்றது. நாசிப்படைகளின் அதிரடித் தாக்குதல்களில் சிக்கித் தவித்த இங்கிலாந்துக்கு தக்க சமயத்தில் உதவிக்கரம் நீட்டிய நாடு அமெரிக்கா. மேலும் பல விஷயங்களில் இரண்டு நாடுகளும் ஒரே மாதிரியாக கருத்துக்களைக் கொண்டுள்ளன. எனவே, உலக அரங்கில் அமெரிக்க வெளிஉறவுக் கொள்கையும் அடிச்சுவட்டிலேயே இங்கிலாந்தின் வெளிஉறவுக் கொள்கையும் அமைந்துள்ளது.

**இங்கிலாந்தும் சூயஸ் கால்வாய் பிரச்சனையும் : 1956**

1956 ஜூலை 26–ல் எகிப்திய அதிபர் நாசர், சூயஸ் கால்வாய் கம்பனியை தேசியமயமாக்குவதாக அறிவித்தார். இதனால் இங்கிலாந்தும் பிரான்சும் அதிர்ச்சியடைந்தன. எகிப்துக்கும் சூயஸ் கால்வாய் கம்பெனிக்கும் இடையே ஏற்பட்ட ஒப்பந்தத்தை எகிப்து மீறிவிட்டதாக ஐ.நா. பாதுகாப்புச் சபையில் இங்கிலாந்தும்

பிரான்சும் புகார் செய்தன. இந்த விஷயத்தில் இங்கிலாந்தை அமெரிக்கா ஆதரிக்கவில்லை. ஆனாலும், இங்கிலாந்தும் பிரான்சும் எகிப்து மீது கூட்டுப் படையெடுப்புச் செய்தன. எனவே, **1957** – நவம்பர் **1–**ல் ஐ.நா. பொதுச்சபை கூடி, எகிப்திலிருந்த அந்நியப் படைகள் உடனடியாக வெளியேற வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றியது. இதனை இங்கிலாந்து ஏற்றக்கொண்டு எகிப்திலிருந்து வெளியேறியது.

**இங்கிலாந்தும் உலக நாடுகளும்**

a) முதல் உலகப் போருக்குப் பின்னர் பாலஸ்தீனம் இங்கிலாந்தின் கீழ் ஒரு மாஸ்டேட்டாக வைக்கப்பட்டது. அப்பகுதியில் யூதர்கள் தங்கள் தாயகத்தை ஏற்படுத்த முயற்சி செய்தார்கள். இதனை அராபியர்கள் எதிர்த்தார்கள். இரு பிரிவினரும் அடிக்கடி கலகத்தில் ஈடுபட்டனர். பாலஸ்தீனத்தைத் தொடர்ந்து நிர்வாகம் செய்ய இயலாது என்று ஐ.நா. சபையிடம் இங்கிலாந்து **1947**, ஏப்ரல் **2–**ல் முறையிட்டது. எனவே யூதர்களுக்கும், அராபியர்களுக்கும் தனித்தனி நாடுகளை உருவாக்கி ஐ.நா. சபை தீர்மானம் நிறைவேற்றியது. ஆனால், அராபியர்கள் இந்தத் தீர்வை ஏற்றுக்கொள்ளவில்லை. **1948**, மே **15–**ல் இங்கிலாந்துப் படைகள் **1948** – மே **15–**ல் பாலஸ்தீனத்தை விட்டு வெளியேறியபோது சுதந்திர இஸ்ரேல் நாடு பிரகடனப்படுத்தப்பட்டது.

b) இங்கிலாந்தின் குடியேற்ற நாடாக இருந்தது ஈராடிசீயா. முதல் பிரதமராக இருந்த இயன்ஸ்மித் **1965–**ல் தன்னிச்சையாக சுதந்திரப் பிகடன்ம் செய்தார். பின்னர், பெரும்பான்மையாக இருந்த கருப்பர்களின் மீது இனச் சிக்கல் கொள்கையை நடைமுறைப்படுத்தினார். ரொடீசியால் எழுந்த இப்பிரச்சனையைத் தீர்க்க இங்கிலாந்து பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டது. அதன் விளைவாக **1980–**ல் பிரச்சனைகளுக்குத் தீர்வு காணப்பட்டது. அங்கு தேர்தல் நடைபெற்று முழுமையான சுதந்திர நாடாக ஜிம்பாவே என்ற புதிய பெயரைப் பெற்று செயல்படத் தொடங்கியது.

c) இரண்டாவது உலகப் போருக்குப் பிறகு ஏற்பட்ட பிரச்சனைகளை அமைதியான வழிகளிலேயே இங்கிலாந்து தீர்த்து வந்துள்ளது. ஆனால், தென் அட்லாண்டிகில் இங்கிலாந்துக்குச் சொந்தமான பாக்லாந்து தீவுகளை அர்ஜண்டீனா **1982–**ல் கைப்பற்றிய போது இராணுவ நடவடிக்கைகளை எடுத்து அதனை மீட்டது குறிப்பிடத்தக்கது ஆகும்.

d) இங்கிலாந்துக்கும் அமெரிக்காவுக்கும் இடையே இணக்கமான உறவுகளே இருந்து வருகிறது. **1957–**ல் இங்கிலாந்து மூன்றாவது அணுசக்தி நாடாக மாறியபோது

ஏவுகணைகளை விநியோகம் தொடர்பாக இங்கிலாந்துக்கும் அமெரிக்காவுக்கும் இடையே ஏற்பட்ட கருத்து வேறுபாடு சுமூகமாகத் தீர்க்கப்பட்டது. மேற்கு ஐரோப்பாவை சோவியத் நாடு அணு ஆயுதம் கொண்டு தாக்கினால் அதற்கு எதிராக இருக்க வேண்டும் என்ற நிபந்தனையை இங்கிலாந்து ஒப்புக் கொண்டது. இந்தியப் பெருங்கடலில் உள்ள டீகோ கார்சியா தீவை இங்கிலாந்து கையெழுத்திட்டது. **2001** – செப்டம்பர் **11–**ல் அமெரிக்காவில் இருந்த உலக வர்த்தக மையம் தாக்கப்பட்டதின் விளைவாக அமெரிக்கா ஆப்கானிஸ்தான் மீது படயெடுத்த போது இங்கிலாந்து அமெரிக்காவுடன் சேர்ந்து போரிட்டது. அதே போல் **2003** – மார்ச்சில் ஈராக் மீதும் அமெரிக்காவுடன் சேர்ந்து கொண்டு போர் தொடுத்தது குறிப்பிடத்தக்கது ஆகும்.

e) இரண்டாவது உலகப் போர் நடைபெற்ற காலத்திலேயே பிரிட்டனுக்கும் பிரான்சுக்கும் இடையே சிறிது பிணக்கு ஏற்பட்டது. ஜெனரல் டிகால் பிரான்சின் அதிபராக ஆனபின் நிலைமை மோசமாகியது. ஐரோப்பிய பொதுச் சந்தைக்குள் பிரிட்டனை அனுமதிக்கக்கூடாது என்பதில் அவர் பிடிவாதமாக இருந்தார்.

சோவியத் யூனியனுடன் ஓரளவு நல்லுறவை வைத்துக் கொள்ள வேண்டு என்ற விருப்பம் இங்கிலாந்தில் இருந்து வந்தது. இந்த விஷயத்தில் அமெரிக்காவின் அணுகுமுறையிலிருந்து பிரிட்டனின் அணுகுமுறை சற்று மாறுபட்டு அமைந்திருந்தது.

**1997–**ல் ஹாங்காங் தீவுகளை சீனாவுக்குத் திருப்பிக் கொடுத்தன் மூலம் பிரிட்டிஷ் எகாதிபத்தியம் முற்றிலும் மறைந்தது.

**இங்கிலாந்தும் ஐரோப்பிய பொதுச் சந்தையும்**

இரண்டாவது உலகப் போரின் முடிவில் பொருளாதார ரீதியாக இங்கிலாந்து பலவீனப்பட்டுப் போனதால் தனது பொருளாதார மேம்பாட்டில் அதிக கவனம் செலுத்தியது. **1957–**ல் ஐரோப்பிய பொதுச் சந்தை என்ற அமைப்பு உருவாக்கப்பட்டபோது அதில் சேர இங்கிலாந்து மறுத்துவிட்டது. ஆனால், அதை மிஞ்சும் அளவில் ஏழு நாடுகளைக் கொண்ட ஐரோப்பிய தடையில்லா வாணிபச் சங்கம் என்ற அமைப்பை **1960–**ல் உருவாக்கியது இங்கிலாந்து. ஆனால், ஐரோப்பிய பொதுச் சந்தையின் வெற்றிகரமான செயல் வேகத்தைக் கண்ட இங்கிலாந்து, அந்த அமைப்பில் சேர விரும்பியது. ஆனால், பிரான்ஸ் இதனை எதிர்த்தது. இறுதியாக **1973–**ல் ஐரோப்பிய பொதுச் சந்தையில் இங்கிலாந்து உறுப்பு நாடானது.

**இங்கிலாந்துமூ காமன்வெல்த்தும்**

19–ஆம் நூற்றாண்டின் பிற பகுதியிலிருந்து இங்கிலாந்தின் குடியேற்ற நாடுகள் ஒன்றன்பின் ஒன்றாக சுயாட்சியும் சுதந்திரமும் பெற ஆரம்பித்தன. ஆனால், இங்கிலாந்து அப்படி சுதந்திரம் பெற்ற நாடுகளுடன் இணைந்து ஐக்கியமாகவும் நல்லுறவுடனும் தொடர்ந்து இருப்பதற்காக அமைக்கப்பட்ட அமைப்பின் பெயரே காமன்வெல்த் என்ற பொது நல அரசுகள் அமைப்பு ஆகும். தற்போது 53 நாடுகள் காமன் வெல்த்தில் உறுப்பினர்களாக உள்ளன. இங்கிலாந்துடன் அதிக காலம் நெருங்கிய உறவுடன் இருந்து வந்த பாரம்பரியமே இந்த நாடுகளையெல்லாம் ஒன்றுபடுத்தியுள்ளது.

இவ்வாறு பிரிட்டிஷ் பேரரசு என்று ஒரு காலத்தில் இருந்து வந்தது. புதிய பரிமாணத்தில் புதிய வடிவில் பொது நல அரசுகள் என்ற அமைப்பாக மாறி உள்ளது. இங்கிலாந்தின் தலைமையில் எவ்விதமான கூட்டணி அமைப்பதே அல்லது வட்டார உடன்படிக்கைகள் செய்வதே இந்த அமைப்பின் நோக்கமல்ல. உறுப்பினர் நாடுகளின் பொருளாதார கலாச்சார ஒற்றுமையை வளர்ப்பதே இந்த அமைப்பின் நோக்கமாகும். பாராளுமன்ற முறையிலான அரசு நல்ல நிர்வாகம், பேச்சுரிமை, சட்டத்தின் ஆட்சி ஆகிய ஜனநாயக மரபுகளை உறுப்பினர்கள் பேணிப் பாதுகாக்க வேண்டும் என்பதும் இந்த அமைப்பின் நோக்கமாகும்.

இவ்வாறு ஒரு காலத்தில் பன்னாட்டு உறவுகளிலும் அரசியலிலும் முக்கிய பங்க வகித்து வந்த இங்கிலாந்து இன்று ஒதுக்கப்பட்டு விட்டது. ஒரு பேரரசாக இருந்த நாடு, இன்று வலிமையற்று உள்ளது. இந்த வரலாற்று உண்மையை உணர்ந்தே இங்கிலாந்து செயல்பட்டு வருகிறது. தற்போது பொருளாதார நிலையில் பிற நாடுகளைச் சாந்து இருக்க வேண்டியதுள்ளது. ஒரு காலத்தில் உலகம் முழுவதும் வாணிபம் செய்து வந்த ஆங்கில கிழக்கிந்தியக் கம்பெனியை ஒரு இந்தியர் விலைக்கு வாங்கிவிட்டார். ஆனாலும், எதிர்காலத்தில் உலகில் ஒரு மூன்றாவது சக்தியாக இங்கிலாந்து உருவாகும் வாய்ப்பு உள்ளதாக அரசியல் அறிஞர்கள் கருதுகிறார்கள்.

## இந்தியாவின் வெளிநாட்டுக் கொள்கை (Foreign Policy of India)

வெளிநாட்டுக் கொள்கை என்பது பிற நாடுகளுடன் உறவு கொண்டு நேச நலக்களை நிறைவேற்றிக் கொள்ளும் மார்க்கமாகும். நாட்டுப் பாதுகாப்பும், தேச நலனும் வெளி உறவுக் கொள்கையின் உயிர் நாடியாகும். தற்கால உலகில் தனி மனிதரோ,

சமுதாயமோ அல்லது ஒரு நாடோ பிறரைச் சார்ந்தே வாழ வேண்டியுள்ளது. எனவேதான் ஒவ்வொரு நாடும் பிற நாடுகளுடன் அரசியல், கலாச்சார, ராஜதந்திர தொடர்புகள் வைத்துக் கொள்கின்றன. இந்தத் தொடர்புகளைத் தீர்மானிப்தே வெளிநாட்டுக் கொள்கையாகும்.

இந்தியா சுதந்திரமடைந்தபோது எதிர்நோக்கிய பல பிரச்சனைகளில் 'இந்தியாவுக்கு ஒரு நல்ல வெளிநாட்டுக் கொள்கையை உருவாக்குவதும்' ஒன்றாக இருந்தது. அப்போது பிரதமராக இருந்த நேரு பன்னாட்டளவில் நிலவிய அரசியல் நிலை, இந்தியாவில் நிலவிய அரசியல், பொருளாதார, சமூக நிலை ஆகியவற்றின் அடிப்படையில் இந்தியாவுக்கென்று சுதந்திரமான வெளிநாட்டுக் கொள்கையை உருவாக்கினார். அவர் வகுத்துத் தந்த வெளிநாட்டுகூ கொள்கையில் இலட்சியமும் யதார்த்தமும் கலந்து இருந்தது. அவர் அமைத்துக் கொடுத்த அடித்தளத்தின் மீதே இந்திய வெளிநாட்டுக் கொள்கை என்ற மாளிகை எழுப்பப்பட்டது. இவ்வாறு இந்தியாவுக்குச் சிறந்த 'வெளிநாட்டுக் கொள்கையை உருவாக்கியச் சிற்பி' (Architect par excellence of our Foreign Policy) என்று புகழப்படுகிறார்.

**இந்திய வெளிஉறவுக் கொள்கையின் சிறப்பியல்புகள்**

**1) கூட்டுச்சேராக் கொள்கை**

கூட்டுச்சேராக் கொள்கை இந்திய வெளிநாட்டுக் கொள்கையின் முதுகெலும்பைப் போன்றது. நேரு வடிவமைத்துக் கொடுத்த இந்த கூட்டுச் சேரா கொள்கை திடீரென்று உருவாக்கப்பட்டதல்ல. இந்தியாவின் நீண்டகாலப் பண்பாட்டிலிருந்தும், சுதந்திரப் போராட்ட கால நிகழ்ச்சிகளிலிருந்தும், சமீப கால வரலாற்று நிகழ்ச்சிகளிலிருந்தும் உருவாக்கப்பட்டது ஆகும். இந்தியா சுதந்திரமடைந்தபோது உலகம் இரண்டு முகாம்களாகப் பிரித்து காணப்பட்டது. அமெரிக்கா தலைமையிலான முதலாளித்துவ நாடுகளும், சோவியத் யூனியனின் தலைமையிலான கம்யூனிச நாடுகளும் தங்களுக்குள் போட்டியையும் வெறுப்பையும் வளர்த்துக் கொண்டிருந்தன.

எனவே ஜவஹர்லால் நேரு அப்போது இந்தியாவில் இருந்த பாதுகாப்புத் தேவை, பொருளாதாரப் பிரச்சனை போன்றவற்றை மனதில் கொண்டு உருவாக்கப்பட்ட கொள்கையே கூட்டுச்சேரா கொள்கை ஆகும். கூட்டுச்சேரா கொள்கை என்பது எந்த இராணுவ அணியுடன் சேராமல் இருப்பதாகும். உலகத்தல் பதட்ட நிலையைத்

தணிப்பது, பொருளாதார சமூக வளர்ச்சிக்குத் தங்கள் சக்தியை செலவு செய்வது, சுதந்திரத்தையும் தேசியத் தன்மையையும் பாதுகாப்பது, படைப் பெருக்கத்தில் ஈடுபடாமலும், வெளிநாட்டுப் போர்களில் தலையிடாமலும் இருத்தல் ஆகியவையே கூட்டுச் சேராக் கொள்கையை இந்தியா ஏற்றுக் கொண்டதற்கு முக்கிய காரணங்களாகும்.

**2) உலக அமைதியைப் பேணுதல்**

இந்தியா சுதந்திரமடைந்தபோது உள்நாட்டு நிலையை வலுப்படுத்துவதையும், பொருளாதார மேம்பாட்டையுமே தனது தலையாய நோக்கமாகக் கொண்டிருந்தது. வெளிநாட்டுறவில் அமைதி நீடித்தால் மட்டுமே உள்நாட்டு அமைதியைப் பேண முடியும். எனவே உலக அமைதியைப் பேணுதல், இந்திய வெளிநாட்டுக் கொள்கையின் சிறப்பு அம்சமாகும். இந்திய அரசியலமைப்பின் நான்காவது பிரிவின் **51–**வது விதி, பன்னாட்டு அமைதி மற்றும் பாதுகாப்பை இந்தியா பேண வேண்டும் என்று தெரிவிக்கிறது. போர்களால் எந்தச் சிக்கல்களையும் தீர்க்கமுடியாது. அது புதிய சிக்கல்களையே உருவாக்கும் என்று அறிந்திருந்தார் நேரு. எனவே உலக அமைதியைப் பேணுவதே இந்த வெளிநாட்டுக் கொள்கையின் முக்கிய அம்சமாகத் திகழ்கிறது.

**3) ஏகாதிபத்திய, காலனி ஆதிக்க எதிர்ப்பு**

ஏகாதிபத்தியத்தையும், காலனி ஆதிக்கத்தையும் தொடர்ந்து எதிர்ப்பது இந்தியாவின் வெளிநாட்டுக் கொள்கையின் அடுத்த சிறப்பு அம்சமாகும். இதனால் தான் ஆசிய, ஆப்பிரிக்க நாடுகளில் ஏகாதிபத்தியத்திற்கு, காலனி ஆதிக்கத்திற்கு எதிராக நடைபெற்ற எல்லா போராட்டங்களுக்கும் தனது ஆதரவை தொடர்ந்து அளித்து வந்தது.

**4. இனப்பாகுபாட்டிற்கு எதிர்ப்பு**

இனம் மற்றும் கலாச்சார அடிப்படையிலான எல்லா வகையான இனப்பாகுபாட்டையும் இந்தியா தொடர்ந்து எதிர்த்து வருகிறது. தென் ஆப்பிரிக்காவும், ரொடிஷியாவும் பின்பற்றி வந்த இனப் பாகுபாடுகளுக்கெதிரான குரல் கொடுத்த முன்னணி நாடு இந்தியா ஆகும். **1952–**ல் ஐ.நா. சபையில் பிற ஆசிய ஆப்பிரிக்க நாடுகளுடன் சேர்ந்து இனப் பாகுபாட்டை எதிர்த்து குரல் கொடுத்தது இந்தியா. அது ஐ.நா. சாசனத்தற்கு எதிரானது என்றும், மனித அறிக்கைக்கு எதிரானது என்றும், உலக அமைதிக்கு எதிரானது என்றும், உலக அமைதிக்கு கேடு விளைவிப்பது என்றும்,

இந்தியா தெரிவித்தது. தென் ஆப்பிரிக்கா, ஜிம்பாவே, நமிபியா ஆகிய நாடுகளில் கருப்பர்களுக்கெதிரான சிறுபான்மை வெள்ளையர் ஆதிக்கத்தை எதிர்த்தது இந்தியா. இது நமது வெளிநாட்டுக் கொள்கையில் சிறப்பியல்பு ஆகும்.

**5. பஞ்சசீலம்**

பஞ்ச சீலக் கொள்கை இந்திய வெளிநாட்டுக் கொள்கையின் மற்றொரு பரிமாணம் ஆகும். உலக நாடுகள் சமாதான சக வாழ்வு வாழ்வதற்கான பட்டயமே பஞ்சசீலக் கொள்கையாகும். பஞ்சசீலம் என்றால் 'ஐந்து நடத்தை நெறி' என்று பொருளாகும். **1954** – மே **29–**ல் இந்தியாவும் சீனாவும் சேர்ந்து பஞ்சசீலக் கொள்கையை ஏற்றுக் கொண்டு அறிவிப்பு செய்தன. அவை வருமாறு : **1)** பிற நாடுகளின் இறைமைக்கும், தேச ஒற்றுமைக்கும் பரஸ்பர மதிப்பளித்தல், **2)** ஆக்கிரமிப்பு செய்யாதிருத்தல், **3)** பிற நாட்டின் உள்நாட்டு விவகாரத்தில் தலையிடாமை, **4)** சமத்துவம் மற்றும் பரஸ்பர நம்பிக்கையைக் காத்தல், **5)** சமாதான சகவாழ்வு ஆகியவையே பஞ்சசீலக் கொள்கையாகும்.

பஞ்ச சீலக் கொள்கை இந்திய வெளி உறவுக் கொள்கையின் இயல்பான விரிவாக்கம் ஆகும். உலக நாடுகளிடையே சமாதான சக வாழ்வு நிலவ வேண்டும் என்ற நேருவின் பஞ்சசீலக் கொள்கை சர்வதேச அங்கீகாரம் பெற்றது.

**6) ஆசிய நாடுகளுடன் நெருங்கிய உறவு :**

அனைத்து உலக நாடுகளுடன் இந்தியா நெருங்கிய உறவு கொண்டாலும், ஆசிய நாடுகளும் மிகவும் நட்புடன் இருக்க விரும்புகிறது. இதனால்தான் பல ஆசிய நாடுகளில் நடக்கும் மாநாடுகளில் இந்தியா முக்கிய பங்கு வகிக்கிறது. தனியாக ஒரு ஆசிய நாடுகளின் அமைப்பை ஏற்படுத்துவது இந்தியாவின் நோக்கமல்ல. ஆசிய நாடுகளுக்கிடையே ஒற்றுமையை ஏற்படுத்துவதே நோக்கமாகும். இதன் அடிப்படையில்தான் சார்க் அமைப்பில் இந்தியா ஒரு உறுப்பு நாடாக உள்ளது.

**7) காமன்வெல்த் அமைப்புடன் உறவு :**

காமன்வெல்த் அமைப்புடன் நல்ல உறவை வைத்துக் கொள்வது இந்திய வெளிநாட்டுக் கொள்கையின் ஒரு அம்சமாகும். இந்தியா சுதந்திரமடைந்த பின்பும் காமன்வெல்த் அமைப்பில் தொடர்ந்து உறுப்பு நாடாக இருந்து வருகிறது. இந்த அமைப்பில் தற்போது **54** நாடுகள் உள்ளன. இந்த நாடுகளுக்கிடையே சமூக, கலாச்சார, பொருளாதார உறவுகளை மேம்படுத்துவது, இந்திய வெளிநாட்டுக்

கொள்கையின் சிறப்பு அம்சமாகும். காமன்வெல்த் நாடுகளின் தலைவர்களின் கூட்டத்தில் இந்தியா முக்கிய இடம் வகிக்கிறது.

**8) ஐ.நா. சபைக்கு ஆதரவு :**

1945, அக்டோபர் **24–**ல் ஐ.நா. சபை தோன்றியபோது அதன் ஆரம்ப கால உறுப்பு நாடுகளில் இந்தியாவும் ஒன்று ஆகும். ஐ.நா. சபையின் நோக்கங்களிலும், கொள்கைகளிலும் இந்தியா முழு நம்பிக்கை வைத்துள்ளது. உலகம் முழுவதிலும் அமைதியை ஏற்படுத்தும் ஐ.நா.வின் முயற்சிகளுக்கு இந்தியா ஆதரவு ஆதரவு அளித்து வருகிறது. அதன் எல்லா அமைப்புகளிலும் முக்கிய பங்கு வகிக்கிறது. ஐ.நா. அமைதிப் படையில் இந்தியா பங்கெடுத்துள்ளது. இவ்வாறு ஐ.நா. சபைக்கு தொடர்ச்சியாக ஆதரவளித்து வருவது இந்திய வெளி உறவுக் கொள்கையின் முக்கிய அம்சமாக உள்ளது.

**9) படைக்கலக்குறைப்புக்கு ஆதரவு :**

அணு ஆயுத மற்றும் மரபு வழி ஆயுதப் படைக் குறைப்பே இந்தியாவின் வெளிநாட்டுக் கொள்கையின் மற்றொரு அம்சமாகும். அமைதிப் பணிக்கு அணு ஆயுதங்கள் மற்றும் போர்க் கருவிகள் செய்யப்படுவதை இந்தியா எதிர்த்து வருகிறது. ஆனாலும் பல காரணங்களால் அணு ஆயுதப் பரவல் தடைச்சட்டத்தில் இந்தியா கையெழுத்திட மறுத்து வருகிறது. உலக நாடுகள் அனைத்துமே தங்கள் வசம் இருக்கும் எல்லா விதமான அணு ஆயுதங்களை ஒழித்துவிட வேண்டுமென்பதே இந்தியாவின் கொள்கையாகும்.

**10) புதிய பன்னாட்டு பொருளாதார ஒழுங்கிற்கு ஆதரவு : Support to NIEO**

நீதி, சமநிலை, பரஸ்பர ஒத்துழைப்பு ஆகியவற்றின் அடிப்படையில் இந்தியா புதிய பன்னாட்டு, பொருளாதார ஒழுங்கிற்கு (New International Economic Order) ஆதரவளித்து வருகிறது. இதன் முக்கிய நோக்கம் அமைதியும், வளர்ச்சியுமே ஆகும். வளர்ந்து வரும் நாடுகளின் பொருளாதார சுதந்திரத்தைப் பேணிக்காப்பது இந்தியாவின் விருப்பம் ஆகும். எனவேதன் காட் (GATT – General Agreement on Trade and Tariff) ஒப்பந்தத்தில் இந்தியா பங்கெடுத்து உள்ளது. மேலும், உலக பொருளாதார அமைப்பிலும் (WTO) உறுப்பினராகி உள்ளது. UNCTAD, G.T.T., G-15 போன்ற அமைப்புகள் மூலம் இந்தியாவில் பொருளாதார நலன்களைப் பாதுகாத்து வருகிறது.

இவை தவிர, இந்திய இறையாண்மையைப் பாதுகாத்தல், மத்திய கிழக்கு பகுதியிலிருந்து எண்ணை வளத்தை தடங்கல் இல்லாமல் பெறுதல், வெளிநாட்டில் வாழும் இந்தியர்கள் நலன்களைப் பாதுகாத்தல், வெளிநாட்டு வாணிபத்தை பெருக்குதல், பொருளாதார வளர்ச்சிக்கான உதவிகளைப் பெறுதல், பாதுகாப்பு தன்மையை வலுப்படுத்தல், பாதுகாப்பான கடல் வழி, வான்வழியை அமைத்துக் கொள்ளுதல், உலகம் முழுவதும் நடைபெறும் அதிகாரப் போட்டியில் எப்பொழுதும் நடுநிலையை வகித்தல் ஆகியவை இந்தியா வெளிநாட்டு கொள்கையின் சிறப்பு அம்சங்களாக இருந்து விருகின்றன.

## முசோலினியின் (இத்தாலியின்) வெளியுறவுக் கொள்கை

முசோலினியின் வெளிநாட்டுக் கொள்கை பாசிசக் கொள்கையின் பிரதிபலிப்பாகவே இருந்தது. எனவே, முசோலினியின் வெளிநாட்டுறவு கொள்கையைப் புரிந்து கொள்ள வேண்டுமென்றால், பாசிசத்தின் கொள்கையைப் புரிந்து கொள்ள வேண்டும். விறகுக் குச்சிகளுக்கு மத்தியில் வைத்துக் கட்டப்பட்ட கோடாரி, பாசிசத்தின் சின்னமாக விளங்கியது. ‘‘கருஞ்சட்டை’’ பாசிஸ்டுகளின் உடையாக இருந்தது. தொடக்கத்தில் ஒரு கொள்கையற்ற இயக்கமாக இருந்த பாசிசம், மக்கன் மன அதிருப்தி, தொல்லை துயரங்களை மூலதனமாகக் கொண்டு வளர்ச்சியுற்றது. பாசிச அரசின் செயல்பாடுகளைக் கொண்டு அதன் கொள்கைகளை ஒருவாறு அறியலாம்.

**1.** தனி மனிதன் அரசுக்காகவே வாழ்கிறான். அரசுக்காக எந்தவித தியாகத்தையும் செய்ய அவன் தயாராயிருக்க வேண்டும் என்ற குறுகிய நாட்டுப்பற்றுதான் பாசிசத்தின் அடிப்படை.

**2.** அரசு அதன் தலைவரால் (Duce) இயக்கப்படும். அந்தத் தலைவனை, ‘‘நம்பு, கீழ்ப்படி, போரிடு’’.

**3.** மக்களாட்சி முறையும் கம்யூனிசக் கோட்பாடும் அரசு இயங்க இடையூறளிப்பவை.

**4.** தொழில் உற்பத்தி, விநியோகம் ஆகியவை அரசுடமை ஆக்கப்படாமலேயே அரசின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்படவேண்டும்.

**5.** செய்தித்தாள், தொலைத்தொடர்பு சாதனங்கள், கல்வி ஆகிய அனைத்தும் அரசினால் நடத்தப்பெறும்.

**6.** ஒரே நாடு, ஒரே அரசு, ஒரே கட்சி, ஒரே தலைவன், இந்த வகையில் பாசிசமும் நாசிசமும் உடன்பிறப்புகள் ஆகும்.

**7.** இத்தாலி மீண்டும் பண்டைய ரோமானியப் பேரரசின் மகோ.னத நிலை அடையவேண்டும். அதாவது பேரரசாக வேண்டும்.

**8.** மத்திய தரைக்கடல் நமது கடல். அது, இத்தாலிய ஏரியாக மாற்றப்படவேண்டும்.

**9.** வெர்செயில்ஸ் ஒப்பந்தம் இத்தாலியர்களை ஏமாற்றிவிட்டது. ஆறு இலட்சம் உணிர்களையும் பன்னிரண்டு மில்லியன் பவுன்களையும் தியாகம் செய்த இத்தாலியர்களுக்கு டைரால், டிரன்சினோ, டால்மேஷியா ஆகியவை போதுமானதாக இல்லை. ஃபியூம் அவர்களுக்கு எட்டாக்கனியாகிவிட்டது. கட்சி மாறுவதற்கு இலண்டன் இரகசிய உடன்படிக்கை உறுதியளித்த கைக்கூலி கைக்கு எட்டவில்லை என பதைபதைத்தனர். முசோலினியின் கூற்றுப்படி இத்தாலி வீரர்கள் போரில் வெற்றி பெற்றனர். அரசியல்வாதிகள் கோட்டைவிட்டனர். போர்க்களத்தில் வெற்றி பெற்றாலும், அமைதி மாநாட்டில் தோல்வியுற்றனர். ஜெர்மனி தோல்வியடைந்ததால் இழிவடைந்தபோது இத்தாலி வெற்றிபெற்றும் இழிநிலையடைந்தது. எனவே, வெர்செயில்ஸ் ஒப்பந்தத்தை கிழித்தெறிவதும் பாசிசத்தின் நோக்கமாயிருந்தது. இந்த வகையில் பாசிசம் நாசிசத்தின் தம்பியாக இருந்தது.

**10.** இத்தாலிக்கு தொழில் வளர்ச்சியடைய மூலப்பொருள் பற்றாக்குறையிருந்தது. எனவே, வளரும் ஆலைகளுக்கு வேண்டிய மூலப்பொருட்களை வழங்குவதற்கு குடியேற்ற நாடுகள் தேவை எனக் கருதியது. எனவே, ஏராளமான குடியேற்ற நாடுகளைக் கொண்ட பிரிட்டன், பிரான்சு மீது பொறாமை கொண்டது.

**11.** மனித ஆற்றலை அதன் உச்ச நிலைக்கு கொண்டு செல்வது போர் ஆகும். எனவே, ஆதிக்க விஸ்தரிப்பிற்குப் போர் புரிவது குற்றமல்ல. ‘‘பாசிச இத்தாலியின் முதன்மையான அடிப்படையான சரியான கடமை தரை, கடல், ஆகாயப் படைகளை தயார் நிலையில் வைத்திருப்பதுதான்’’ என **1927–**ல் முசோலினி கூறினார்.

குறுகிய வெறி கொண்ட நாட்டுப்பற்று, ஏகாதிபத்திய ஆசை, வெளிப்படையான ஆதிக்க விரிவாக்க செயல்கள் ஆகியவைதான் பாசிசத்தின் கொள்கைகளாகும்.

சுருங்கக் கூறின், மிகவும் கேவலமான சந்தர்ப்பவாத துணிச்சல் இத்தாலியின் வெளிநாட்டுக் கொள்கையாக உருப்பெற்றுள்ளது.

## முசோலினியின் வெளிநாட்டுக் கொள்கை

**1. லாசேன் ஒப்பந்தம் (1923) :**

வெர்சேயில்ஸ் ஒப்பந்தத்தின்போது குறிப்பிடத்தக்க ஆதாயம் பெறவில்லை என ஏங்கிக் கொண்டிருந்த இத்தாலிக்கு 1923–ல் துருக்கியுடன் செய்து கொண்ட லாசேன் ஒப்பந்தம் நல்லதொரு வாய்ப்பாக அமைந்தது. அவ்வொப்பந்தத்தின்போது விழிப்புடனிருந்து டொடுகோனஸ், ரோட்ஸ் தீவுகள் மற்றும் கோஸ்டரீகா ஆகிய இடங்களை இத்தாலிக்குப் பெற்றுத் தந்தார்.

**2. கர்ஃப்யூ ஆக்கிரமிப்பு (1923) :**

அல்பேனிய–கிரீஸ் எல்லையில் பணிபுரிந்து கொண்டிருந்த இத்தாலிய சர்வேயர்களை கிரேக்கர்கள் கொன்றனர். உடனே முசோலினி கிரீசிற்கு இறுதி எச்சரிக்கை விடுத்ததோடு, அதற்குச் சொந்தமான கர்ஃப்யூ என்ற தீவைத் தாக்கி கைப்பற்றிக் கொண்டார். கிரீஸ் பன்னாட்டுக் கழகத்தில் முறையிட்டது. அக்கழகத்தின் நடவடிக்கைகளைப் புறக்கணித்தார். எனினும், கிரீசிடமிருந்து 53 மில்லியன் லிரே இழப்பீடு பெற்று அத்தீவிலிருந்து வெளியேற ஆணை பிறப்பித்தார்.

**3. ஃபியூம் இணைப்பு (1923) :**

வெர்செயில்ஸ் மாநாடு, ஏட்ரியாட்டிக் கிழக்குக் கரையிலுள்ள ஃபியூம் என்ற துறைமுகத்தை யூகோஸ்லாவியாவிற்கு அளித்தது. இத்தாலிய தேச பக்தர்கள் இதனை தங்களுக்கு இழைக்கப்பட்ட அநீதி என்று பொருமினர். முசோலினி, யூகோஸ்லாவியா மீது நிர்ப்பந்தங்கள் ஏற்படுத்தி அத்துறைமுகத்தை இத்தாலிக்கு அளிக்குமாறு செய்தார்.

**4. லொக்கார்னோ உடன்படிக்கை (1925) :**

பிரான்சு, ஜெர்மன் எல்லைப் பாதுகாப்பிற்கு பிரிட்டனுடன் இணைந்து இத்தாலியும் உத்திரவாதமளித்தது. இதன் மூலம் பன்னாட்டரசியல் அரங்கில் இத்தாலியின் செல்வாக்கு உயர்ந்தது.

**5. வாஷிங்டன் மாநாடு (1922) :**

1922–ல் வாஷிங்டனில் நடைபெற்ற தூரக்கிழக்கு கப்பற்படைக் குறைப்பு மாநாட்டில் கலந்துகொண்டு பிரான்சிற்குச் சமமாகக் கப்பற்படை வைத்திருக்கும் உரிமை பெற்றது.

**6. பிரான்சுடன் உறவு :**

வெர்செயில்ஸ் மாநாட்டுகூ காலத்திலிருந்து இத்தாலிக்கும் பிரான்சுக்குமிடையில் நல்லுறவு நிலவியதில்லை. வெர்செயில்சில் இத்தாலியின் கோரிக்கைகளை பிரான்சு உறுதியாக ஆதரிக்கவில்லை என்ற மனக்குறை இருந்தது. பாசிச சர்வாதிகாரத்தை எதிர்த்து அதனால் நாடு கடத்தப்பட்ட இத்தாலிய அரசியல்வாதிகளுக்கு பிரான்சு புகலிடம் அளித்தமை முசோலினிக்கு அதிருப்தியை ஏற்படுத்தியது. அச்சமயத்தில் பிரான்சின் ஆதிக்கத்திலிருந்த டுனீசியா, கார்சிகா, சவாய், நைஸ் ஆகிய பகுதிகள் தனக்கே உரியன என்று இத்தாலி வெளிப்படையாக அறிவித்தது. எனினும், 1934–ல் ஜெர்மனியின் நாஜி ஹிட்லரின் எழுச்சி இரு நாடுகளையும் அச்சுறுத்தியது. மேலும், ஹிட்லரின் ஆஸ்திரிய நடவடிக்கைகளை முசோலினி அறவே விரும்பவில்லை.

இந்நிலையில் பிரெஞ்சு வெளியுறவு அமைச்சர் ரோம் சென்று முசோலினியுடன் ஒரு சுமூக ஏற்பாடு செய்துகொள்ள முயன்றார். ஆப்பிரிக்காவில் 44,000 சதுர மைல் பரப்புள்ள இடங்களை இத்தாலிக்கு அளித்து தாஜா செய்ய முனைந்தார்.

பிரிட்டன், பிரான்சு, இத்தாலி ஆகிய நாடுகள் 1935–ல் ஸ்ட்ரீஸ்லா என்ற இடத்தில் கூடி, ஹிட்லரின் வெர்செயில்ஸ் உடன்படிக்கை மீறல்களைக் கண்டித்தன. எனினும், முசோலினியின் அபிசீனிய ஆக்கிரமிப்பு பிரெஞ்சு–இத்தாலி உறவில் விரிசலை ஏற்படுத்தியது.

**7. ஆஸ்திரியப் பிரச்சனை :**

1934–ல் ஹிட்லர் ஆஸ்திரியாவை அபகரிக்க முயன்றதை முசோலினி கடுமையாக எதிர்த்தார். அதனால், ஜெர்மன்–இத்தாலி உறவு சீர்கெட்டது. ஆனால், 1935–ல் முசோலினி அபிசீனியாவை ஆக்கிரமித்தபோது பிரிட்டனும், பிரான்சும் கண்டித்தன. ஜெர்மனி நடுநிலை வகித்தது. இதனால், இத்தாலிக்கும் ஜெர்மனிக்குமிடையே நல்லுறவு ஏற்பட்டது. இந்தத் தருணத்தைப் பயன்படுத்தி, ஹிட்லர் சாமர்த்தியமாக ஆஸ்திரியாவை இணைத்துக் கொண்டார். உண்மையில் முசோலினியின் ஆஸ்திரியக் கொள்கை தோல்வியில் முடிந்தது.

**8. அபிசீனிய ஆக்கிரமிப்பு (1935) :**

குடியேற்ற நாடுகள் நிறுவுதல் என்ற ஆசைக் கனவு முசோலினியின் ஏகாதிபத்திய சிந்தனையிலிருந்து நீங்கவே இல்லை. ஆப்பிரிக்காவின் ஒரே சுதந்திர நாடான அபிசீனியா மீது முசோலினியின் ஆதிக்க ஆசை படர்ந்தது. **1898–ல்** இத்தாலி அடோவாவில் அபிசீனியர்களிடம் அடைந்த தோல்வியினால் ஏற்பட்ட இழிவைத் துடைத்துக் கொள்ளத் துடித்தார். **1935–ல்** இத்தாலியப் படைகள் அபிசீனியாவினுள் நுழைந்தன. இந்த ஆக்கிரமிப்பு செயல், பன்னாட்டுக் கழகத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டது. அக்கழகம் இத்தாலி மீது பொருளாதார முற்றுகையை விதித்தது. அது இத்தாலியைப் பாதித்தாலும், அபிசீனியாவை ஆக்கிரமிப்பதிலிருந்து தடுக்க இயலவில்லை. இத்தாலி மன்னர் அபிசீனியாவின் பேரரசர் ஆனார். இத்தாலி பன்னாட்டுக் கழகத்திலிருந்து விலகியது.

**9. ரோம் – பெர்லின் – டோக்கியோ அச்சு (1936) :**

கம்யூனிச அபாயத்திலிருந்து தங்கள் நாடுகளைப் பாதுகாக்க ஜப்பானும் ஜெர்மனியும் **கம்யூனிச எதிர்ப்பு ஒப்பந்தம் (Anti-Comintern Pact) 1935–ல்** செய்து கொண்டன. இப்போது அவ்வொப்பந்தத்தில் இத்தாலியும் சேர்ந்தது. அதன் மூலம் ரோம்–பெர்லின்–டோக்கியோ அச்சு (கூட்டு) உருவானது.

**10. ஸ்பெயின் உள்நாட்டுபூ போரில் தலையிடல் :**

ஸ்பெயினில் கம்யூனிச சார்புள்ள குடியரசிற்கும் தளபதி பிராங்கோவிற்குமிடையில் நடைபெற்ற உள்நாட்டுப் போரில், முசோலினி பிந்தியவருக்கு ஆதரவளித்தார். பன்னாட்டுக் கழகத்தின் தலையிடாக் கொள்கையையும் தீர்மானத்தையும் மீறி வெளிப்படையாகவே பிராங்கோவிற்கு பணம், படை கொடுத்து உதவினார். அதன் விளைவாக ஸ்பெயினில் பிராங்கோ தலைமையில் பாசிச அரசு நிறுவப்பட்டது.

**அல்பேனியா இணைப்பு (1939) :**

ஏட்ரியாட்டிக் கடலின் கீழ்க்கரையில் அமைந்துள்ள அல்பேனியா என்ற சிறு நாட்டுடன் **1927–ல்** இத்தாலி ஒரு ஒப்பந்தம் செய்து கொண்டது. அதன் விளைவாக, அந்நாடு இத்தாலியின் காப்பரசாக மாற்றப்பட்டது. **1939–ல்** அந்நாட்டு நிர்வாகம் அனைத்தும் இத்தாலியினால் மேற்கொள்ளப்பட்டது.

**மியூனிச் மாநாடு (1938) :**

செக்கோஸ்லோவாகியாவிலுள்ள சுடட்டன்லாந்தில் ஜெர்மன் இன மக்கள் வாழ்வதால், அதனை இணைப்பதற்கு ஹிட்லர் திட்டமிட்டார். அப்பிரச்சனை பற்றி விவாதிப்பதற்கு **1939–**ல் மியூனிச்சில் பிரிட்டன், பிரான்சு, இத்தாலி, ஜெர்மனி ஆகிய நாடுகளின் மாநாடு நடைபெற்றது. இதில் கலந்து கொண்ட முசோலினி, அப்பிரச்சனையை போரின்றி அமைதியாகத் தீர்த்துக் கொள்வதை வலியுறுத்தினார். அதனால், சுடட்டன்லாந்து ஜெர்மனிக்கு வழங்கப்பட்டது.

**எஃகு ஒப்பந்தம் (1939) :**

**1938–**ல் ஹிட்லர் ரோம் நகருக்கு வருகை புரிந்து இத்தாலியுடன் மேலும் நெருங்கிய கூட்டு வைத்துக் கொள்ள விருப்பம் தெரிவித்தார். அதன் பேரில் **1939–**ல் பெர்லினில் இரு நாடுகளுக்குமிடையில் இராணுவக் கூட்டு ஒப்பந்தம் கையெழுத்தானது. மிகவும் உறுதியான இவ்வொப்பந்தம் ‘‘எஃகு ஒப்பந்தம்’’ எனப்பட்டது.

**இரண்டாம் உலகப்போர் :**

**1939–**ல் ஹிட்லர் போலாந்து மீது படையெடுத்து இரண்டாம் உலகப் போரைத் தொடங்கியபோது, இத்தாலி போருக்கான தயார் நிலையில் இல்லாததால், போரில் இறங்கவில்லை. போரில் நாஜிப் படைகள் பெற்ற அமோக வெற்றி, முசோலினியை ஆச்சரியப்பட வைத்தது. போரில் ஜெர்மனிதான் இறுதி வெற்றி பெறும் என்று நம்பினார். எனவே, **1940–**ல் ஜெர்மன் படைகள் பிரான்சு மீது படையெடுத்தபோது இத்தாலிப்படைகள் தெற்கிலிருந்து அந்நாட்டைத் தாக்கின. இவ்வாறு, இத்தாலி இரண்டாம் உலகப் போரில் இறங்கியது.

**முசோலினியின் முடிவு :**

போரில் இத்தாலியின் பங்கு குறிப்பிடத்தக்கதாக இல்லை. பல இடங்களில் இத்தாலியப் படைகள் தோற்கடிக்கப்பட்டன. நேச நாட்டுபூ படைகள் சிசிலியில் இறங்கின. இதற்கிடையில் நாட்டில் முசோலினியின் செல்வாக்கு பெரிதும் சரிந்தது. முசோலினி இத்தாலி மன்னரால் பதவி நீக்கம் செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டார். விரைவில் அவர் ஜெர்மன் பாராசூட் படையினால் மீட்கப்பட்டார். ஆனால், முசோலினிக்கெதிராக இத்தாலியர் கிளர்ந்தெழுந்தனர். அவர் கைது செய்யப்பட்டு

சுட்டுக்கொல்லப்பட்டார். அவரது பிணம், மிலான் நகர் நாற்சந்தியில் தலைகீழாகத் தொங்கவிடப்பட்டது.

## 19.ஹிட்லரின் (ஜெர்மனியின்) வெளியுறவுக் கொள்கை

ஹிட்லர் தமது நாஜிக் கட்சிக் கோட்பாடுகளை **“எனது போராட்டம்''** **(Mein Kampf)** என்ற நூலில் விவரித்துள்ளார். அதன் அடிப்படையில் அவரது வெளிநாட்டுக் கொள்கை உருவானது.

**அதன் முக்கிய அம்சங்கள் :**

**அ)** அனைத்து ஜெர்மன் இன மக்களும் வாழக்கூடிய அகன்ற ஜெர்மனி.

**ஆ)** ஜெர்மனியை இழிவுப்படுத்திய வெர்செயில்ஸ் மற்றும் செயின்ட் ஜெர்மெய்ன் உடன்படிக்கைகளைக் கிழித்தெறிதல்.

**இ)** ஜெர்மானியர் வளமுடன் வாழ்வதற்கும், பெருகி வரும் ஜெர்மன் இன மக்களை குடியமர்த்துவதற்கும், மேலும் தேவையான இடங்களைப் பெறுதல்.

**ஈ)** ஜெர்மானியர் ஆரிய இனத்தைச் சேர்ந்தவர்கள், ஆரியர்கள்தாம் உலகை ஆளத் தகுதியுள்ளவர்கள். செமிட்டிக் (யூத) இனம் போன்ற பிற தாழ்ந்த இனத்தவர்கள் ஒடுக்கப்படவேண்டும்.

மேலும் ஹிட்லர் கூறுவதாவது : ‘‘மனித இனம் என்றும் இடையுறா போரின் மூலம்தான் வளர்ச்சியுறுகிறது''. இடையறா அமைதி அதனை அழித்துவிடும். படை வலிமைதான் நம்பிக்கைக்குரியது. மனிதர்களால் உண்டாக்கப்படும் நாடுகளின் எல்லைகள் மனிதர்களால் மாற்றப்படலாம். இவையனைத்தும் ஹிட்லரின் வெளிநாட்டுக் கொள்கையைத் தெளிவாகப் படம் பிடித்துக் காட்டுகின்றன.

1933 ஜனவரி 30—ல் ஹிட்லர் ஜெர்மன் சான்ஸ்லராக (பிரதமராக) பதவி ஏற்றதும் எடுத்த இரு நடவடிக்கைகள் உலக நாடுகளை அதிர்ச்சியுறச் செய்தன. அவை :

**i)** ஜெனிவாவில் நடைபெற்ற பன்னாட்டு படைக்குறைப்பு மாநாட்டிலிருந்து 1933 அக்டோபரில் ஜெர்மனி வெளியேறியது.

**ii)** ஜெர்மனியை இழிவுபடுத்திய சின்னமான பன்னாட்டுக் கழகத்திலிருந்தும் அதே ஆண்டில் ஜெர்மனி வெளியேறியது. அதனை 95 சதவிகித ஜெர்மன் மக்கள் பொது வாக்கெடுப்பு மூலம் அங்கீகரித்தனர்.

எனினும், உலக நாடுகளை சாந்தப்படுத்துவதற்கு உடனடியாக வேறு நடவடிக்கைகளையும் எடுத்தார். அவை :

**ஒத்துழைப்பு ஒப்பந்தம் : (Treaty of Mutual Assistance) (1935)**

பிரிட்டன், பிரான்சு, இத்தாலி ஆகிய நாடுகளுடன் ஜெர்மனியும் இணைந்து பரஸ்பர ஒத்துழைப்புடன் ஐரோப்பாவில் அமைதியைப் பாதுகாக்க உறுதி கூறியது.

**போலாந்துடன் போர் மறுப்பு ஒப்பந்தம் (1934) :**

வெர்செயில்ஸ் உடன்படிக்கையின்படி போலந்து நாடு ஜெர்மனியிடமிருந்து டன்சிக், போன்ஸ், மேற்கு பிரஷியா, சைலீஷியா போன்றப் பகுதிகளைப் பெற்றது. அதனால் லொக்கார்னோ உடன்படிக்கையின் போது ஜெர்மனி தன் மேற்கு எல்லைக்கு கொடுத்த அங்கீகாரத்தை கிழக்கு எல்லைக்கு கொடுக்க மறுத்தது. அப்படியிருந்தும், **1934**–ல் ஹிட்லர் போலந்துடன் பத்தாண்டு கால போர் மறுப்பு ஒப்பந்தம் செய்து கொண்டார்.

இவ்வாறு திடீர் திடீர் மாற்றங்கள் மூலம் உலக ராஜதந்திரிகளை திகைப்பிலாழ்த்திய ஹிட்லர், **1934**–க்குப் பின் தமது உண்மை நோக்கங்களை படிப்படியாக வெளிப்படுத்தத் தொடங்கினார்.

**ஆஸ்திரிய கலகம் (1934) :**

ஆஸ்திரியாவில் பிறந்த ஹிட்லர், தமது மெயின்காம்ப் என்ற நூலில் ஆஸ்திரியாவை ஜெர்மனியோடு இணைக்க வேண்டும் (Anschluss) என்பதை வலியுறுத்தியுள்ளார். அதனைச் செயற்படுத்த **1934**–ல் அங்கு நாஜிக் கட்சியினரை கலகம் புரியத் தூண்டினார். அக்காலத்தில் அந்நாட்டு சான்ஸ்லர் டால்பஸ் (Dalfus) படுகொலை செய்யப்பட்டார். இந்தப் படுகொலை இன்னொரு சரயுவாவாக மாறும் அபாயம் தோன்றியது. இத்தாலி, ஆஸ்திரியாவின் சுதந்திரத்தையும் பாதுகாக்க படை நடவடிக்கை எடுக்கத் தயாரானது. ஆஸ்திரியாவிலும் ஜெர்மன் எதிர்ப்பு உணர்ச்சி அதிகரித்தது. எனவே, காலம் கனிந்து வரவில்லை என்பதை உணர்ந்த ஹிட்லர், தற்காலிகமாக தமது ‘‘அன்சுலஸ்’’ இணைப்பு திட்டத்தைக் கைவிட்டார்.

**ஸார் இணைப்பு (1935) :**

வெர்செயில்ஸ் ஒப்பந்தத்தின்படி **15** ஆண்டு காலம் பன்னாட்டுக் கழக மேற்பார்வையிலும் பிரெஞ்சு ஆதிக்கத்திலும் இருந்த ஸார் பிரதேசத்தில் மக்கள் கருத்தினை அறிய **1935**–ல் பொது வாக்கெடுப்பு (Plebiscite) நடத்தப்பட்டது. **90**

சதவிகித மக்கள் ஜெர்மனியோடு இணைவதற்கு ஆதரவாக வாக்களித்தனர். அதனால் அவ்வாண்டில் அப்பகுதி ஜெர்மனியோடு இணைக்கப்பட்டது. இது ஹிட்லரின் தனிப்பட்ட வெற்றியாக கருதப்பட்டது.

**இராணுவமயமாக்கல் (Remilitarization) (1935) :**

ஜெர்மனி, ஜெனிவா படைக்குறைப்பு மாநாட்டிலிருந்து வெளியேறிய பின், தன் படைப் பெருக்கத்திற்கான திட்டங்களை வகுத்தது. **1935–ல்** ஹிட்லர் ஜெர்மனியிடம் ஆகாய விமானப்படை இருப்பதாக அறிவித்தார். அதனைத் தொடர்ந்து வெர்செயில்ஸ் ஒப்பந்தத்தின் படைக்குறைப்புத் திட்டம் இனி ஜெர்மனியைக் கட்டுப்படுத்தாது என்று கூறினார். அமைதிக்காலத்தில் ஜெர்மனி **5,55,000** வீரர்கள் கொண்ட படையை வைத்திருக்கும் என்றும் அறிவித்தார். உடனே பிரிட்டன், பிரான்சு, இத்தாலி ஆகிய வல்லரசுகள் ஸ்ட்ரீஸா என்ற இடத்தில் கூடி ஜெர்மனியின் படைப் பெருக்க நடவடிக்கைகளைக் கண்டித்தன.

**லொக்கார்னோ உடன்படிக்கையை மீறுதல் (1936) :**

ஹிட்லர் மேலும் ஊக்கமடைந்து லொக்கார்னோ உடன்படிக்கையைக் கிழித்தெறியத் தயாரானார். அதற்கு ஒரு சாக்குப்போக்கு தேவைப்பட்டது. அதுவும் அவருக்கு உடனே கிடைத்துவிட்டது. ஜெர்மனியின் இராணுவமய நடவடிக்கையைக் கண்டு அதிர்ச்சியடைந்த பிரான்சு, ரஷ்யாவுடன் ஒருவருக்கொருவர் உதவி புரியும் உடன்படிக்கை செய்தது. செக்கோஸ்லோவாகியாவும் அவ்வாறு ரஷ்யாவுடன் உடன்படிக்கை செய்துகொண்டது. இதனை அறிந்து ஹிட்லர் அண்டை நாடுகள் தம்மை சுற்றி வளைக்கிறது என்று கூறி லொக்கானோ உடன்படிக்கை இனி செல்லாது என அறிவித்து ரைன்லாந்தனுள் படையனுப்பினார். **25,000** ஜெர்மன் படைகள் அங்கு அணிவகுத்துச் சென்றன. அதே மூச்சில், அந்நாடுகளுடன் போர் மறுப்பு ஒப்பந்தம் செய்து கொள்ளத் தயாராயிருப்பதாயும் புதிய படைகளற்றப் பகுதியை உருவாக்க தயாராயிருப்பதாயும் ஹிட்லர் அறிவித்து அந்நாடுகளின் வாயை அடைத்தார்.

**ரோம் – பெர்லின்– டோக்கியோ அச்சு (1936) :**

பாசிசத்திற்கும் நாஜிசத்திற்குமிடையில் காணப்படும் ஒற்றுமைகள் பல. அவற்றுள் கம்யூனிசத்தைப் பற்றிய கருத்தொற்றுமை குறிப்பிடத்தக்கது. இரு நாடுகளும் கம்யூனிச ரஷியாவை கொள்கை ரீதியில் பயங்கர பகைவனாகக் கருதின. கம்யூனிசத்தை முதல் எதிரி என்று பகிரங்கமாக அறிவித்தன. எனவே, ரஷியாவை

எதிர்த்து இந்த இரு நாடுகளும் ஒன்று சேர்ந்ததில் வியப்பில்லை. ஏற்கனவே ஜெர்மனி, ஜப்பானுடன் ''கம்யூனிச எதிர்ப்பு ஒப்பந்தம்'' (Anticomintern Pact) செய்து கொண்டிருந்தது. இப்போது இத்தாலியும் அந்த ஒப்பந்தத்தில் சேர்ந்தது. அதற்கான காரணங்கள் இரண்டு.

முதலாவது இத்தாலி, அப்சீனியாவை ஆக்கிரமித்ததை எதிர்த்துபூ பிரிட்டன், பிரான்சு, ரஷிய அரசுகள் இத்தாலி மீது பொருளாதார முற்றுகையிட்டன. ஆனால், ஜெர்மனி அவ்வாறு செய்யவில்லை.

இரண்டாவது, ஸ்பெயின் உள்நாட்டுப் போரில் இத்தாலி தலையிட்டதை பிரான்சு ரஷிய அரசுகள் கண்டித்தபோது ஜெர்மனி ஆதரித்ததோடல்லாமல் உதவியும் அளித்தது.

எனவே, ஜெர்மனி, ஜப்பான், இத்தாலி ஆகிய நாடுகள் கம்யூனிச எதிர்ப்பு ஒப்பந்தத்தன் மூலம் ஒன்று சேர்ந்தன. இதுவே ரோம் – பெர்லின் – டோக்கியோ அச்சு என்று அழைக்கப்படுகிறது.

**ஆஸ்திரிய இணைப்பு (Anschluss) (1938) :**

**1938–ல்** ஜெர்மனி ஆஸ்திரியாவை இணைக்க முயன்றபோது இத்தாலி கடுமையாக எதிர்த்ததால் பின்வாங்க நேரிட்டது. இப்போது ரோம், பெர்லின் அச்சு ஏற்பட்டுவிட்டதால் இத்தாலி, ஜெர்மனியின் நடவடிக்கைகளுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை. எனவே, ஹிட்லர் வெறும் மிரட்டல்கள் மூலமாகவே ஆஸ்திரியாவை இணைப்பதில் வெற்றி பெற்றார்.

**மியூனிச் மாநாடு (1938) :**

ஹிட்லரின் அடுத்த ஆக்கிரமிப்புத் திட்டம் செக்கோஸ்லோவாக்கியாவாக இருந்தது. அந்நாட்டின் மாநிலமான சுடட்டன்லாந்தில் ஜெர்மன் இனத்தவர் கணிசமாக வாழ்ந்தனர். எனவே, அம்மாநிலத்தை இணைப்பதற்கு சதித்திட்டம் தீட்டினார். அங்குள்ள ஜெர்மன் இன மக்கள் கொடுமைப்படுத்தப்படுவதாக கோயபல்ஸ் பிரச்சாரம் தீவிரப்படுத்தப்பட்டது. அதனால் செக்கோஸ்லோவாக்கியா மீது படையெடுக்கப் போவதாக மிரட்டினார்.

செக்கோஸ்லோவாகியாவை ஜெர்மன் ஆக்கிரமிப்பிலிருந்து பாதுகாக்க பிரான்சும், பிரிட்டனும் பெருமுயற்சி எடுத்தன. எனினும், ஹிட்லரின் மிரட்டல் குறையவில்லை. இச்சமயம் அமெரிக்க குடியரசுத் தலைவர் ரூஸ்வெல்ட், சுடட்டன்லாந்து பிரச்சனைக்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காணுமாறு வேண்டுகோள்

விடுத்தார். முசோலினியும், ஹிட்லரை பேச்சுவார்த்தைக்கு இணங்குமாறு வற்புறுத்தினார். அதன் விளைவாக 1938–ல் மியூனிச் என்ற இடத்தல் பிரிட்டிஷ் பிரதமர் சேர்பர்லின், பிரஞ்சுப் பிரதமர் டாலாடியர், ஹிட்லர், முசோலினி ஆகியோர் கூடினர். அம்மாநாட்டில் சுடட்டன்லாந்துதான் தமது கடைசி இணைப்புக் கோரிக்கையாக இருக்கும் என ஹிட்லர் உறுதியளித்தார். அதன் பேரில் சுடட்டன்லாந்து ஜெர்மனிக்கு அளிக்கப்பட்டது. இதன் மூலம் போரைத் தவிர்த்து அமைதியை நிலைநாட்டிவிட்டதாகப் பெருமைப்பட்டனர்.

மியூனிச் மாநாட்டிற்கு செக்கோஸ்லோவாகியா அழைக்கப்படவில்லை. அந்நாடு அம்மாநாட்டின் முடிவை கடுமையாக எதிர்த்தது. எனினும் நாஜிப்படைகள் சுட்டான்லாந்தை கைப்பற்றிக் கொண்டன. அதன் விளைவாக செக்கோஸ்லோவாகியா நாட்டினுள் குழப்பம் ஏற்பட்டது. அதனைப் பயன்படுத்தி நாஜிப் படைகள் அப்பகுதியினுள் நுழைந்து அதன் பெரும் பகுதியைக் கைப்பற்றிக்கொண்டன.

ஹிட்லரின் இந்த ஒப்பந்தத்தை மீறிய ஆக்கிரமிப்புச் செயல் பிரிட்டிஷ், பிரெஞ்சுப் பிரதமர்களை அதிர்ச்சியுறச் செய்தது. இனிமேல் ஹிட்லர் விஷயத்தில் உறுதியான போக்கினை கடைப்பிடிக்க முடிவு கட்டினர்.

**மெமல் இணைக்கப்படல் :**

வெல்செயில்ஸ் உடன்படிக்கையின்படி பால்டிக் கடலில் உள்ள ஜெர்மனியின் துறைமுகம் மெமல், லிதுவேனியாவிற்குக் கொடுக்கப்பட்டது. ஹிட்லர் அதனை மீட்க விரும்பினார். இதனை அறிந்த லிதுவேனியா, செக்கோஸ்லோவாகியாவிற்கு ஏற்பட்ட கதி தனக்கும் ஏற்பட்டுவிடக்கூடாதென்று அஞ்சி உடனடியாக ஜெர்மனியிடம் ஒப்படைத்தது.

**ஸ்பெயின் உள்நாட்டுப் போர் :**

ஸ்பெயினில் கம்யூனிஸ்ட் சார்பான குடியரசிற்கும் தளபதி பிராங்கோவின் படைகளுக்குமிடையில் நடைபெற்ற உள்நாட்டுப் போரில் முசோலினி, பிராங்கோவிற்கு ஆதரவாகத் தலையிட்டார். ஹிட்லரும் அதனைப் பின்பற்றி பிராங்கோவிற்கு போாக்கருவிகள், விமானங்கள், போர் நுட்ப வல்லுநர்கள் ஆகிய உதவிகளைக் கொடுத்து உதவினார். இது பன்னாட்டுக் கழகத்தின் தலையிடாக் கொள்கைக்குப் புறப்பானதாகும்.

**ரஷியாவுடன் போர் மறுப்பு ஒப்பந்தம் (1936) :**

ஹிட்லர் தொடக்கம் முதலே ரஷியாவுடன் பகைமை பாராட்டி வந்தார். அந்நாட்டை எதிர்த்துத்தான் இத்தாலி, ஜப்பானுடன் இணைந்து கம்யூனிச எதிர்ப்பு ஒப்பந்தம் செய்து கொண்டார். செக்கோஸ்லோவாகியா ஆக்கிரமிப்பிற்குப் பின் ஹிட்லர் அந்நாட்டின் கிழக்கெல்லையில் இருந்த போலாந்து மீது குறி வைத்தார். அதற்கு ரஷியாவின் ஆதரவு இருந்தால் நல்லது என்று கருதினார். ரஷியாவும் பிரிட்டன், பிரான்சு நடவடிக்கையில் வெறுப்படைந்திருந்தது. நாஜி ஜெர்மனிக்கெதிராக ஒரு திட்டவட்டமான உடன்படிக்கைக்கு வர தயங்கியதைக் கண்டு குழப்பமடைந்தது. எனவே, ஜெர்மனியுடன் தற்காலிகமாக ஒத்துப் போவது நல்லது என்று கருதியது. அதன் பயனாக **1939**–ல் ரஷியாவும், ஜெர்மனியும் போர் மறுப்பு ஒப்பந்தம் (Non-aggression pact) செய்து கொண்டன. இது கண்டு பிரிட்டனும் பிரான்சும் அதிர்ச்சியடைந்தன. இதன் மூலம் ஜெர்மனி இரு முனைகளில் போர்புரியும் தர்மசங்கடத்தை தற்காலிமாக அகற்றியது.

**டன்சிக் சிக்கல் :**

வெர்செயில்ஸ் ஒப்பந்தம், பால்டிக் கடலில் உள்ள டன்சிக் துறைமுகத்தை பன்னாட்டு மேற்பார்வையில் வைத்தது. அங்கு போலந்துக்கு பல சிறப்புச் சலுகைகள் வழங்கப்பட்டன. அத்துறைமுகத்திற்கு செல்வதற்கு ஜெர்மன் வழியாக ஒரு பாதையும் (Polish Corridor) போலாந்திற்கு கொடுக்கப்பட்டது. இப்போது ஹிட்லர் டன்சிக்கையும் கடல் வழிப்பாதையையும் தம்மிடம் ஒப்படைக்குமாறு போலந்தை வற்புறுத்தினார். அதற்கு போலந்து மறுப்பு தெரிவிக்கவே **1939** செப்டம்பர் முதல் தேதி நாஜிப் படைகள் போலந்தினுள் நுழைந்தன.

**இரண்டாம் உலகப் போர் தொடக்கம் :**

மியூனிக்கில் ஹிட்லரை தாஜா செய்ய முயன்று தோல்வியுற்ற பிரிட்டிஷ், பிரெஞ்சு அரசுகள் டன்சிக் சிக்கலில் போலந்தை உறுதியுடன் ஆதரித்தன. போலந்தினுள் ஜெர்மன் படைகள் நுழைந்ததை அறிந்த பிரிட்டிஷ் பிரதமர் போலந்தை விட்டு வெளியேறுவதற்கு **24** மணி நேர இறுதிக் கெடு விதித்தார். அதனை ஹிட்லர் பொருட்படுத்தாததால் **1939** செப்டம்பர் **3**–ல் பிரிட்டன் ஜெர்மன் மீது போர் தொடுத்தது. தொடர்ந்து பிரான்சும் போரிலிறங்கியது. இவ்வாறு இரண்டாம் உலகப்போர் மூண்டது.

**மதிப்பீடு :**

வரலாற்றாசிரியர் புல்லக் கருத்துப்படி ஹிட்லரின் நோக்கம் ஒன்றுதான். அதாவது சர்வாதிகாரம் பெறுவது. முதலில் ஜெர்மனியில் தமது சர்வாதிகாரம். பின்னர் ஐரோப்பாவில் ஜெர்மனியின் சர்வாதிகாரம். இந்நோக்கத்தை அடையும் வகையில்தான் அவரது வெளிநாட்டுகூ கொள்கை அமைந்திருந்தது. அந்த வகையில் அதிகாரம் மனிதனைக் கெடுக்கும். அளவிறந்த அதிகாரம் மனிதனை அடியோடு கெடுக்கும் என்பதற்கும் எடுத்துகூகாட்டாய்த் திகழ்ந்தார். வெர்செயில்ஸ் உடன்படிக்கை மீது ஜெர்மானியருக்கு இருந்த வெறுப்பு, கம்யூனிஸ்ட் ரஷியா மீது மேற்கு நாடுகளுக்கு இருந்த அச்சம், மேற்கு நாடுகள் மீது முசோலினிக்கிருந்த பொறாமை, உலக நாடுகளுக்கிருந்த போர் பற்றிய அச்சம், போருக்குத் தயார் இல்லாத நிலை ஆகியவற்றை சாதுரியமாகப் பயன்படுத்தி ஒன்றிற்கெதிராக ஒன்றை மிரட்டி தமது நோக்கங்களை வெற்றிகரமாக நிறைவேற்றி வந்தார். அதற்காக அவர் பொய் கூறுவதற்கும் தயங்கவில்லை. உடன்படிக்கைகளில் கையெழுத்திடுவதற்கும் தயங்கவில்லை. அவரது கருத்துப்படி நூறு முறை திரும்ப திரும்ப கூறப்பட்ட பொய்தான் உண்மை. மிகப் பெரிய பொய் மிகப் பெரிய வெற்றியைத் தரும். அனைத்து உறுதிமொழிகளும் உடன்படிக்கைகளும் உண்மை நோக்கங்களை மூடிமறைக்கும் தற்காலிக ஏற்பாடுகள். ஒரு நாட்டை வெல்லலாம் அல்லது இரு நாட்டை வெல்லலாம். ஆனால், உலகமே எதிர்த்து நின்றபோது அவர் உருத்தெரியாமற் போனார்.

## 20ஸ்பெயின் உள்நாட்டுப் போர் (1939)

ஸ்பானிய உள்நாட்டுப் போர் உண்மையில் ஓர் உள்நாட்டுப் போரன்று. பன்னாட்டுப் போராகும். வெளிநாட்டுப் படைகள் மறைமுகமாகவும் நேரடியாகவும் அப்போரில் கலந்து கொண்டன. நாளடைவில் அது கம்யூனிசத்திற்கும் பாசிசத்திற்குமிடையில் நடைபெற்ற பலப்பரீட்சையாக மாறியது. 1939 மார்ச்சில் இப்போர் முடிவடைந்தது. அவ்வாண்டு செப்டம்பரில் இரண்டாம் உலகப் போர் மூண்டது. இவ்விரு போர்களுக்கும் நெருங்கிய தொடர்பிருப்பதாகக் கருதப்படுகிறது. ஏனென்றால் இரண்டாம் உலகப் போரில் எதிரெதிர் நின்று போரிட்ட பாசிச மற்றும் கம்யூனிச அரசுகள்தான் இப்போரிலும் பங்கு பெற்றன. எனவேதான் அது இரண்டாம் உலகப்போரின் இறுதி ஒத்திகை என வருணிக்கப்படுகிறது.

**ஸ்பெயின் அரசியல் நிலை (1921 – '31) :**

ஸ்பெயின் குடியாட்சி முறையைக் கொண்ட நாடு. அந்நாட்டு மன்னர் பதிமூன்றாம் அல்போன்சோ திறமையற்றவர். அவரால் நாட்டில் எழுந்த பிரச்சனைகளைச் சமாளிக்க இயலவில்லை. ஸ்பானியப் படையை மொராக்கோவிலுள்ள ரிவ் இன மக்கள் **1921–**ல் அனுவல் என்ற இடத்தில் படுதோல்வியுறச் செய்தனர். இதனால் மக்கள் மன்னர் மீது நம்பிக்கை இழந்தனர். இந் நிலையில் **1923–**ல் டிரிவேரா என்ற தளபதி ஆட்சியைக் கைப்பற்றினார். மன்னர் வெறும் பொம்மையாகவே இருந்தார். அதிகாரம் முழுவதும் டிரிவேராவிடமிருந்தது. **1931** வரை அவர் இராணுவ சர்வாதிகாரியாக ஆட்சி புரிந்தார்.

**குடியரசு நிறுவப்படல் :**

இராணுவ சர்வாதிகாரியான டிரிவேரா, கார்டெஸ் என்ற ஸ்பானிய பாராளுமன்றத்தைக் கலைத்தார். மக்கள் உரிமைகள் பலவற்றைப் பறித்தார். தொழிலாளர்களை ஒடுக்கினார். இந்த இராணுவ வர்வாதிகார ஆட்சி மக்களுக்கு விரைவில் கசந்துவிட்டது. அதிருப்தியடைந்த மக்கள் கிளர்ச்சியிலறங்கினர். எனவே, **1931–**ல் டிரிவேரா பதவி விலகினார். பெரன்கூர் என்பவர் ஆட்சி பொறுப்பேற்றார். அவர் மக்களை அமைதிப்படுத்தும் பொருட்டு நகராட்சிகளுக்கு தேர்தல் நடத்துமாறு ஆணையிட்டார். **1931–**ல் நடைபெற்ற நகராட்சித் தேர்தல்களில் குடியரசுவாதிகள் வெற்றி பெற்றனர். மக்களின் கருத்து, குடியரசுக்கு ஆதரவாக இருப்பதை அறிந்த பொம்மை மன்னர் அல்போன்சா பிரான்சிற்கு ஓடிவிட்டார். உடனே ஸ்பெயின் குடியரசானது. ஸமோரா (Zamora) என்பவர் குடியரசுத் தலைவரானார்.

**அனைத்துத் தொழிலாளர்களின் ஜனநாயக குடியரசு :**

அதனைத் தொடர்ந்து நடைபெற்ற தேர்தலில் கம்யூனிஸ்டுகளும் சோஷலிஸ்டுகளும் குடியரசுவாதிகளும் வெற்றி பெற்றனர். மானுவல் அஸானா என்பவர் குடியரசுத் தலைவரானார். ஸ்பெயினில் அனைத்துத் தொழிலாளர்களின் ஜனநாயகக் குடியரசு நிறுவப்பட்டது. அப்புதிய அரசு தீவிர சீர்திருத்தங்களைக் கொண்டு வந்தது. இதுவரை திருச்சபை அரசியலில் அனுபவித்து வந்த சலுகை உரிமைகள் பறிக்கப்பட்டன. சமயயம முற்றிலும் அரசியலிலிருந்து பிரிக்கப்பட்டது. திருச்சபை நிலங்கள் நிலமற்ற குடியானவர்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டன. கல்வி மீது திருச்சபை கட்டுப்பாடு அகற்றப்பட்டது.

குடியரசின் தீவிர சீர்திருத்தங்கள் பழைமைப் பற்றாளர்களுக்குப் பிடிக்கவில்லை. குறிப்பாக இராணுவத் தளபதிகள் அதனை எதிர்த்தனர். அதனால் படைத் தளபதிகள் பலர் கட்டாய ஓய்வு அளிக்கப்பட்டனர். வேறு சிலர், தொலைதூர இடங்களுக்கு மாற்றப்பட்டனர்.

ஸ்பெயினில் பாராளுமன்ற மக்களாட்சி முறை வேரூன்றவில்லை. ஏனென்றால் தனிமனித உரிமைகளையும் மக்களாட்சி முறைமைகளையும் விரும்பும் நடுத்தர வர்க்கத்தினர் ஸ்பெயினில் குறிப்பிடத்தக்க அளவு வலிமை பெறவில்லை. எனவே, மக்களாட்சி முறை தோல்வியுற்றது.

**உள்நாட்டுப் போருக்கு இட்டுச் சென்ற சூழ்நிலை :**

விரைவில் குடியரசுவாதிகளுக்கு எதிராக அதிருப்தியாளர்கள் பலர் ஒன்று திரண்டனர். படைத் தளபதிகள், திருச்சபை ஆதரவாளர்கள், நிலப்பிரபுக்கள், கம்யூனிச எதிர்ப்பாளர்கள் ஒன்று திரண்டனர். இரு ஆண்டுகளுக்குப் பின் நடைபெற்ற தேர்தல்களில் இந்த அணியினர் கணிசமான இடங்களைப் பெற்றனர். எந்தக் கட்சியும் அறுதிப் பெரும்பான்மை பெறாததால், வலதுசாரிகளின் கூட்டு அமைச்சரவை நிறுவப்பட்டது. இந்த அரசு முந்திய அரசின் சோஷலிச சீர்திருத்தங்களை இரத்து செய்தது. அதனால் மூண்ட குழப்பங்களை கடுமையான முறையில் அடக்கியது. அதனால் கேட்டலோனியா மாநிலம் தனது சுதந்திரத்தைப் பிரகடனம் செய்தது. பாராளுமன்றத்தினுள் உறுப்பினர்கள் ஒருவரையொருவர் தாக்கிக்கொண்டனர்.

பாராளுமன்றம் கலைக்கப்பட்டு **1936**–ல் தேர்தல் நடைபெற்றது. இத்தேர்தலில் கம்யூனிஸ்டு சார்பான இடதுசாரிகள் வெற்றி பெற்றனர். வலதுசாகள் அரசு எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். அரசியல் படுகொலைகள் அன்றாட நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். மாட்ரிட் நகரில் ஒரு உயர் போலீஸ் அதிகாரி கொல்லப்பட்டார். இது வலதுசாரிகளின் செயல் என சந்தேகிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து வலதுசாரிகளின் தலைவராகக் கருதப்பட்ட காலவோ சொட்டேலோ என்பவர் கொல்லப்பட்டார். இதுவே உள்நாட்டுப் போருக்கு உடனடிக் காரணமாயிற்று.

**உள்நாட்டுப் போர் (1936 – ’39) :**

ஸ்பானிய மொராக்கோவில் உள்ள படைப்பிரிவினர் அரசுக்கெதிராகப் புரட்சிக்கொடி தூக்கினர். இந்தச் சந்தர்ப்பத்தை எதிர்நோக்கியிருந்த பிராங்கோ என்ற தளபதி, அக்கலகத்திற்கு தலைமை தாங்க முன்வந்தார். அங்கிருந்து மொராக்கோ

வந்தார். பின் அங்குள்ள படை வீரர்களுடன் ஸ்பெயினில் வந்து இறங்கினர். அவர் பாசீச கோட்பாட்டில் நம்பிக்கை கொண்டனர். எனவே, பர்கோஸ் என்ற இடத்தில் பாசீச அரசை நிறுவினார். பிரான்கோ, ஸ்பானிய அதிபர் என அறிவிக்கப்பட்டார். உள்நாட்டுப் போர் தொடங்கியது. தொடக்கத்தில் பிராங்கோ தோல்வியைத் தழுவினார். **1937** மார்ச்சில் குவாடலா ஜாரா என்ற இடத்திலும் மே....... பார்சிலோனோ நகரிலும் டிசம்பரில் டெருயஸ் என்ற இடத்திலும் குடியரசுப் படையினர் வெற்றி பெற்றனர். எனினும் ஸ்பெயினில் பெரும்பகுதி பிராங்கோ ஆதிக்கத்தின் கீழ் இருந்தது.

**வெளிநாட்டினர் தலையீடு :**

**i) இத்தாலி :**

பிராங்கோ தம்மை வெளிப்படையாக ஒரு பாசிஸ்ட் என்று அறிவித்ததால் இத்தாலிய பாசிஸ்ட் கட்சித் தலைவர் முசோலினி, அவருக்கு உதவி புரிய முன்வந்ததில் வியப்பில்லை. முசோலினி அவ்வாறு உதவி புரிய முன்வந்ததற்கு மேலும் இரு காரணங்கள் உள்ளன.

முதலாவதாக, ''மத்திய தரைகடல் நமது கடல்'' என்று எண்ணிய முசோலினி, அக்கடலின் மேற்கில் ஒரு கம்யூனிச அரசு உருவாவதை சிறிதும் விரும்பவில்லை. அங்கு ஒரு பாசிச அரசு உருவானால் அது இத்தாலியின் பாதுகாப்பிற்கு உகந்ததாயிருக்கும் எனக் கருதினர்.

i) இரண்டாவதாக, பிரான்சிற்குத் தெற்கே ஒரு பாசிச அரசு உருவவாக உதவி புரிவதன் மூலம் பிரான்சின் கவனம் தன் தெற்கு எல்லையில் நிலைத்திருக்கச் செய்யமுடியும். அதனால் இத்தாலி பிரான்சை நிர்ப்பந்தித்து பல அரசியல் ஆதாயங்கள் பெற முடியும்.

ii) ஜெர்மனியும், ஸ்பெயின் உள்நாட்டுப் போரில் இத்தாலியின் கொள்கைகளையே கடைப்பிடித்தது. பிரான்சின் கவனத்தை தெற்கு எல்லையில் நிலைத்திருப்பது தனது பாதுகாப்பு நடவடிக்கைக்கு நல்லது என்று கருதியது. எனவே, பிராங்கோவின் அரசை அங்கீகரித்ததுடன் **15,000** பேர் கொண்ட படையையும், போர் விமானங்களையும், விமானிகளையும் அனுப்பியது.

iii) ஸ்பெயின் குடியரசிற்கு உறுதியான ஆதரவும் உதவியும் அளித்த ஒரே வல்லரசு ரஷ்யாதான். ரஷிய உதவியினால்தான் தொடக்கத்தில் குடியரசுப் படையினர் வெற்றி பெற முடிந்தது.

பிற நாடுகளில் உள்ள முற்போக்குவாதிகளும் கம்யூனிஸ்ட்டுகளும் தனிப்பட்ட முறையில் தொண்டர்களை அனுப்பி உதவினர்.

**பிரிட்டன், பிரான்சு நிலை :**

வல்லரசுகளான பிரிட்டனும், பிரான்சும் ஸ்பெயின் உள்நாட்டுப் போரில் தலையிடாது நடுநிலை வகித்தன. இரு நாட்டு அரசுகளும் ஸ்பெயினில் ஒரு கம்யூனிச அரசு உருவாவதை விரும்பவில்லை. அதே போல் ஒரு பாசிச அரசு உருவாவதையும் விரும்பவில்லை. எனவே, நடுநிலை வகித்தன. அதே சமயத்தில் ஜெர்மனியும், இத்தாலியும் பிராங்கோவிற்கு உதவுவதைக் கண்டும் காணாதவாறும் இருந்துவிட்டன. அவை ஸ்பெயின் உள்நாட்டுப் போரில் தலையிடுவதை தடை செய்ய எவ்வித முயற்சியும் எடுக்கவில்லை. அவர்களது நடுநிலை பிராங்கோவிற்கே சாதகமாக இருந்தது. உண்மையில் பிரிட்டனும், பிரான்சும் அடுத்த வீட்டுச் சண்டையை வேடிக்கை பார்க்கும் அண்டை வீட்டுக்காரர்போல் நடந்துகொண்டன.

**பன்னாட்டுக் கழகத்தின் தலையிடாத் தீர்மானம் :**

தனது உள்நாட்டுப் போரில் ஜெர்மனியும், இத்தாலியும் வெளிப்படையாக பிராங்கோவிற்கு உதவி புரிந்தது ஆக்கிரமிப்பிற்கு சமமானது. எனவே, அதனைத் தடுத்து நிறுத்த வேண்டும் என ஸ்பெயின் குடியரசு பன்னாட்டுக் கழகத்தில் முறையிட்டது. ஸ்பெயின் உள்நாட்டுப் போர் அந்நாட்டின் சொந்த விவகாரம், அதில் வெளிநாட்டினர் தலையிடக் கூடாது என பன்னாட்டுக் கழகம் தீர்மானம் இயற்றியது. பிற நாடுகள் தலையிடுகிறார்களா என்று கண்காணிக்க பன்னாட்டுக் கழகம் தலையிடாக் குழுவை நிறுவியது. இக்குழுவில் பிரிட்டன், பிரான்ஸ் நாடுகளுடன் ஜெர்மனியும், இத்தாலியும் இடம் பெற்றிருந்தன. எனவே, அக்குழு வெளிநாட்டுத் தலையிடலைத் தடுக்க இயலாது போனதில் வியப்பில்லை.

**உள்நாட்டுப் போரின் முடிவு :**

போரின் தொடக்கத்தில் வெற்றி பெற்ற குடியரசுப் படை **1938–**ற்குப் பின் தோல்வியைத் தழுவியது. ஜெர்மனி மற்றும் இத்தாலி நாடுகளின் படைக்கல உதவி பெற்ற பிராங்கோ கேடலோனிய மாநிலத்தைத் தாக்கி அதன் தலைநகரான பார்சிலோனாவைக் கைப்பற்றினார். மறு ஆண்டில் குடியரசுத் தலைவர் மனுவேல் அஸானா பதவி துறந்து பிரான்சிற்குத் தப்பியோடினார். **1939** மார்ச்சில் மாட்ரீட்,

லாவன்சியா ஆகிய முக்கிய நகரங்கள் வீழ்ந்தன. உடனே குடியரசுப் படைகள் பிராங்கோவிடம் சரணடைந்தன. பிராங்கோ ஸ்பெயினில் எதிர்ப்பற்ற ஏக அதிபர் ஆனார். பிரிட்டனும், பிரான்சும் தங்கள் நடுநிலை நாடகத்தை உடனே முடித்துக் கொண்டு பிராங்கோ அரசை அங்கீகரிக்க விரைந்தன.

**திறனாய்வு :**

அபிசீனிய ஆக்கிரமிப்பில் வெற்றி பெற்ற இத்தாலிக்கு ஸ்பானிய உள்நாட்டுப் போர் தனது கொள்கையைத் தொடர்ந்து செயல்படுத்த நல்லதோர் வாய்ப்பாக அமைந்தது. ஆஸ்திரிய இணைப்பினால் அகமகிழ்ந்த ஹிட்லருக்கு இது புதிய உற்சாகமளித்தது. முசோலினி அல்பேனியாவை ஆக்கியரமிக்கத் துணிந்தார். ஹிட்லர் செக்கோஸ்லோவாகியாவை விழுங்கி போலந்தை ஆக்கிரமிக்கத் துணிந்தார். பிரிட்டனும் பிரான்சும் நேரிடையான போருக்குத் தயாராய் இல்லை. சர்வதேச பொறுப்புகளை நிறைவேற்றத் தயங்குகின்றன என்ற உண்மையைத்தான் ஸ்பெயின் நாட்டுப் போர் இத்தாலிக்கும் ஜெர்மனிக்கும் எடுத்துக் காட்டியது. மேலும் ஆக்கிரமிப்பில் ஈடுபட அவற்றிற்கு ஊக்கமளித்தது.

ஸ்பெயின் குடியரசிற்கு உதவிய ஒரே நாடான ரஷ்யா, மேற்கு வல்லரசுகளின் நடுநிலை போக்கு கண்டு வெறுப்புற்றது. அவை கம்யூனிசத்திற்கும் பாசீசத்திற்கும் மோதல் ஏற்படும்போது அதில் எது அழிந்தாலும் நல்லதுதான் என்ற கண்ணோட்டத்தில் வேடிக்கை பார்க்க விரும்புகின்றன என்று உணர்ந்தது. எனவே பாசீசத்திற்கு எதிராக தன்னோடு ஒருக்காலும் அவை கூட்டுச் சேராது என்றும் புரிந்துகொண்டது. தனது இந்த ஆபத்தான தனிமை நிலை கண்டு அதிர்ச்சியுற்ற ரஷ்யா நாஸிசத்தோடு உடன்பாடு காண முடிவு செய்தது.

பன்னாட்டுக் கழகம் வெறும் தீர்மானங்களை இயற்றும் கழகமாக இருந்ததேயன்றி, ஆக்கிரமிப்பை அகற்றும் கழகமாக இயங்கவில்லை. அதாவது, கூட்டுப் பாதுகாப்புத் திட்டம் வெறும் ஏட்டுச் சுரைக்காய் என்பது நிரூபணமானது.

ஸ்பெயின் உள்நாட்டுப் போரில் ரஷியா, ஜெர்மனி, இத்தாலி முதலிய வல்லரசுகள் தலையிட்டதால் அது ஒரு பன்னாட்டுப் போராகவே நடைபெற்றது. ‘‘விரைவில் பெரியதொரு மேடையில் அரங்கேறுவதற்கு இருந்த நாடகம் ஒன்றின் இறுதி ஒத்திகையாக’’ இருந்தது.

**21.இரண்டாம் உலகப் போர் (1939 – ’45) –**

**காரணங்கள் :**

முதல் உலகப் போர் பிரானசின் பழிவாங்கும் உணர்ச்சினால் மூண்டது என்றால் இரண்டாம் உலகப் போர் ஜெர்மனியின் பழிவாங்கும் உணர்ச்சியினால் மூண்டது என்று கூறலாம். ஹெய்சரின் தலைமையில் படை வலிமைமிக்க ஜெர்மனி உருவானது தான் இரண்டாம் உலகப் போருக்குக் காரணமாயிருந்தது. போரற்ற உலகை உருவாக்குவதற்காக நடைபெறும் போர் என்று முதல் உலகப் போரைப்பபற்றி கூறப்பட்டுள்ளது. ஆனால் அந்தப் போரின் முடிவில் செய்துகொள்ளப்பட்ட அமைதி ஒப்பந்தமே அடுத்த உலகப் போருக்கு அடிப்படையை அமைத்துக் கொடுத்தது. எனவே இரண்டாம் உலகப் போருக்கான வித்து இருபது ஆண்டிற்கு முன்னரே ஊன்றப்பட்டுவிட்டது. இருபது ஆண்டுகால உலக நிகழ்ச்சிகள் அது காட்டு மரமாக வளர்ச்சியடையும் சூழ்நிலையை அமைத்துக் கொடுத்தன. அந்த சூழ்நிலைகள் எவை ?

**1. வெர்செயில்ஸ் ஒப்பந்தம் :**

வெர்செயில்ஸ் ஒப்பந்தம் வரையப்படும்போது ஜெர்மானியர் தமது கருத்தினைத் தெரிவிப்பதற்கு வாய்ப்பு அளிக்கப்படவில்லை. அமைதி மாநாட்டிற்கு ஜெர்மனி அழைக்கப்படவே இல்லை. வெற்றி பெற்ற நாடுகள் தாங்களாகவே ஒரு ஒப்பந்தத்தைத் தயாரித்து அதனை ஏற்றுக் கொள்ளுமாறு கட்டாயப்படுத்தினர். ஏற்றுக்கொள்ளாவிட்டால் மீண்டும் போர் என்று அச்சுறுத்தியே ஜெர்மானியரை ஒப்புக்கொள்ளுமாறு செய்தனர்.

அந்த ஒப்பந்தத்தினால் ஜெர்மானியர் 6 மில்லியன் மக்களை இழந்தனர். 25,000 சதுர மைல் நிலத்தை பறிகொடுத்தனர். 65 சதவிகித இரும்புச் சுரங்கங்களையும், 45 சதவிகித நிலக்கரி சுரங்கங்களையும் தாரை வார்க்க நேரிட்டது. 9 மில்லியன் சதுர மைல் குடியேற்ற நாடுகளையும் அதில் வாழ்ந்த 13 மில்லியன் மக்கள் தொகையையும் பறிகொடுத்தனர்.

ஜெர்மனியோடுதான் இணைந்திருப்போம் என்று கூறிய 90 சதவிகித மக்கள் வாழ்ந்திருந்த ஸார் பள்ளத்தாக்கும் பறிமுதல் செய்யப்பட்டது. 2 மில்லியன் ஜெர்மானியர் வெளிநாடுகளில் சிறுபான்மையினராக அவதிப்படும்படி விடப்பட்டனர். ரைன்லாந்தில் அன்னியப் படைகள் நிறுத்தப்பட்டன.

எல்லாவற்றிற்கும் மேலாக, ஜெர்மனி போர்க் குற்றவாளியாக ஆக்கப்பட்டது. போருக்கான முழுப் பொறுப்பும் ஜெர்மனி மீது சுமத்தப்பட்டது. எனவே போரின் முழுச் செலவையும் (660 கோடி டாலர்) இழப்பீடாகத் தருமாறு ஜெர்மனி கோரப்பட்டது.

மேலும் ஜெர்மனியின் நிலப்பரப்பில் ஐந்திலொரு பாகம் அண்டை நாடுகளால் அபகரிக்கப்பட்டது. கீழ்க்கண்டவாறு அதன் பிரதேசங்கள் அண்டை நாடுகளுக்குப் பிரித்துக் கொடுக்கப்பட்டன.

| | | |
|---|---|---|
| யூபன், மால்மடி மோனஸ்ரெட் | – | பெல்ஜியம் |
| அல்சாஸ், லொரைன் | – | பிரான்சு |
| வட ஷெல்ஸ்விக் | – | டென்மார்க் |
| போஸன், சைபீரியாவின் பெரும் பகுதி, மேற்கு பிரஷ்யா, டான்சிக், கடல்வழிப்பாதை | – | போலந்து |
| ஸார் பகுதி | – | 15 ஆண்டு சர்வதேச சங்க நிர்வாகம் |
| மெமல் | – | லிதுவேனியா |

மற்றும் ஜெர்மன் குடியேற்றங்கள் அனைத்தும் அநியாயமாய் பறிமுதல் செய்யப்பட்டன. நதிகள் சர்வதேசமயமாக்கப்பட்டன. படைகள் அடியோடு குறைக்கப்பட்டன.

1923–ல் இழப்பீட்டுத் தவணையை தரத் தவறியதற்காக ஜெர்மனியின் தொழில் வளமிக்க ரூர் பள்ளத்தாக்கை பிரான்சும் பெல்ஜியமும் ஆக்கிரமித்தன.

தங்களை இழிவுபடுத்திய வெர்செயில்ஸ் ஒப்பந்தத்தை கிழித்தெறிய ஜெர்மானியர் செய்த முயற்சிதான் இரண்டாம் உலகப் போருக்கு வழிவகுத்தன.

**2. பன்னாட்டுக் கழகத்தின் பலவீனம் :**

உலக நாடுகளிடையே ஒத்துழைப்பை வளர்த்து நிரந்தர அமைதியை நிலைநாட்டுவதற்கென நிறுவப்பட்ட பன்னாட்டுக் கழகம் வலிமையற்றிருந்தது. அதற்குத் தன் தீர்மானங்களை உறுப்பு நாடுகள் மீது செயல்படுத்துவதற்கான அதிகாரமோ, படை பலமோ இல்லை. மேலும் அது உலக நாடுகளனைத்தையும் உறுப்பினராகக் கொண்டிருக்கவில்லை.

**3. கூட்டுப் பாதுகாப்புக் கொள்கையின் தோல்வி :**

ஆக்கிரமிப்பு செய்த நாடுகளை வழிக்கு கொண்டு வருவதற்கு கழகம் நம்பியிருந்த ஒரே ஆயுதம் கூட்டுப் பாதுகாப்புக் கொள்கைதான். அதன்படி ஆக்கிரமிப்பு செய்த நாடுகள் மீது உறுப்பினர்கள் கூட்டாக நடவடிக்கை எடுக்க வேண்டும். **1931–ல்** ஜப்பான் மஞ்சூரியாவை ஆக்கிரமித்தபோது கூட்டுப் பாதுகாப்பு கொள்கை செயல்படுத்தப்படவில்லை. **1935–ல்** இத்தாலி அபிசீனியாவை ஆக்கிரமித்தபோது கூட்டுப் பாதுகாப்பு அரைகுறையாகச் செயல்படுத்தப்பட்டது. எனவே இரண்டு ஆக்கிரமிப்புகளையும் அகற்ற இயலவில்லை. அதனால் அமைதிக்கான வாய்ப்புகள் குறைந்தன.

**4. படைக்குறைப்பு முயற்சிகள் தோல்வி :**

படைப்பெருக்கம் போருக்கு வழிவகுக்கும். எனவே படை குறைப்புச் செய்ய வேண்டும் என பன்னாட்டுக் கழகம் கூறியது படை குறைப்பிற்காக **1923–ல்** ஜெனிவாவில் மாநாடு ஒன்றும் கூட்டப்பட்டது. அம்மாநாட்டில் படைக்குறைப்பு பற்றிய ஒருமித்த கருத்து உருவாகவில்லை. மாநாடு தோல்வியில் முடிந்தது. அதன்பின் நாடுகள் படைப் பெருக்கத்தில் ஈடுபட்டன. அது போர் வாய்ப்பினை அதிகரித்தது.

**5. வல்லரசுகளின் தாஜா செய்யும் போக்கு :**

ஹிட்லரும், முசோலினியும் சர்வதேச நெறிமுறைகளை காற்றில் பறக்கவிட்டுவிட்டு ஆதிக்க விஸ்தரிப்பிலும், ஆக்கிரமிப்பிலும் ஈடுபட்டபோது, பிரிட்டனும் பிரான்சும் ஒரு உறுதியான நிலையை மேற்கொள்ள தயங்கின. ஹிட்லர், முசோலினியை சற்று அனுசரித்துப் போக விரும்பினர். இருவரும் சற்று விட்டுக் கொடுத்து அமைதி காண முயன்றனர். இதுவே **தாஜா செய்யும் கொள்கை (Policy Appeasement)** எனப்படுகிறது.

எடுத்துக்காட்டாக, **1936–ல்** ஹிட்லர் ரைன்லாந்திற்கு தமது படைகளை அனுப்பியபோது, பிரிட்டனும், பிரான்சும் உடனே எதிர் நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்ததால், ஹிட்லர் மேலும் வெர்செயில்ஸ் ஒப்பந்தங்களை மீறுவதற்குத் தயங்கியிருப்பபார். அதேபோல் மியூனிச்சில் பிரிட்டனும், பிரான்சும் விட்டுக் கொடுத்து துமைதி காண விரும்பின. இதுவும் ஆக்கிரமிப்பை ஊக்குவித்ததேயன்றி அமைதியை நிலை நாட்டவில்லை.

**6. ரஷியா மீது அவநம்பிக்கை :**

சுடட்டன்லாந்து பிரச்சனை மற்றும் ஸ்பெயினின் உள்நாட்டுப் போர் ஆகியவற்றில் ஹிட்லர், முசோலினி ஆகியோரின் ஆக்கிரமிப்பு நோக்கம் தெளிவாகத் தெரிந்தவுடன் பிரிட்டன் ரஷியாவுடன் ஒரு ஒப்பந்தத்திற்கு வந்து கூட்டாக எதிர்ப்புத் தெரிவித்திருந்ததால் ஒரு வேளை அவர்கள் ஆக்கிரமிபப்பு முயற்சிகளை கைவிட்டிருக்கக்கூடும். துரதிருஷ்டவசமாக பிரிட்டனும், பிரான்சும் ரஷிய கம்யூனிசத்தையும், ஜெர்மன் நாஜிகத்தையும் ஒரே மாதிரியாகத்தான் பாவித்தன. இரண்டுமே ஒழிக்கப்படவேண்டியவை என்றே கருதின. நாஜிசத்தை தாஜா செய்தனர். நாஜிசத்தற்கும் கம்யூனிசத்திற்கும்தான் இறுதி மோதல் நிகழும். இதில் இரண்டுமே அழிந்துவிடும் என்று எதிர்பார்த்தனர். இத்தவறான கண்ணோட்டம் அவர்களை ரஷியாவுடன் ஒரு உடன்பாட்டிற்கு வரவிடாமல் தடுத்தது. போர் மூண்டபின் கூட்டு ஏற்படுத்த முயன்ற ஆர்வம், போருக்கு முன்பே இருந்திருந்தால் ஒரு வேளை போர் தவிர்க்கப்பட்டிருக்கலாம்.

**7. முசோலினியின் பங்கு :**

இரண்டாம் உலகப் போரை உண்டு பண்ணியதில் முசோலினிக்கு முக்கியப் பங்கு உண்டு. அவரது பாசீச சர்வாதிகார அரசு பண்டைய ரோமானியப் பேரரசின் பெருமையைப் புதுப்பிப்பதை நோக்கமாகக் கொண்டிருந்தது. அதாவது, இத்தாலிக்கு மேலும் குடியேற்ற நாடுகள் தேவை என்பதை சொல்லாமல் சொன்னது. எனவே அபிசீனியாவை ஆக்கிரமித்தார். அதைக் கண்டித்த பன்னாட்டுக் கழகத்திலிருந்து வெளியேறினார். ஸ்பெயினின் உள்நாட்டுப் போரில் தலையிட்டார். அல்பேனியாவை ஆக்கிரமித்தார். ஜெர்மனி, ஜப்பானுடன் இணைந்து ரோம் – பெர்லின் – டோக்கியோ அச்சு உருவாக்கி கம்யூனிச எதிர்ப்பு அணியில் இணைந்தார். இந்த நிகழ்ச்சிகள் எல்லாம் இத்தாலியை இரண்டாம் உலகப் போர்க்களத்திற்கு இட்டுச் சென்றன.

**8. ஹிட்லரின் பங்கு :**

இரண்டாம் உலகப் போருக்கான பெரும் பங்கு ஹிட்லருக்கே உரியது என்பதில் இருவித கருத்துக்களுக்கு இடமிருக்க முடியாது. அவரது நாஜிசக் கோட்பாடு, ஆரிய இனப் பெருமையை பறைசாற்றியது. அகன்ற ஜெர்மனியை ஏற்படுத்தத் தூண்டியது. இந்த இரண்டிற்கும் ஆக்கிரமிப்பு நோக்கங்கள்தாம் அடிப்டையாய் இருந்தன. மற்றும் ஹிட்லரின் வெளிநாட்டுறவின் ஒவ்வொரு செயலம் ஜெர்மனியை மட்டுமல்ல, உலகையே போர்ப் படுகளத்திற்கு அழைத்துச் சென்றனது.

**அவைகள் :**

**i)** ஜெனீவா படைக்குறைப்பு மாநாட்டிலிருந்து வெளியேறியது.

**ii)** பன்னாட்டுக் கழகத்திலிருந்து வெளியேறியது.

**iii)** படைப் பெருக்கத்தில் ஈடுபட்டது.

**iv)** ரைன்லாந்திற்குப் படை அனுப்பியது.

**v)** கம்யூனிச எதிர்ப்பு அணி (Anti-Comintern Pact) உருவாக்கியது.

**vi)** ஆஸ்திரியாவை இணைத்தது.

**vii)** சுடட்டன்லாந்தை ஆக்கிரமித்து செக்கோஸ்லோவாகியாவை அபகரித்தது.

**viii)** ரஷ்யாவுடன் போர் மறுப்பு ஒப்பந்தம் செய்தது.

**ix)** டன்சிக் மற்றும் போலாந்து கடல்வழிப் பாதையை ஒப்படைக்குமாறு கோரியது.

**ரோம் – பெர்லின் – டோக்கியோ அச்சு :**

தனது நோக்கம் கம்யூனிச எதிர்ப்புதான் என்பதை மேற்கு வல்லரசுகளுக்குத் தெரிவிக்கும் வகையிலும், ரஷியாவை தனிமைப்படுத்தும் நோக்குடனும் இத்தாலியுடனும், ஜப்பானுடனும் இணைந்து ஜெர்மனி கம்யூனிச எதிர்ப்பு ஒப்பந்தம் செய்து கொண்டது. அதன் விளைவாக ரோம் – பெர்லின் – டோக்கியோ அச்சு உருவானது. பாசீச நாடுகளின் இந்தக் கூட்டு, மோதலுக்கான முன்னேற்பாடாக அமைந்தது. இதற்கு எதிரணியாக பிற வல்லரசுகளின் கூட்டு ஏற்பட்டிருந்ததால் வல்லமைச் சமநிலை ஏற்பட்டிருக்கும். ஆனால் அவ்வாறு ஏற்படாததால் அச்சு நாடுகள் ஆக்கிரமிப்பில் துணிந்து ஈடுபட தயாராயின.

**போரின் தொடக்கம் :**

ரஷியாவுடன் **1939–**ல் போர் மறுப்பு ஒப்பந்தம் செய்தவுடன் போலந்தை ஆக்கிரமிக்கும் முயற்சியில் ஹிட்லர் துணிவுடன் இறங்கினார். அதற்கு முன்னேற்பாடாக போலந்து கடல்வழிப் பாதையையும், டன்சிக் துறைமுகத்தையும் ஒப்படைக்குமாறு கோரினார். போலாந்து அதற்கு இணங்காததால், **1939** செப்டம்பர் முதல் தேதி இரவில் நாஜிப் படைகள் பேலந்தினுள் நுழைந்தன. ஏற்கனவே மியூனிச்சில் விட்டுக்கொடுத்து தாஜா செய்யும் முயற்சியில் தோல்வியுற்ற பிரிட்டனும், பிரான்சும்,

போலந்து விவகாரத்தில் உறுதியான நிலையை மேற்கொள்ள முடிவுகட்டின. எனவே, போலந்தைவிட்டு 24 மணி நேரத்திற்குள் வெளியேறுமாறு இறுதி எச்சரிக்கை விடுத்தன. இதனை ஹிட்லர் பொருட்படுத்தாததால் பிரிட்டனும் பிரான்சும் ஜெர்மனி மீது போர்ப் பிரகடம் செய்தன. இரண்டாம் உலகப் போர் தொடங்கியது.

**போரின் விளைவுகள் :**

இரண்டாம் உலகப் போர் ஒரு முழுமையான போர் (Total War). அரசு, மக்கள் மற்றும் சமூகம் ஆகியவற்றின் சக்தி சாதனங்கள் அனைத்தும் போரில் பயப்டுத்தப்பட்டன. போர்முனை மட்டுமல்ல, போர் நடைபெறாத உள்நாட்டுப் பகுதிகளும் சேதப்படுத்தப்பட்டன. போர் வீரர்கள் மட்ட்மல்லாது, போரில் ஈடுபடாது குடும்பப் பணியில் ஈடுபட்டிருந்த பெண்களும், கல்வி கற்றுக் கொண்டிருந்த குழந்தைகளும் கொல்லப்பட்டனர். எனவே, போரில் மிக முக்கிய விளைவு அழிவுதான். ஏறத்தாழ இரண்டரைக் கோடிப் பேர் கொல்லப்பட்டனர். மூன்றரைக் கோடிப் பேர் காயமடைந்தனர். ஆயிரம் மில்லியன் டாலர் போரில் வீணாக்கப்பட்டிருக்கும் என மதிப்பிடப்பட்டது. ஆனால், போரினால் ஆலைகள், இல்லங்கள், சாலைகள், பாலங்கள், நகரங்கள் ஆகியவற்றிற்கு ஏற்பட்ட சேதங்களை மதிப்பிட முடியாது. ஜெர்மனி, ரஷியா, செக்கோஸ்லோவாக்கியா, ஹங்கேரி, போலந்து, இங்கிலாந்து ஆகிய நாடுகளில் நாசமாக்கப்படாத நகரங்களே கிடையாது என்று கூறும் அளவிற்கு அவை சேதப்படுத்தப்பட்டன. எல்லாவற்றிற்கும் மேலாக ஹிரோணிமா மற்றும் நாகசாகியில் அணுகுண்டுகளால் ஏற்பட்ட அழிவு, மனித குலத்தையே அதிர்ச்சிக்குள்ளாக்கியது.

இரண்டாவதாக, இத்தாலியிலும், ஜெர்மனியிலும் தோன்றி மனித குலத்தை அச்சுறுத்திய சர்வாதிகாரக் கோட்பாடுகளான பாசிசமும், நாஜிசமும் அடியோடு அழிந்தன. அவை மீண்டும் தலைதூக்கவே இல்லை. இத்தாலியில் குடியரசும், ஜெர்மனியில் நேச நாடுகளின் ஆதிக்கமும் நிலைநாட்டப்பட்டன.

மூன்றாவதாக, ஐரோப்பாவின் சக்தி சமநிலை தலைகீழகாக மாறிவிட்டது. பிரிட்டனும், பிரான்சும் வலிமையிழந்தன. அவற்றிற்கு வல்லரசு அந்தஸ்து அளிக்கப்பட்டாலும், உலக அரசியலில் அவற்றிற்குள்ள செல்வாக்கு குறைத் தொடங்கியது. ஜெர்மனியும், இத்தாலியும் தாழ்வுறச் செய்யப்பட்டன. ஐரோப்பாவில் ரஷியா ஒன்றுதான் வல்லரசு என அழைக்கப்பட தகுதி வாய்ந்த நாடாக இருந்தது. எனவே, ஐரேரப்பாவின் பக்திச் சமநிலையை சீர்செய்வதற்கு அமெரிக்கா ஐரோப்பிய

அரசியலில் தீவிர பங்கு பெறத் தொடங்கியது. அது தனித்தொங்கும் கொள்கையை முடிவாகக் கைவிட்டது.

நான்காவதாக, போரின்போது அச்சு நாடுகள் என்ற பொது எதிரியை எதிர்ப்பதற்கு தற்காலிகமாா பிரிட்டன், பிரான்சு, அமெரிக்கா ஆகிய நாடுகளுடன் ரஷ்யாவும் ஒருங்கிணைந்து நின்றது. பொது எதிரி மறைந்தபின் அவைகளிடையே பழைய கருத்து வேறுபாடுகள் தலைதூக்கின. அமெரிக்காவும், அதன் சார்பு நாடுகளும் சுதந்திர நாடுகள் அணியாகவும், ரஷ்யாவும் அதன் சார்பு நாடுகளும் கம்யூனிஸ்ட் அணியாகவும், கோட்பாட்டினடிப்படையில் இரு முகாம்களாகிவிட்டன. இரு முகாம்களுக்கிடையில் ‘‘இரும்புத் திரை’’ இறக்கப்பட்டது. எந்தவிதத் தொடர்பும் இல்லாமல் போய்விட்டது.

ஐந்தாவதாக, அமெரிக்கா மற்றும் ரஷிய அணிகளுக்கிடையில் போட்டி, பொறாமை, அச்சம், ஐயம் தலைதூக்கி ஒன்றையொன்று அழிக்க திட்டமிட்ட முயற்சியில் ஈடுபட்டன. இதனால் ‘‘கெடுபிடிப் போர்’’ சூழ்நிலை தோன்றியது. எந்த நேரத்தில் மற்றுமோர் உலகப்போர் தோன்றுமோ என்ற அச்சம் உலகைக் கவ்விக் கொண்டது.

ஆறாவதாக, உலக அரசியலில் ஐரோப்பிய ஏகாதிபத்தியங்களின் சகாப்தம் முடிந்துவிட்டது. உலகெங்கிலும் அவர்கள் நிறுவிய குடியேற்றங்களில் தேசிய உணர்வு தீவிரமடைந்து, விடுதலைப் போராட்டங்கள் நடத்தப்பட்டன. விரைவில் அந்தக் குடியேற்ற நாடுகள் எல்லாம் (இந்தியா, இலங்கை, பர்மா, இந்தோனேஷியா, பிலிப்பைன்ஸ்) விடுதலை பெற்றன. இன்னுமொரு போர் ஏற்பட்டால் மனித இனமே அழிந்து விடும் என்று அஞ்சிய அரசியல் தலைவர்கள் போர் வராமல் தடுத்து, அமைதியை நிலைநாட்ட மீண்டும் ஒரு பன்னாட்டு அமைப்பு உருவாக்கப்பட்டது. அதுதான் ஐக்கிய நாடுகள் சபையாகும்.

**22.போர்க்கால இராஜதந்திர மாநாடுகள்**

இரண்டாம் உலகப் போரின் இறுதியில் நேச நாடுகள் மகத்தான வெற்றி பெற்றதென்றால், அதற்கு முக்கியக் காரணம் அவற்றின் தலைவர்கள் அவ்வப்போது கூடி கலந்து பேசி ஒருங்கிணைந்த போர்த் திட்டத்தை வகுத்ததுதான். நேச நாட்டுத் தலைவர்களிடையே பல அடிப்படையான கருத்து வேறுபாடுகளும் கொள்கை மாறுபாடுகளும் இருந்தாலும், அவற்றையெல்லாம் தற்காலிகமாக மூட்டை கட்டி ஒதுக்கி வைத்துவிட்டு, வெற்றி ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு, திட்டங்களை வகுத்து

செயல்படுத்தினர். இரண்டாம் உலகப் போரின் முப்பெரும் தலைவர்களான அமெரிக்க அதபர் ரூஸ்வெல்ட், பிரிட்டிஷ் பிரதமர் வின்ஸ்டன் சர்ச்சில், ரஷ்ய தலைவர் ஸ்டாலின் ஆகியோரின் ராஜதந்திர அணுகுமுறைகளும் வெற்றிக்கு முக்கியக் காரணங்களாகும். இவர்களுள் ரூஸ்வெல்டும், சர்ச்சிலும் **1941–**ல் அட்லாண்டிக் பெருங்கடலிலும், **1943–**ல் கசாபிளாங்காவிலும் சந்தித்துப் பேசி, இராஜதந்திரத் திட்டங்களை வகுத்தனர். **1943–**ல் கெய்ரோவில் இவர்களுடன் சீன அதிபர் சியாங்கேஷேக்கும் கலந்துரையாடினார்.

**1943** இறுதியில் ரூஸ்வெல்ட், சர்ச்சில், ஸ்டாலின் ஆகியோர் டெஹ்ரானிலும், பின்னர் **1945–**ல் யால்டாவிலும் கூடிப்பேசி போர்த் திட்டங்களை வகுத்தனர். இறுதியில் ஐரோப்பியப் போர் முடிந்ததும் பாட்ஸ்டாமில் கூடி, போருக்குப் பின் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் பற்றியும் கலந்துரையாடினர்.

**அட்லாண்டிக் சாசனம் (1941) :**

**1941** ஆகஸ்ட் **14–**ல் பிரிட்டிஷ் பிரதமர் சர்ச்சிலும் அமெரிக்க அதிபர் ரூஸ்வெல்டும் அட்லாண்டிக் பெருங்கடலில் ‘‘செயின்ட் அகஸ்டா’’ என்ற கப்பலில் சந்தித்து உரையாடினார். அச்சமயத்தில் பிரிட்டன் போரில் படுதோல்வியடைந்து கொண்டிருந்தது. அமெரிக்கா போரில் இறங்கவில்லை. எனினும், உலக அரசியலில் அமைதி, மக்களாட்சி முறைமைகளில் ஒத்த கருத்தினைக் கொண்டிருந்தனர். அவற்றை ஊர்ஜிதப்படுத்த வேண்டும் என்பதற்காகத்தான் அவர்கள் சந்திக்க விரும்பினர். அத்தோடு போரில் தோல்வி மேல் தோல்வியடைந்து கொண்டிருந்த பிரிட்டனுக்கு அமெரிக்க உதவி தேவைப்பட்டது. எனவே, இரு தலைவர்களும் சந்தித்தனர். பின்னர், தாங்கள் என்ன பேசினோம் என்பதனை ஒரு அறிக்கை மூலமாக உலக மக்களுக்கு வெளியிட்டனர். அதுவே **‘‘அட்லாண்டிக் சாசனம்’’** எனப்பட்டது. அதில் உள்ள முக்கிய கருத்துக்கள் :

i) ஆக்கிரமிப்புக்கு எதிர்ப்பு.

ii) நிர்ணய உரிமைக் கேகட்பாட்டின்படி நாடுகள் தங்களுக்கு விருப்பமான சுதந்திர அரசை நிறுவிக் கொள்ளும் உரிமை.

iii) உலகில் நீதி, அமைதியை நிலைநாட்டுவதற்கு ஓர் அமைப்பை உருவாக்குதல்.

**திறனாய்வு :**

அமெரிக்காவும் பிரிட்டனும் உலக அமைதி பற்றி ஒரு பொதுவான கருத்தினைக் கொண்டுள்ளன என்பதை இது எடுத்துரைத்தது. அச்சமயத்தில் அமெரிக்கா அச்சு நாடுகளுக்கு எதிராகப் போரில் இறங்கவில்லை. போரில் இறங்காமல் நடுநிலைக் கொள்கையை கடைபிடிக்கப் போவதாக ரூஸ்வெல்ட் அமெரிக்க மக்களுக்கு உறுதி கூறியிருந்தார். எனினும், அவர் ஐரோப்பாவில் ஹிட்லரின் நாஜி ஜெர்மனி புரிந்த ஆக்கிரமிப்புகளை கண்டிக்கத் தவறவில்லை. நாடுகளுக்கு சுயநிர்ணய உரிமை உண்டு என்று வலியுறுத்தியதன் மூலம் ஏகாதிபத்தியங்களின் ஆதிக்கப்பிடியில் அவதியுறும் நாடுகளுக்கு விடுதலை வழங்கப்படும் என்ற எதிர்பார்பை ஏற்படுத்தியது. அதனால் இந்தியாவில் அட்லாண்டிக் சாசனத்தற்குப் பெரும் வரவேற்பிருந்தது. ஆனால், சாசனத்தை வெளியிட்டு நாடு திரும்பிய பிரதமர் சர்ச்சில் அட்லாண்டிக் சாசனம் இந்தியாவிற்கு பொருந்தாது என்று கூறி, தமது ஏகாதிபத்திய வெறியை வெளிப்படுத்தியது ஏமாற்றமளித்தது.

**கசாபிளாங்கா மாநாடு (1943) :**

**1941** டிசம்பரில் ஜப்பான் அமெரிக்காவிற்குச் சொந்தமான பெர்ல் துறைமுகத்தைத் தாக்கி அழித்ததால் அமெரிக்கா நடுநிலைக் கொள்கையைக் கைவிட்டு அச்சு நாடுகளுக்கு எதிராகப் போரில் இறங்கியது. அமெரிக்கப் படைகள் வட ஆப்பிரிக்காவில் இறங்கி பல வெற்றிகளைப் பெற்றன. இதற்கிடையில் ரஷ்யாவும் நாஜி ஜெர்மனிக்கெதிராகப் போரிலிறங்கிவிட்டது. இத்தகைய சூழ்நிலையில் புதிய வியூகங்களை வகுக்க அமெரிக்க அதிபர் ரூஸ்வெல்டும் பிரிட்டிஷ் பிரதமர் சர்ச்சிலும் வட மேற்கு ஆப்பிரிக்காவின் அட்லாண்டிக் கரையோரத்தில் உள்ள கசாபிளாங்கா என்ற இடத்தில் சந்தித்தனர். அச்சு நாடுகள் நிபந்தனையற்ற சரணாகதி அடையும்வரை போரை நடத்துவதென அத்தலைவர்கள் உறுதி பூண்டனர். அதுவே போரின் ஒரே குறிக்கோள் என்றும் அறிவித்தனர். தெற்கு மற்றும் மேற்கு ஐரோப்பிய படையெடுப்பு பற்றிய திட்டங்களும் வகுக்கப்பட்டன.

இப்போது அச்சு நாடுகளுக்கு எதிராகப் போர் புரிந்து கொண்டிருக்கும் அமெரிக்கா, ரஷ்யா, பிரிட்டன் ஆகிய நாடுகளின் வெளிநாட்டமைச்சர்கள் **1943** அக்டோபரில் ரஷியத் தலைநகரான மாஸ்கோவில் கூடி, போர்த் திட்டங்களை வகுத்தனர். போருக்குப் பின் உலகில் நிரந்தர அமைதியை நிலைநாட்ட, உலக நாடுகளின் அமைப்பு ஒன்றினை நிறுவவும் முடிவு செய்தனர்.

**கெய்ரோ மாநாடு (1943) :**

எகிப்தின் தலைநகராகிய கெய்ரோவில் **1943** நவம்பர் **22** முதல் **26** வரை அமெரிக்க அதிபர் ரூஸ்வெல்ட், பிரிட்டிஷ் பிரதமர் வின்ஸ்டன் சர்ச்சில், சீன அதிபர் சியாங்கேஷேக் ஆகியோர் சந்தித்துப் பேசினர். இரண்டாம் உலகப் போர் ஐரோப்பாவில் மட்டும் நடைபெறவில்லை. தூரக்கிழக்கில் அச்சு நாடுகளுள் ஒன்றான ஜப்பானை எதிர்த்தும் நடைபெற்றது. வல்லரசுகள் ஐரோப்பியப் போரில் தீவிரமாக ஈடுபட்டுக் கொண்டிருந்ததால் தூரக் கிழக்கில் சீனா மட்டும்தான் ஜப்பானை எதிர்த்துப் போர் புரிந்து கொண்டிருந்தது. இப்போது தூரக் கிழக்குப் போர் கொள்கைகளையும் திட்டங்களையும் வகுக்க, ரூஸ்வெல்டும், சர்ச்சிலும் சியாங்கேஷேக்குடன் பேச்சுவார்த்தை நடத்தினர். **1895–**லிருந்து தூரக்கிழக்கில் ஜப்பான் கைப்பற்றிய அனைத்துப் பகுதிகளும் மீட்கப்பட வேண்டும் என்றும் ஜப்பான் நிபந்தனையின்றி சரணாகதி அடையும் வரை போர் நடைபெறும் என்றும் அறிவிக்கப்பட்டது.

**டெஹ்ரான் மாநாடு (1943) :**

கெய்ரோ மாநாடு முடிந்தவுடன் ரூஸ்வெல்ட்டும் சர்ச்சிலும் ஈரானின் தலைநகரான னடஹ்ரானுக்குச் சென்று, அங்கு ரஷ்ய அதிபர் ஸ்டாலினைச் சந்தித்தனர். இந்த முப்பெரும் தலைவர்களும் முதன் முதலில் டெஹ்ரானில்தான் சந்தித்னர் என்பது குறிப்பிடத்தக்கது. இந்த மாநாடு நவம்பர் **28** முதல் டிசம்பர் முதல் தேதி வரை நடைபெற்றது. இம்மாநாட்டில் எடுக்கப்பட்ட முக்கிய முடிவுகள் :

**i)** மேற்கில் பிரிட்டனும் அமெரிக்காவும் இணைந்து இரண்டாம் போர் முனை ஒன்று தொடங்க வேண்டும் என்றும், அதில் குறைந்தபட்சம் **10** இலட்சம் போர் வீரர்கள் பங்கு பெற வேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

**ii)** இரண்டாம் போர் முனை தொடங்க வேண்டிய காலம், இடம் ஆகியவற்றை இரு வல்லரசுகளும் முடிவு செய்ய வேண்டும். ஆனால், அது பால்கன் வழியாக தொடங்கப்பட வேண்டியதில்லை என ஏற்றுக் கொள்ளப்பட்டது.

**iii)** போருக்குப் பின்னரும் மூன்று வல்லரசுகளிடையே இந்த ஒத்துழைப்பு நீடிக்க வேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது.

**iv)** நிரந்தர அமைதியை நிலைநாட்ட ஒரு நிறுவனம் நிறுவப்பட வேண்டும்.

**v)** ஜெர்மன் நீர்மூழ்கிக் கப்பல்களை முற்றிலும் ஒழித்துவிடவேண்டும் என்றும், ஜெர்மன் தொழிற்சாலைகளை ஆகாய விமானங்கள் மூலம் குண்டு வீசித்தாக்கி அழிக்க வேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

**vi)** போலந்தின் கிழக்கு எல்லை கர்சான்கோட்டிலிருந்து ஓடர் நதி வரை செல்ல வேண்டும்.

**vii)** கிழக்குப் பிரஷ்யாவிலுள்ள கோனிக்ஸ்பர்க், ரஷியாவிற்கு கொடுக்கப்படவேண்டும்.

**யால்டா மாநாடு (1945) :**

**1945** பெப்ரவரியில் கிரிமியா தீபகற்பத்திலுள்ள யால்டாவில் ஸ்டாலின், ரூஸ்வெல்ட், சர்ச்சில் ஆகிய முப்பெரும் தலைவர்களும் சந்தித்தனர். இப்போது வெற்றிகரமாக மேற்கில் நார்மண்டியில் இரண்டாம் போர்முனை தொடங்கப்பட்டு நேசநாட்டுப் படைகள் வெற்றிகரமாக முன்னேறிக்கொண்டிருந்தன. கிழக்கிலும் ரஷியப் படைகள் வெற்றி மேல் வெற்றி பெற்று, கிழக்கு ஐரோப்பிய நாடுகளை ஜெர்மனியின் ஆக்கிரமிப்பிலிருந்து விடுவித்துக் கொண்டிருந்தன. ஜெர்மனியின் தோல்வி நிச்சயம் என்ற சூழலில் யால்டா மாநாடு கூடியது. எனவே ஜெர்மன் தோல்விக்குப் பின் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் பற்றியே பெரிதும் விவாதிக்கப்பட்டது.

**i)** ஜெர்மன் நாட்டின் மீது தாக்குதல் தொடுக்கும் காலம் பற்றி விவாதிக்கப்பட்டது. ஜெர்மனி நிபந்தனையற்ற சரணாகதி அடையும் வரை போரைத் தொடர்ந்து நடத்துவது என தீர்மானிக்கப்பட்டது.

**ii)** ஜெர்மன் மக்கள் மனதில் குடிகொண்டிருக்கும் நாஜிச, பாசிச கொள்கைகளை அகற்ற நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்.

**iii)** ஜெர்மன் இராணுவ தொழில் திறன், படைப்பாற்றலை முற்றிலும் அழிக்க வேண்டும்.

**iv)** போரின் போது மனிதாபிமானமற்ற கொடுமைகள் புரிந்த பாசிச மற்றும் நாஜித் தலைவர்கள் மீது முறைப்படி விசாரணை நடத்தி உரிய தண்டனை அளிக்க வேண்டும்.

**v)** போரினால் ஐரோப்பிய மக்கள் அடைந்த இழப்புகள் ஈடுகட்டப்பட வேண்டும்.

**vi)** ஜெர்மனியில் சுதந்திரமான ஜனநாயக அரசை ஏற்படுத்த வேண்டும்.

**vii)** விடுவிக்கப்பட்ட ஐரோப்பிய நாடுகளின் அரசியல், பொருளியல் பிரச்சனைகளை ஜனநாயக முறையில் தீர்க்க வேண்டும். அது பற்றி ரஷிய – அமெரிக்க – பிரிட்டிஷ் அரசுகள் கலந்துரையாடி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**viii)** ஐ.நா. சபை அமைப்புப் பற்றியும் விவாதங்கள் நடத்தப்பட்டது. இறுதியில் பாதுகாப்பு சபையில் வல்லரசு ஐவருக்கும் நிரந்தர இடம் அளிக்கப்படுவதுடன் இரத்து அதிகாரமும் அளிக்க ஒப்புக் கொள்ளப்பட்டது. சோவியத் யூனியனிலுள்ள பைலோரஷியா, உக்ரேன் ஆகிய நாடுகளுக்கும் ஐ.நா. சபையில் இடம் அளிக்க வேண்டும் என்பதும் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

**ix)** தூரக் கிழக்கில் ஜப்பானை எதிர்த்து நடைபெறும் போரில், ரஷியாவும் பங்கு பெற தீர்மானிக்கப்பட்டது. ஐரோப்பிய போர் முடிந்து **2** அல்லது **3** மாதங்களுக்குள் ரஷியாவும் ஜப்பானுக்கெதிராகப் பேரிலிறங்க வேண்டுமென ஒப்புக்கொள்ளப்பட்டது. மாநாட்டின் இறுதியில் அறிக்கை ஒன்று வெளியிடப்பட்டது. ஜெர்மனிய இராணுவ வெறியையும் நாஜிசத்தையும் ஒழித்து உலக அமைதியை ஜெர்மனி இனி என்றுமே குலைக்காதிருக்க உறுதியான நடவடிக்கைகள் எடுக்கப்படுவதுதான் நேச நாடுகளின் குறிக்கோளேயன்றி ஜெர்மானிய மக்களை அழிப்பது அல்ல என அதில் குறிப்பிடப்பட்டிருந்தது.

**கெடுபிடிப் போரின் தொடக்கம் :**

ஜெர்மனியின் தோல்வி நிச்சயம் என்ற நிலை தோன்றியவுடன் ஜெர்மனியை எதிர்த்து ஒன்று சேர்ந்த வல்லரசுகளிடையே ஒற்றுமையும் ஒருமைப்பாடும் குறையத் தொடங்கின. ஜெர்மன் அழிவிலிருந்து என்னென்ன ஆதாயம் பெற வேண்டும் என்று வல்லரசுகள் சுயநலக் கண்ணோட்டத்துடன் பிரச்சனைகளை அணுகத் தொடங்கின. குறிப்பாக, போலந்தில் எத்தகைய அரசு அமைய வேண்டும், அதன் கிழக்கு எல்லை எங்கு வரையப்பட வேண்டும் என்பதில் கருத்து வேறுபாடு ஏற்பட்டது. கிழக்கு ஐரோப்பாவை ரஷியா தனது செல்வாக்கு மண்டலமாகக் கருதியது. அங்குள்ள நாடுகளில் போருக்குப் பின் எத்தகைய அரசு அமைய வேண்டும் என்பதை ரஷியா ஏற்கனவே முடிவு செய்து அதற்கான நடவடிக்கைகளில் இறங்கிவிட்டது. இதனை மேற்கு நாடுகள் சந்தேகக் கண்கொண்டு நோக்கின. இந்த சந்தேகமும் கருத்து வேறுபாடுகளும்தான் போருக்குப் பின் தோன்றிய கெடுபிடிப்போரின் மூல காரணங்கள். எனவே யால்டா மாநாட்டிலேயே கெடுபிடிப்போர் தொடங்கிவிட்டது என்றும் கூறுவர்.

**பாட்ஸ்டாம் மாநாடு (1945) :**

இரண்டாம் உலகப் போரில் ஜெர்மனி படுதோல்வியடைந்துவிட்டது. ஏப்ரல் 30–ல் ஹிட்லர் தற்கொலை செய்து கொண்டார். மே 7–ல் ஜெர்மனி நிபந்தனை இன்றி சரணாகதியடைந்தது. ஐரோப்பிய அரங்கில் போர் ஓய்ந்தது. போருக்குப் பின் எடுக்க வேண்டிய நடவடிக்கையைப் பற்றி ஆராய வல்லரசு பிரதிநிதிகள் பாட்ஸ்டாம் என்ற இடத்தில் கூடினர். ஜெர்மனியில் பெர்லினுக்கு அருகில் உள்ள பாட்ஸ்டாம் நகர் போரின் கொடிய அழிவு பணிகளை எடுத்துக் காட்டுவதாக இருந்தது. இதற்கிடையில் அமெரிக்க அதிபர் ரூஸ்வெல்ட் இறந்து போனதால் புதிய அதிபர் ட்ரூமன், பிரிட்டனில் மே மாதம் நடைபெற்ற தேர்தலில் சர்ச்சிலின் கன்சர்வேட்டிவ் கட்சி படுதோல்வியடைந்து விட்டாதால் புதிய தொழிற்கட்சி பிரதமர் கிளமென்ட் அட்லி ஆகியோர் கலந்து கொண்டனர். பழைய தலைவர்களில் ஸ்டாலின் ஒருவர்தான் பாட்ஸ்டாம் மாநாட்டில் பங்கு பெற்றார். இந்த மூன்று தலைவர்களும் ஜூலை 17 முதல் ஆகஸ்ட் 2 வரை கலந்து பேசினர்.

பொது எதிரி மறைந்து விட்டதால், வல்லரசுகளிடையே பழைய கருத்து வேறுபாடுகள் தலைதூக்கியது தெளிவாகத் தெரிந்தது. ரஷியாவிற்கும் மேற்கு நாடுகளுக்குமிடையே பெரும் பிளவு ஏற்பட்டது போல் தோன்றியது. எனினும் மாநாட்டில் பல முக்கிய முடிவுகள் எடுக்கப்பட்டன. அவை :

**i)** ஜெர்மனி நான்கு மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டு அவை ஒவ்வொன்றும் பிரிட்டன், பிரான்சு, அமெரிக்கா, ரஷியா ஆகிய வல்லரசுகளின் இராணுவக் கட்டுப்பாட்டின் கீழ் வைக்கப்படவேண்டும்.

**ii)** ஜெர்மனியிடமிருந்து பெற வேண்டிய போர் இழப்பீடுகள் பற்றி முடிவு செய்யப்பட்டது. வல்லரசுகள் தங்கள் ஆதிக்கத்தின் கீழ் உள்ள ஜெர்மன் பகுதிகளிலிருந்து இழப்பீடு பெற்றுக் கொள்ள வேண்டும். தொழிற்சாலை இயந்திரங்களை எடுத்துக் கொண்டன. ஜெர்மன் இரணுவ வர்த்தகக் கப்பல்களை தங்களுக்குள் பங்கிட்டுக் கொண்டன.

**iii)** ஜெர்மனியில் முற்றிலுமாக படைக்குறைப்புச் செய்யப்பட வேண்டும். நீர்மூழ்கிக் கப்பல்கள் அழிக்கப்படவேண்டும்.

**iv)** ஜெர்மானியரின் இராணுவ மனோபாவம் முற்றிலும் அகற்றப்படவேண்டும். அனைத்து நாஜி நிறுவனங்களும் கலைக்கப்படவேண்டும். நாஜி கொள்கைகளும் ஒழிக்கப்படவேண்டும்.

**v)** ஜனநாயகக் கோட்பாடு படிப்படியாக ஜெர்மனியில் செயல்படுத்தப்பட வேண்டும். கல்வி, நீதித் துறைகள் மாற்றியமைக்கப்பட வேண்டும். உள்ளாட்சி நிறுவனங்கள் ஜனநாயக முறைப்படி இயங்க அனுமதிக்கப்பட வேண்டும். ஜனநாயக முறையிலான அரசியல் கட்சி நடவடிக்கைகளை அனுமதிக்க வேண்டும். செய்தித் தாள் சுதந்திரம் மற்றும் பேச்சுரிமை வழங்கப்படவேண்டும்.

**vi)** ஜெர்மனியின் டான்சிக் பகுதியும் கிழக்குப் பிரஷ்யாவின் ஒரு பகுதியும் போலந்திற்கு வழங்கப்படவேண்டும். ஏற்கனவே ஒப்புக்கொண்டபடி கோனிக்ஸ்பர்க், ரஷ்யாவிற்கு கொடுக்கப்படவேண்டும்.

**vii)** போலந்தின் மேற்கு எல்லை ஓடர், நீஸ் வரை நீட்டப்பட்டது. அங்கு தடைகளற்ற சுதந்திரமான தேர்தல் நடத்தி வெற்றி பெறும் கட்சியிடம் ஆட்சியை ஒப்படைக்க வேண்டும்.

**viii)** நாஜித் தலைவர்கள் போர் குற்றவாளிகளாக விசாரிக்கப்பட வேண்டும். அதற்கென ஜெர்மனியிலுள்ள நூரன்பாக் நகரில் இராணுவ நீதிமன்றம் நிறுவப்பட்டது.

**ix)** நேச நாடுகள் வெளிநாட்டமைச்சர்கள் அடங்கிய கவுன்சில் பிற அச்சு நாடுகளுடனான உடன்பாடுகளைச் செய்து கொள்ளும்.

**திறனாய்வு :**

போர் நடைபெறும் காலத்தில் வல்லரசுகளிடையே நிலவிய ஒற்றுமை, போர் முடிந்தபின் சீர்குலைந்து போனது. அவைகளிடையே பழைய ஆதிக்க மனோபாவம் தலைதூக்கியது. அதனால் போலந்தில் தடைகளற்ற தேர்தல் நடத்தப்பட முடியவில்லை. **34.**கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் ஜனநாயக அரசுகள் நிறுவப்பட முடியவில்லை. வின்ஸ்டன் சர்ச்சில் குறிப்பிட்டதுபோல் பால்டிக் கடலிலுள்ள ஸ்டெட்டினிலிருந்து எட்ரியாட்டிக்கிலுள்ள டிரிஸ்டி வரை இரும்புத் திரை ஒன்று இறக்கப்பட்டுவிட்டது.

## 23.இரண்டாம் உலகப் போருக்குப் பின் கெடுபிடிப்போர் (COLD WAR)

இரண்டாம் உலகப் போருக்குப் பின் ரஷியாவின் தலைமையிலான கம்யூனிஸ்ட் நாடுகளுக்கும் அமெரிக்காவின் தலைமையிலான சுதந்திர நாடுகளுக்குமிடையிலும்

நிலவிய போட்டி, பொறாமை, பகைமை, அச்சம், அவநம்பிக்கை, சந்தேகம் காரணமாக ஏற்பட்ட பதட்ட நிலையே (Tension) ‘‘கெடுபிடிப்போர்’’ (Cold War) எனப்படுகிறது. அமெரிக்கா தலைமையில் பிரிட்டன், பிரான்சு, இத்தாலி, பெல்ஜியம், ஹாலந்து, போர்த்துக்கல் போன்ற மேற்கு ஐரோப்பிய நாடுகளும், ரஷியா தலைமையில் போலந்து, செக்கோஸ்லோவாகியா, அல்பேனியா ஆகிய கிழக்கு ஐரோப்பிய நாடுகளும் இரு முகாம்களாக பொருளியல், வாணிபம், பண்பாடு ஆகிய தொடர்புகள் துண்டிக்கப்பட்டன. சர்ச்சில் கூறியது போல் இரு முகாம்களுக்கிடையில் ‘‘இரும்புத் திரை’’ இறக்கப்பட்டுவிட்டது.

**கெடுபிடிப் போருக்கான காரணங்கள் :**

**i) பொது எதிரி மறைவு :**

இரண்டாம் உலகப் போரின் போது ஒருங்கிணைந்து ஓரணியில் நின்று போரிட்ட அமெரிக்காவிற்கும் ரஷியாவிற்குமிடையே அப்படியொன்றும் நல்லுறவு நிலவியதில்லை. ஹிட்லரின் நாஜி ஜெர்மனியின் ஆக்கிரமிப்பு இருவர் நலன்களுக்கும் ஆபத்து விளைவிப்பதாக இருந்ததால், அவர்கள் தங்கள் கருத்து வேற்றுமைகளை தற்காலிகமாக ஒதுக்கி வைத்துவிட்டு, பொது எதிரியான ஹிட்லரை எதிர்க்க ஒன்றுபட்டு நின்றனர். இப்போது அந்த பொது எதிரி மறைந்துவிட்டதால் பழைய பகைமை மீண்டும் தோன்றிவிட்டது.

**ii) கொள்கை வேறுபாடுகள் :**

கொள்கையளவில் இரு வல்லரசுகளும் இரு துருவங்களாக விளங்கின. ரஷியா பொதுவுடைமைத் தத்துவத்தில் நம்பிக்கை கொண்டிருந்தபோது, அமெரிக்கா தனி நபர் உரிமைகளை உயர்வாகக் கருதியது. தங்கள் கொள்கைகளை தங்கள் நாட்டுடன் வைத்துக் கொண்டால் பிரச்சனையே இல்லை. ஏற்றுக்கொள்ளாதவர்கள் மீது தங்கள் கொள்கையை வலுக்கட்டாயமாகத் திணிக்க முயலும் போதுதான் பிரச்சனையே உண்டானது. உலகம் முழுவதிலும் கம்யூனிசத்தைப் பரப்புவதுதான் தனது வெளிநாட்டுக் கொள்கையின் ஒரே குறிக்கோள் என்று ரஷியா கருதியபோது கம்யூனிசத்தை பரவவொட்டாது தடுப்பதே தனது அயல்நாட்டுக் கொள்கையின் இலட்சியம் என்று அமெரிக்கா அறிவித்தது.

**iii) புதிய சக்திக் சமநிலை :**

இரண்டாம் உலகப் போர் முதுபெரும் வல்லரசுகளான பிரிட்டனையும் பிரான்சையும் இரண்டாந்தர வல்லரசுகளாக்கிவிட்டது. **1870–**க்குப் பின் ஐரோப்பிய அரசியலில் வலிமையுடன் திகழ்ந்த ஜெர்மனியை அடியோடு வீழ்த்திவிட்டது. போருக்குப் பின் ஐரோப்பாவில் ரஷியா ஒன்றுதான் வல்லரசாகத் திகழ்ந்தது. அதற்கு எதிராக ஐரோப்பிய நாடுகள் அனைத்தும் ஒன்று திரண்டாலும் அவை ரஷியாவிற்கு ஈடாகாது. எனவே, ஐரோப்பிய சக்தி சமநிலை அடியோடு சீர்கெட்டது. அதனைச் சீர்படுத்துவதற்கு அமெரிக்கா ஐரோப்பிய அரசியலில் ஈடுபடுவது தவிர்க்க இயலாததாகிவிட்டது.

**iv) கிழக்கு ஐரோப்பிய நாடுகளை கம்யூனிசமாக்கியது :**

கிழக்கு ஐரோப்பிய நாடுகளான போலந்து, செக்கோஸ்லோவாகியா, யூகோஸ்லாவியா, ஹங்கேரி, ருமேனியா, பல்கேரியா, அல்பேனியா ஆகியவற்றை நாஜி ஆக்கிரமிப்பிலிருந்து ரஷிய செஞ்சேனைதான் மீட்டது. அதன்பின் அந்நாடுகளில் கம்யூனிஸ்ட் அரசுகள் நிறுவப்பட செஞ்சேனை மறைமுக நிர்பந்தங்களை ஏற்படுத்தியது. விரைவில் கிழக்கு ஐரோப்பா முழுவதும் ‘‘சிவப்பு மயமாகியது’’. இந்த ‘‘சிவப்பு அபாயம்’’ மேற்கு ஐரோப்பாவினுள்ளும் ஊடுருவி விடுமோ என்ற அச்சம் ஏற்பட்டது. அதனைத் தடுப்பதற்கு பல முன்னேற்பாடுகள் செய்யப்பட்டன.

**v) ஆதிக்கப் போட்டி :**

வல்லரசுகள் பொதுவாக உலகில் தங்கள் பொருளியல், அரசியல் ஆதிக்கம்தான் நிலைபெற வேண்டும் என எதிர்பார்த்தன. அதனை எதிர்க்கும் எந்த அரசையும் வீழ்த்த நினைத்தன. தான்தான் உலகிலே மாபெரும் வல்லரசு, தமக்கு இணையாக யாரும் தலைதூக்கிவிடக்கூடாது என்பதில் முன்னெச்சரிக்கையாக இருந்தன. அதற்காக தனக்கு ஆயுத பலமும், நாடுகளின் ஆதரவும் தேவை என்ற எண்ணம் கொண்டன. இந்த அடிப்படையில் அமெரிக்கா – ரஷிய நாடுகளிடையே எழுந்த ஆதிக்கப் போட்டி உலகில் பதட்ட நிலையை ஏற்படுத்தியது.

**கெடுபிடிப்போரின் தன்மை :**

கெடுபிடிப்போர் என்பது நேரடியாக நடைபெறாமல் மறைமுகமாக நடைபெறும் போர் ஆகும். படை நடமாட்டங்கள், ஆயுதப் பெருக்கங்கள், ஆவேசப் பேச்சுக்கள், இறுதி எச்சரிக்கைகள் ஆகிய காட்டமான சூழ்நிலைகள் அனைத்தும் இருக்கும். ஆனால் போர் மூண்டுவிடாது. அதனால் இனி போரே ஏற்படாது என நிம்மதிப் பெருமூச்சும் விட

இயலாது. எந்த நிமிடத்திலும் போர் வெடித்துவிடும் அச்சம்தான் கெடுபிடிப்போரின் தனித்தன்மையாகும்.

இரண்டாவதாக, பயங்கர அணு ஆயுதங்கள் கண்டுபிடிக்கப்பட்டு குவிக்கப்பட்டிருப்பதால் போர் மூண்டால் மனித சமுதாயமே நாசமாகி விடும் என்ற பயங்கர திகில் கெடுபிடிப் போரின் மற்றுமொரு இயல்பு.

மூன்றாவதாக, ஒரு வல்லரசு செய்யும் காரியங்களை மற்றொரு வல்லரசு சந்தேகக் கண்கொண்டு நோக்கும். இல்லையென்றால் பொறாமை அனல் பொங்கப் பார்க்கும். இந்த பரஸ்பர சந்தேகமும் பொறமையும் கெடுபிடிப்போரின் முக்கியமான பண்புகள்.

நான்கவதாக, கெடுபிடிப்போர் போர்முனையில் போர் ஆயுதங்களைக் கொண்டு நடைபெறவில்லையே தவிர பிற முனைகளில் புதிய யுக்திகளைக் கொண்டு அதிதீவிரமாக நடைபெற்றது. அறிவியல் முனையில் புதிய புதிய ஆயுதங்களைக் கண்டுபிடிப்பதில் போட்டியும், பிரச்சார முனையில் பரஸ்பரம் வசை மொழிகளால் ஒருவரையொருவர் தாக்கிக் கொள்ளும் போராகவும், பொருளியல் முனையில் தங்களுக்கு வேண்டியவர்களுக்கு விழுந்தடித்து உதவி புரிய விரையும் போட்டியாகவும் இருந்தது. அதாவது கெடுபிடிப் போரில் அறிவியல் ஆய்வும், பிரச்சாரமும், பொருளியல் உதவியும் கூட ஒரு வகைப் போராட்ட கருவிகளாகப் பயன்பட்டன.

ஐந்தாவதாக, கெடுபிடிப் போரில் வல்லரசுகள் நேரடியாகப் போர் புரியவில்லையே தவிர மறைமுகப் போர்களில் ஈடுபட்டன. சிறு நாடுகளை ஏவிவிட்டு அவைகளின் பின்னணியில் இருந்துகொண்டு பலப்பரீட்சையில் ஈடுபட்டன. உலகில் எங்காவது ஒரு மூலையில் ஏதாவது சிறு நாடுகளிடையே போர் மூண்டால் விரைந்து ஆளுக்கொரு நாட்டை ஆதரிக்கத் தொடங்கிவிடுவர். உலகில் எந்த ஒரு மூலையில் விழுந்த சிறு பொறி கூட பெரு நெருப்பாகும் அபாயமிருந்தது.

## கெடுபிடிப் போரின் போக்கு

**ட்ரூமன் கோட்பாடு :**

ஐரோப்பா முழுவதையும் சிவப்பாகியே தீருவேன் என்ற ரஷ்யாவின் பிடிவாதமும் அவ்வாறு சிவப்பாக்க விடமாட்டேன் என்ற அமெரிக்காவின் எதிர்வாதமும், கிரீஸ், துருக்கி நாடுகளில் அரங்கேறியது. அந்நாடுகளில் வெளிநாட்டுச் சக்திகள் உதவியுடன்

உள்நாட்டுக் கம்யூனிஸ்டுகள் குழப்பம் விளைவித்து அரசைக் கவிழ்க்க முயற்சித்தனர். அச்சமயத்தில் அமெரிக்க அதிபர் ட்ரூமன் அந்நாடுகளுக்கு உதவும் நோக்குடன் ஒரு அறிவிப்பினை வெளியிட்டார். உள்நாட்டில் ஆயுதம் தாங்கிய சிறுபான்மையினர் கிளர்ச்சியினாலும் வெளிநாட்டு ஊடுருவல் நிர்பந்தங்களினாலும் ஆபத்திற்குள்ளாக்கப்பட்ட சுதந்திர அரசுக்கு அமெரிக்கா உதவும் என்று அதில் குறிப்பிட்டார். இதுவே ட்ரூமன் கோட்பாடு எனப்படுகிறது. இக்கோட்பாட்டின்படி அமெரிக்கா, கிரீஸ், துருக்கி நாடுகளுக்குஆயுத மற்றும் பொருள் உதவி அளித்தது. அதன்மூலம் அங்கு கம்யூனிச அபாயம் அகற்றப்பட்டது.

**மார்ஷல் திட்டம் :**

போருக்குப்பின் மேற்கு ஐரோப்பிய நாடுகளான பிரான்சு, இத்தாலியில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடிகள் மக்களுக்கு தொல்லைகளை அதிகரித்தன. இத்தொல்லை துயரங்களை அந்நாட்டு கம்யூனிஸ்ட் கட்சியினர் அரசியல் ஆதாயமாக்கி ஆட்சியைப் பிடிக்க முயன்றனர். தேர்தல்களில் குறிப்பிடத்தக்க வெற்றியைப் பெற்றனர். இதனை அறிந்த அமெரிக்க வெளிநாட்டமைச்சர் ஜார்ஜ் மார்ஷல், அந்நாடுகளுக்கு பெருமளவில் பொருளியல் உதவி புரிந்து, மக்கள் துயரங்களை நீக்கி, அதன் மூலம் கம்யூனிச அபாயத்தை அகற்ற முயன்றார். இந்தப் பொருளாதார உதவி மார்ஷல் திட்டம் எனப்படுகிறது. இத்திட்டம் அதன் குறிக்கோளை நிறைவேற்றியது.

**ஜெர்மன் பிரச்சனை :**

போருக்குப் பின் பாட்ஸ்டாம் மாநாட்டுத் தீர்மானங்களின்படி, ஜெர்மனி நான்கு மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டு, பிரிட்டன், பிரான்சு, அமெரிக்கா, ரஷ்யா ஆகிய நான்கு வல்லரசுகளால் நிர்வகிக்கப்பட்டு வந்தது.

நான்கு பகுதிகளிலும் நாஜி கோட்பாடுகளை அகற்றியபின் தேர்தல் நடத்த வேண்டும். அதில் வெற்றி பெறும் கட்சியிடம் ஆட்சிப் பொறுப்பை ஒப்படைக்க வேண்டும் என ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. இப்போது கெடுபிடிப் போர்ச் சூழ்நிலை காரணமாக தேர்தலை நடத்துவதோ இணைப்பதோ என்பது இயலாததாகிவிட்டது. எனவே, மேற்கு நாடுகள் தங்கள் கட்டுபூபாட்டின் கீழுள்ள மூன்று மண்டலங்களையும் ஒருங்கிணைத்து ஜெர்மன் கூட்டாட்சி குடியரசை (மேற்கு ஜெர்மனி அல்லது FRG) ஏற்படுத்தினர். பான் அதன் தலைநகராகியது. இக்குடியரசு மேற்கு நாடுகிளுடன் அரசியல், பொருளியல் உறவுகளை ஏற்படுத்தி கம்யூனிச எதிர்ப்புக் கோட்பாட்டைக்

கடைப்பிடித்தது. உடனே ரஷியா தன் கட்டுப்பாட்டிலுள்ள மண்டலத்தை **ஜெர்மன் ஜனநாயகக் குடியரசு (கிழக்கு) ஜெர்மனி (GDR)** என்ற தனி நாடாக்கியது. இந்நாடு கம்யூனிச அணியில் இணைந்தது.

**பெர்லின் சிக்கல் :**

பெர்லின் நகர் கிழக்கு ஜெர்மனியினுள் அமைந்திருந்தது. அந்நகரின் மேற்குப் பகுதி மேற்கு நாடுகளின் கட்டுப்பாட்டிலிருந்தது. அந்நகரின் மேற்குப் பகுதி மேற்கு நாடுகளின் கட்டுப்பாட்டிலிருந்தது. இது ரஷியாவிற்குப் பிடிக்கவில்லை. மேற்கு நாடுகளை மேற்கு பெர்லினிலிருந்து வெளியேற்றத் திட்டம் தீட்டியது. அதன்படி மேற்கு பெர்லினுக்கும் மேற்கு ஜெர்மனிக்குமிடையிலான நீர், நில மார்க்கங்களைத் துண்டித்தது. இதன் மூலம் மேற்கு பெர்லின் கடுமையான பொருளியல் முற்றுகைக்குள்ளானது. இந்த முற்றுகையை முறியடிக்க அமெரிக்கா ஆகாய மார்க்கமாக மேற்கு பெர்லினோடு தொடர்பு கொண்டு அம்முற்றுகையை முறியடித்தது. இவ்வாறு **1948–**லும் **1958** – **'59**லும் மும்முறை பெர்லின் என்ற குறுகிய வட்டத்திற்குள் இரு பெரும் வல்லரசுகளும் கெடுபிடிப்போர் புரிந்தன. கிழக்கு ஜெர்மனி மக்கள் வாழ்க்கைத் தர அவ்வளவு சிறப்பானதாக இல்லை. மேலும் கம்யூனிச கெடுபிடி ஆட்சி முறை வெறுப்பளித்தது. எனவே அவர்கள் எளிதாக மேற்கு பெர்லினுள் நுழைந்து பின் அங்கிருந்து மேற்கு ஜெர்மனியில் குடியேறினர். இந்த மக்கள் வெளியேற்றத்தைத் தடுக்க கிழக்கு ஜெர்மனி அரசு பெர்லின் நகரின் நடுவே பெரும் சுவர் எழுப்பியது. **"பெர்லின் பெருஞ்சுவர்''** கெடுபிடிப்போரின் சின்னமாக விளங்கியது.

**இராணுவக் கூட்டுக்கள் :**

கெடுபிடிப் போர்க் காலத்தில், அமெரிக்கா, ரஷியாவிற்கெதிராக இராணுவக் கூட்டுக்கள் பல அமைத்தது. அதற்குப் பதிலடியாக ரஷியாவும் இராணுவக் கூட்டுக்களை உருவாக்கியது. ஒன்றுக்கொன்று எதிராக செய்து கொள்ளப்பட்ட இந்த இராணுவக் கூட்டுக்கள், படைத்தளங்கள், அங்கு நிறுத்தி வைக்கப்பட்டிருந்த படைக்கலன்கள் ஆகியவை பதட்ட நிலையை ஏற்படுத்தின.

**i) நேட்டோ (NATO) (வட அட்லாண்டிக் ஒப்பந்தம்) :**

இரஷியாவிற்கெதிராக அமெரிக்கா, ஐரோப்பாவில் உருவாக்கிய மாபெரும் இராணுவக்கூட்டு நேட்டோவாகும். இதில் வட அட்லாண்டிக் கரயையொட்டிய நாடுகளான பிரிட்டன், பிரான்சு, பெல்ஜியம், லக்சம்பர்க், அமெரிக்கா, ஹாலந்து, கனடா,

போர்த்துக்கல், இத்தாலி, டென்மார்க், நார்வே, ஐஸ்லாந்து ஆகியவை இணைந்தன. பின்னர் கம்யூனிச ஊடுருவலுக்கு அஞ்சிய கிரீசும் துருக்கியும் இதில் சேர்ந்தன. மேற்கு ஜெர்மனியும், ஸ்பெயினும் கூட இணைந்தன. ஒப்பந்த நாடுகள் ஏதாவது ஒன்றின்மீது தொடுக்கப்படும் தாக்குதல் அனைத்து உறுப்பு நாடுகள் மீதும் தொடுக்கப்ட்ட தாக்குதலாகக் கருதப்பட்டு கூட்டு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதுதான் இதன் முக்கிய அம்சமாகும். அனைத்து நாடுகளின் கூட்டுப்படையொன்றும் அமைக்கப்பட்டது. இதன் தலைமையகம் பாரீஸ். **1969–**ல் கருத்து வேறுபாடு காரணமாக பிரான்சு நோட்டோ படைக் குழுவிலிருந்து வெளியேறிய பின் தலைமையகம் பிரஸ்ஸல்சுக்கு மாற்றப்பட்டது.

**ii) வார்சா ஒப்பந்தம் (1955) (WARSAW PACT) :**

நேட்டோவிற்கு எதிராக ரஷியா அமைத்த இராணுவக்கூட்டு வார்சா ஒப்பத்மாகும். இதில் ரஷியாவும் மற்றும் போலந்து, செக்கோஸ்லோவாகியா, ஹங்கேரி, ருமேனியா, பல்கேரியா, அல்பேனியா ஆகிய கிழக்கு ஐரோப்பிய நாடுகள் சேர்ந்தன. அதன்படி ஒவ்வொரு நாட்டிலும் ரஷியப் படைகள் நிறுவத்தப்பட்டன. இப்படைகள் மேற்கத்திய நாடுகளின் தாக்குதலிலிருந்து பாதுகாப்பு அளித்தன. அதே சமயம் அந்நாடுகள் கம்யூனிசப் பிடியிலிருந்து நழுவாதபடியும் பார்த்துக் கொண்டன.

**iii) தென்கிழக்கு ஆசிய பாதுகாப்பு ஒப்பந்தம் (SEATO) :**

தென் கிழக்கு ஆசியாவில் கம்யூனிச ஊடுருவலைத் தடுக்க அமெரிக்கா உருவாக்கிய இராணுவக்கூட்டு **“சீட்டோ’’** ஆகும். இதில் பிரிட்டன், பிரான்சு, அமெரிக்கா ஆகிய மேற்கு நாடுகளும், பிலிப்பைன்ஸ், தாய்லாந்து, பாகிஸ்தான், ஆஸ்திரேலியா, நியூசிலாந்து ஆகிய நாடுகளும் சேர்ந்தன.

**iv) மத்திய கிழக்குப் பாதுகாப்பு ஒப்பந்தம் (CENTO):**

இதில் பிரிட்டன், ஈராக், ஈரான் ஆகிய நாடுகள் இணைந்திருந்தன. இது பாக்தாத் ஒப்பந்தம் என்றும் அழைக்கப்பட்டது. இது மத்திய கிழக்கில் ரஷிய ஊடுருவலை எதிர்க்கும் நோக்கத்துடன் நிறுவப்பட்டது.

**v) ஆன்சுஸ் (ANZUS) :**

இதில் அமெரிக்கா, ஆஸ்திரேலியா, நியூசிலாந்து ஆகிய நாடுகள் இணைந்திருந்தன.

**உலகில் பிற பாகங்களில் கெடுபிடிப்போர்**

உலகின் பல்வேறு நாடுகளில் நடைபெற்ற பிராந்திய சிக்கல்கள் மற்றும் உள்நாட்டுப் போர்கள் ஆகியவற்றில் வல்லரசுகள் தலையிட்டு பதட்ட நிலையை ஏற்படுத்தின. இவற்றில் பொதுவாக வல்லரசுகள் பின்னணியிலிருந்துதான் செயல்பட்டன. எனினும் வல்லரசுகள் நேரடி மோதலுக்கு வழிவகுத்துவிடுமோ என அஞ்சப்பட்டது.

**i) சீன உள்நாட்டுப் போர் (1947 – '49) :**

சீனாவில் மூண்ட உள்நாட்டுப் போரில் கம்யூனிஸ்ட் தலைவர் மாசேதுங்கிற்கு ரஷியாவும், கோமின்டாங் கட்சித் தலைவர் சியாங்கை ஷேக்கிற்கு அமெரிக்காவும் உதவியளித்தன. இறுதியில் மாசேதுங் வெற்றி பெற்று சீன மக்கள் குடியரசை நிறுவினார். தோல்வியுற்ற சியாங்கை ஷேக் பார்மோசா (தைவான்) தீவிற்கு பின்வாங்கி அங்கு தமது அரசை நிறுவினார். அமெரிக்கா ஆதரவினால் தொடர்ந்து சியாங்கை ஷேக் அரசுதான் பிரதிநிதித்துவம் பெற்றிருந்தது. இதனால் கம்யூனிஸ்ட் சீனாவிற்கும் அமெரிக்காவிற்கும் கடும்பகை ஏற்பட்டது. ரஷியா சீனாவுடன் முப்பது ஆண்டு நட்பு மற்றும் பரஸ்பர உதவி பாதுகாப்பு ஒப்பந்தம் செய்து கொண்டது.

**ii) கொரியாப்போர் (1950 – '53) :**

கம்யூனிஸ்ட் நாடான வடகொரியா தென் கொரியா மீது படையெடுத்தது. இந்த விஷயம் ஐ.நா. சபை முன்வந்தபோது வட கெகரியா ஆக்கிரமிப்பாளர் என அறிவிக்கப்பட்டதோடு, ஐ.நா. முதல் முறையாகக் கூட்டுப் பாதுகாப்பு முறைப்படி ஆக்கிரமிப்பை அகற்ற படை அனுப்பியது. அடிப்படை பெரும்பாலும் அமெரிக்கப் படையாகவே இருந்தது. மக், ஆக்தர் என்ற அமெரிக்கத் தளபதி ஐ.நா. படைகளுக்குத் தலைமை தாங்கினர். வடகொரியாவிற்கு கம்யூனிஸ்ட் சீனா உதவியளித்தது. உண்மையில் இது அமெரிக்க மற்றும் கம்யூனிஸ்ட் படைகளின் போராகவே இருந்தது. வடகொரியா தோற்கடிக்கப்பட்டு விரட்டப்பட்டது. பின், போர் நிறுத்தம் ஏற்பட்டது.

**iii) வியட்நாம் போர் (1963 – 1973) :**

வட வியட்நாம் கம்யூனிஸ்ட் அரசிற்கும் தென் வியட்நாமின் அமெரிக்க சார்பு அரசிற்கும் உள்நாட்டுப்போர் மூண்டது. கம்யூனிசம் பரவாது தடுக்கும் போலீஸ் பணியை மேற்கொண்ட அமெரிக்கா தென் வியட்நாமிற்கு படைகளுடன் படைக்கலன்களும் கொடுத்துதவியது. நாளடைவில் இது அமெரிக்க வட வியட்நாம் போராக மாறியது. பத்தாண்டுகளுக்கு மேலாகப் போர் புரிந்தும் அமெரிக்காவினால் வட

வியட்நாம் கம்யூனிஸ்டுகளை ஒடுக்க இயலவில்லை. இறுதியாக **1973–**ல் போர் நிறுத்தம் ஏற்பட்டது. அமெரிக்கா வியட்நாமை விட்டு வெளியேறியது.

**iv) ஹங்கேரி சிக்கல் (1956) :**

இரும்புத் திரைக்குள் அடைக்கப்பட்ட கிழக்கு ஐரோப்பிய நாடான ஹங்கேரி, **1956–**ல் அத்திரையைக் கிழித்து வெளிவர முயன்றது. அந்நாட்டுப் பிரதமர் இம்ரேநாகி கம்யூனிச பொருளாதார கொள்கைகளைக் கைவிட்டு மேற்கு நாடுகளுடன் தொார்பு கொள்ள முயன்றார். ஆனால் வார்சா ஒப்பந்தப்படி ஹங்கேரியில் நிறுத்தப்பட்டிருந்த ரஷியப் படை இம்ரே நாகி அரசிற்கு எதிராக ஏவப்பட்டது. அவர் தூக்கிலிடப்பட்டார். ஹங்கேரி மீண்டும் இரும்புத் திரைக்குள் அடைக்கப்பட்டது. இதே போல் **1966–**லும் செக்கோஸ்லோவாகியா தாராள சீர்திருத்தங்களைப் புகுத்த முயன்ற போதும், ரஷியா கடுமையாக எதிர்ப்பு தொவித்து அதனை ஒடுக்கியது. இவ்வாறு கிழக்கு ஐரோப்பிய நாடுகளைத் தன் ஆதிக்கப் பிடியில் வைத்திருக்க ரஷியா படை பலத்தைப் பயன்படுத்தியதை அமெரிக்கா கடுமையாகக் கண்டித்தது.

**v) சூயஸ்கால்வாய்ச் சிக்கல் (1956) :**

எகிப்து அதிபர் நாசர் சூயஸ் கால்வாயை தேசியமயமாக்கியபோது பிரிட்டனும் பிரான்சும் அதனை எதிர்த்துப் போர் நடவடிக்கையில் ஈடுபட்டன. உடனே ரஷியா எகிப்திற்கு ஆதரவாக அந்நாடுகளை அச்சுறுத்தியது. எனவே, அந்நாடுகள் போரை நிறுத்தி பேச்சுவார்த்தைக்கு இணங்கின.

**vi) யூ–2 நிகழ்ச்சி (1960) :**

அமெரிக்கா, ரஷியாவை ஒற்றறிய யூ**–2** விமானங்களை இரகசியமாக அனுப்பி வைத்தது. ரஷியா இதனைக் கண்டுபிடித்து சுட்டு வீழ்த்தி, பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. அதனால் பாரிசில் நடைபெறவிருந்த உச்சநிலை மாநாடு நடைபெறாது போயிற்று.

**vii) கியூபா சிக்கல் (1962) :**

அமெரிக்காவிற்கு அருகிலுள்ள கியூபா நாட்டில் ரஷியா ஏவுகணைத் தளங்களை நிறுவியபோது, அமெரிக்கா அதனைத் தடுத்து நிறுத்தும் பொருட்டு, கியூபாவை முற்றுகையிட்டது. அச்சமயத்தல் **9** ரஷியக் கப்பல்கள் ஏவுகணைக் கருவிகளை ஏற்றிக்கொண்டு கியூபாவை நோக்கி விரைந்து கொண்டிருந்ததால், ரஷியாவும்

அமெரிக்காவும் நேரடியாக மோதும் அபாயம் ஏற்பட்டது. கெடுபிடிப் போரின் பதட்ட நிலை உச்சக் கட்டத்தை அடைந்தது. ஆனால், ரஷியப் பிரதமர் குருஷேவ் அணுஆயுதப் போரின் அபாயத்தை உணர்ந்து அக்கப்பல்களைத் திருப்பி அழைத்துக் கொண்டார். கியூபாவைத் தாக்கமாட்டோம் என அமெரிக்கா உறுதியளித்தால் அங்குள்ள ஏவுகணைகளை அகற்றத் தயார் என குருஷேவ் அறிவித்தார். அமெரிக்கா அவ்வுறுதியை அளித்ததால், ரஷியா ஏவுகணைத் தளங்களை அகற்றியது. அதன்பின் கெடுபிடிப்போரின் கடுமை தணியத் தொடங்கியது.

**கெடுபிடிப்போரின் தளர்வு :**

கியூபா சிக்கலுக்குப் பின், கெடுபிடிப்போரின் கடுமை தளர்வுற்றது. அதற்கு காரணங்கள் பல.

**i)** அணுஆயுதப் பெருக்கமும், போரும், மனித சமுதாயத்திற்கு ஆபத்து அளிக்கும் என வல்லரசுகள் காலம் கடந்து உணர்ந்தன.

**ii)** மாஸ்கேவிற்கும் வாஷிங்டனுக்குமிடையில் நேரடி தொலைபேசித் தொடர்பு (Hot Line) அமைக்கப்பட்டது.

**iii)** கம்யூனிஸ்ட் நாடுகளான சீனாவிற்கும், ரஷியாவிற்குமிடையில் கருத்து வேறுபாடும், மோதலும் ஏற்பட்டது. அதே போல், பிரான்ஸ் நேட்டோவை விட்டு வெளியேறியது.

**iv)** ரஷியாவும், அமெரிக்காவும் விண்வெளிப் போட்டியில் ஈடுபட்டன. அறிவியல் ஆற்றல் திறன்கள் விண்வெளியில் சாதனை படைப்பதற்குப் பயன்படுத்தியதால் தற்காலிகமாக உலகம் ஆயுதப் போட்டியிலிருந்து விடுதலை பெற்றது.

**v)** ரஷிய மற்றும் அமெரிக்கத் தலைவர்கள் பரஸ்பர நல்லெண்ண விஜயங்களை மேற்கொண்டனர். **1971–**ல் அமெரிக்க அதிபர் நிக்சன் மாஸ்கோ வருகை புரிந்தார். **1973–**ல் ரஷிய அதிபர் பிரஷ்னேவ் அமெரிக்காவிற்கு விஜயம் செய்தார். **1974–**லும் இந்தச் சந்திப்புகள் தொடர்ந்தன. **1975–**ல் ஹெல்சிங்கியில் நடைபெற்ற மாநாட்டில் ஐரோப்பிய நாடுகளின் தலைவர்களும், அமெரிக்கத் தலைவர்களும் கலந்து கொண்டனர். இந்தப் பயணங்களும் சந்திப்புகளும் பரஸ்பர தப்பெண்ணங்களைப் போக்கி, சமூக உறவு ஏற்பட வழி வகுத்தன.

**vi)** அணிசேரா நாடுகளின் வளர்ச்சி கெடுபிடிப் போரின் கடுமையைத் தணித்தன. எந்த முகாமிலும் சேராமல் நடுநிலையுடன் உலகப் பிரச்சனைகளை அணுகும்

கொள்கையை அந்நாடுகள் பின்பற்றின. **1963–**ல் **25** நாடுகளைக் கொண்டிருந்த அக்குழு **1983–ல் 101** நாடுகளைக் கொண்ட மாபெரும் இயக்கமாக வளர்ச்சியுற்றது. இதனால் கூட்டுச் சேரும் கொள்கை வலுவிழந்தது.

**கெடுபிடிப்போரின் முடிவு :**

ரஷியாவில் கோர்ப்பசேவ் அதிபராக மாறியபின் ரஷியாவின் ராஜதந்திரக் கொள்கையில் புரட்சிகரமான மாறுதல்கள் நிகழ்ந்தன. ''பிரஸ்ட்ரோய்க்கா'' ''கிளாஸ்னால்ட்'' என்ற கொள்கையின் மூலம் ரஷியாவை சீரமைக்கும் பணியில் ஈடுபட்டார். வெளியுறவு கொள்கையில் தாராள மனதுடன் செயல்பட்டார். **1988** ஜனவரியில் அமெரிக்க அதிபர் ரீகனைச் சந்தித்து, ஐரோப்பாவில் உள்ள நடுத்தர ஏவுகணைகளை ஒழிக்கும் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டார். ஆப்கானிஸ்தானத்திலுள்ள ரஷியப் படைகளைத் திருப்பியழைத்தார். அதன்பின் கிழக்கு ஐரோப்பிய நாடுகளின் மீதான ரஷியக் கட்டுப்பாடுகளைத் தளர்த்தினார். அந்நாடுகள் ஒன்றன்பின் ஒன்றாக கம்யூனிசக் கொள்கைகளைக் கைவிட்டன. இரும்புத் திரை கிழித்தெறியப்பட்டது. **1989–**ல் பெர்லின் சுவர் நொறுக்கப்பட்டது. **1990–**ல் இரு ஜெர்மனிகளும் ஒருங்கிணைந்தன. அதனைத் தொடர்ந்து கோர்பசேவ் வார்சா உடன்படிக்கையை முடிவிற்குக் கொண்டு வரத் திட்டமிட்டார். அதனைத் தொடர்ந்து கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலுள்ள ரஷியப் படைகளைத் திருப்பி அழைத்தார். **1991–**ல் அமெரிக்க அதிபர் புஷ்ஷுடன் சேர்ந்து பயங்கர ஆயுதக் குறைப்பு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டார். இந்த வரலாற்றுச் சிறப்பு மிக்க நிகழ்ச்சிகள் கெடுபிடிப்போர் முடிந்துவிட்டது என்பதை உறுதி செய்கின்றன.

## 34.படைக்குறைப்பில் ஐ.நா. சபை

உலக நாடுகளிடையே எழும் தகராறுகளை அமைதியான முறையில் தீர்த்து, அவற்றிடையே ஒத்துழைப்பை வளர்த்து நிரந்தர அமைதியை நிலவச் செய்வதற்காக **1943** அக்டோபர் **24–**ல் ஐ.நா. சபை நிறுவப்பட்டது. உலக அமைதிக்கு ஊறு விளைவிக்கும் இடையூறுகளில் படைப்பெருக்கம் முக்கியமானதாகும். எனவே படைக்குறைப்பு ஐ.நா.வின் முக்கிய நோக்கங்களுள் ஒன்றாகக் கருதப்பட்டது. அதுதான் சாசனத்தின் **11–**வது பிரிவு, படைக்குறைப்பு மற்றும் படைக் கட்டுப்பாடு சார்ந்த திட்டங்களை வகுக்குமாறு பொதுச் சபைக்கு அதிகாரமளித்திருந்தது. **26–**ஆவது

சட்டப் பிரிவும் பாதுகாப்பு சபையானது படைத் தளபதிகள் குழு ஒன்றை நியமித்து, அதன் ஆலோசனையின்படி படைக் கட்டுப்பாட்டு விதிமுறைகளை வகுக்குமாறு கூறியது.

இதற்கிடையில் அமெரிக்கா, ஹிரோஷிமா, நாகசாகி மீது அணுகுண்டை வீசியது. இச்செயல் படைக்குறைப்பு பிரச்சனையை அதிமுக்கிய பிரச்சனையாக்கிவிட்டது. **''நாகரிகம் ஆயுதங்களை அழிக்காவிட்டால் ஆயுதங்கள் நாகரிகத்தை அழித்துவிடும்''** என்ற கிரேபிரபு கூறியது உண்மையாகிவிடும் போலிருந்தது.

**அணுசக்திக் குழு :**

**1946**–ல் ஐ.நா. பொதுக்குழு அணுசக்தி குழுவை நிறுவியது. அதில் பாதுகாப்புக் குழு உறுப்பினர் **11** பேரும், கனடா பிரதிநிதியும் சேர்ந்து **12** பேர் இருந்தனர். அணுசக்தியை ஆக்கப் பணிகளுக்குப் பயன்படுத்துதல் மற்றும் அணுகுண்டு உற்பத்தியைக் கட்டுப்படுத்துதல் ஆகியவை பற்றி ஆலோசனை வழங்குமாறு அக்குழு கேட்டுக் கொள்ளப்பட்டது. அக்குழுவில் உள்ள ரஷியப் பிரதிநிதி மூன்று மாத காலத்திற்குள் அனைத்து அணு ஆயுதங்களையும் அழித்திட வேண்டும் என்று கோரினார். அச்சமயத்தில் அமெரிக்கா மட்டும்தான் அணுகுண்டு தயாரித்து வைத்திருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

**மரபுவழி படைக்கல குறைப்புக்குழு :**

அணுகுண்டு தவிர பிற பாரம்பரியப் போர்க்கலன்களை குறைப்பதற்காக ஐ.நா. ஒரு குழு நிறுவியது. இக்குழுவின் உறுப்பினரான ரஷியா, உடனடியாக அனைத்து நாடுகளும் தங்கள் படைக்கலனில் மூன்றிலொரு பகுதியைக் குறைக்க வேண்டும் என்று கோரியபோது அமெரிக்கா படைக்குறைப்பிற்கு முன் பதட்டநிலை தணிந்து, பன்னாட்டு உறவுகள் சீரடைய வேண்டுமென்று கூறியது. இந்தக் கெடுபிடி மனப்பான்மை காரணமாக உருப்படியான தீர்மானம் எதுவும் நிறைவேறவில்லை.

**பாரூச் திட்டம் :**

பாரூச் என்ற அமெரிக்கப் பிரதிநிதி அணு ஆயுதங்களைச் செய்ய உதவும் மூலப்பொருட்கள் அவற்றைத் தரும் சுரங்கங்கள் அனைத்தும் ஐ.நா. சபை கண்காணிப்பின் கீழ் வரவேண்டும் என்பதும் புறக்கணிக்கப்பட்டது.

**படைக்குறைப்புக் குழு :**

**1950**–ல் அமெரிக்கக் குடியரசுத் தலைவர் ட்ரூமன் ஐ.நா. பொதுச் சபையில் பேசும்போது அணுசக்திக் குழு மற்றும் மரபு வழி படைக்கலக்குழு ஆகிய இரண்டையும்

படைக் குறைப்புக் குழு என்ற குழுவாக ஆக்கிட வேண்டும் என்று கூறிய யோசனை ஏற்றுக் கொள்ளப்பட்டது.

**அமைதிக்கு அணுசக்தி :**

**1953**–ல் அமெரிக்கக் குடியரசுத் தலைவர் ஐசன் ஹோவர் அமைதிக்கு அணுசக்தி என்ற புதியத் திட்டத்தை வெளியிட்டார். அதன்படி அணுசக்தி சாதனைகளைக் கொண்டிருந்த நாடுகள் அவற்றை ஐ.நா. அணுசக்தி குழுவிடம் ஒப்படைக்க வேண்டும் என்றும், அக்குழு அவற்றை அமைதிப் பணிகளுக்கு மட்டுமே பயன்படுத்த வேண்டும் என்றும் கூறப்பட்டது. இதனை ரஷியா நிராகரித்தது.

**படைப் பெருக்கம் :**

**1949** வரை அணுகுண்டின் ஏகபோக உரிமையை அமெரிக்கா வைத்திருந்தது. அவ்வாண்டில் ரஷியா தனது முதல் அணுகுண்டை பரிசோதித்தது. **1952**–ல் அமெரிக்க அணுகுண்டை விட அதிபயங்கரமான நீரகக் குண்டை கண்டுபிடித்தது. **1957**–ல் பிரிட்டனும் **1960**–ல் பிரான்சும் **1964**–ல் சீனாவும் அணுசக்தி நாடுகளாயின. அணுகுண்டு உற்பத்தியைக் கட்டுப்படுத்த வேண்டும் என்ற தீர்மானம் இயற்றிக் கொண்டிருந்தபோதே அணுகுண்டு உற்பத்தி கட்டுப்பாடற்றுப் போய்க் கொண்டிருந்தது.

**படைக்குறைப்பு உட்குழு (1953) :**

**1953**–ல் படைக்குறைப்பு சம்பந்தமானவற்றைப் பரிசீலிப்பதற்கு கனடா, பிரான்சு, ரஷியா, அமெரிக்கா, பிரிட்டன் ஆகிய ஐந்து நாடுகளடங்கிய உட்குழு நிறுவப்பட்டது. இக்குழு பத்தொன்பது தடைவ கூடியும் உருப்படியான திட்டம் எதனையும் தயாரிக்க இயலவில்லை. எனவே, ஐ.நா. பொதுச் சபையின் முதலாவது கூட்டத்தில் இனி படைக் குறைப்புக் குழு கூட்டத்தில் கலந்துகொள்ளப் போவதில்லை எனக் கூறிவிட்டது. அதன் பின் ஐ.நா. சபைக்கு வெளியே படைக்குறைப்பு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

**ஜெனீவா உச்சநிலை மாநாடு (1955) :**

ஸ்டாலின் மறைவிற்குப் பின் ரஷியத் தலைமைப் பொறுப்பேற்ற புல்கானின், குருஷேவ் ஆகியோர் கெடுபிடிப் போக்கினைச் சற்றுத் தளர்த்தனர். அதனால் பிரிட்டன், பிரான்சு, ரஷியா, அமெரிக்கா ஆகிய நான்கு வல்லரசுகளின் தலைவர்கள் ஜெனீவாவில் சந்தித்தனர். அப்போது படைக்குறைப்புப் பற்றி பேசப்பட்டது. இறுதியில் படைக் குறைப்பு உட்குழு மீண்டும் கூடி விவாதிக்க வேண்டும் என முடிவு செய்யப்பட்டது.

**பதின்மார் குழு (1960) :**

**1960–**ல் ஐ.நா. சபை பிரிட்டன், பிரான்சு, அமெரிக்கா, கனடா, இத்தாலி ஆகிய ஐந்து மேற்கு வல்லரசு நாடுகளும் ரஷியா, போலாந்து, பல்கேரியா, ருமேனியா, செக்கோஸ்லோவாகியா ஆகிய **5** கம்யூனிஸ்ட் நாடுகள் அடங்கிய பதின்மர் குழுவை நியமித்தது. இக்குழு ஜெனீவாவில் கூடி படைக்குறைப்பிற்கான பல்வேறு வழிவகைகளை ஆராய்ந்தது. பரஸ்பரம், சந்தேகம், பயம் காரணமாக எந்தவிதமான முடிவிற்கும் வர இயலவில்லை.

**பதினெண்மர் குழு (1962) :**

ரஷியப் பிரதமர் குருஷேவின் ஆலோசனையின்படி பதின்மர் குழுவோடு மேலும் எட்டு நடுநிலை நாடுகள் சேர்த்துக் கொள்ளளப்பட்டன. அவை இந்தியா, பிரேசில், பர்மா, எத்தியோப்பியா, மெக்சிக்கோ, நைஜுரியா, எகிப்து, ஸ்வீடன். இக்குழுவின் தொடக்கம் முதலே பிரான்சு கலந்து கொள்ளவில்லை. உண்மையில் இது **17** பேர் குழுவாக இயங்கியது. இக்குழுவில் அமெரிக்கா, அணுகுண்டுகளைச் செல்லும் கலன்களில் **39** சதவிகிதத்தைக் குறைக்கவேண்டுமென்றும், புதிதாக அணுஆயுத உற்பத்தியைத் தடைசெய்ய வேண்டுமென்றும் கூறியது. இதற்கு எதிராக ரஷியா நான்கு ஆண்டுகளில் மூன்று கட்டங்களாக சரியான பன்னாட்டுக் கண்காணிப்பிற்குட்பட்ட முழுப்படைக் குறைப்புச் செய்யப்படவேண்டும் என வலியுறுத்தியது.

**சோதனை தடை ஒப்பந்தம் (Test ban Treaty) (1963) :**

படைக்குறைப்பில் **1963–**ல் ஒரு குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டது. அவ்வாண்டில் வல்லரசுகள் வான்வெளியிலும் நீருக்கடியிலும் அணுஆயுதங்களைச் சோதனை செய்வதில்லை என்று ஒப்புக்கொண்டன. இதிலும் பிரான்சு சேரவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இந்த ஒப்பந்தத்தில் நூற்றுக்கு மேற்பட்ட நாடுகள் கையெழுத்திட்டன.

**ஜான்சனின் ஏழு அம்சத் திட்டம் (1966) :**

அமெரிக்கக் குடியரசுத் தலைவர் ஜான்சன் **1966–**ல் அணுஆயுதங்கள் பிற நாடுகளுக்குப் பரவக்கூடாதென்றும் அணுசக்தியின் அமைதி வழி நடவடிக்கைகள் மீது பன்னாட்டு கண்காணிப்பு வேண்டும் என்றும் கூறும் ஏழு அம்சத்திட்டம் ஒன்றைச் சமர்ப்பித்தார். அதனைப் பரிசீலிப்பதற்கென்று கூட்டப்பட்ட மாநாடு எந்தவிதமான முடிவிற்கும் வரமுடியாமல் ஒத்தி வைக்கப்பட்டது.

**அணுஆயுதப் பரவல் தடை ஒப்பந்தம் (Non Proliferation Treaty 1968) :**

பதினெண்மர் குழு சமர்ப்பித்த திட்டத்தின் பேரில் இந்த ஒப்பந்தம் செய்துகொள்ளப்பட்டது. இது மேலும் பல நாடுகள் அணுஆயுத உற்பத்தியில் ஈடுபடுவதை தடை செய்வதை நோக்கமாகக் கொண்டிருந்தது. இதன்படி அணுஆயுதங்களைத் தற்போது வைத்திருக்கும் நாடுகள் அவற்றைப் பிற நாடுகளுக்குக் கொடுக்கவும் கூடாது. அவற்றைத் தயாரிக்கும் முறைகளையும் தெரிவிக்கக்கூடாது என கேட்டுக்கொள்ளப்பட்டது. இதில் 14 நாடுகள் கையெழுத்திட்டன. ஆனால், இந்தியா, சீனா, ஜப்பான், பிரான்சு ஆகிய நாடுகள் கையெழுத்திடவில்லை.

**பயங்கர ஆயுதங்களைக் கட்டுப்படுத்தும் ஒப்பந்தம்**

**(Salt Strategic Arms Limitation Treaty (1972) :**

அணுஆயுத தடைப்பற்றிப் பேச்சுவார்த்தையும் தீர்மானங்களும் செய்யப்பட்டுக் கொண்டிருக்கம்போதே வல்லரசுகள் குறிப்பாக ரணியாவும் அமெரிக்காவும் கண்டம் விட்டு கண்டம் பாய்ந்து தாக்கும் ஏவுகணைகளை (ICBM), எதிர் ஏவுகணைகள் (ABM), நியூட்ரான் குண்டு போன்ற அதிபயங்கர ஆயுதங்களைச் செய்து குவித்துக் கொண்டிருந்தன. அவற்றின் அழிவுச் சக்தி வல்லரசுகளை சுயநினைவிற்குக் கொண்டு வந்தது. எனவே, ஐந்தாண்டு காலத்திற்கு இத்தகைய பயங்கர ஆயுதங்களின் உற்பத்தியை நிறுத்தி வைக்க இரு வல்லரசுகளும் சம்மதித்தன. இதில் குறிப்பிடத்தக்க அம்சம் என்னவென்றால், துணைக் கோள்கள் மூலம் இந்த ஒப்பந்த விதிகள் கடைப்பிடிக்கப்படுகின்றனவா என சோதித்துப் பார்த்துக் கொள்ள அனுமதிக்கப்பட்டதாகும்.

இவ்வொப்பந்தம் மீண்டும் புதுப்பிக்கப்பட வேண்டியிருந்தது. அச்சமயத்தல் ரஷியா ஆப்கானிஸ்தானத்தற்குள் படையனுப்பியதால் அது தள்ளிப்போனது. எனினும், அது பின்னர் 1982—ல் கையெழுத்தானது.

**படைக்குறைப்பிற்கான ஐ.நா.வின் சிறப்பு மாநாடு :**

படைப்பெருக்கம் போர் அபாயத்தை மட்டுமல்லாது, விண்வெளியை விஷமாக்கிவிடக்கூடிய அபாயத்தையும் ஏற்படுத்தியது. எனவே, அதனைக் கட்டுப்படுத்துவதற்காக ஐ.நா. சபையின் அனைத்து உறுப்பினர்களும் அடங்கிய சிறப்பு மாநாடுகள் 1978லும் 1982லும் கூட்டப்பட்டன. ஆனால், அதில் பயனேதும் விளையவில்லை. 1983 ஜுனில் மூன்றவாது சிறப்பு மாநாடு நடைபெற்றது. அதில்

இந்தியப் பிரதமர் ராஜுவ்காந்தி உட்பட 15 நாட்டுத் தலைவர்கள் உரை நிகழ்த்தினர். ஆனால், உருப்படியான எதனையும் சாதிக்கவில்லை.

**நடுத்தர எவுகணை ஒழிப்பு (1988) :**

படைக்குறைப்பு முயற்சியில் உலக வரலாற்றிலே முதன் முறையாக ஆக்க ரீதியான முன்னேற்றம் 1988–ல் ஏற்பட்டது. அமெரிக்க அதிபர் ரீகன் **விண்வெளிப் போர் (Star War)** திட்டத்தை வெளியிட்டார். இதன் மூலம் ஏவுகணைகளை விண்வெளியிலே எதிர்த்துத் தாக்கி அழிக்கும் சக்தி வாய்ந்த போர்க் கருவிகளைக் கண்டுபிடிக்கப் போவதாக அறிவித்தார். இத்திட்டம் **(Strategic Defence Initiative – SDI)** எனப்பட்டது. இதனால் பயங்கர கதிரியக்க விளைவுகள் ஏற்படும் என அஞ்சப்பட்டது. படைப் பெருக்கத்தல் ஏற்பட்ட இந்தப் பயங்கர முன்னேற்றம், தலைவர்களை அதிர்ச்சியடையச் செய்தது. எனவே, படைக்குறைப்பிற்கான பயனுள்ள நடவடிக்கையில் ஈடுபட வேண்டி யஅவசியத்தை உணர்ந்தனர்.

அமெரிக்க அதிபர் ரீகனும், ரஷிய அதிபர் கோர்பசேவும் கீழ்க்கண்ட இடங்களில் சந்தித்துப் பேசினர்.

**i) ஜெனிவா சந்திப்பு (1986)**

**ii) ரெய்க்ஜாவிக் சந்திப்பு (1987)**

**iii) மாஸ்கோ சந்திப்பு (1988)**

**iv) வாஷிங்டன் சந்திப்பு (1989)**

இந்தச் சந்திப்புகளின் விளைவாக, நடுத்தர ஏவுகணை ஒழிப்பு ஒப்பந்தம் கையெழுத்தானது. ஐரோப்பாவில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள 500 கி.மீ. முதல் 5000 கி.மீ. வரை பாயும் ஏவுகணைகளை முற்றிலும் ஒழிக்க இணங்கின. மூன்றாண்டு காலத்தற்குள் கீழ்க்கண்ட குறுகிய நடுத்தர ஏவுகணைகள் ஒழிக்கப்படவேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| | **SS 20**<br>**SS 4**<br>**SS 5** | **ரஷியாவின் நடுத்தர ஏவுகணைகள்** | **826** |
| | **SS 12**<br>**SS 25** | **ரஷியாவின் குறுகிய ஏவுகணைகள்** | **926** |

மொத்தம் **1,752**

————————

| | | | |
|---|---|---|---|
| | **குருய்ஷ் பெர்ஷிங் 2** | **அமெரிக்க நடுத்தர ஏவுகணைகள்** | **689** |
| | **பெர்ஷிங் 1–A** | **குறுகிய தூர ஏவுகணைகள்** | **170** |

மொத்தம் **859**

—————————

இதனைத் தொடர்ந்து மேலும் பல வரலாற்றுச் சிறப்பு மிக்க படைக் குறைப்பு ஒப்பந்தங்கள் செய்யப்பட்டன.

**1. இராசயன படைக்கலன்கள் ஒழிப்பு :**

**பயங்கர ஆயுத ஒழிப்பு ஒப்பந்தம் (START 1991) :**

**1991** ஜுலை **31–**ல் சோவியத் அதிபர் கோர்பசேவும் அமெரிக்க அதிபர் ஜார்ஜ் புஷ்ஷும் மாஸ்கோவில் பயங்கர ஆயுத ஒழிப்பு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர். இதன்படி இரு தரப்பினரும் தங்ககளடமுள்ள கண்டம் விட்டு கண்டம் தாக்கும் ஏவுகணைகள் உட்பட பல்வேறு ஆயுதங்களில் **30** சதவிகிதத்தைக் குறைக்க உடன்பட்டனர். ஒப்பந்தம் செயல்படுவதை மேற்பார்வையிட இரு நாடுகளின் கூட்டுக்குழு நிறுவப்படும்.

**2. முழு அணு ஆயுத சோதனை தடை ஒப்பந்தம் :**

**(Comprehensive Test Ban Treaty (TBT) 1996) :**

முழுமையான அணுஆயுத சோதனை தடை ஒப்பந்தம் ஒன்று தயாரிப்பதற்கு **1996** ஜுன் மாதம் ஜெனீவாவில் **44** நாடுகள் கூடின. அந்த மாநாட்டில் தயாரிக்கப்பட்ட ஒப்பந்தம் முழுமையான அணுஆயுதச் சோதனைத் தடைக்கு வழிவகுக்கவில்லை என்று இந்தியா கூறி அதனை ஏற்றுக்கொள்ள மறுத்தது. **இந்தியாவின் ஆட்சேபங்கள் :**

**i)** இந்த ஒப்பந்தம் பாரபட்சமானது. அணுஆயுதங்களையுடைய வல்லரசுகள் நிரந்தரமாக அவற்றை வைத்துக் கொள்ள அனுமதிக்கிறது. எனவே, அணுஆயுதம் உள்ள நாடுகள், அணுஆயுதம் இல்லாத நாடுகள் என உலக நாடுகளை நிரந்தரமாகப் பாகுபாடு செய்கிறது.

**ii)** இந்த ஒப்பந்தம் அணுஆயுத ஒழிப்பிற்கு வழி வகுக்கவில்லை. ஒப்பந்தத்தோடு அணுஆயுத ஒழிப்பிற்கான திட்டவட்டமான கால அட்டவணை இணைக்கப்படவில்லை.

**iii)** நீர், ஆகாயம், தரை ஆகியவற்றில் அணுஆயுத சோதனைகளை தடை செய்யும் இந்த ஒப்பந்தம், ஆய்வுச் சாலைகளில் **“கம்ப்யூட்டர் செயற்போலி’’ (Computer Stimulation)** முறையில் சோதனை செய்வதை தடை செய்யவில்லை.

**iv)** இறுதியாக, இது இந்தியாவின் பாதுகாப்புடன் தொடர்பு கொண்ட ஒரு விஷயம். எனவே, இதில் கையெழுத்திட உறுதியாக மறுத்துவிட்டது.

**திறனாய்வு :**

படைக்குறைப்பின் அவசியத்தை ஐ.நா. சபை உலகிற்கு எடுத்துக் காட்டியுள்ளது. வெற்றிக்கான வழிவகைகளை ஆராய்ந்துள்ளது. பேச்சுவார்த்தைகளுக்கான வாய்ப்புகளை அமைத்துக் கொடுத்துள்ளது. அனைத்து நாடுகளுக்கும் தத்தம் கருத்துக்களை எடுத்துரைக்கும் சந்தர்ப்பம் அளித்துள்ளது. ஐ.நா. சபையின் நிகழ்ச்சி நிரலில் 45 ஆண்டுகளாக முக்கிய இடத்தைப் பிடித்ததன் மூலம் வல்லரசுகளின் கவனத்தை இடைவிடாது ஈர்த்துள்ளது. அதன் பயனாக படைக்குறைப்பு முயற்சி வெற்றிபெற்றால் அது ஐ.நா. சபைக்கு மட்டுமல்லாமல் மனித சமுதாயத்திற்கே மாபெரும் நன்மை பயப்பதாகும்.

## 35.ஐரோப்பிய கூட்டமைப்பு

பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் தோன்றிய தேசிய உணர்வுகள் முழுத் திறமை வாய்ந்த நாடுகள் பலவற்றை உருவாக்கின. அளவிற்கு மீறிய தேசிய உணர்வுகள் அண்டை நாடுகளோடு பொருளியல் கூட்டுறவு கொள்ள இடையூராய் அமைந்தன. தேசிய நலன்களைப் பாதுகாத்தல் என்ற போர்வையில் நாடுகளிடையே கடக்க இயலா காப்புவரிச் சுவர்கள் பல எழுப்பப்பட்டன. ஆனால், இரண்டாம் உலகப் போருக்குப்பின் ஐரோப்பாவில் எழுந்த புதிய பொருளியல் பாதுகாப்பு பிரச்சனைகள் காரணமாக நாடுகள் தானாக ஒருங்கிணையத் தொடங்கின. காப்புவரிச் சுவர்கள் பொலபொலவெனச் சரிந்தன. தனித்தனி காற்றுப்புகா மண்டலமாக இயங்கிய நாடுகள் தொடர்பு வாயில்களை அகலத் திறந்து வைத்து அண்டை நாடுகளுடன் கூட்டுறவாடத் தொடங்கின. கூடி வாழ்வதன் மூலமே கோடி நன்மை பெற முடியும் என்ற அடிச்சுவடிப் பாடத்தில் உட்பொருளை உணர்ந்தன. எல்லைகளுக்காக எண்ணற்ற போர்களில் ஈடுபட்ட நாடுகள், இப்போது அந்த எல்லைகளையே அர்த்தமற்றதாக்கும்

இணைப்புகளில் ஒருங்கிணைந்தன. அமெரிக்க ஐக்கிய நாடுகளைப் போல் ‘‘ஐரோப்பிய ஐக்கிய நாடுகள்’’ (United States of Europe) உருவாக வேண்டும் என ராஜதந்திரிகள் குரல் எழுப்பினர். அதன் விளைவாக மேற்கு ஐரோப்பிய நாடுகள், அரசியல், பொருளியல், பாதுகாப்புத் துறைகளில் நெருங்கி வந்து இணைந்து செயல்படத் தொடங்கின. அதன் காரணமாக

**i) ஐரோப்பிய பொருளியல் கூட்டுறவு நிறுவனம் (Organisation for European Econoic Co-Operation)**

**ii) ஐரோப்பிய கவுன்சில் (Council of Europe)**

**iii) ஐரோப்பிய நிலக்கரி எஃகு சமூகம் (The European Coal and Steel Community)**

**iv) ஐரோப்பிய பாதுகாப்புச் சமூகம் (European Defense Community)**

**v) வட அட்லாண்டிக் பாதுகாப்பு ஒப்பந்தம் (NATO)**

**vi) ஐரோப்பிய அணுசக்தி சமூகம் (European Atomic Energy Community Euratom)**

**vii) ஐரோப்பிய பொருளியல் சமூகம் (European Economic Community) அல்லது ஐரோப்பிய பொதுச் சந்தை (European Common Market)**

ஆகிய கூட்டமைப்பு நிறுவனங்கள் உருவாக்கப்பட்டன.

**ஐரோப்பிய பொருளியல் கூட்டுறவு நிறுவனம் :**

இரண்டாம் உலகப் போருக்குப் பின் பொருளியல் சீரமைப்புப் பணிக்கு அமெரிக்கா அளித்த உதவியான ‘‘மார்ஷல் திட்டம்’’, பொருளாதார ரீதியில் மேற்கு ஐரோப்பிய நாடுகள் ஒருங்கிணைய வழிவகுத்தது. **1948–**ல் மார்ஷல் திட்டத்தின் மூலம் பயன்பெறும் **16** நாடுகள் கூடி பொருளாதார ஒத்துழைப்பிற்காக ஐரோப்பியப் பொருளியல் கூட்டுறவு நிறுவனத்தை உருவாக்கின. அது மார்ஷல் உதவியைப் பங்கிட்டுக் கொள்ளவும், அதன் மூலம் வர்த்தகத் தடைகளை நீக்கவும் உதவியாக இருந்தது. வர்த்தகத் தடைகளை மேலும் நீக்க, **1934–**ல் ஜெர்மன் அரசுகள் ஏற்படுத்திய ‘சால்வரைன் சுங்க வரிக்கூட்டு’ போன்ற ஏற்பாடுகளைச் செய்ய முயன்றன. ஏற்கனவே **1944–**ல் பெனிலக்ஸ் நாடுகள் (பெல்ஜியம், நெதர்லாந்து, லக்சம்பர்க்) இத்தகைய சுங்க வரிக்கூட்டினை நிறுவியிருந்தது குறிப்பிடத்தக்கது. இதனை மேலும் பல நாடுகளுக்கு

விரிவுபடுத்தனால் நல்லது என்ற கருத்து தோன்றியது. ஆனால், பிரிட்டன் இத்தகையத் திட்டத்திற்கு ஆதரவு அளிக்காததால் அது செயல்படுத்தப்படமுடியாது போயிற்று.

**ஐரோப்பிய கவுன்சில் :**

**1948**–ல் திஹேக் நகரில் **26** நாடுகளிலிருந்து ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஐரோப்பிய அறிஞர்கள் கூடி ஐரோப்பிய பேரவை ஒன்று அமைக்கக் கோரினர். இதன் விளைவாக **1949**–ல் இலண்டனில் **10** ஐரோப்பிய நாடுகள் ஒன்று கூடி, ஐரோப்பியக் கவுன்சிலை நிறுவின. அந்நாடுகள் பிரிட்டன், பிரான்சு, பெல்ஜியம், லக்சம்பர்க், நெதர்லாந்து, இத்தாலி, அயர்லாந்து, நார்வே, ஸ்வீடன், டென்மார்க் ஆகியவைகளாகும். பின்னர், இதில் துருக்கி, கிரீஸ் **(1949)**, ஐஸ்லாந்து **(1950)**, மேற்கு ஜெர்மனி **(1951)**, ஆஸ்திரியா **(1959)**, சைப்ரஸ் **(1961)**, ஸ்விட்சர்லாந்து **(1963)**, மால்டா **(1965)** ஆகிய நாடுகள் சேர்ந்தன.

ஐரோப்பியக் கவுன்சில் இரு முக்கியக் குழுக்களைக் கொண்டிருந்தது.

**i) வெளிநாட்டமைச்சர்கள் குழு :** இது ஆண்டிற்கு இருமுறை கூடும்.

**ii) 140 பிரதிநிதிகளைக் கொண்ட ஆலோசனைப் பேரவை :**

இது ஆண்டுதோறும் மூன்று வார காலம் கூடும்.

**நோக்கம் :**

**i)** உறுப்பு நாடுகளை விட அதிக அளவு ஒருமைப்பாட்டை உண்டு பண்ணுவது.

**ii)** பொதுவான பாரம்பரியப் பண்பாடுகளைப் பாதுகாப்பது ; பொருளியல் சமூக முன்னேற்றத்தை ஏற்படுத்துவது ஆகியவைகளாகும்.

ஐரோப்பிய கவுன்சிலின் முதல தலைவராக பெல்ஜியம் வெளிநாட்டமைச்சர் பால்ஹென்றிஸ்பர்க் என்பவர் தேர்ந்தெடுக்கப்பட்டார். முதல் கூட்டம் ஸ்ட்ராஸ்பர்க் நகரில் கூடியது. இதில் உண்மையான அரசியல் ஆணை அதிகாரங்களைக் கொண்டு வரையறுக்கப்பட்ட சில பணிகளை மேற்கொள்ள முடிவு செய்யப்பட்டது. ஆனால், எதிர்பார்த்த ஒருமைப்பாடு ஏற்படவில்லை. இன்னமும் தேசிய நலன்களே ஐரோப்பிய அரசியல்வாதிகளின் முதன்மை நோக்கமாக இருந்தது. எனினும், **1966**–ல் சட்டம், சமூகம், பொருளாதாரம், பொதுச் சுகாதாரம், சுற்றுப்புறச் சூழ்நிலைப் பாதுகாப்பு, கல்வி, அறிவியல் ஆகியவற்றில் கூட்டுறவுடன் செயல்படக் கூடிய திட்டங்கள் வகுக்கப்பட்டன. உறுப்பு நாடுகள் தங்கள் குடிகட்கு பொருளியல், சமூக உரிமைகளை வழங்க வேண்டுமென்று கோரும் சமூக சாசனம் ஒன்று தயாரிக்கப்பட்டது. மற்றும் பல்வேறு

துறைகளில் ஒத்துழைப்புத் திட்டங்களுக்கென 70க்கும் மேற்பட்ட ஒப்பந்தங்கள் கையெழுத்தாயின. இவையெல்லாம் ஒருமைப்பாட்டை நோக்கி ஐரோப்பாவை இட்டுச் செல்லும் படிக்கட்டுகளாக அமைந்தன.

**ஐரோப்பிய நிலக்கரி எஃகு சமூகம் :**

**1950** மே **9–**ல் பிரெஞ்சு அயல்நாட்டமைச்சர் ராபர்ட் ஸ்கூமேன் பத்திரிக்கை நிருபர்களை அழைத்து எதிர்பாராத வியப்பூட்டும் செய்தியொன்றை வெளியிட்டார். ‘‘பிரெஞ்சு – ஜெர்மன் இரும்பு, நிலக்கரி உற்பத்தி அனைத்தையும் ஒரு பொதுவான ஆணைக் குழுவிடம் ஒப்படைக்க பிரெஞ்சு அரசு தயாராயிருக்கிறது. அந்தக் குழுவில் பிற ஐரோப்பிய அரசுகளும் சேலாம்’’ என்பதே அந்தச் செய்தி. மேற்கு ஐரோப்பாவின் இரும்பு நிலக்கரிச் சுரங்கங்கள், ரூர், அல்சாஸ், லொரைன், ஸார், லக்சம்பர்க், பிரான்சின் வடகிழக்குப் பகுதி, பெல்ஜியத்தின் தென் பகுதி ஆகிய ஒரு குறுகிய வட்டத்தினுள்ளே அமைந்திருந்தன. நாடுகளின் பொருளியல் வளத்திற்கு மூல காரணமான அவ்விரு கனிப்பொருட்கள் அடங்கியுள்ள பகுதிகளை தங்கள் நாட்டெல்லைக்குள் கொண்டுவரவேண்டுமென நாட்டுப் பற்றுள்ள ஜெர்மன், பிரெஞ்சு மக்கள் விரும்பியதில் வியப்பில்லை. எனவே, இரு நூற்றாண்டு காலமாக அப்பகுதியின் மேலாதிக்க அரசியல் உரிமை குறித்து அவ்விரு நாடுகளும் பெரும் சர்ச்சையில் ஈடுபட்டன. அதனால், உலகப் போர்கள் மூண்டன. இரு நாடுகளிடையே தீராப் பகைக்குக் காரணமான அவ்விடங்களை இரு நாடுகளுக்கும் பொதுவாக்கிவிட்டால் பகை நீங்கும், வளம் பெருகும், அமைதி உறுதி பெறும் என எண்ணிய ஸ்கூமேன் தன் திட்டத்தை வெளியிட்டார். இதனை ஜெர்மன் சான்ஸ்லர் கொன்ராடு அடினாரும், இத்தாலியப் பிரதமர் கஸ்பேரியும் வரவேற்றனர். **1951–**ல் பாரீசில் இதற்கான ஒரு உடன்படிக்கை சம்பந்தப்பட்ட நாடுகளிடையே கையெழுத்தானது. **1952–**ல் ‘‘ஐரோப்பிய நிலக்கரி எஃகு சமூகம்’’ உருவானது. இச்சமூகத்தில் பிரான்ஸ், மேற்கு ஜெர்மனி, பெல்ஜியம், லக்சம்பர்க், நெதர்லாந்து, இத்தாலி ஆகிய நாடுகள் இணைந்தன.

**இச்சமூகம் மூன்று முக்கிய நோக்கங்களைக் கொண்டிருந்தது. அவை :**

**1)** நிலக்கரி எஃகு தொழிலில் உறுப்பு நாடுகளிடையேயுள்ள அனைத்துத் தடைகளையும் அகற்றி ஒருமுகப்படுத்துதல்.

**2)** பொருளியல் நடவடிக்கைகளை விரிவுபடுத்தி, நாட்டு மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல்.

**3)** தொடர்ந்து பிற பொருளியல் துறைகளிலும் அரசியலிலும் ஒருமைப்பாடு ஏற்படுத்துதல்.

**1955** பிப்ரவரியில் இரும்பு, நிலக்கரி, கனிப் பொருட்களுக்கும், பொதுச் சந்தை ஏற்படுத்தப்பட்டது. அவ்வாண்டு மே திங்களில் எஃகும் பொதுச் சந்தை பொருளாக்கப்பட்டது. **1954** ஆகஸ்டில் சிறப்பு எஃகும் அவ்வினத்தோடு சேர்க்கப்பட்டது. உறுப்பு நாடுகளுக்கிடையில் உள்ள சுங்க வரித் தடைகள் படிப்படியாக அகற்றப்பட்டன. விலை நிாணயம், போக்குவரத்துக் கட்டணம் ஆகியவற்றில் நிலவிய வேறுபாடுகள் அகற்றப்பட்டன. நான்கு ஆண்டுகளில் நாடுகளின் சமூகப் பொருளாதாரம் உறுதிப்பட்டு வளர்ச்சியடைந்தது. எனவே, இச்சமூகக் கூட்டுறவு பிற துறைகளுக்கும் விஸ்தரிக்கப்பட்டது. அதன் பயனாக ஐரோப்பிய பொதுச் சந்தை, பொருளியல் சமூகம், அணுசக்தி சமூகம் போன்றவை உருவாயின.

இத்திட்டத்தின் வெற்றியைக் கண்டு வியந்த பிரிட்டன், அயர்லாந்து, டென்மார்க் ஆகிய நாடுகள் **1973**–ல் இச்சமூகத்தில் இணைந்தன.

இதனை நிர்வகிக்க மூன்று நிறுவனங்கள் உருவாக்கப்பட்டன.

**1) உயர் ஆணைக்குழு**

**2) பொதுப் பேரவை**

**3) நீதிமன்றம்**

இதில் பொதுப் பேரவை ஸ்ட்ராஸ்பர்க் நகரிலும், பிற இரண்டு நிறுவனங்களும் லக்சம்பர்க்கிலும் நிறுவப்பட்டன. பிரெஞ்சு வெளிநாட்டமைச்சர் ஜுன் மோனட் சமூகத்தன் முதல் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

**ஐரோப்பியப் பாதுகாப்புச் சமூகம் :**

ஐரோப்பிய நிலக்கரி எஃகு சமூகம் பெற்ற வெற்றியால் புதிய உற்சாகமடைந்த நாடுகள் (பிரான்சு, மேற்கு ஜெர்மனி, இத்தாலி, பெனிலக்ஸ் நாடுகள்) பொதுவான பாதுகாப்புப் படையை உருவாக்க முயன்றன. அதில் தேசியப் படைகள் இருக்காது. பொதுவான சமூகப் படைகளே இருக்கும். அப்படைகள் அனைத்து உறுப்பு நாடுகளின் ஆணைக்குழுவால் நிர்வகிக்கப்படும். மேற்கு ஐரோப்பிய நாடுகளின் அரசியல் ஒருமைப்பாட்டை நோக்கி ஒரு பெரும் அடி எடுத்து வைக்கப்பட்டது. பிரிட்டன் இச்சமூகத்தில் சேரத் தயங்கியது. ஆனால், எதிர்பாராத விதமாகப் பிரெஞ்சு தேசிய மன்றம் **1954**–ல் இப்பாதுகாப்புச் சமூகத்தற்கு எதிராகத் தீர்மானம் இயற்றி

அம்முயற்சியை முளையிலேயே கொன்றுவிட்டது. ஏனென்றால், அது பிரெஞ்சு தேசியப் பொருமையை மங்கச் செய்வதுடன், ஜெர்மனியை மீண்டும் படைவலுமிக்க நாடாக மாற்ற வழி வகுக்கிறது என்று எண்ணியதேயாகும். ஆனால், பின்னர் நோட்டோ இராணுவ அமைப்பில் படைவலுவுடன் கூடிய மேற்கு ஜெர்மனி இணைந்தது குறிப்பிடத்தக்கது.

**ஐரோப்பிய அணுசக்திச் சமூகம் :**

ஐரோப்பிய நிலக்கரி எஃகு சமூகத்தின் வெற்றி, மேலும் அந்நாடுகளை நெருக்கமாக்கியது. **1957–**ல் அச்சமூகத்தைச் சேர்ந்த நாடுகளின் அயல் நாட்டமைச்சர்கள் ரோமில் கூடி அமைதிப் பணிகளுக்கு அணு சக்தியைப் பயன்படுத்தும் உடன்படிக்கை ஒன்றில் கையெழுத்திட்டனர். இது **1958–**ல் நடைமுறைக்குவந்தது. அதன் காரணமாக **1961–**ல் **1.5** மில்லியன் கிலோவாட் உற்பத்தித் திறனுடைய அணு உலைகள் நிறுவப்பட்டன. பெல்ஜியம், ஜெர்மன், நெதர்லாந்து, இத்தாலி ஆகிய நாடுகளில் அணு ஆய்வுக் கூடங்கள் நிறுவப்பட்டன. தனியார் அணுசக்தித் திட்டங்களுக்குப் பயனுள்ள தொழில் நுட்ப, பண உதவிகள் வழங்கப்பட்டன.

**ஐரோப்பியப் பொருளியல் சமூகம் :**

**1957–**ஆம் ஆண்டு, ரோம் நகரில் கூடிய மேற்கு ஐரோப்பிய நாடுகளின் அயல்நாட்டமைச்சர்கள் (பிரான்ஸ், இத்தாலி, மேற்கு ஜெர்மனி, பெனிலக்ஸ் நாடுகள்) ஐரோப்பியப் பொதுச் சந்தை ஒன்று நிறுவ முடிவு கட்டினர். இது **1959–**ல் செயல்படுத்தப்பட்டது. இதனை நிறுவ பெல்ஜியம் அயல்நாட்டமைச்சர் ஹென்றிபால் ஸ்பர்க், பிரெஞ்சு அயல்நாட்டமைச்சர் ஜுன்மோனட் ஆகியோர் பெரும் முயற்சி எடுத்தனர். இத்தகைய ஒரு நிறுவனம் மேற்கு ஐரோப்பிய நாடகளை ஒருங்கிணைத்து வலுப்படுத்தும் என்று அமெரிக்கா கருதியதால் அந்நாடும் அதற்கு ஆதரவளித்தது. இதன்படி, இச்சமூக நாடுகள் தம்மிடையேயுள்ள சுங்க வரித்தடைகளை **12** முதல் **15** ஆண்டு காலத்திற்குள் படிப்படியாய் அகற்றிவிட ஒப்புக் கொண்டன. இச்சமூகத்தற்கு வெளியில் உள்ள நாடுகளினுடனான சுங்க வரியும் பொதுவாக நிர்ணயிக்கப்பட்டது. போக்குவரத்துக் கட்டணங்கள், வெளிநாட்டு வர்த்தகக் கொள்கையில் சமூக நாடுகளிடையே வேறுபாடு காட்டக்கூடாது. தனியார் தொழில் வர்த்தக நிறுவனங்களின் முற்றுரிமைகளும் கட்டுப்படுத்தப்பட்டன. சமூக நாடுகளிடையே தடையற்ற தாராள மூலதன நடமாட்டங்களுக்கு ஏற்பாடு செய்யப்பட்டது. கூட்டு

மூலதன வங்கிகள், பொதுவான வேளாண்மைக் கொள்கைகள், வரிவிதிப்புக் கொள்கைகள், சமூக நலச் சட்டங்கள் ஆகியவை ஊக்குவிக்கப்பட்டன.

இந்தப் பொருளியல் சமூகம் மூன்று வித நிர்வாக நிறுவனங்களைக் கொண்டிருந்தது. அவை :

**i)** உறுப்பு நாட்டுப் பாராளுமன்றங்கள் தேர்ந்தெடுத்து அனுப்பும் பிரதிநிதிகள் அடங்கிய பேரவை : இது ஆலோசனை மன்றமாகச் செயல்பட்து.

**ii)** **நாடுகளின் அமைச்சர் குழு** : இது கொள்கைகளை வகுக்கும் செயற்குழுவாக இயங்கியது.

**iii)** நீதிமன்றம்.

**1968** ஜூலையில் குறிப்பிடப்பட்ட காலக்கட்டத்திற்குப் பதினெட்டு மாதங்களுக்கு முன்பாகவே நாடுகளிடையேயுள்ள சுங்க வரித் தடைகள் முற்றிலும் அகற்றப்பட்டன. பிற நாடுகள் மீது ஒரே மாதிரியான ஏற்றுமதி இறக்குமதி வரிகள் விதிக்கப்பட்டன. இதன் மூலம் ஆறு நாடுகளில் உள்ள **18,30,00,000** மக்கள் ஒரே பொருளியல் சமூகமாக இயங்கத் தொடங்கினர். பொருளியல் நிலையும், வாழ்க்கைத் தரமும் அதனால் உயர்ந்தது.

ஐரோப்பியப் பொதுச்சந்தைத் திட்டத்தைத் தொடக்கக் காலம் முதற்கொண்டே சந்தேகக் கண்கொண்டுப் பார்த்து ஒதுங்கி நின்ற பிரிட்டன், அதன் வெற்றி கண்டு வியப்புற்றது. அதில் சேர விருப்பம் தெரிவித்தது. ஆனால், டிகால் தலைமையிலான பிரெஞ்சு அரசு அதற்கு எதிர்ப்புத் தெரிவித்தது. பிரிட்டன் தன் காமன்வெல்த் நாடுகளுடன் நெருங்கிய பொருளியல் தொடர்பு கொண்டிருப்பதாலும், அமெரிக்காவுடன் பொருளியலில் வலுவாகப் பிணைக்கப்பட்டிருப்பதாலும், அந்நாடு தன் ஐரோப்பியத் தன்மையை இழந்துவிட்டது என்று பிரான்சு கூறியது.

அதன் காரணமாக **1973** வரை பிரிட்டன், சமூகத்தின் உறுப்பினராக இயலவில்லை. அவ்வாண்டில்தான் பிரிட்டனும், அயர்லாந்தும், டென்மார்க்கும் அதில் உறுப்பினராகச் சேர்ந்தன.

அதன்பின் ஐரோப்பிய நாடுகள் மேலும் ஒருங்கிணைந்தன.

**1979–ல்** ஐரோப்பிய பாராளுமன்றத்தற்கு உறுப்பு நாடுகளின் மக்களே நேரடியாக உறுப்பினர்களை தேர்ந்தெடுக்கும் முறை நடைமுறைப் படுத்தப்பட்டது.

**1981–ல்** கிரீஸ், ஐரோப்பிய சமூகத்தில் இணைந்தது.

**1983–ல்** பொதுவான மீன்பிடிக் கொள்கை வகுக்கப்பட்டது.

**1983–ல்** முழுமையாக ஒருங்கிணைக்கப்பட்ட சந்தைச் சரக்குகள், நாணயங்கள் மக்கள் தாராளப் புழக்கத்திற்கு வந்தன.

**1985–ல்** முதல் ஐரோப்பிய பாஸ்போர்ட் வழங்கப்பட்டது.

**1986–ல்** ஸ்பெயின், போர்த்துகல் உறுப்பு நாடுகளாயின.

**1990–ல்** கிழக்கு ஜெர்மனி, மேற்கு ஜெர்மனியோடு இணைந்து ஐக்கிய ஜெர்மனி உருவானது.

**1991–ல்** மாட்ரிட் ஒப்பந்தப்படி ஐரோப்பியச் சமூகத்தில் **1999–ல்** ஒரே நாணய முறை புழக்கத்தில் விடப்படும்.

## 30.இலத்தீன் அமெரிக்க நாடுகள் எழுச்சி

பன்னாட்டரசியல் உறவுகளில் இலத்தீன் அமெரிக்க நாடுகளின் செல்வாக்கு அண்மைக்காலம் வரை குறிப்பிட்டுக் கூறக்கூடியதாக இல்லை. புதிய உலகத்தில் அமைந்துள்ள இந்நாடுகள் பத்தொன்பதாம் நூற்றாண்டு வரை பெரும்பாலும் ஸ்பானியக் குடியேற்றங்களாகவே இருந்தன. பிரேசில் நீங்கலாக தென் அமெரிக்காவில் உள்ள அனைத்து நாடுகளும், மத்திய அமெரிக்க நாடுகளும், கரீபியன் தீவுகளும், ஸ்பானியக் குடியேற்றங்களாக இருந்தன. பிரேசில் மட்டும் போர்த்துகீசிய குடியேற்றமாக இருந்தது. பிரான்ஸ், பிரிட்டன் நாடுகளுக்கும் சில குடியேற்றங்கள் இருந்தன. பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதிக்குள் அனைத்துக் குடியேற்றங்களும் விடுதலை பெற்ற குடியரசு நாடுகளாக மலர்ந்தன.

முதல் உலகப் போரின் போது அவைந டுநிலை வகித்தன. அப்போான் இறுதியில் அவை பன்னாட்டுக் கழகத்தன் உறுப்பினர்களாயின. இருபது நாடுகள் அவ்வாறு உறுப்பினர்களாயிருந்தன. அதன்பின் உலக அரசியலில் பங்கு பெற்றன. தென் அமெரிக்க நாடுகளிடையே மூண்ட சச்சரவுகள், பன்னாட்டுக் கழகத்தன் முன் வைக்கப்பட்டு, அமைதியாகத் தீர்த்து வைக்கப்பட்டன. அவை :

**i)** பெரு நாட்டிற்கும் கொலம்பியாவிற்கும் இடையில் லெற்றிசியா என்ற பிரதேசம் உரிமை குறித்த சச்சரவு.

**ii)** பராகுவே, பொலிவியா நாடுகளுக்கிடையில் கிராண்ட்சாக்கோ என்ற இடம் பற்றிய தகராறு.

**தொடக்கக் கால மாநாடுகள் :**

இரண்டாம் உலகப் போரின்போது இலத்தீன் அமெரிக்க நாடுகள் அமெரிக்க ஐக்கிய நாடுகள் தலைமையில் (அர்ஜென்டைனா நீங்கலாக) ஒருங்கிணைந்து செயல்பட்டன. அவை, பல இடங்களில் மாநாடு கூட்டி தங்கள் போர்க் கொள்கையைப் பிரகடனப்படுத்தின.

**i) பனாமா மாநாடு (1939) :**

21 இலத்தீன் அமெரிக்க நாடுகளின் வெளிநாட்டு அமைச்சர்கள் பனாமாவில் கூடினர். புதிய உலகமானது நடுநிலை பாதுகாப்பு மண்டலம் என அறிவிக்கப்பட்டது. தங்களின் பாதுகாப்பு, வாணிப நலக்களைப் பாதிக்கும் வகையில் போர் புரியும் நாடுகள் நடந்துகொள்ளக்கூடாது என்று அறிவிக்கப்பட்டது.

**ii) ஹவானா மாநாடு (1940) :**

மறு ஆண்டில் ஹவானா நகரில் வெளிநாட்டமைச்சர்கள் கூடி மன்றோ கொள்கையை நினைவூட்டி புதிய பகுதியில் வெளியார் தலையீடு கூடாது என அறிவித்தனர்.

**iii) ரியோடி ஜெனிரோ மாநாடு (1942) :**

1941 டிசம்பரில் அமெரிக்காவிற்குச் சொந்தமான பெர்ல் துறைமுகத்தை ஜப்பான் தாக்கியவுடன், அமெரிக்கா போரிலிறங்கியது. அதனால் ஏற்பட்ட விளைவுகளைப் பரிசீலிக்க 1942–ல் ரியோடி ஜெனிரோவில் வெளிநாட்டமைச்சர்கள் கூடினர். அவர்கள் அச்சு நாடுகளுடன் வாணிபம் மற்றும் இராஜதந்திரத் தொடர்புகளைத் துண்டித்துக் கொள்வதென முடிவு செய்தனர்.

**iv) மெக்சிகோ நகர் மாநாடு (1945) :**

போரினால் ஏற்பட்ட பிரச்சனைகளை ஆராய இம்மாநாடு கூட்டப்பட்டது. ஐ.நா. சபையில் இலத்தீன் அமெரிக்க நாடுகளின் பங்கு பற்றியும் ஆராயப்பட்டது.

இவ்வாறு போர்க காலத்தில் தங்களின் பொதுவான பிரச்சனைகளை ஆராயும் பொருட்டு மாநாடு கூட்டினாலும், அமெரிக்க கண்டத்து நாடுகளின் நிரந்தர அமைப்பு எதுவும் நிறுவப்படவில்லை. அவ்வவ்போது கூடிக் கலையும் மாநாடுகளாகவே இருந்தன. எனினும் அவை அனைத்து அமெரிக்க நாடுகளின் அமைப்பு ஒன்றினை நிறுவும் அவசியத்தை எடுத்துரைத்தன.

**ரியோடி ஜெனிரோ மாநாடு :**

அனைத்து அமெரிக்க நாடுகளின் அமைப்பு உருவானதில் ரியோடி ஜெனிரோ மாநாட்டின் பங்கு முக்கியமானது. இம்மாநாட்டில் கூட்டுப் பாதுகாப்புப் பற்றிய முறைப்படியான ஒப்பந்தம் ஒன்று கையெழுத்தானது. அது ரியோ ஒப்பந்தம் எனப்படுகிறது. அதன்படி அமெரிக்க நாடுகள் ஏதாவது ஒன்றின் மீது தொடுக்கப்படும் தாக்குதல், அனைத்து நாடுகள் மீது தொடுக்கப்பட்டத் தாக்குதலாகக் கருதப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என முடிவு செய்யப்பட்டது. இந்த ஒப்பந்தத்தில் 21 நாடுகள் கையெழுத்திட்டன.

**பொகோடோ மாநாடு (1948) :**

இதுவரை அமெரிக்கக் கண்டத்து நாடுகள் அவ்வப்போது மாநாடு கூட்டி, பொதுவான பிரச்சனைகளை விவாதித்து வந்தன. இப்போது அதற்கு ஒரு இயக்க வடிவு கொடுக்கப்பட்டது. **1948–**ல் பொகோடாவில் கூடிய மாநாட்டில் **அமெரிக்க நாடுகள் கழகம் (Organisation of American State (OAS)** நிறுவப்பட்டது.

**அமெரிக்க நாடுகள் கழகத்தின் அமைப்பு (OAS) :**

**i)** இதன் தலைமை நிறுவனம், அமெரிக்க ஐக்கிய நாடுகளின் தலைநகர் வாஷிங்டனில் அமைந்துள்ளது. இது ஒரு பொதுச் செயலாளரின் கீழ் இயங்கி வருகிறது. தற்போது 30 நாடுகள் உறுப்பினர்களாயுள்ள.

**ii)** நாடுகளின் சிறப்புத் தூதர்கள் அடங்கிய கவுன்சில் ஒன்றும் நிறுவப்பட்டது.

**iii)** இது ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை ஏதாவது ஒரு நாட்டின் தலைநகரில் கூடும்.

**iv)** பிரச்சனை எழும்போது வெளிநாட்டமைச்சர்கள் கூடிப்பேசி முடிவு எடுப்பர்.

**v)** ரியோ ஒப்பந்தத்தின் நிபந்தனைகளை நிறைவேற்றும் பொறுப்பும் இக்கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டது.

**vi)** அமெரிக்க நாடுகளிடையே பரஸ்பரம், ஒத்துழைப்பு, கருத்துப் பரிமாற்றம் ஏற்படுவதற்கு வசதியாக பல சிறப்புக் குழுக்களும் நிறுவப்பட்டன. அவை :

அ) அனைத்து அமெரிக்கப் பொருளியல் சமூகக் குழு,

ஆ) அனைத்து அமெரிக்க நடுவர் குழு,

இ) அனைத்து அமெரிக்க பண்ணாட்டுக் குழு,

ஈ) அமெரிக்க சுகாதார நிறுவனம்,

உ) அனைத்து அமெரிக்க அறிவியல் வேளாண்மை நிறுவனம்,

ஊ) புவியியல் வரலாற்று நிறுவனம்,

எ) அனைத்து அமெரிக்க செய்திப் போக்குவரத்து அலுவலகம்

இக்குழுக்கள் அடிக்கடி கூடி, தங்கள் துறை சார்ந்த விஷயங்களில் நாடுகளிடையே ஒத்துழைப்பு ஏற்படுத்தி, வளர்ச்சிக்கானத் திட்டங்களை வகுக்கின்றன. தங்களிடையே ஏற்படும் பிரச்சனைகளை நடுவர் குழு மூலம் நல்ல முடிவு கண்டு, நல்லுறவுடன் வாழ்கின்றனர்.

**கம்யூனிசத்திற்கு எதிர்ப்பு :**

இரண்டாம் உலகப் போருக்குப் பின் கெடுபிடிப்போர் சூழ்நிலை தோன்றிய போது, அமெரிக்க நாடுகள் கம்யூனிசத்தற்கு எதிர் அணியில் அமெரிக்க ஐக்கிய நாடுகளுடன் ஒருங்கிணைந்து நின்றன. புதிய உலகத்தினுள் கம்யூனிசம் நுழைந்து விடக்கூடாது என்பதில் உறுதியாக நின்றன. **1953–**ல் காரகாசில் கூடிய அ.நா. கழகம், அமெரிக்கக் கண்டத்தில் கம்யூனிச ஊடுருவலை தடை செய்யத் தீர்மானித்தது. கம்யூனிசத்திற்கு ஆதரவளிக்கும் நாடுகள் மீது பொருளாதார முற்றுகை போன்ற நடவடிக்கை எடுக்கவும் தீர்மானிக்கப்பட்டது.

**அமெரிக்க நாடுகள் கழகத்தின் சாதனைகள் :**

அமெரிக்கா, நாடுகளிடையே ஏற்பட்ட சிக்கல்களை வெற்றிகரமாகத் தீர்த்து வைத்துள்ளது. **1955–**ல் நிகரகுவா கோஸ்டரீகா மீது படையெடுத்தபோது, உடனடியாக தலையிட்டு தகராறைத் தீர்த்து வைத்தது. **1963–**ல் ஹெய்டி – டொமினிகள் குடியரசுத் தகராறின் போதும் **1965–**ல் டொமினிகன் சிக்கலின் போதும் கழகம் தலையிட்டு அமைதியை நிலைநாட்டியது. கவாதமாலா அரசு தனது அண்டை நாடுகளுக்கெதிராக ஐ.நா. பாதுகாப்புக் குழுவில் புகார் புரிந்ததை பிற அமெரிக்க நாடுகள் விரும்பவில்லை. எனவே, அந்நாடு அப்புகாரைத் திரும்பப் பெற்று அமெரிக்க நாடுகள் நிறுவனத்திடம் சமர்ப்பித்தது. மற்றும் வாணிகம், பொதுச் சுகாதாரம், கல்வி, பண்பாட்டு பரிமாற்றம் போன்ற பிற அமைதிப் பணிகளில் அக்கழகம் குறிப்பிடத்தக்க சாதனை புரிந்துள்ளது.

**கியூபாவும் அமெரிக்க நாடுகள் நிறுவனமும் :**

கியூபா அதிபரான பிடல் காஸ்ட்ரோ, அமெரிக்க நாடுகள் கழகத்திற்கு பெருஞ்சோதனையாய் விளங்கினார். **1961–**ல் அமெரிக்க ஐக்கிய நாடுகள் அவரை இராணுவ தலையீடு மூலம் பதவி நீக்கம் செய்ய முயன்று தோற்றபின், இரு நாடுகளுக்கிடையே பகை உணர்வு ஏற்பட்டது. அதன் காரணமாக கியுபா, ரஷ்யாவிடம் உதவி கோரியது. அவ்விதமாக கியூபா வழியாக புதிய கண்டத்தில் கம்யூனிசம் நுழைந்தது. இது **1954** காரகாஸ் மாநாட்டுத் தீர்மானத்திற்கு விரோதமானது எனக்கூறி பல இலத்தீன் அமெரிக்க நாடுகள் அதனுடன் தூதரக உறவை முறித்துக் கொண்டன.

**1962–**ல் அமெரிக்க நாடுகளின் வெளிநாட்டு அமைச்சர்கள் கூடி, கியூபாவை தங்கள் கழகத்திலிருந்து வெளியேற்றின. **1963–**ல் கியூபா தன்னாட்டில் உள்நாட்டில் குழப்பங்களைத் தூண்டுவதாக வெனிசூலா புகார் கூறியபோது, அதனை விசாரிக்க ஒரு குழு நியமிக்கப்பட்டது. அக்குழுவின் அறிக்கையின்படி கியூபா மீது பொருளாதாரத் தடை விதிக்கத் தீர்மானிக்கப்பட்டது.

தன்னைத் தனிமைப்படுத்திய அமெரிக்காவை எதிர்த்துப் போராட, கியூபா அதிபர் பிடர் காஸ்ட்ரோ கூட்டுச்சேரா நாடுகளின் ஆதரவைப் பெற்றுள்ளார். **1979–**ல் கூட்டுச்சேரா நாடுகளின் மாநாடு ஹவானாவில் நடைபெற்றது. அதற்குக் காஸ்ட்ரோ தலைமை தாங்கினார். அம்மாநாட்டை அமெரிக்க ஏகாதிபத்திய எதிர்ப்பு இயக்கமாக ஆக்க முயன்றார்.

போர்த்துக்கீசியரின் ஆப்பிரிக்கக் குடியேற்றமான அங்கோலாவின் விடுதலைப் போராட்டத்தற்கு காஸ்ட்ரோ தீவிர ஆதரவு அளித்தார். தொண்டர் படையினரை அனுப்பி, அந்நாடு விடுதலை பெற பேருதவி புரிந்தார்.

**30.அமெரிக்க ஐக்கிய நாடுகளும் – இலத்தீன் அமெரிக்க நாடுகளும் :**

அமெரிக்க அதிபர் கென்னடி, இலத்தீன் அமெரிக்க நாடுகளுக்கு உதவி புரியும் பொருட்டு, ‘**முன்னேற்றத்திற்காக ஒன்றுபடுதல்**’ என்ற பொருளாதார உதவித் திட்டத்தை வகுத்தார். அதற்கென **100** மில்லியன் டாலர் செலவிடத் தீர்மானிக்கப்பட்டது. இதனை ‘**இலத்தீன் – அமெரிக்க மார்ஷல் திட்டம்**’ என்று கூறலாம். இது அப்பகுதியில் கம்யூனிசம் பரவாது தடுக்க எடுக்கப்பட்ட முயற்சியாகும். முன்னேற்றத்தற்காக ஒன்றுபடுதல் திட்டத்தில் **20** இலத்தீன் அமெரிக்க நாடுகள் கையெழுத்திட்டன.

எனினும் அமெரிக்கா, இலத்தீன் அமெரிக்க உள்நாட்டு விவகாரங்களில் தொடர்ந்து தலையிட்டு வருகிறது. ஐசன்ஹோவர் காலத்தில் குவாதமாலாவிலும், கென்னடி காலத்தில் கியூபாவிலும், ஜான்சன் காலத்தில் டொமினிகன் குடியரசிலும் தலையிட்டது. சிலி நாட்டில் அதன் அதிபர் அல்லண்டே என்பவர் படுகொலை செய்யப்பட்டு, அங்குள்ள கம்யூனிஸ்ட் சார்பு அரசு கவிழ்க்கப்பட்டதில் அமெரிக்காவிற்குப் பங்கு இருக்கிறது. அதிபர் ரீகன் நிகாரகுவா நாட்டில் உள்நாட்டுக் கலகத்தில் சான்டினிஸ்டா குழுவிற்கு எதிராக காண்ட்ராஸ்களுக்குப் படை கொடுத்து உதவினார். கிரனடா என்ற சிறியதொரு கரீபியன் நாட்டில் இராணுவத் தலையீடு செய்து, அங்குள்ள அரசாங்கத்தைக் கவிழ்த்து, தமக்கு சாதகமான அரசை நிறுவினார்.

எல்லாவற்றிற்கும் மேலாக அர்ஜென்டைனாவிற்கு அருகிலுள்ள பாக்லாந்து தீவை பிரிட்டன் கைப்பற்றியபோது அமெரிக்கா, பிரிட்டனுக்கு மறைமுக உதவி அளித்தது. இதன் மூலம்தான் ஒன்றரை நூற்றாண்டு காலமாகப் போற்றி வந்த மன்ரோ கொள்கை, குழி தோண்டிப் புதைக்கப்பட்டது.

## 29.ஆப்பிரிக்க நாடுகள் மீண்டெழுதல்

**''இருண்ட கண்டம்''** எனப் புறக்கணிக்கப்பட்ட ஆப்பிரிக்கா இன்று **''எதிர்காலக் கண்டம்''** எனக் கருதப்படுகிறது. கடந்த நூற்றாண்டில் ஐரோப்பியர்களின் குடியேற்றங்களாகச் சுரண்டப்பட்ட அக்கண்டம், இன்று சுதந்திரக் குடியரசுகளைக் கொண்டு செழித்தோங்கி வருகின்றது.

**இரண்டாம் உலகப் போரின் முடிவு :**

1945–ல் ஆப்பிரிக்கக் கண்டத்தில் நான்கு சுதந்திர நாடுகள்தான் இருந்தன. 45 ஆண்டுகளுக்குள் நாற்பதிற்கும் மேற்பட்ட சுதந்திர நாடுகள் அங்கே தோன்றியுள்ளன. 1990–ல் நமீபியா விடுதலை பெற்றதுடன், ஆப்பிரிக்காவில் ஏகாதிபத்தியங்களின் கடைசிச் சுவடும் மறைந்தது. அடிமை இருள் நிலவிய ஆப்பிரிக்கா கண்டத்தில் இப்போது சுதந்திர ஒளி வீசுகிறது. ஆப்பிரிக்க நாடுகளின் எழுச்சி, பன்னாட்டரசியல் உறவில் பெரும் மாறுதல்களை நிகழ்த்தியுள்ளது.

**ஆப்பிரிக்க எழுச்சிக்கு இட்டுச் சென்ற சூழ்நிலைகள் :**

பத்தொன்பதாம் நூற்றாண்டில் இருண்ட கண்டத்தினுள் கிறிஸ்துவ சமய ஒளியை ஏற்றிய சமயப் பரப்பாளர்கள்தான் ஆப்பிரிக்காவின் விடுதலைக்கு அடிப்படை

அமைத்துகூ கொடுத்தவர்கள் ஆவர். ஸ்டான்லி, லிவிங்ஸ்டன், மாங்கோபார்க் போன்றோர் எத்தனையோ இடையூறுகளைச் சமாளித்து, மேற்கத்திய பண்பாடு பரவுவதற்கு பாதை அமைத்துக் கொடுத்தனர்.

இரண்டாவதாக, குடியேற்றங்கள் அமைத்த ஏகாதிபத்தியங்கள் தங்களை அறியாமலே ஆப்பிரிக்கா கண்டத்தை வெளி உலகிற்கு அழைத்து வந்தன. அதனால் ஆயிரக்கணக்கான ஐரோப்பியர் அங்கு குடியேறினர். ஆப்பிரிக்காவைச் சுரண்டுவதற்காக அவர்கள் அமைத்த சாலைகள், கட்டிய ஆலைகள், தோண்டிய சுரங்கங்கள், தொழில் அறிவையும், பொருளியல் வளத்தையும் பெருக்கின.

மூன்றாவதாக, வெள்ளையர்களின் இனவெறி, இன ஒதுக்கல் கொள்கைகள் ஆப்பிரிக்க மக்களின் உள்ளத்தில் நீங்காவடுவாகப் பதிந்தது. அதன் எதிர்விளைவாக, அதே உள்ளங்களில் தேசிய உணர்வு தழைத்தோங்கத் தொடங்கியது.

நான்காவதாக, இரண்டாம் உலகப்போர் ஆப்பிரிக்கர்களுக்கு ஐரோப்பியர்களுடன் நெருங்கிய தொடர்பு கொள்ளும் வாய்ப்பினை அளித்தது. சம உரிமையுடன் போர்ப் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டனர். உரிமைக்காக எவ்வளவு பெரிய தியாகப் போரில் ஈடுபடுகிறார்கள் என்பதை நேரில் உணர்ந்தனர்.

ஐந்தாவதாக, ஐ.நா. சபையின் சாசனம் மனித உரிமைகளை வலியுறுத்தியது. நாடுகளின் சமத்துவ உரிமையையும் அங்கீகரித்தது. அச்சபையில் முற்போக்கு கருத்துக் கொண்ட நாடுகள் குடியேற்றங்கள் சுதந்திரம் பெறுவதை ஆதரித்துப் பேசின. ஏகாதிபத்தியங்களின் அடக்குமுறையைக் கண்டித்தன. தர்மகர்த்தா முறையும், குடியேற்றங்கள் விரைவில் சுதந்திரம் பெறுவதையே வலியுறுத்தியது.

ஆறாவதாக, இரண்டாம் உலகப்போர் வேறொரு வகையிலும் ஆப்பிரிக்க விடுதலைக்கு ஆதரவான சூழ்நிலையை ஏற்படுத்தியது. போரினால் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி காரணமாக ஏகாதிபத்தியங்கள் தங்கள் உள்நாட்டுப் பிரச்சனைகளையே தீர்க்க முடியாமல் திணறின. குடியேற்றங்களைக் கட்டிக்காப்பது அவைகளுக்குப் பெரும் பளுவாக இருந்தது.

ஏழாவதாக, ஆசியக் கண்டத்தில் ஏகாதிபத்தியங்களுக்கு எதிரான போராட்டங்கள், அதனால் அவை பெற்ற சுய ஆட்சி உரிமைகள் ஆகியவை அவைகளுக்கு நல்லதொரு முன்அனுபவ பாடமாக அமைந்தன. குறிப்பாக, இந்திய

விடுதலைப் போராட்டம் அவைகளுக்குப் புதிய உள்ளுணர்வையும் உத்வேகத்தையும் அளித்தது.

எட்டாவதாக, விடுதலை பெற்ற ஆசிய நாடுகள் குறிப்பாக இந்தியா ஆப்பிரிக்க விடுதலையில் அதிக ஆர்வம் காட்டியது. அவர்கள் உரிமைக் கோரிக்கைகளை பன்னாட்டு நிறுவனங்களான ஐ.நா. சபை மற்றும் பொது நல அரசு மாநாடுகள் ஆகியவற்றின் முன்வைக்கத் தவறவில்லை. **1955–**ல் பாண்டுங்கில் கூடிய ஆசிய – ஆப்பிரிக்க நாடுகளின் மாநாடு ஆப்பிரிக்க நாடுகளின் விடுதலையை வலியுறுத்தியது. அதற்கு உலக நாடுகளின் ஆதரவையும் அனுதாபத்தையும் பெற்றுக் கொடுத்தது.

**ஆப்பிரிக்காவில் விடுதலை இயக்கம் :**

இவ்வாறு இரண்டாம் உலகப் போருக்குப்பின் தோன்றிய வாய்ப்பான சூழ்நிலையில் ஆப்பிரிக்க நாடுகளிலும் தேசியத் தலைவர்கள் தோன்றி விடுதலைக்கான தேசிய இயக்கங்களைத் தோற்றுவித்தனர்.

அத்தேசியத் தலைவர்கள், தங்கள் நாட்டு விடுதலைக்கு மட்டுமல்லாமல் அனைத்து ஆப்பிரிக்க நாடுகளின் விடுதலைக்கும் போராடினர். தங்கள் போராட்டம் அனைத்து ஆப்பிரிக்க விடுதலைக்கான போராட்டத்தின் ஒரு பகுதியே என எண்ணினர். எனவே தொடக்க முதலே ஆப்பிரிக்க தேசிய இயக்கத்தில் ஒன்றுபட்ட ஆப்பிரிக்கா என்ற எண்ணம் மேலோங்கி நிற்பதைக் காணலாம். இதற்கான அடிப்படை அமைத்தவர்கள் :

**1. டபிள்யூ இ.பி. துபாய்ஸ் :**

அமெரிக்க நீக்ரோ இனத் தலைவரான இவர், கறுப்பர்களின் முன்னேற்றத்திற்கான தேசியக் கழகம் ஒன்றை நிறுவி அரும்பணியாற்றினார்.

**2. மார்க்ஸ் அவ்ரேலியஸ் கார்வி :**

ஜமைக்காவின் நீக்ரோ தலைவரான இவர், ஆப்பிரிக்காவிற்குத் திரும்புங்கள் என்ற குரலெழுப்பி ஆப்பிரிக்கத் தேசிய உணர்வைத் தட்டி எழுப்பினார். அகில ஆப்பிரிக்க மாநாடுகள் நடத்தி விழிப்புணர்வு ஏற்படச் செய்தார்.

**3. ஸிக் எனப்பட்ட அஸிவின் :**

நைஜுரியாவில் விடுதலை உணர்வைத் தோற்றுவித்த இவர், அதற்கென **'நெஜுரியா மற்றும் காமரூன்ஸ் தேசியக் கவுன்சில்'** என்ற இயக்கத்தையும் தொடங்கினார்.

**4. குவாமே என்க்ருமா :**

கோல்டு கோஸ்ட் எனப்பட்ட கானா என்ற நாட்டில் தேசிய உணர்வு கிளர்ந்தெழுச் செய்ய ஈடுபட்டார்.

**5. ஜுலியஸ் நைரேரே :**

தங்கனீகா (டான்சானியா) பகுதியின் விடுதலைக்காகப் பாடுபட்டவர்.

**6. ஜெமோ கென்யாட்டா :**

கென்யா விடுதலக்காக 'மாவ்மாவ்' என்ற தீவிர தேசிய இயக்கத்தைத் தொடங்கினார்.

**7. ஒபோட்டே :**

உகாண்டா விடுதலைக்காக 'உகாண்டா மக்கள் காங்கிரஸ்' என்ற இயக்கத்தை தொடங்கிப் போராடினார்.

**8. லியோ பால்டு செங்கோர் :**

செனிகல் என்ற பிரஞ்சு குடியேற்றத்தின் விடுதலைக்குப் பாடுபட்ட தேசியத் தலைவர் இவர்.

**9. ஹபீப் பூர்சிபா :**

டுனீசியா விடுதலைக்காக "**நியோடெஸ்டூர்**'' என்ற தேசிய இயக்கத்தை உருவாக்கினார்.

**10. பென்பெல்லா :**

அல்ஜுரியாவில் **'தேசிய விடுதலை முன்னணி'** அமைத்து அந்நாட்டு விடுதலைக்காகப் போராடினார்.

**11. ஸக்குள் பாஷா :**

எகிப்தில் "**வப்த்**'' என்ற தேசியக் கட்சியை உருவாக்கி, அதன் விடுதலைக்குப் போராடினார்.

**ஆப்ரிக்காவில் தேசிய நாடுகளின் தோற்றம் :**

இத்தகைய ஆப்பிரிக்க தேசியத் தலைவர்களின் போராட்டங்கள் காரணமாக ஆப்பிரிக்கா விடுதலை பெறத் தொடங்கியது. ஆப்பிரிக்காவின் தொடக்க முதலே சுதந்திரமாக விளங்கிய நாடுகள் இரண்டு. அவை :

**1. சைபீரியா :**

ஆப்பிரிக்க மேற்கு கரையில் அமெரிக்காவில் விடுதலை பெற்ற நீக்ரோ அடிமைகளுக்காக உருவாக்கப்பட்ட நாடு.

**2. அபிசீனியா (எத்தியோப்பியா) :**

விவிலிய கால யூதமன்னர் சாலமோன், அரசி ஷுபா ஆகியோர் வழிவந்த மரபினர் ஈராயிரம் ஆண்டுகளுக்கு மேலாகவே அந்நாட்டை ஆட்சி புரிந்து வந்தனர். ஆப்பிரிக்க கொள்ளையில் தப்பிய இந்நாட்டை **1936**–ல் பாசிச இத்தாலி ஆக்கிரமித்தது. இரண்டாம் உலகப் போருக்குப் பின் மீண்டும் சுதந்திரம் பெற்றது.

**3. எகிப்து, லிபியா :**

வட ஆப்பிரிக்காவில் உள்ள இவ்விரு நாடுகளும் **1951**–ல் விடுதலைப் பெற்றன.

**4. கானா :**

**1957**–ல் பிரிட்டிஷ் ஆதிக்கத்திலிருந்து விடுதலை பெற்றது. இந்நாட்டில் விடுதலை ஆப்பிரிக்க வரலாற்றில் ஒரு திருப்புமுனையாகும். முதன் முதல் விடுதலை பெற்றது கறுப்பு ஆப்பிரிக்க நாடாகும். இந்நாடு **1960**–ல் குடியரசு ஆனது. அந்நாட்டின் தலைவர் என்க்ருமா பிற ஆப்பிரிக்க நாடுகளின் விடுதலைக்கும் பாடுபட்டார். **1958**–ல் கெய்ரோவிலும் **1960**–ல் அடிஸ் அபாபாவிலும் ஆப்பிரிக்க சுதந்திர நாடுகளின் மாநாட்டைக் கூட்டி, அன்னிய ஏகாதிபத்தியங்கள் ஆப்பிரிக்காவிலிருந்து வெளியேற வேண்டும் என முழங்கினார். அதன் விளைவாக **1960**–ல் மட்டும் **17** ஆப்பிரிக்க நாடுகள் விடுதலை பெற்றன.

**ஆப்பிரிக்க விடுதலையும் ஐ.நா. சபையும் :**

ஆப்பிரிக்க நாடுகள் விடுதலைக்கு ஐ.நா. சபை ஆக்கரீதியான முயற்சிகளை மேற்கொண்டது. ஐ.நா.வின் ஆசிய ஆப்பிரிக்க நாடுகள் **1960**–ல் ஐ.நா. பொதுச் சபையில் ஒரு தீர்மானம் கொண்டு வந்து நிறைவேற்றின. ஆப்பிரிக்காவில் ஏகாதிபத்திய குடியேற்ற ஆட்சிமுறை அகற்றப்பட்டு ஆப்பிரிக்க நாடுகள் விடுதலை பெற ஐ.நா. நடவடிக்கை எடுக்க வேண்டும் என அத்தீர்மானம் கூறியது. அதன் விளைவாக குடியேற்ற ஆட்சி முறை ஒழிப்பினை விரைவுபடுத்த **1961**–ல் ஒரு சிறப்புக் குழு நிறுவப்பட்டது. **1965**–ல் தென் ரொடீஷியாவில் இயான்ஸ்மித் என்பவர் தன்னிச்சையாக விடுதலைப் பிரகடனம் செய்து, வெள்ளை சிறுபான்மையினர் ஆட்சியை நிறுவினார். இதனை எதிர்த்து அந்நாட்டின் மீது பொருளாதார முற்றுகை விதித்து ஐ.நா. பாதுகாப்புக்

குழு தீர்மானமியற்றியது. அது போல் தென் மேற்கு ஆப்பிரிக்காவிற்கு (நமீபியா) சுதந்திரமளிக்க மறுத்த தென்னாப்பிரிக்காவைக் கண்டித்து தீர்மானமியற்றியது.

**1963–ல்** நிறுவப்பட்ட ஆப்பிரிக்க ஒற்றுமைக் கழகமும் ஆப்பிரிக்க குடியேற்றங்களின் விடுதலைக்கு ஆக்கரீதியான ஆதரவளித்தது.

இவற்றின் பயனாக **1967–க்**குள் தெற்கு ரொடீஷியா (ஜிம்பாப்வே), அங்கோலா, மொஸாம்பிக், தென் மேற்கு ஆப்பிரிக்கா (நமீபியா) நீங்கலாக அனைத்து நாடுகளும் விடுதலை பெற்றன.

**ஆப்பிரிக்க ஒற்றுமைக் கழகம் (OAU) :**

விடுதலை பெற்ற ஆப்பிரிக்க நாடுகளின் பிரச்சனைகள் பொதுவானதாக இருந்ததால் அவைகளை விவாதித்து முடிவு செய்வதற்கு அனைத்து ஆப்பிரிக்க நாடுகளின் நிறுவனம் ஒன்றை அமைக்க முயன்றனர். அம்முயற்சியில் முன்னணியில் நின்றவர் கானா அதிபர் என்க்ருமா ஆவார். இவர் ஆப்பிரிக்க மக்களிடையே ஒற்றுமையையும் விடுதலையுணர்வையும் வளர்ப்பதற்கு **1958–ல்** கெய்ரோவில் ஆப்பிரிக்க நாடுகளின் மாநாடு ஒன்றைக் கூட்டினார். இதில் **28** ஆப்பிரிக்க நாடுகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

இதே நோக்கத்திற்காக **1961–ல்** லைபீரியாவின் தலைநகரான மன்ரோவியாவில் ஒரு மாநாடு கூட்டப்பட்டது. இதில் கலந்துகொள்ளாத வேறு சில நாடுகள் **1962–ல்** கசபிளாங்காவில் கூடின.

**அடிஸ் அபாபா மாநாடு (1963)**

இவற்றின் விளைவாக **1963–ல்** எத்தியோப்பியத் தலைநகரான அடிஸ்அபாபாவில் அனைத்து ஆப்பிரிக்க நாடுகளின் மாநாடு கூட்டப்பட்டது. இம்மாநாட்டில் **31** ஆப்பிரிக்க நாடுகள் கலந்து கொண்டன. இம்மாநாட்டில் ஒற்றுமைக் கழகம் நிறுவ முடிவு செய்யப்பட்டது. அக்கழகம் நான்கு உறுப்பினர்களைக் கொண்டதாக இருக்க வேண்டும் என தீர்மானிக்கப்பட்டது.

**1. நாடுகளின் தலைவர்கள் அடங்கிய குழு :** ஆண்டிற்கொருமுறை கூடும்.

**2. வெளிநாட்டமைச்சர்கள் குழு :** இது பிரச்சனைகள் எழும்போதெல்லாம் கூடும்.

**3. நடுவர் குழு :** ஆப்பிரிக்க நாடுகளிடையே எழும் தகராறுகளைத் தீர்த்து வைக்கும்.

**4. செயலகம்.**

**ஆப்பிரிக்க ஒற்றுமைக் கழகத்தின் சாதனைகள்**

கழகம் தோற்றுவிக்கப்பட்ட நான்கு ஆண்டு காலத்திற்குள் நாட்டு தலைவர்களும் வெளிநாட்டமைச்சர்களும் **16** முறை சந்தித்து பிரச்சனைகளைத் தீர்க்க முயன்றுள்ளனர்.

**1.** ஐ.நா. பாதுகாப்புக் குழு மற்றும் சமூகப் பொருளாதாரக் குழு ஆகியவற்றில் ஆப்பிரிக்காவிற்கு உரிய பிரதிநிதித்துவம் அளிக்க முயன்று வெற்றி பெற்றுள்ளது.

**2.** ஆப்பிரிக்காவின் விடுதலை இயக்கங்களுக்கு உதவும் பொருட்டு, தொண்டர் படை அமைத்தது.

**3.** தென்னாப்பிரிக்க அரசின் இன ஒதுக்கல் கொள்கைக்கு எதிராக பொருளாதார முற்றுகை விதித்தது. அதன் விளைவாக தென்னாப்பிரிக்க அரசு நமீபியாவிற்கு விடுதலை அளித்துள்ளது. அத்துடன் தனது இன ஒதுக்கல் கொள்கையை தளர்த்தியுள்ளது.

**4.** ஆப்பிரிக்க பொதுச் சந்தை நிறுவுவதற்கு பாடுபட்டு வருகிறது.

**5.** அல்ஜுரியாவிற்கும் மொராக்கோவிற்கும் இடையில் எழுந்த எல்லைச் சச்சரவைத் தீர்த்து வைக்க முயற்சி எடுத்தது. அதே போல எத்தியோப்பியாவிற்கும் சோமாலிலாந்திற்கும் இடையில் எழுந்த எல்லைச் சச்சரவையும், கென்யாவிற்கும் சோமாலிலாந்திற்குமிடையில் ஏற்பட்ட எல்லைச் சிக்கலையும் தீர்த்து வைத்துள்ளது.

**பன்னாட்டரசியலில் ஏற்பட்ட விளைவுகள் :**

ஐ.நா. சபையானது தொடக்கத்தில் ஒரு அமெரிக்க ஐரோப்பிய மன்றமாகவே விளங்கியது. ஆனால், தற்போது எண்ணிக்கை மிகுதி காரணமாக ஆப்பிரிக்க நாடுகளின் செல்வாக்கு அச்சபையில் நிலைநாட்டப்பட்டுள்ளது. ஆப்பிரிக்க நாடுகளைப் புறக்கணித்துவிட்டு எந்தத் தீர்மானமும் நிறைவேற்ற இயலாத நிலை ஏற்பட்டிருக்கிறது. பொதுவாக ஆப்பிரிக்க நாடுகளில் பெரும்பான்மையினர் கூட்டுச்சேராக் கொள்கையைக் கடைப்பிடித்து வருகின்றனர். அதன் விளைவாக கெடுபிடிப்போரின் கடுமை தணிந்துள்ளது.

நிறவெறி மற்றும் இன ஒதுக்கல் கொள்கையை எதிர்த்து இடைவிடாப் போராட்டம் நடத்தி வருகிறது. உள்நாட்டு சக்கரவுகள் காரணமாக வெளிநாட்டார் தலையிடும் அபாயம் அதிகரித்துள்ளது. சான்றாக, காங்கோ உள்நாட்டுப் போர், வல்லரசுகள் தலையீட்டிற்கு வழிவகுத்ததுடன் பன்னாட்டு அரசியலில் கெடுபிடியான சூழ்நிலையைத் தோற்றுவித்தது.

## 37.பொதுநல அமைப்பு (காமன்வெல்த்) (COMMON WEALTH)

பொதுநல அரசுகள் என்ற அமைப்பு விநோதமானதாகும். இந்தியப் பிரதமர் ஜவஹர்லால் நேரு குறிப்பிட்டது போல், ''கண்டங்களாலும், சமயத்தாலும், வாழ்க்கை முறையாலும், நிறத்தாலும், உணர்வாலும், இன்னும் பல வகையிலும் வேறுபட்ட பல மக்கள் தன்முன் ஏதோ ஒரு வகை இணைப்பால் ஒன்று சேர்ந்துள்ளனர். அதுவே பொதுநல அரசு இணைப்பு ஆகும்''. இவ்வாறு வேற்றுமைகள் நிறைந்த அரசியல் சமூகத்தைப் பொதுநல அரசுகள் என்ற அமைப்பாக ஒருங்கிணைப்பது வரலாற்றுப் பாரம்பரியமாகும். பிரிட்டிஷ்ஷாரின் குடியேறறங்களாகவோ பேரரசு நாடுகளாகவோ இருந்து பின்னர் விடுதலை பெற்ற நாடுகள் அந்த வரலற்றுத் தொடர்பினைத் துண்டிக்க விரும்பாது பிரிட்டிஷ் அரசை மையமாகக் கொண்டு ஒரு அரசியல் சமூகமாகத் தொடர்ந்து இயங்க விரும்பினர். அதன் விளைவுதான் **பொதுநல அரசுகள்** என்ற அமைப்பு ஆகும்.

**பொதுநல அரசுகளின் வரலாற்றுப் பின்னணி :**

பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஆங்கிலேயர் சூரியனே அஸ்தமிக்காத மாபெரும் பேரரசை நிறுவியிருந்தனர். அமெரிக்கா, ஆஸ்திரேலியா, ஆப்பிரிக்கா, ஆசியா போன்ற கண்டங்களில் பல நாடுகளிலும் பெருங்கடலில் உள்ள தீவுகளிலும் அவர்களது பேரரசுக் கொடி பறந்தது. அவற்றுள் சில பகுதிகளில் குறிப்பாக ஆஸ்திரேலியா, கனடா, நியூசிலாந்து, தென்னாப்பிரிக்கா போன்ற நாடுகளில் பிரிட்டிஷார் குடியேறினர். இந்தியா, இலங்கை, பர்மா, ரொடீஷியா, கோல்ட கோஸ்ட், கயானா போன்ற நாடுகளில் ஏகாதிபத்திய ஆதிக்கத்தை நிறுவினர்.

**டர்ஹாம் அறிக்கை (Durham Report) :**

தொடக்கக் காலத்தில் தங்கள் குடியேற்றங்களான கனடா, ஆஸ்திரேலியா, தென்னாப்பிரிக்கா போன்ற நாடுகளில் டர்ஹாம் அறிக்கையின்படி உள்நாட்டு விவகாரங்களில் சுய ஆட்சி அளிக்கப்பட்டது.

**1. பால்ஃபர் அறிக்கை (Balfour Report) :**

**1926–**ஆம் ஆண்டு நியமிக்கப்பட்ட பால்ஃபர் குழு அறிக்கையின்படி அக்குடியேற்றங்கள் முழு சுயாட்சிப் பெற்ற அரசுகளாயின. எனினும் பிரிட்டிண் மணிமுடிக்கு பற்றுறுதி காட்டுவதற்கு கடமைப்பட்டிருந்தன.

**2. வெஸ்ட்மின்ஸ்டர் சட்டம் :**

**1931–**ஆம் ஆண்டு இயற்றப்பட்ட இச்சட்டம், அக்குடியேற்றங்களை முழு சுதந்திர அரசுகளாக அங்கீகரித்தது. வெளிநாட்டுறவு, படை, பாதுகாப்பு ஆகியவற்றிலும் முழுச் சுதந்திரம் பெற்ற நாடுகளாயின. எனினும், பிரிட்டிஷ் பொது நல அரசு நாடுகளாக இணைந்து வாழ்ந்தன.

**3. இந்தியச் சுதந்திரம் :**

இதுவரை ஆங்கில குடியேற்ற நாடுகள்தாம் பொது நல அரசு நாடுகளாகக் கருதப்பட்டன. **1947–**ல் இந்தியா விடுதலைப் பெற்ற பின், நிலைமை மாறியது. ஏனென்றால், இந்தியா ஆங்கிலக் குடியேற்றமாக உருப்பெற்ற நாடு அல்ல. இனம், மொழி, பண்பாடு, சமயம் ஆகியவற்றில் முற்றிலும் மாறுபட்ட நாடு. எனினும், விடுதலை பெற்ற பின்னும் இருநூறு ஆண்டு ஆட்சியின் வரலாற்றுத் தொடர்பைத் துண்டிக்க விரும்பாது பிரிட்டிஷ் பொதுநல அரசு என்ற அமைப்பில் நீடிக்க விரும்பியது. ஆனால், முழு இறைமையுள்ள ஒரு குடியரசு பிரிட்டிஷ் முடியரசிற்கு பற்றுறுதி காட்டும் அமைப்பில் இணைய முடியுமா என்ற கேள்வி எழுந்தது. எனவே, பிரிட்டிஷ் அரசு மணிமுடிக்கு பற்றுறுதி என்ற நிபந்தனையைக் கைவிட முன்வந்தது. அது மட்டுமல்ல, பிரிட்டிஷ் பொதுநல அரசுகள் என்ற சொற்றொடரில் பிரிட்டிஷ் என்ற சொல்லும் நீக்கப்பட்டது. எனவே, முழு விருப்பத்தின்படி தாங்களாகவே முன்வந்து இணைந்து நிற்கும் நிறுவனமாக பொது நல அரசுகள் அமைப்பு உருமாறியது. இப்போது இந்தியா அதில் அங்கம் வகிக்க தடையேதும் இருக்கவில்லை. அதன்பின் பிரிட்டிஷ் பேரரசிலிருந்து விடுதலை பெற்ற நாடுகளனைத்தும் பொதுநல அமைப்பின் உறுப்பினர்கள் ஆகவில்லை. சான்றாக பர்மா, சோமாலிலாந்து, அயர்லாந்து, சூடான் ஆகியவை சேரவில்லை.

**பொதுநல அரசுகள் அமைப்பின் சிறப்பியல்புகள் :**

**1. பிரிட்டிஷ் அரசி தலைமைச் சின்னம் :**

பொது நல அரசுகள் எனப்பட்ட காமன்வெல்த் அமைப்பின் தலைமைச் சின்னமாக பிரிட்டிஷ் அரசர் அல்லது அரசி கருதப்படுகிறார். இது ஒரு வரலாற்று பாரம்பரியத்தையொட்டிய அடையாளச் சின்னம். தலைமைக்குரிய அந்தஸ்து, அதிகாரம், சடங்கு, சம்பிரதாயம் ஆகிய எதுவும் கிடையாது.

**2. முழு இறைமை கொண்ட நாடுகளின் அமைப்பு :**

காமன்வெல்த் நாடுகள் அனைத்தும் எல்லா வகையிலும் முழு உரிமை பெற்றவை. விருப்பப்பட்ட வெளியுறவு பாதுகாப்புக் கொள்கையைப் பின்பற்றுவதற்கு தடையேதும் இல்லை. உலகப் பிரச்சனைகளைப் பற்றிப் பொதுவான கொள்கையைத்தான் கடைப்பிடிக்க வேண்டுமென்பதல்ல.

**3. உறுப்பினர்களின் சம அந்தஸ்து :**

பொதுநல அமைப்பின் நாடுகள் அனைத்தும் சம உரிமை, சம அந்தஸ்து கொண்டவை. யாருக்கும் சிறப்புரிமை கிடையாது. தலைமை அல்லது முதன்மை கிடையாது.

**4. தாமாக முன்வந்து இணைந்த நாடுகள் :**

பொதுநல நாடுகள் எந்தக் கட்டாயத்தின் பேரிலோ, அரசியலமைப்பு முறைமையின் பேரிலோ, உடன்படிக்கை நிபந்தனை பேரிலோ உறுப்பினராகவில்லை. சான்றாக அயர்லாந்து, பர்மா போன்ற நாடுகள் உறுப்பினராகவில்லை. அதே போல் விருப்பமில்லையென்றால் எவ்தவித முன்னறிவிப்பும் இன்றி வெளியேறிவிடலாம். எடுத்துக்காட்டாக, **1961**–ல் தென்னாப்பிரிக்க அரசின் இன ஒதுக்கல் கொள்கையை பல நாடுகள் கடுமையாகக் கண்டித்ததால் அவ்வரசு பொது நல அமைப்பை விட்டு வெளியேறியது. **1971**–ல் விடுதலைப் பெற்ற பங்களாதேஷ் நாட்டை பல நாடுகள் அங்கீகரித்ததால் பாகிஸ்தான் கோபித்துக்கொண்டு வெளியேறியது.

**5. தனியொரு பன்னாட்டு அமைப்பு :**

பொதுநல அரசு அமைப்பு வல்லரசுகளின் கூட்டுக்களோடு பிணைக்கப்பட்டதல்ல. பிரிட்டன் ஆதிக்கத்திற்குட்பட்ட அமைப்பும் அல்ல. இது ஒரு ஒன்றியமோ, கூட்டரசோ அல்ல. இதற்கென்று அரசியலமைப்பு கிடையாது. உடன்படிக்கை ஒப்பந்தம் கிடையாது. ஒரே மாதிரியான பொருளியல் அரசியல் கொள்கைகளால் ஆக்கப்பட்டதல்ல. பிரிட்டிஷ் அரசியலமைப்பைப் போன்று எழுதப்படாத ஒன்று. பழக்கவழக்கங்களை அடிப்படையாகக் கொண்டு இயங்குவது. சான்றாக, நாடுகளிடையே நிலவும் தனிப்பட்டத் தகராறுகளை பொதுநல அரசு மாநாடுகளில் எழுப்புவதில்லை என்ற மரபு கடைப்பிடிக்கப்படுகிறது.

**6. வேற்றுமையில் ஒற்றுமை :**

பொதுநல அரசில் இணைந்துள்ள நாடுகளிடையே ஒற்றுமையை விட வேற்றுமைகள்தாம் அதிகம். மொழி, இனம், பண்பாடு ஆகியவற்றால் மாறுபட்டவர்கள்

ஒரு கண்டத்தையோ ஒரு பிராந்தியத்தையோ சார்ந்தவர்கள் அல்லர். ஒரே மாதிரியான அரசியலமைப்பையோ, கோட்பாட்டையோ கொண்டவை அல்ல. ஒரே இராணுவக் கூட்டையோ நட்பு உடன்படிக்கைகளையோ சார்ந்தவையல்ல. இவ்வாறு பண்பாடு, நாகரீகம், புவியியல், அரசியல், பொருளியல் ரீதியில் வேற்றுமைகள் மலிந்தவை. வேற்றுமை அம்சங்கள் கொண்ட நாடுகள் பிரிட்டிஷ் பேரரசு நாடுகள் என்ற வரலாற்று ஒற்றுமை அம்சத்தை மட்டும் கொண்டு ஒரு அமைப்பாக இயங்குகின்றன.

**பொதுநல அரசு அமைப்பு :**

இது மூன்று உறுப்புகளைக் கொண்டது.

**1. பிரிட்டிஷ் மணிமுடி :**

இது பொதுநல அமைப்பின் ஒருமைப்பாட்டுச் சின்னமாக விளங்குகிறது.

**2. பொதுநல அரசுத் தலைவர்களின் கூட்டம் (CHOGM) :**

நாடுகளின் தலைவர்கள் மாநாடு தற்போது இரு ஆண்டுகளுக்கு ஒருமுறை கூடி, உலகப் பிரச்சனைகள் சம்பந்தமாக கருத்துப் பரிமாற்றம் செய்துகொள்கின்றனர். பொதுநல அரசுத் தலைவர்களின் 24–ஆவது மாநாடு 1983–ல் டில்லியில் இந்திராகாந்தி தலைமையில் நடைபெற்றது. 25–ஆவது மாநாடு 1985–ல் பஹாமாவின் தலைநகராகிய நாசௌ என்ற இடத்திலும், 26–ஆவது மாநாடு 1987–ல் கனடாவில் உள்ள வான்கூவரிலும் நடைபெற்றது.

27–ஆவது மாநாடு 1989–ல் மலேஷியாவில் உள்ள கோலாலம்பூரில் நடைபெற்றது. 29–ஆவது மாநாடு 1991 அக்டோபர் 16–ல் ஜிம்பாப்வேயின் தலைநகரான ஹராரேயில் நடைபெற்றது. அந்நாட்டு அதிபர் ராபர்ட் முகாபே தலைமை தாங்கினார். 1995–ல் நியூசிலாந்தில் ஆக்லண்டு நகரிலும், கடைசியாக 1997 அக்டோபரில் ஸ்காட்லாந்தில் உள்ள எடின்பர்க் நகரில் பொதுநல அரசுத் தலைவர்களின் கூட்டம் நடைபெற்றது. 1961–ல் தென்னாப்பிரிக்காவும், 1971–ல் பாகிஸ்தானும் பொதுநல அமைப்பிலிருந்து விலகின. 1987–ல் பீஜித் தீவு வெளியேற்றப்பட்டது. 1989–ல் பாகிஸ்தானும், 1992–ல் தென்னாப்ரிக்காவும் மீண்டும் இணைந்தன. கடைசியாக உறுப்பினராகச் சேர்ந்த நாடு நமீபியா. இறுதியாக, பொதுநல அரசுகளின் தலைவர்களின் மாநாடு 1999–ல் தென்னாப்பிரிக்காவில் உள்ள டர்பன் நகரில் கூடியது. தற்போது 54 நாடுகள் அதில் உறுப்பினராயுள்ளன.

**3. காமன்வெல்த் செயலகம் :**

இது இலண்டனில் அமைந்துள்ளது. தற்போது பொதுச் செயலாளராகப் பணியாற்றுபவர் எமேகா அணியாவோகு. இது பொது நல அரசுத் தலைவர்கள் மாநாடு சம்பந்தமான ஏற்பாடுகள் செய்தல் மற்றும் அதன் பல்வேறு செயல்பாடுகளை ஒருங்கிணைத்தல் போன்ற பணிகளைப் புரிகிறது.

இவை தவிர வேறு நிறுவன அமைப்புகளும் உள்ளன. அவை :

1. பொதுநல அரசுகளின் பாராளுமன்ற நிறுவனம்.

2. பொதுநல அரசுகளின் பொருளியல் அமைப்பு. இது ஆண்டுதோறும் அரசுகளின் நிதி அமைச்சர் மாநாடு கூட்டி வேளாண்மை மற்றும் தொழில் நுட்பம் சம்பந்தமான விஷயங்களை ஆராய்கிறது.

நான்கு ஆண்டுகளுக்கொருமுறை விளையாட்டுப் போட்டிகள் நடைபெறுகின்றன.

13–ஆவது பொதுநல அரசுகளின் போட்டிகள் 1986–ல் ஏடின்பரோ நகரிலும், 14–வது போட்டிகள் 1990–ல் நியூசிலாந்தில் ஆக்லாண்டு நகரிலும் நடைபெற்றன. மற்றும், சட்டம், கல்வி, உடல்நலம் சார்ந்த, அமைச்சர்கள் அளவிலான மாநாடுகளும் அவ்வப்போது நடைபெறுகின்றன.

**பொதுநல அரசு அமைப்பின் பயன்கள் :**

இவ்வமைப்பு கண்டம், மொழி, இனம், கோட்பாடு ஆகியவற்றிற்கெல்லாம் அப்பாற்பட்ட நிறுவனமாக இயங்குவதால் ஐ.நா. சபையின் பிரதிபலிப்பாக விளங்குகிறது. உலகப் பொதுப்பிரச்சனை சம்பந்தமாக உலக நாடுகளின் தலைவர்கள் சுமூகமான முறையில் கூடிப்பேசி ஒருமித்த கருத்து உருவாக வாய்ப்பளித்தது.

இரண்டாவதாக, இந்நாடுகள் பல தங்களுக்குள் இரு தரப்பு வாணிப ஒப்பந்தங்கள் செய்துகொண்டுள்ளன. வாணிப முறைகளில் பொதுநல அரசு நாடுகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது.

இங்கிலாந்து இந்நாடுகளில் போட்ட மூலதனம் தொடர்ந்து இயங்கி வந்து சம்பந்தப்பட்ட நாடுகளின் பொருளியல் வளர்ச்சிக்கு உறுதுணையாயிருக்கின்றது. ஆங்கில நாணய– முறையான ஸ்டெர்லிங் முறை பின்பற்றப்படுவதால், வாணிபத்தைப் பெருக்கி பரவலாக்க இயலும். இறக்குமதிக்குச் சமமான ஏற்றுமதி செய்ய வேண்டும் என்றக் கட்டாயம் கிடையாது. வாணிபப் பற்றாக்குறையை ஈடுகட்ட பயன்படுத்தலாம்.

மூன்றாவது, பொதுநல அரசு நாடுகளின் நெருக்கத்தைச் சுட்டிக்காட்டும் வகையில் அந்நாட்டுத் தூதர்கள் **ஹைகமிஷனர்** என்றே அழைக்கப்படுகின்றனர். **அம்பாசிடர் (தூதர்)** என்று அழைக்கப்படமாட்டார்கள்.

நான்காவதாக, பொதுநல அரசின் பயன்களுள் குறிப்பிட்டுக் கூறக்கூடிய பொருளியல் திட்டம் கொழும்புத் திட்டமாகும். **1950**–ல் இத்திட்டம் வகுக்கப்பட்டது. வளர்ச்சியடைந்த நாடுகள் வளர்ச்சியடைந்து கொண்டிருக்கும் நாடுகளுக்கு அளிக்கு நிதி மற்று தொழில் நுட்ப உதவிக்கானத் திட்டமாகும். முதலில் பொது அரசு நாடுகள் மட்டும் நிதி உதவி அளித்தன. தற்போது அமெரிக்கா போன்ற பிற அரசுகளும் இத்திட்டத்தின்கீழ் பொதுநல அரசில் சேராத பர்மா, லாவோஸ், ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகளுக்கு உதவியளிக்கின்றன. மொத்தம் இதுவரை இத்திட்டத்தன்கீழ் **22000** மில்லியன் பவுன் செலவளிக்கப்பட்டுள்ளது. இந்தியா நிதி உதவி அளித்துமிருக்கிறது. பெற்றுமிருக்கிறது. **30** மில்லியன் ரூபாய் மதிப்புள்ள தொழில் நுட்ப உதவி செய்துள்ளது.

இறுதியாக, பொதுநல அரசு, உறுப்பு நாடுகளில் ஜனநாயகப் பாரம்பரியங்களை நிலைநாட்டுவதில் அதிக அக்கறை காட்டி வருகிறது. திடீர் புரட்சி மூலம் ஜனநாயக அரசை கவிழ்த்து ஆட்சியைக் கைப்பற்றிய இராணுவ சர்வாதிகாரிகளின் ஆட்சியை அங்கீகரிக்க மறுத்து வருகிறது. அத்துடன், பொதுநல அரசு மாநாடுகளிலிருந்து விலக்கி வைக்கிறது. **1993**–ல் நைஜரியாவில் தளபதி ஜாணி அலாச்சா ஆட்சியைக் கைப்பற்றியதை அங்கீகாக்க மறுத்ததோடு பொதுநல அரசு அமைப்பிலிருந்தும் விலக்கி வைத்தது. **1998**–ல் அங்கு ஜனநாயகம் திரும்பிய பின்னரே அந்நாடு மீண்டும் சேர்க்கப்பட்டது. அதே போல் **1999**–ல் பாகிஸ்தானில் தளபதி முஷ்ரப், பிரதமர் நவாஸ் ஷெரிப் அரசை அகற்றிவிட்டு, இராணுவ ஆட்சியை நிலைநாட்டியதை எதிர்த்ததுடன், காமன்வெல்த் அமைப்பிலிருந்து பாகிஸ்தானை தற்காலிகமாக நீக்கி வைத்தள்ளது. இதே போல், அண்மையில் பிஜி தீவுகளில் ஜனநாயக முறையிலான அரசைக் கவிழ்த்து, இராணுவ ஆட்சி ஏற்பட்டதைக் கண்டித்துள்ளது.

**பன்னாட்டரசியலில் பொதுநல அரசுகள் :**

பன்னாட்டரசியலில் பிரிட்டனுக்குச் செல்வாக்கு இருக்கும்வரை, பொதுநல அரசு அமைப்பின் செல்வாக்கு நிலைபெற்றிருந்தது. அதன்பின், அது வீழ்ச்சியுறத் தொடங்கியது. திட்டவட்டமான அரசியல் அல்லது பொருளியல் குறிக்கோள் இல்லாத

ஒரு அமைப்பினால் பன்னாட்டரசியலில் என்ன சாதித்துவிடமுடியும் என்ற வினா எழுகிறது. பன்னாட்டரசியலில் மாறுபட்டக் கருத்துக்களைக் கொண்ட நாடுகளின் அமைப்பு எதையும் சாதித்துவிட இயலாது. **1956–ல்** சூயஸ் கால்வாய் சிக்கலின்போது பிரிட்டன் எகிப்து மீது படையெடுத்ததை இந்தியா கடுமையாகக் கண்டித்தது. இது, பொதுநல அரசு அமைப்பினைப் பாதித்தது. இதேபோல், இராணுவக் கூட்டுக்கள், படைக்குறைப்பு போன்றவற்றில் நாடுகளிடையே ஒருமித்த கருத்து இல்லை. பொதுநல அரசு நாடுகள் ஒன்றுக்கொன்று பகைமை பாராட்டி ஆக்கிரமிப்புகளில் ஈடுபடுகின்றன. சான்றாக, இந்தியா – பாகிஸ்தான் போர்களைக் கூறலாம். அதே போல் இவ்வமைப்பின் உறுப்பு நாடு ஒன்று வேறொரு நாட்டால் தாக்கப்பட்டாலும், பிற நாடுகள் அனைத்தும் உறுப்பு நாட்டிற்கு ஆதரவாக உதவியோ அளிப்பதில்லை. சான்றாக, **1962–ல்** சீனா, இந்தியா மீது படையெடுத்தபோது பாகிஸ்தான் சீனாவிற்கு ஆதரவாகச் செயல்பட்டது.

பிரிட்டன், ஐரோப்பிய பொதுச் சந்தைத் திட்டத்தில் சேர்ந்த பின், அந்நாடு பிற பொதுநல அரசு நாடுகளுக்கு வழக்கமாக அளித்து வந்த வாணிபச் சலுகைகளை அளிக்க முடியவில்லை.

எனவே, பொதுநலஅரசு அமைப்பும், அதன் நடவடிக்கைகளும், ஏதோ ஒரு பொழுதுபோக்கு சங்கங்களின் செயல்பாடுகள் போலவே இருக்கின்றன. தலைவர்கள் மாநாடுகள் கூடிக்கலையும் மாநாடாகவே இருக்கின்றன. பன்னாட்டரசியல் சிக்கல்களை மட்டுமல்லாது, உறுப்பு நாடுகளிடையே ஏற்படும் தவராறுகளையும் தீர்த்து வைக்க வழிவகை இல்லாத அமைப்பாகவே இருக்கின்றது. எனினும், நாடுகளிடையே நல்லெண்ணத்தையும் நல்லிணக்கத்தையும் உருவாக்க உதவும் ஒரு நிறுவனமாகச் செயல்படுகிறது என்பதில் ஐயமில்லை.

## ஐக்கிய நாடுகள் சபை

இரண்டாம் உலகப்போர் நடைபெற்றுக் கொண்டிருக்கும் பொழுதே போருக்குப்பின் உலகில் அமைதியை நிலைநாட்ட உலக நாடுகளின் நிறுவனம் ஒன்று உருவாக்கப்பட வேண்டும் என்று தேச நாட்டுத் தலைவர்கள் கருத்துத் தெரிவித்தனர். பிரிட்டிஷ் பிரதமர் சர்ச்சிலும், அமெரிக்க அதிபர் ரூஸ்வெல்ட்டும் 1941 ஆகஸ்ட் 14-ல் வெளியிட்ட அட்லாண்டிக் அறிக்கையில் அச்சு நாடுகளுக்கு எதிராகப் போரிட்ட நேச நாடுகள் வாஷிங்டன் (1943), மாஸ்கோ (1943), டம்பர்ட்டன்

ஒர்க்ஸ் (1944) ஆகிய இடங்களில் கூடிப்பேசி ஐக்கிய நாடுகள் சபை நிறுவுவதற்கான பூர்வாங்க பணிகளைச் செய்து முடித்தனர். 1945-ல் சான்பிரான்சிஸ்கோ நகரில் 44 நாடுகளின் பிரதிநிதிகள் கூடி ஐ.நா. சாசனத்தை அங்கீகரித்தனர். 1945 அக்டோபர் 4ம் நாளிலிருந்து ஐ.நா. செயல்படத் தொடங்கியது.

**ஐ.நா. சபையின் நோக்கங்கள் :**

1. உலக நாடுகளிடையே அமைதியையும், பாதுகாப்பையும் நிலைநாட்டல்.
2. நாடுகளிடையே நட்புறவை வளர்த்தல்.
3. நாடுகளிடையே கூட்டுறவை ஏற்படுத்தி பொருளாதார சமூக மனிதாபிமானப் பண்பாட்டுச் செயல்களில் ஒத்துழைப்பை ஏற்படுத்துதல்.
4. மனித உரிமை, அடிப்படைச் சுதந்திரம், கண்ணியம் ஆகியவற்றை உலக நாடுகள் மதித்தல்.

**சபையின் அமைப்பு :**

பொதுச்சபை, பாதுகாப்புக்குழு, சமூகப் பொருளாதார சபை, தர்மகர்த்தா சபை, பன்னாட்டு நீதிமன்றம், செயலகம் போன்ற ஆறு உறுப்புகளையும் மற்றும் பல சிறப்புக் குழுக்களையும் கொண்டிருந்தது.

**பொதுச்சபை :**

ஐக்கிய நாடுகள் சபையைச் சார்ந்த அனைத்து நாடுகளும் இச்சபையின் உறுப்பினர்கள். ஆண்டிற்கு ஒரு முறை கூடும். அவசர சூழ்நிலைகளிலும் கூட்டப்படலாம். அமைதியை நிலைநாட்டும் வழிவகைகளை ஆராய்தல் : வரவு செலவுத் திட்டத்தை அங்கீகரித்தல். பிற உறுப்புகளுக்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல் : புதிய உறுப்பினர்களை சேர்த்தல் முதலிய பொறுப்புக்களை நிறைவேற்றும். வல்லரசுகளிடையே கருத்து வேறுபாடு காரணமாக பாதுகாப்புக் குழு தனது கடமையை நிறைவேற்ற முடியாமல் போனால் அப்பிரச்சனையை மூன்றிலிரு பங்கு பெரும்பான்மையுடன் தீர்த்து வைக்கலாம். 1945-ல் 50 நாடுகளுடன் தொடங்கப்பட்ட ஐ.நா. சபையில் தற்போது 188 நாடுகள் உறுப்பினராயுள்ளன.

**பாதுகாப்புக்குழு :**

போரைத் தடுத்து அமைதியையும், பாதுகாப்பையும் நிலைநாட்டும் முக்கியப் பொறுப்பு பாதுகாப்புக் குழுவிற்கு வழங்கப்பட்டுள்ளது. நாடுகளிடையே எழும்

சிக்கல்களை விசாரித்து தீர்வு காணும் வழிவகைகளைப் பரிந்துரை செய்வது இதன் பணி. இதன் மொத்த உறுப்பினர்கள் 15. இதில் பிரிட்டன், பிரான்சு, அமெரிக்கா, ரஷியா, சீனா ஆகிய ஐந்து வல்லரசுகளும் நிரந்தர உறுப்பினர்கள். மீதியுள்ள 10 பேரை இரு ஆண்டுகளுக்கொருமுறை பொதுச்சபை தேர்ந்தெடுக்கும். வல்லரசுகளில் ஒருவர் மறுத்தாலும் எந்த தீர்மானமும் நிறைவேற்ற முடியாது. ஆக்கிரமிப்பை அகற்றும் அவசியம் நேர்ந்தால் உறுப்பு நாடுகளிடமிருந்து படை திரட்டும் அதிகாரம் பெற்றுள்ளது.

**சமூக பொருளாதார நிலை :**

இச்சபை 27 உறுப்பினர்களைக் கொண்டது. இவர்களை மூன்று ஆண்டுகளுக்கொருமுறை பொதுச்சபை தேர்ந்தெடுக்கும். உலக சமாதானத்தை நிலைநாட்ட அரசியல் அல்லாத சமூகப் பொருளாதாரத் துறைகளில் கூட்டுறவு ஒத்துழைப்பு மனப்பான்மையை வளர்த்தல் என்ற நோக்கத்தைக் கொண்டுள்ளது. இது சிறப்பு நிறுவனங்களின் பணிகளை ஒருங்கிணைக்கிறது.

**தர்மகர்த்தா சபை :**

பன்னாட்டுக் கழகத்தின் மாண்டேட் முறை ஐ.நா. சபையில் தர்மகர்த்தா சபையபாக வளர்ச்சியுற்றது. இன்னமும் விடுதலை பெறாத குடியேற்றங்களின் நிலைகளைக் கண்காணித்து வருகிறது.

**பன்னாட்டு நீதிமன்றம் :**

15 நீதிபதிகளைக் கொண்ட பன்னாட்டு நீதிமன்றம் திஹேக் நகரில் நிறுவப்பட்டுள்ளது. நாடுகளிடையே எழும் சட்ட சம்பந்தமான சிக்கல்கள், ஒப்பந்தங்களின் விளக்கங்களின் பேரில் எழும் சிக்கல்கள் ஆகியவற்றை விசாரித்துத் தீர்ப்பளிக்கிறது.

**செயலகம் :**

ஐ.நா. சபையின் செயலகம் அமெரிக்காவில் நியூயார்க் நகரின் அண்மையிலுள்ள மன்ஹாட்டன் தீவில் அமைந்துள்ளது. சபையின் அன்றாட அலுவல்களையும் மற்றும் அலுவலகப் பொறுப்புகளையும் நிறைவேற்றி வருகிறது. பாதுகாப்புக் குழுவினால் பரிந்துரை செய்யப்பட்டு பொதுக்குழுவினால் தேர்ந்தெடுக்கப்படும் செயலாளர் தலைமையில் இயங்குகிறது. தற்போது கோபி அன்னான் என்பவர் செயலாளராகப் பணியாற்றி வருகிறார்.

**சிறப்பு நிறுவனங்கள் :**

சமூகப் பொருளியல் துறைகளில் அனைத்துலக நாடுகளிடையே கூட்டுறவு ஒத்துழைப்பு மனப்பான்மையை ஏற்படுத்தி முன்னேற்றம் காணும் நோக்கத்துடன் பல சிறப்பு நிறுவனங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. அவைகளுள் குறிப்பிடத்தக்கவை.

1. உணவு விவசாய நிறுவனம் (FAO)
2. அனைத்துலக தொழிலாளர் நிறுவனம் (ILO)
3. கல்வி விஞ்ஞான பண்பாட்டு நிறுவனம் (UNESCO)
4. உல கநல நிறுவனம் (WHO)
5. பன்னாட்டு நிதி நிறுவனம் (IMF)

**பிற சிறப்பு நிறுவனங்கள் :**

| | **நிறுவனங்கள்** | **தலைமையகம்** |
|---|---|---|
| 1 | பன்னாட்டு அணுசக்தி நிறுவனம் (IAEA : International Atomic Energy Agency) | வியன்னா |
| 2 | சீரமைப்பு மற்றும் மேம்பாட்டிற்கான பன்னாட்டு வங்கி (IBRD : International Bank for Reconstruction and Development) | வாஷிங்டன் |
| 3 | பன்னாட்டு விமானப் போக்குவரத்து நிறுவனம் (ICDA : International Civil Aviation Organization) | மாண்ட்ரீல் |
| 4 | பன்னாட்டு தொலை தொடர்பு ஒன்றியம் (ITU : International Telecommunication Union) | ஜெனீவா |
| 5 | உலக காலநிலை ஆய்வு நிறுவனம் (WMO : World Meterological Organization) | ஜெனீவா |
| 6 | பன்னாட்டு கடல் சார்ந்த நிறுவனம் (IMO : International Maritime Organization) | லண்டன் |
| 7 | உலக வணிக நிறுவனம் (WTO : World Trade Organization) | ஜெனீவா |
| 8 | ஐ.நா. தொழில் வளர்ச்சி நிறுவனம் (UNIDO : United Nations Industrial Development Organization) | வியன்னா |

| | | |
|---|---|---|
| 9 | பன்னாட்டு நிதிக்கழகம்<br>(IFC : International Finance Corporation) | |
| 10 | உலக அஞ்சல் ஒன்றியம்<br>(UPU : Universal Postal Union) | |

**ஐ.நா. சபையின் சாதனைகள் :**

கடந்த 45 ஆண்டுகளாக உலகப்போர் மூளாது தடுத்து நாடுகளிடையே நல்லெண்ணத்தை ஏற்படுத்துவதில் ஐ.நா. சபை மகத்தான வெற்றி பெற்றுள்ளது. நாடுகளிடையே மூண்ட சச்சரவுகளைத் தீர்ப்பதற்கு நேரடியாகவோ, மறைமுகமாகவோ உதவியுள்ளது. எத்தனையோ சிறு பொறிகள் பெரும் நெருப்பாக மாறாதபடி தடுத்துள்ளது. போர்க்களத்தில் சந்தித்த நாடுகளை தனது மண்டபத்தில் சந்திக்க வைத்து மற்போர் நடத்திய நாடுகளை சொற்போர் நிகழ்த்தச் செய்து படிப்படியாக கோபதாபங்களைத் தணித்து அமைதிப்படுத்தும் சாதனை புரிந்துள்ளது. வல்லரசுகளின் ரத்து அதிகாரம் பல சமயங்களில் ஐ.நா. சபையின் கைகளைக் கட்டிப் போட்டாலும் அதையும் மீறி அமைதி நடவடிக்கைகள் எடுத்துள்ளது.

**1. ஈரானிய வழக்கு :**

ஐ.நா. சபையின் பாதுகாப்பு சூழலில் முதலில் புகார் கூறிய நாடு ஈரான் ஆகும். தன் நாட்டின் வடபகுதியில் ரஷ்யப் படைகள் ஊடுருவி இருப்பதாகப் புகார் கூறியது. ரஷியா மறுத்தது. எனினும் இந்தப் புகாரின் விளைவாக ரஷ்யா தனது படைகளை வெளியேற்றியது.

**2. இந்தோனேஷிய விடுதலை :**

டச்சு, ஏகாதிபத்தியத்தினின்று இந்தோனேஷியா விடுதலை பெறுவதற்கு ஐ.நா. சபை பேருதவி புரிந்தது. டச்சு படைகளை போர் நிறுத்தத்திற்கு இணங்கச் செய்து, பின் இருதரப்பு பேச்சு வார்த்தைகளுக்கு ஏற்பாடு செய்தது. அதன் மூலம் இந்தோனேஷியா விடுதலை பெற்றது.

**3. கிரீஸ் சிக்கல் :**

கிரீஸ் நாடு தன் வட எல்லையில் உள்ள யூகோஸ்லாவியா, பல்கேரியா, அல்பேனியா ஆகிய நாடுகளின் கொரில்லாப்படைகள் தன்னாட்டில் ஊடுருவி குழப்பம் விளைவிப்பதாக புகார் கூறியது. பாதுகாப்பு குழுவில் ரஷியா இந்தப் புகாரை

மறுத்ததோடு தனது ரத்து அதிகாரத்தைப் பயன்படுத்தியது. எனவே இப்பிரச்சனையில் சம்பந்தப்பட்ட ஐ.நா. செய்த காரியமாகும்.

**4. தென்னாப்பிரிக்க இன ஒதுக்கல் கொள்கை :**

தென்னாப்பிரிக்க அரசு இன ஒதுக்கல் கொள்கையைக் கடைப்பிடிப்பதாகவும், இது ஐ.நா. சாசனத்தின் மனித உரிமைக் கொள்கைக்கு எதிரானது எனவும் இந்தியா ஐ.நா. சபையில் புகார் கூறியது. ஆனால் தென்னாப்பிரிக்க அரசு இது தனது உள்நாட்டுப் பிரச்சனை அதில் ஐ.நா. தலையிட உரிமையில்லை என்று மறுப்புத் தெரிவித்தது. ஆனால் ஐ.நா. இதனை ஏற்கவில்லை. அதன்பின் ஒவ்வொரு பொதுச் சபைக் கூட்டத்திலும் இந்த விஷயம் நிகழ்ச்சி நிரலில் இடம் பெற்றது. தென்னாப்பிரிக்க அரசின் பிடிவாதத்தால் தீர்வு காண இயலவில்லை. எனினும் தென்னாப்பிரிக்காவின் இன ஒதுக்கல் கொள்கையை உலக நாடுகள் அனைத்தும் கண்டனம் செய்ய ஐ.நா. வாய்ப்பளித்தது. இந்த இடைவிடா முயற்சி காரணமாக அண்மையில் அவ்வரசு சற்று இறங்கி வந்துள்ளது. 1993ல் இன ஒதுக்கல் கொள்கை முற்றிலுமாகக் கைவிடப்பட்டு விட்டது.

**5. காஷ்மீர் சிக்கல் :**

காஷ்மீரினுள் மலைசாதியினரை படையெடுத்துச் செல்லுமாறு பாகிஸ்தான் தூண்டிவிட்டதோடல்லாமல் தனது படைகளையும் அங்கு அனுப்பி ஆக்கிரமிப்பில் ஈடுபட்டது. இந்தியா இதனை எதிர்த்து 1943ல் புகார் செய்தது. ஐ.நா. சபை அங்கு உடனே போர் நிறுத்தத்திற்கு வழி செய்தது. ஆனால் ஆக்கிரமித்த படைகளை வெளியேற்ற இயலவில்லை. எனவே பாதுகாப்பு குழு ஓர் ஓவன்டிக்சன் என்பவரை இந்தியாவிற்கு அனுப்பியது. கருத்தறியும் வாக்கெடுப்பு நடத்துமுன் ஆக்கிரமிப்பு அகல வேண்டும் என்று இந்தியா வலியுறுத்தியது. இதனை பாகிஸ்தான் ஏற்கவில்லை. எனவே டிக்சன் எதுவும் செய்ய இயலவில்லை. இதன்பின் பிராங்கிரஹாம் என்பவர் அனுப்பப்பட்டார். அவராலும் எதுவும் சாதிக்க இயலவில்லை. தற்போது காஷ்மீரில் மூன்றில் ஒரு பங்கு பாகிஸ்தான் ஆக்கிரமிப்பின்கீழ் இருந்து வருகிறது. காஷ்மீர் குறித்து 1965-1970 ஆண்டுகளில் இந்தியா - பாகிஸ்தான் போர் மூண்ட போது ஐ.நா. சபை போர் நிறுத்தத்தை அமுல்படுத்தி நேரடி பேச்சு வார்த்தைக்கு ஏற்பாடு செய்தது குறிப்பிடத்தக்கது.

**6. பாலஸ்தீனச் சிக்கல் :**

பாலஸ்தீனப் பிரச்சனையை முதலில் பிரிட்டன் 1945-ல் ஐ.நா. சபை கவனத்திற்கு கொண்டு வந்தது. ஐ.நா. சபை பாலஸ்தீனத்தை யூதர் பகுதி, அரேபியர் பகுதி, பன்னாட்டுப் பகுதி என்று மூன்று பிரிவாகப் பிரிக்கத் தீர்மானமியற்றியது. இதனை யூதர்கள் ஏற்றுக் கொண்டபோது அரேபியர் நிராகரித்தனர். 1948 மே 15ல் பிரிட்டன் பாலஸ்தீனத்தில் தனது மாண்டேட் ஆட்சியை முடித்துக் கொண்டவுடன் யூதர்கள் தங்களுக்கு இஸ்ரேல் என்ற தாயகத்தை நிறுவிக் கொண்டனர். இதனால் அரேபியருக்கும் யூதர்களுக்குமிடையே போர் மூண்டது. ஐ.நா. சபை கவுனட்பெர்னடாட் என்பவரை நடுவராக நியமித்தது. அவரால் போர் நிறுத்தம் செய்ய முடிந்தது. மேலும் அமைதிப் பேச்சு வார்த்தையில் ஈடுபட்ட போது அவர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

அதன்பின் 1955, 1967, 1973 ஆகிய ஆண்டுகளில் அரபு நாடுகளுக்கும் யூதர்களுக்குமிடையே பெரும் போர் மூண்டபோது ஐ.நா, தலையிட்டு போர் நிறுத்தம் செய்து பேச்சு வார்த்தைக்கு வழி வகுத்தது.

1967க்குப்பின் பாலஸ்தீனத்தில் புதியதொரு சிக்கல் ஏற்பட்டது. இஸ்ரேல் ஆக்கிரமித்த மேற்கு கரைப்பகுதியில் வாழ்ந்தத பாலஸ்தீனியர்கள் யாசர் அராபத் தலைமையில் கிளர்ந்தெழுந்து தங்கள் தாயகத்தை மீட்க முயன்றனர். ஐ.நா. சபை பாலஸ்தீனியர்களின் தாயக கோரிக்கையை ஆதரித்தாலும் இஸ்ரேலின் பிடிவாதத்தால் சிக்கல் தொடர்கிறது.

**7. கொரியா சிக்கல் (1950 - 1951)**

கொரியா சிக்கல் ஐ.நா. சபையின் திறமைக்கு ஏற்பட்ட முதல் சோதனையாகும். இதில் ஐ.நா. சபை வெற்றி பெற்றுவிட்டது. தென்கொரியா மீது படையெடுத்த வடகொரியவை ஆக்கிரமிப்பாளர் என்று அறிவித்ததோடல்லாமல் முதன்முதலில் ஐ.நா. சார்பில் படை அனுப்பப்பட்டு ஆக்கிரமிப்பு அகற்றப்பட்ட அதிசயம் நிகழ்ந்தது.

**8. <u>ஹங்கேரி சிக்கல் (1956)</u> :**

ஹங்கேரி பிரதமர் இம்ரேநாகி கம்யூனிச கோட்பாடுகளைத் தளர்த்தி மேற்கு நாடுகளோடு பொருளியல் பண்பாட்டுத் தொடர்புகளை ஏற்படுத்த முயன்றனர். இதனை விரும்பாத ரஷ்யா வார்சா ஒப்பந்தப்படி புடாபெஸ்டில் நிறுத்தப்பட்டிருந்த

படைகளைக் கொண்டு ஹங்கேரி அரசையும் மக்களையும் ஒடுக்கி மீண்டும் உறுதியான கம்யூனிச அரசை நிறுவியது. இதனை எதிர்த்து ஐ.நா. சபையில் புகார் செய்யப்பட்டது. ரஷியாவின் ரத்து அதிகாரம் காரணமாக பாதுகாப்புக் குழு எதுவும் செய்யவில்லை. பின் இந்த விஷயம் பொதுக்குழுவிற்கு எடுத்துச் செல்லப்பட்டது. ஹங்கேரி அரசு இது தனது உள்நாட்டு விவகாரம் என்று கூறி ஐ.நா.வுடன் ஒத்துழைக்க மறுத்துவிட்டது. எனினும் ஹங்கேரியில் நடைபெற்ற மனித உரிமை மீறல் மற்றும் அடக்குமுறை ஆகியவை உலக மக்களுக்கு வெளிப்படுத்தப்பட்டது.

**9. சூயஸ் சிக்கல் (1956) :**

எகிப்து அதிபர் நாசர் சூயஸ் கால்வாயை தேசியமயமாக்கியதை எதிர்த்த பிரிட்டனும், பிரான்சும் இஸ்ரேலுடன் இணைந்து அந்நாட்டின் (எகிப்து) மீது போர் நடவடிக்கை எடுத்தன. இந்தப் போர் விவகாரம் ஐ.நா. சபை கவனத்திற்கு கொண் செல்லப்பட்டது. போர் நிறுத்தத்திற்கு உடனே ஏற்பாடு செய்யப்பட்டது. தகராறுக்குரிய பகுதிகளில் ஐ.நா. அமைதிப்படை நிறுத்தப்பட்டது. சூயஸ் சிக்கலில் ஐ.நா. முயற்சி பயனள்ளதாயிருந்தது.

**10. காங்கோ சிக்கல் :**

புதிதாக விடுதலை பெற்ற காங்கோ நாட்டில் வெளியார் தலையீடு காரணமாக பிரதமர் லுமும்பாவிற்கும் கடாங்கா மாநிலத் தலைவர் ஷோம்போவுக்குமிடையில் மோதல் ஏற்பட்டு உள்நாட்டுப் போர் மூண்டது. ஐ.நா. அமைதிப்படை அங்கு அனுப்பப்பட்டது. செயலாளர் ஹாமர் ஷோல்டும் அங்கு விரைந்தார். ஆனால் திடீரென விமான விபத்தில் இறந்தார். ஐ.நா. படை தொடர்ந்து காங்கோவில் செயல்பட்டு அமைதியை நிலைநாட்டுவதில் வெற்றி பெற்றன.

**11. ரொடீஷியா பிரச்சனை :**

ஆப்பிரிக்காவிலுள்ள பிரிட்டிஷ் குடியேற்றமான ரொடீஷியாவில் இயான்ஸ்மித் என்பவர் தன்னிச்சையாக வெள்ளையர் சிறுபான்மை அரசை நிறுவி பெரும்பான்மையினரான கறுப்பர்களைப் புறக்கணித்தார். ஐ.நா. சபை ரொடீஷியா மீது பொருளாதார முற்றுகை விதித்தது. இறுதியில் இயான்ஸ்மித் பணிந்தார். 1981ல் அங்கு பெரும்பான்மையினர் ஆட்சி ஏற்பட்டது. அந்நாடு ஜிம்பாப்வே என அழைக்கப்படுகிறது.

### 12. கியூபா சிக்கல் :

கியூபா அரசுடன் ரஷியா ஒப்பந்தம் செய்து கொண்டு அந்நாட்டில் ஏவுகணைத் தளங்கள் அமைக்க முயற்சித்தது. கியூபா, அமெரிக்காவிற்கு அண்மையில் உள்ள நாடு. அங்கு ரஷிய ஏவுகணைத் தளம் ஏற்படுவது தனது பாதுகாப்பிற்கு ஆபத்து என்று கருதிய அமெரிக்கா அதனைத் தடுக்க முடிவு செய்தது. அதன் விளைவாக கியூபா முற்றுகையிடப்பட்டிருப்பதாக அமெரிக்க அதிபர் கென்னடி அறிவித்தார். அச்சமயத்தில் ரஷியக் கப்பல்கள் ஏவுகணைர் தளங்கள் நிறுவுவதற்கான கருவிகளை ஏற்றிக் கொண் கியூபாவை நோக்கிச் சென்று கொண்டிருந்தன. இரு வல்லரசுகளும் மோதிக் கொள்ளும் அபாயம் தோன்றியது. கெடுபிடிப்போரின் பதட்டநிலை உச்சக்கட்டத்தை அடைந்தது. இந்நிலையில் ரஷ்யப் பிரதமர் குருஷேவ் அணு ஆயுதப்போரின் அபாயத்தை உணர்ந்து அக்கப்பல்களைத் திருப்பியழைத்துக் கொண்டார். கியூபாவைத் தாக்க மாட்டோம் என அமெரிக்கா உறுதியளித்ததால் அங்குள்ள ஏவுகணைனயை அகற்றத் தயார் என அறிவித்தார். அமெரிக்கா அவ்வுறுதியை அளித்ததால் தான் ஏவுகணைகளை அகற்றியது. கியூபா சிக்கலின் போது ஐ.நா. செயலாளர் யுதாண்டின் பெருமுயற்சி காரணமாகத்தான் ஏவுகணைகளை அகற்ற ரஷியா இணங்கியது என்பது குறிப்பிடத்தக்கது.

### 13. சைப்ரஸ் சிக்கல் :

சைப்ரசில் துருக்கி மரபினருக்கும் கிரேக்கர்களுக்குமிடையில் போர் ஏற்பட்டபோது ஐ.நா. தலையிட்டுப் போர் நிறுத்தத்திற்கு வழி வகுத்தது. பின் ஐ.நா. அமைதிப்படை அங்கு அனுப்பப்பட்டது.

### 14. நமீபியா விடுதலை (1989) :

தென்னாப்பிரிக்க அரசின் குடியேற்ற நாடான தென்மேற்கு ஆப்பிரிக்க விடுதலைக்கு ஐ.நா., எடுத்த முயற்சி பாராட்டுக்குரியது, 1989ல் அங்கு குடியேற்ற நாட்டு ஆதிக்கம் அகன்று சுதந்திரம் மலர்ந்தது. தற்போது அந்நாடு நமீபியா என அழைக்கப்படுகிறது.

### 15. ஈரான் - ஈராக் போர் முடிவு (1988) :

எட்டு ஆண்டுகளாக நடைபெற்ற ஈரான் - ஈராக் போரை முடிவிற்கு கொண்டு வந்த பெருமை ஐ.நா.விற்கே உரியது. ஐ.நா. செயலாளர் பெரோஸ் டிகுய்யா அமைதிக்கான ஏற்பாடுகளைச் செய்தார்.

**16. குவைத் ஆக்கிரமிப்பு (1990 - 1991) :**

ஈராக் நாடு தனக்கு அருகிலுள்ள குவைத் நாட்டைத் திடீரென ஆக்கிரமித்துக் கொண்டது. ஐ.நா. சபை தலையிட்டு ஆக்கிரமிப்பை அகற்ற பெருமுயற்சி எடுத்தது. அந்நாடு மீது பொருளாதார முற்றுகை விதித்தது. அதுவும் பலனளிக்காததால் தன் உறுப்பு நாடுகளின் படைகொண்டு ஆக்கிரமிப்பை அகற்ற அனுமதித்தது. அதன் பயனாக அமெரிக்கா தலைமையில் 27 நாடுகள் படையனுப்பி ஈராக்கை பணிய வைத்தன. குவைத் மீண்டும் சுதந்திர நாடானது.

**17. கிழக்கு திமோர் பிரச்சனை :**

இந்தோனேஷிய ஆக்கிரமிப்பிலிருந்து விடுதலை பெற கிழக்கு திமோர் மக்கள் போராடினர். ஐ.நா. சபை தலையிட்டு அங்கு மக்கள் கருத்தறிய வாக்கெடுப்பு நடத்த ஏற்பாடு செய்தது. 75 சதவீத மக்கள் விடுதலை பெற ஆதரவாக வாக்களித்தனர். அதனையொட்டி அங்கு சுமூகமாக மாற்றம் ஏற்பட ஐ.நா. உதவி புரிந்தது.

**சிறப்பு நிறுவனங்களின் பணிகள் :**

- ஐ.நா. சபை தனது சிறப்பு நிறுவனங்களின் மூலம் சமுதாய பொருளாதாரத் துறைகளில் ஆற்றிவரும் பணி மகத்தானது. வளர்ச்சியடையும் நாடுகளுக்கு தொழில்நுட்ப மற்றும் நிதி உதவி அளித்தல், தொழிலாளர் நிலை உயர ஆலோசனை வழங்குதல், அறிவியல் தொழில்நுட்பக் கல்வியைப் பரப்புதல், பண்பாட்டு தொடர்புக் கூறுகளை ஏற்படுத்துதல், தொற்று நோய்களைத் தடுத்தல், குழந்தைகள் நலம், பொதுச் சுகாதாரம், மனித உரிமையைப் போற்றுதல், இன ஒதுக்கல் முறையை ஒழித்தல் போன்றவற்றில் அரும்பணியாற்றி உலக சகோதரத்துவம் ஏற்பட முயற்சிக்கின்றது. இந்த நடவடிக்கைகள் நாடுகளிடை பரஸ்பர கூட்டுறவு மனோபாவத்தை வளர்த்து பகைமை உணர்வுகளைப் போக்குகின்றன. அதன்மூலம் உலக அமைதிக்குத் தேவையான சூழ்நிலைகளை அமைத்தக் கொடுக்கின்றன.
- உணவு, வேளாண்மை, நிறுவனம் 1960-ல் "பசிப்பிணியிலிருந்து விடுதலை" இயக்கத்தைத் தொடங்கியது. மறு ஆண்டில் உலக உணவுத் திட்டத்தைத்

தொடங்கியது. 1963ல் 28 நாடுகளில் 90 மில்லியன் டாலர் பெறுமானப் பொருட்கள், பணிகள், உதவிகள் பெற்றுள்ளன. 1992 - 1994 ஆண்டுகளில் சோமாலியா நாட்டில் பயங்கர பஞ்சம் நிலவியபோது ஐ.நா. அந்நாட்டிற்கு உதவியது.

- சர்வதேச தொழிலாளர் நிறுவனம் பல துறைத் தொழில் சார்ந்த நியதியை இயற்றியுள்ளது.
- உலக சுகாதார நிறுவனம் மலேரியாவை ஒழித்து அம்மை, பிளேக் போன்ற கொடிய நோய்களை மனித சமுதாயத்திலிருந்து அகற்ற நடவடிக்கை எடுத்துள்ளது. குழந்தைகள் நலத்திலும் தனிக்கவனம் செலுத்தி வருகின்றது.
- அகதிகள், நாடற்றவர் பிரச்சனைகளைத் தீர்த்து புள்ளி விபரங்களைத் தயாரித்து விதிமுறைகளை வகுத்துள்ளது.
- மனித அடிப்படை உரிமைகளை வரையறுத்து அவற்றைப் பாதுகாக்க முயன்றது. மற்றும் சிறுபான்மையினர் பாதுகாப்பு, பெண்கள் நலன், சுயநிர்ணய உரிமை ஆகியவற்றிலும் அக்கறை காட்டி வருகிறது.
- மனித சமுதாயத்தைப் பாதிக்கும் சில குறிப்பிட்ட பிரச்சனைகளை உலக மக்கள் கவனத்திற்கு கொண்டு வருவதோடு அவற்றைத் தீர்ப்பதற்கான வழிவகைகளை ஆராய பன்னாட்டு மாறாடுகளைக் கூட்டியுள்ளது. சான்றாக,

| | |
|---|---|
| 1992-ல் | ரியோடி ஜெனிரோவில் சுற்றுப்புறச்சூழல் மாநாடு கூட்டியது. |
| 1994-ல் | வியன்னாவில் மனித உரிமைகள் மாநாடு கூட்டியது. |
| 1995-ல் | கெய்ரோவில் உலக மக்கள் தொகை மாநாடு கூட்டியது. |

இது போல், சில ஆண்டுகளை குறிப்பிட்டதொரு உயர் லட்சியத்திற்கான ஆண்டு எனப் பிரகடனப்படுத்தி அந்தக் குறிக்கோளை அடைய உலக மக்களின் ஏகோபித்த அபிப்பிராயத்தை திரட்டி மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தி வருகிறது. ஐ.நா. சபை கொண்டாடிய ஆண்டுகள் :

| | | |
|---|---|---|
| 1967 | : | சுற்றுலா ஆண்டு |
| 1968 | : | மனித உரிமை ஆண்டு |
| 1970 | : | கல்வி ஆண்டு |

| | | |
|---|---|---|
| 1972 | : | நூல்கள் ஆண்டு |
| 1973 | : | கோபர்னிக்கஸ் ஆண்டு |
| 1974 | : | மக்கள் தொகை ஆண்டு |
| 1975 | : | பெண்கள் ஆண்டு |
| 1978 | : | இன ஒதுக்கல் ஆண்டு |
| 1979 | : | குழந்தைகள் ஆண்டு |
| 1981 | : | உடல் ஊனமுற்றோர் ஆண்டு |
| 1982 | : | தென்னாப்பிரிக்காவிற்கு எதிரான பொருளாதார முற்றுகை ஆண்டு |
| 1983 | : | செய்தித் தொடர்பு ஆண்டு |
| 1985 | : | இளைஞர்கள் ஆண்டு |
| 1986 | : | அமைதி ஆண்டு |
| 1987 | : | இல்லமற்றோர் உறைவிட ஆண்டு |
| 1988 | : | எய்ட்ஸ் ஆண்டு |
| 1990 | : | கல்வி அறிவு ஆண்டு |
| 1992 | : | விண்வெளி ஆண்டு |
| 1993 | : | மண்ணின் மைந்தர்கள் நாடு |
| 1994 | : | குடும்ப ஆண்டு - விளையாட்டுப் போட்டிகளின் ஆண்டு |
| 1995 | : | சகிப்புத் தன்மை ஆண்டு |
| 1996 | : | ஏழ்மை ஒழிப்பு ஆண்டு |

**திறனாய்வு :**

ஐ.நா. சபையானது பல சிக்கல்களைத் தீர்த்து வைத்துள்ளது. வேறு சிலவற்றைத் தீர்க்காவிட்டாலும், அது உலகப் பெருஞ்சிக்கலாக மாறாதபடி தடுத்துள்ளது. சம்பந்தப்பட்ட நாடுகள் பேச்சுவார்த்தை மூலம் பிரச்சனைகளைத் தீர்த்துக் கொள்வதற்கு ஏற்றதொரு சூழ்நிலையை அமைத்துக் கொடுத்துள்ளது. நேரடிப் பேச்சுவார்த்தை, விசாரணைக் குழு அமைத்தல், மத்தியஸ்தம், கட்டாய நடுவர் தீர்ப்பு, நீதி விசாரணை, பிராந்திய நிறுவனங்களின் ஒத்துழைப்பு போன்ற

பல்வேறு ராஜதந்திர யுக்திகளை பின்பற்றி பிரச்சனைகளைத் தீர்க்க பெருமுயற்சி எடுத்துள்ளது.

நாடுகள் தங்கள் இறைமையையோ நலன்களையோ சிறிதும் விட்டுக் கொடுக்க முன் வராததுதான் பிரச்சனைகளைத் தீர்க்க முடியாமற் போனதற்கு முக்கிய காரணமாகும். அத்துடன் வல்லரசுகளிடையே நிலவிய கெடுபிடிப் போர்ச் சூழ்நிலையும் ரத்து அதிகாரமும் ஆகும். வின்ஸ்டர் பிரபு கூறியது போல், "இந்த நிறுவனமானது சின்னப் பையன்களை கட்டுப்படுத்திவரும் மேலாளர்களைக் கொண்டது. ஆனால் அவர்கள் தாங்கள் செயல்படுத்தும் சட்டம் ஒழுங்கிலிருந்து விதிவிலக்குப் பெற்றவர்கள்". இவ்வளவு குறைபாடுகளையும் வலிமையற்ற தன்மையையும் கொண்டிருந்தாம் ஐ.நா. சபை நடுவர் போல் செயல்பட்டு உலக அமைதியைப் பாதுகாத்து வருகிறது. பிராந்தியச் சிக்கல்கள் பெரும் போராக மாறாதபடி தடுத்திருக்கிறது. ஏராளமான குடியேற்றங்கள் விடுதலை பெற உதவியுள்ளது. மனித உரிமையை நிலைநாட்ட வழிகாட்டியுள்ளது. எல்லாவற்றிற்கும் மேலாக உலக அமைதிக்காக ஏங்குவோரின் நம்பிக்கை நட்சத்திரமாகவும் விளங்குகிறது.

### இராணுவ ஒப்பந்தங்கள்

இரண்டாம் உலகப் போருக்குப் பின் ஐரோப்பாவில் சோவியத் ரஷியா வலிமை மிகுந்த நாடாக வளர்ச்சியுற்றது. கம்யூனிச கோட்பாட்டின் படியிலான அரசுகளை உலகெங்கும் நிறுவுவதற்கு "கோமிங்பார்ம்" என்ற நிறுவனத்தை ரஷியா அமைத்திருந்தது. அதன் விளைவாக - கிழக்கு ஐரோப்பா முழுவதும் "சிவப்புமய"மாகியது. மேற்கு ஐரோப்பிய நாடுகளிலும் இந்த சிவப்புச் சாயம் படரும் அபாயம் ஏற்பட்டது. மக்களாட்சிக் கோட்பாட்டிலும், தனிமனித உரிமைத் தத்துவத்திலும், சந்தைப் பொருளாதாரத்திலும் ஊறித்திளைத்த மேற்கு ஐரோப்பிய நாடுகளுக்கு கம்யூனிசம் வேப்பங்காயாகக் கசந்தது. எனவே கம்யூனிசம் மேலும் விரிவாக்கம் பெறுவதைத் தடுக்க தங்களுக்குள் இராணுவக் கூட்டுக்கள் ஏற்படுத்திக் கொண்டன. கம்யூனிசத்திற்கு எதிரான போலீஸ் பணியை மேற்கொண்டிருந்த அமெரிக்காவும் இக்கூட்டுகளில் முக்கியப் பங்கெடுக்க முன்வந்தது. அதன் விளைவே நோட்டோ, சீட்டோ, சென்டோ போன்ற இராணுவ ஒப்பந்தங்கள். இந்த இராணுவ ஒப்பந்தங்கள் கெடுபிடிப் போர்க்காலத்தில் பதட்ட நிலையை ஏற்படுத்திப் போர் அபாயத்தை அதிகரித்தன.

### 1. வட அட்லாண்டிக் (நோட்டோ) ஒப்பந்தம் (யேவுழு) 1949 :

பெர்லின் முற்றுகையையும் ரஷ்யாவின் போர் அச்சுறுத்தல்களையும் கண்ட மேற்கு ஐரோப்பிய நாடுகள் தங்கள் பாதுகாப்பு ஏற்பாடுகளை வலுப்படுத்த முயன்றன. அண்மையில் செக்கோஸ்லோவாகியா நாட்டில் கம்யூனிஸ்டுகள் பழிக்கஞ்சா வன்முறையில் அதிகாரத்தைக் கைப்பற்றியது. எனவே பிரிட்டன், பிரான்சு, பெல்ஜியம், நெதர்லாந்து, லக்சம்பர்க் ஆகிய மேற்கு ஐரோப்பிய நாடுகள் 1948-ல் பிரஸ்ஸல்சில் ஆக்கிரமிப்பிற்கெதிராக ஐம்பதாண்டு பாதுகாப்பு ஒப்பந்தம் செய்து கொண்டன. இந்த ஒப்பந்தம் ரஷியாவின் ஆதிக்க விஸ்தரிப்பிற்கெதிரகாத்தான் செய்து கொள்ளப்பட்டது. எனினும் அந்நாடுகளுக்கு இன்னமும் தங்கள் பாதுகாப்பு ஏற்பாடுகளில் மனநிறைவு ஏற்படவில்லை. கிழக்கு ஐரோப்பாவில் ரஷ்யா நிறுத்தி வைத்திருந்த நான்கு மில்லியன் படைகளுக்கு ஈடாகாது என அஞ்சின. தங்கள் பாதுகாப்பு ஒப்பந்தத்தில் அமெரிக்காவையும் சேர்த்துக் கொண்டால் தான் ரஷ்யாவிற்கு ஈடு கொடுக்க முடியும், சக்திச்சமநிலையும் சீரடையும் என்று எண்ணின. அமெரிக்காவும் இதனை வரவேற்றது. அதன் விளைவாக 1949-ல் உருவானதே வட அட்லாண்டிக் ஒப்பந்தமாகும். இதில் பிரஸ்ஸல்ஸ் ஒப்பந்த நாடுகளும் அமெரிக்காவும் மற்றும் அட்லாண்டிக் கரையையொட்டிய பிற நாடுகளும் சேர்ந்தன. 1949 ஏப்ரலில் இந்த ஒப்பந்தம் வாஷிங்டனில் கையெழுத்தானது.

பிரிட்டன், பிரான்சு, பெல்ஜியம், நெதர்லாந்து, லக்சம்பர்க், அமெரிக்கா, கனடா, போர்த்துக்கல், டென்மார்க், நார்வே, ஐஸ்லாந்து, இத்தாலி, கிரீஸ், துருக்கி, ஜெர்மனி, ஸ்பெயின் ஆகிய நாடுகள் இதில் சேர்ந்தன.

**இந்த ஒப்பந்தத்தின் முக்கிய அம்சங்கள் :**

- ஒப்பந்த நாடுகளுள் ஏதாவது ஒன்றின் மீது தொடுக்கப்படும் தாக்குதல் அனைத்து உறுப்பு நாடுகள் மீதும் தொடுக்கப்பட்ட தாக்குதலாகக் கருதப்பட வேண்டும்.
- இதன் தலைமை நிறுவனம் பாரீசில் நிறுவப்பட்டது.
- ஐஸன்கோவர் அதன் உயர் தலைமைத் தளபதியாக நியமனம் செய்யப்பட்டார்.
- ஒருங்கிணைக்கப்பட்ட படைத்தலையின் கீழ் படைகள் வைக்கப்பட்டன. பல நாட்டுத் தலைமையின் கீழ் பல நாட்டு வீரர்கள் செயல்படும் முறை புகுத்தப்பட்டது.

கெடுபிடிப் போர்க் காலத்தில் பதட்ட நிலையை அதிகரித்த விஷயங்களில நோட்டோவும் ஒன்று. என்றாலும் "வலுவுடனும் விழிப்புடனும் இருப்பதன் மூலம் தான் அமைதியை நிலைநாட்ட முடியும்" என்ற டல்லஸ் கோட்பாட்டின் நடைமுறை உண்மையை எடுத்துக் காட்டுவது போல் மோதல் ஏற்படாது நோட்டோ பாதுகாத்தது குறிப்பிடத்தக்கது. மேற்கு ஜெர்மனி, இங்கிலாந்து, நர்வே ஆகிய நாடுகளில் ராணுவத் தளங்கள் அமைக்கப்பட்டன. அங்கு அணு ஆயுதங்கள் குவிக்கப்பட்டன. எனவே நேரடி மோதலுக்கு இருதரப்பினரும் அஞ்சினர். அதன் காரணமாக அமைதி நிலவியது. ஆனால் அது ஆயுதம் தாங்கிய அமைதியாக இருந்தது.

கருத்த வேறுபாடு காரணமாக 1966-ல் பிரான்சு, நோட்டோ படைக்குழுவிலிருந்து விலகி விட்டது. எனவே அதன் தலைமையகம் பாரீசிலிருந்து பிரஸ்ஸல்சுக்கு மாற்றப்பட்டது. சைப்ரசில் துருக்கியின் ராணுவத் தலையீட்டை நோட்டோ தடுக்காததால் கோபமுற்ற கிரீஸ் 1974-ல் அதன் படைக்குழுவிலிருந்து விலகியது. ஆனால் 1980-ல் மீண்டும் சேர்ந்தது.

**2. வார்சா ஒப்பந்தம் (WARSAW PACT) (1955) :**

நோட்டோவிற்கு ரஷ்யாவின் பதிலடி வார்சா ஒப்பந்தமாகும். 1955-ல் மேற்கு ஜெர்மனி நோட்டோவில் சேர்ந்ததன் மூலம் நோட்டோ ராணுவத் தளங்கள் இரும்புத் திரையை நெருங்கி வந்தன. இதனால் அஞ்சிய ரஷ்யா கிழக்கு ஐரோப்பிய கம்யூனிஸ்ட் நாடுகளை ஒரு ராணுவக் கூட்டில் இணைத்து பாதுகாக்க விரும்பியது. எனவே 1955-ல் "வார்சா ராணுவ ஒப்பந்தம்" கையெழுத்தானது. ரஷ்யா, போலந்து, செக்கஸ்லோவாக்கியா, பல்கேரியா, ருமேனியா, அல்பேனியா, ஹங்கேரி ஆகிய நாடுகள் அதில் கையெழுத்திட்டன. ஏதாவது ஒரு நாட்டின் மீது தொடுக்கப்படும் தாக்குதல் அனைவர் மீதும் தொடுக்கப்பட்ட தாக்குதலாகக் கருதப்பட வேண்டுமென்பது அவ்வொப்பந்தத்தின் முக்கிய அம்சமாகும். அனைத்து நாட்டினர் படைகளையும் கொண்ட பொதுவான படை ஒன்றை ஏற்படுத்த தீர்மானிக்கப்பட்டது. மற்றும் ஒவ்வொரு நாட்டிலும் ஒரு ரஷ்யப் படைப் பிரிவை நிறுத்தவும் தீர்மானிக்கப்பட்டது. இதன்மூலம் வார்சா ஒப்பந்த நாடுகளின் மீது ரஷ்யாவின் பிடி உறுதியாக்கப்பட்டது. அந்நாடுகள் ரஷ்யாவின் நலன்களுக்கோ பொது உடமைக் கொள்கைக்கோ ஊறு விளைவிக்கும் நடவடிக்கை எடுத்ததால் உடனே ரஷ்யா எளிதில் தலையிடும் வாய்ப்பு ஏற்பட்டது. கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் சோவியத்

ரஷ்யாவின் பிடிப்பு தளர்ந்த பின் 1991-ல் இந்த ராணுவ ஒப்பந்தம் அதிகார பூர்வமாக கைவிடப்பட்டது.

**சீட்டோ (ளுழரவா யுளயைெ வுசயவல ழுசபயnஐளயவழைெ ளுநுயுவுழு) (1954) :**

தென்கிழக்கு ஆசிய ஒப்பந்த நிறுவனம் 1954-ல் அமெரிக்காவின் முயற்சியினால் உருவாக்கப்பட்டது. தென்கிழக்கு ஆசிய நாடுகளில் கம்யூனிசம் ஊடுருவாது தடுக்கும் நோக்குடன் இந்நிறுவனம் உருவாக்கப்பட்டது. இது உருவாக்கப்பட்டதன் காரணம்.

1. கம்யூனிஸ்ட் சீனாவின் செல்வாக்கு தென்கிழக்கு ஆசியாவில் படர்தல்.
2. கொரியா போர்
3. வியட்நாமில் கம்யூனிஸ்டுகளின் ஊடுருவல்

1954-ல் பிலிப்பைன்ஸ் தலைநகரான மணிலாவில் நடைபெற்ற மாநாட்டில் இக்கூட்டு முறைப்படி அமைக்கப்பட்டது.

இக்கூட்டில் இணைந்த நாடுகள் :

அமெரிக்கா, பிரிட்டன், பிரான்சு, ஆஸ்திரேலியா, நியூசிலாந்து, தாய்லாந்து, பிலிப்பைன்ஸ், பாகிஸ்தான் ஆகிய நாடுகள் இக்கூட்டணியில் இணைந்தன. இந்தியா, இந்ோனேசியா, பர்மா, மியான்மர் போன்ற முக்கிய தென்கிழக்கு ஆசிய நாடுகள் இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட உறுதியாக மறுத்துவிட்டன.

நோக்கம் :

வெளியிலிருந்து வரும் ஆயுதத் தாக்குதலை தடுத்து நிறுத்துவதற்கும், பிரதேச ஒருமைப்பாட்டிற்கும் ஸ்திரத் தன்மைக்கும் எதிரான சீர்குலைவு நடவடிக்கைகளை எதிர்ப்பதற்கும் உறுப்பு நாடுகளின் தனிப்படை ஆற்றலையும் கூட்டு ஆற்றலையும் வலுப்படுத்துதல்.

இந்நாடுகளுக்கு அமெரிக்கா, இராணுவ உதவி அளித்ததோடு அந்நாடுகளில் இராணுவ தளங்களையும் அமைத்தது. வியட்நாம் போரில் கம்யூனிஸ்டுகளுக்கு எதிராக சைகோன் (தென் வியட்நாம்) அரசிற்கு முழு உதவி அளித்தது. எனினும் அங்கு கம்யூனிசம் பரவுவதைத் தடுக்க முடியாது போயிற்று.

சென்டோ (ஊநவெசயட நுயளவ யேவழைௌ் வுசநயவல ழுசபயணைெயவழைெ ஊநுவுழு) :

மத்திய கிழக்கு எனப்பட்ட மேற்கு ஆசிய நாடுகளில் கம்யூனிஸ்ட் ஊடுருவலைத் தடுக்கவும் அப்பகுதிகளில் பிரிட்டிஸ் - அமெரிக்க இராணுவ மேலாண்மையை நிலைநாட்டவும் இந்த ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டது. 1955-ல் ஈராக் தலைநகரான பாக்தாத்தில் இதற்கான ஒப்பந்தம் கையெழுத்தானது. பாக்தாத்தில் இதன் தலைமையகம் அமைத்திருந்தமையால் இது பாக்தாத் ஒப்பந்தம் எனவும் அழைக்கப்பட்டது.

இதில் ஈராக், ஈரான், பாகிஸ்தான், துருக்கி ஆகிய நாடுகள் இணைந்தன. சென்டோ அமைப்பு நடவடிக்கைகள் ஒரு விசேஷ இணைப்புக் குழுவின் மூலம் நேட்டோ அமைப்போடு இணைக்கப்பட்டன.

கூட்டுப் பாதுகாப்பு, வெளிப்படையான அல்லது மறைமுகமான ஆக்கிரமிப்பைத் தடுத்து நிறுத்துவது ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டிருந்தது. இக்கூட்டு நீண்ட நாள் நீடிக்கவில்லை. 1959-ல் ஈராக் இதிலிருந்து வெளியேறியது. 1979-ல் ஈரானில் ஷா ஆட்சி வீழ்ந்து முகமது கோமினி ஆட்சி ஏற்பட்டதும் இக்கூட்டிலிருந்து அதுவும் விலகி விட்டது. எனவே இக்கூட்டு செயலற்றுப் போய்விட்டது.

கூட்டுச் சேராக் கொள்கை (அ) அணிசேரா இயக்கம்
(ழேெ யுடபைெஅநவெ ஆழஎநஅநவெ)

இரண்டாம் உலகப்போருக்குப் பின் வல்லரசுகளான அமெரிக்காவிற்கும் ரஷியாவிற்கும் இடையில் பரஸ்பரம், போட்டி, பொறாமை, பகைமை, அச்சம் நிலவியது. இரண்டு வல்லரசுகளும் ஆதிக்கப் போட்டியில் மட்டுமின்றி கொள்கை ரீதியிலும் ஒன்றையொன்று எதிர்த்து நின்றன. கம்யூனிச ஆட்சி முறையை உலகமெல்லாம் பரப்புவதை தனது தலையாயக் கடமையாக ரஷியா கருதியபோது, கம்யூனிசம் பரவாது தடுத்து நிறுத்துவதே தனது தார்மீகப் பொறுப்பு என்று அமெரிக்கா

எண்ணியது. இரு வல்லரசுகளும் தங்கள் கொள்கைக்கு உலக நாடுகளிடையே ஆதரவு தேடின. பிரிட்டன், பிரான்சு, இத்தாலி போன்ற மேற்கு ஐரோப்பிய நாடுகள் அமெரிக்க கொள்கையை ஆதரித்து நின்றபேவாது போலந்து, செக்கோஸ்லோவாகியா, ஹங்கேரி போன்ற கிழக்கு ஐரோப்பிய நாடுகள் ரஷ்யாவின் தலைமையை ஏற்றன. உலகின் பல பகுதிகளில் உள்ள நாடுகளும் இந்த இரு வல்லரசு முகாம்களில் ஏதாவது ஒன்றில் அடைக்கலம் புகுந்து பாதுகாப்பும் பொருள் உதவியும் பெற முயன்றன. வல்லரசுளும் தங்கள் ஆதரவு நாடுகளுக்கு படை மற்றும் பொருளியல், தொழில்நுட்ப உதவிகளை தாராளமாக வழங்கின. புதிய படைக்கலன்களை உற்பத்தி செய்தன. ஒன்றையொன்று எதிர்த்து இராணுவக் கூட்டுகள் அமைந்தன. அமெரிக்கா தனது அணியினர் அடங்கிய நோட்டோ, சென்டோ, சீட்டோ முதலிய ராணுவக் கூட்டுக்களை அமைத்த போது ரஷியா கம்யூனிஸ்ட் நாடுகளடங்கிய வார்சா படை ஒப்பந்தம் செய்து கொண்டது.

இந்த இரு அணியினருக்கிடையில் கெடுபிடியான சூழ்நிலை தோன்றியது. பதட்டநிலை ஏற்பட்டது. எங்கே இரு வல்லரசுகளும் மோதிக் கொள்ளுமோ என்ற அச்சம் உலக நாடுகளைப் பிடித்தது. மூன்றாம் உலகப்போர் என்ற அழிவுப் படுபாதாளத்தில் வல்லரசுகள் ஒன்றையொன்று அடித்து வீழ்த்தும் ஆவேச நிலையில் நின்று கொண்டிருந்தன.

இத்தகைய பயங்கரமான சூழ்நிலையில் போருக்கான சூழ்நிலையை தவிர்த்து அமைதியை நிலைநாட்ட சில நாடுகள் மேற்கொண்ட கொள்கையே கூட்டுச் சேராக் கொள்கையாகும்.

கூட்டுச் சேராக் கொள்கை விளக்கம் :

வல்லரசுகளின் எந்த அணியிலும் ராணுவக் கூட்டுக்களிலும் சேராது சுதந்திரமான கொள்கையைப் பின்பற்றுவதே கூட்டுச் சேராக் கொள்கையாகும். எந்த ஒரு பன்னாட்டுப் பிரச்சனையிலும் வல்லரசுகளின் கருத்து என்ன என்பதைப் பொருட்படுத்தாது அதன் சாதகபாதகங்களை சீர்தூக்கி கொள்கை வகுப்பதே கூட்டுச் சேராக் கொள்கையாகும்.

இக்கொள்கை நடுநிலைக் கொள்கை போன்று தோன்றினாலும் அது நிடுநிலையன்று. நடுநிலை என்றால் இரண்டுபேர் சண்டையிடும் போது அந்த

சண்டைக்கு காரணமானவர் யார்? யார்? முதலில் தவறு செய்தது என்பதைப் பற்றி கவலைப்படாமல் எக்கட்சியையும் சேராமல் தனித்து நிற்பது ஆகும். தவறிழைத்தவனையும் தவறினால் பாதிக்கப்பட்டவனையும் ஒரே மாதிரியாக எடைபோடும் தன்மை கொண்டது ஆகும். கூட்டுச் சேராக் கொள்கை அப்படியன்று. எந்தப் பக்கமும் சேராது நின்றாலும் குற்றம் குற்றமே என்று துணிந்து கூறுவது ஆகும்.

இக்கொள்கை தனித்து ஒதுங்கி நிற்பது அன்று. அமெரிக்க ஐக்கிய நாடுகள் விடுதலை பெற்றதும் ஜார்ஜ் வாஷிங்டனால் அறிமுகப்படுத்தி வைக்கப்பட்ட ஐரோப்பிய அரசியலில் தலையிடாது ஒதுங்கியிருத்தல் என்பதற்கும் அணிசேராக் கொள்கைக்கும் வேறுபாடு உண்டு. பொருளியல் பண்பாட்டு வளர்ச்சிக்கு நாடுகள் அரசியல் ரீதியில் ஒன்றோடொன்று கலந்துறவாடி ஒத்துழைத்து கூட்டுறவு கொள்வது அவசியமாகும். அக்கூட்டுறவு பரஸ்பர ஒத்துழைப்பின் அடிப்படையில் இருக்க வேண்டுமேயன்றி படை பாதுகாப்பினால் அன்று.

மதில்மேற் பூனையாக நிற்பதோ, சந்தர்ப்பவாதமோ அன்று எந்தவொரு சிக்கலிலும் உறுதியான அதேசமயத்தில் சரியான நிலையைத் தேர்ந்தெடுப்பதுதான் அணிசேராக் கொள்கையாகும்.

அணிசோரக் கொள்கை உண்மையில் "சமாதான சகவாழ்வு கொள்கையாகும்" நாடுகள் தங்கள் கொள்கைகளை தங்கள் நாடுகளில் செயல்படுத்துவதோடு நின்று கொள்ள வேண்டும். பிறநாடுகளில் அவற்றைத் திணிக்க முயற்சிக்கக் கூடாது. தங்கள் நாட்டினைப் போல் பிற நாடும் அதற்கென தனியொரு கொள்கையைக் கொண்டிருக்கலாம். அந்த உரிமையை மதிக்க வேண்டும். இதுதான் சக வாழ்வு ஆகும். இத்தகைய சக வாழ்வில் சமாதானம் தானாக நிலைநிற்கும். அதாவது மாற்றுக் கொள்கையைக் கொண்ட நாடுகளுடனும் சமாதானமாக வாழ வேண்டும். இதுதான் அணிசேராக் கொள்கையின் உட்கருத்து ஆகும். மாற்றுக் கருத்துக்களைக் கொண்ட இரு வல்லரசு முகாம்களுடனும் நல்லுறவு கொள்ள வேண்டும்.

**அணிசேரா இயக்கத்தின் தோற்றம் :**

அணிசேரா இயக்கத்தின் தந்தை இந்தியப் பிரதமர் ஜவஹர்லால் நேரு ஆவார். அவர் இந்திய விடுதலை பெறுவதற்கு முன்னரே சுதந்திர இந்தியாவின் வெளியுறவுக் கொள்கை எப்படி அமைந்திருக்கும் என்பதை வெளியிட்டிருந்தார். அதன்படி சுதந்திர இந்தியா எந்த வல்லரசு முகாம்களிலும் சேராது சுதந்திரமான வெளிநாட்டுக் கொள்கையைக் கடைபிடிக்கும் என்று அறிவித்தார். அதே சமயத்தில் இரு வல்லரசுகளுடனும் நல்லுறவு கொண்டிருக்கும் என்று அறிவித்தார்.

இதனை இரு சந்தர்ப்பங்களில் உலக நாடுகள் அறியச் செய்தார். முதலில் 1954-ல் சீனாவுடன் பஞ்சசீல ஒப்பந்தம் செய்யும்போது அணிசேராக் கொள்கையை உலகறியச் செய்தார். 1955-ல் பாண்டுங் மாநாட்டில் புதிதாக விடுதலை பெற்ற ஆசிய - ஆப்பிரிக்க நாடுகளின் முன்னேற்றத்திற்கு கூட்டுச் சேராக் கொள்கைதான் உகந்தது என்று வலியுறுத்தினார்.

ஏறத்தாழ இதே கருத்தினை எகிப்து அதிபர் நாசரும், யூகோஸ்லாவியா தலைவர் மார்ஷல் டிட்டோவும் கொண்டிருந்தனர். டிட்டோ கம்யூனிசக் கோட்பாட்டைக் கடைபிடித்தாலும் ரஷிய முகாமிலிருந்து வெளியேறியவர். நாசர் சில மேற்கு நாடுகளுடனும் ரஷ்யாவுடனும் நல்லுறவு கொண்டிருந்தவர். இந்தியப் பிரதமர் ஜவஹர்லால் நேரு, எகிப்து அதிபர் நாசர், யூகோஸ்லாவியா அதிபர் டிட்டோ ஆகிய மூவரின் முயற்சி காரணமாக 1961ல் பெல்கிரேடில் அணிசேரா நாடுகளின் முதல் மாநாடு கூடியது. 25 நாடுகள் கலந்து கொண்டன. அம்மாநாட்டில் கலந்து கொண்டவர்களுள் முக்கிய மாணவர்கள் சைப்ரஸ் நாட்டின் ஆர்ச் பிஷப்மகோரியாஸ், பர்மா நாட்டுப் பிரதமர் யூநூ, எத்தியோப்பிய பேரரசர் ஹெய்லி சலாசி, நேபாள மன்னர் மகேந்திரா, இந்தோனேஷிய அதிபர் சுகர்னோ, கானா அதிபர் நக்ருமா மற்றும் ஆப்கானிஸ்தான், அல்ஜீரியா, கம்போடியா, இலங்கை, ஈராக், லெபனான், மாலி, மொராக்கோ, சோமாலியா, சிரியா, கினி, ஏமன், காங்கோ, கியூபா, டுனீசியா, சூடான் ஆகிய நாட்டுத் தலைவர்களும் கலந்து கொண்டனர்.

அணிசேரா இயக்கத்தின் வளர்ச்சி :

1961-ல் 25 உறுப்பினர்களைக் கொண்டு தொடங்கிய இயக்கம் இன்று நான்கு மடங்கிற்கும் அதிகமான உறுப்பினர்களைக் கொண்டிருக்கிறது. இம்மாநாடுகளில் நாடுகளின் தலைவர்கள் கலந்து கொண்டது சிறப்பான அம்சமாகும். இம்மாநாடுகளில் கீழ்கண்ட கருத்துக்கள் வலியுறுத்தப்பட்டன.

1. வல்லரசு முகாம்களின் ராணுவக் கூட்டில் சேரக்கூடாது.
2. உலகில் எழும் பிரச்சனைகளை சுதந்திரத்துடன் ஆராய்ந்து மதிப்பீடு செய்து அது சம்பந்தமான கொள்கையை வகுக்க வேண்டும். வல்லரசு எடுக்கும் முடிவை கண்மூடித்தனமாக ஆதரிக்கக் கூடாது.
3. பிற நாடுகளின் சுதந்திரத்தை மதித்து அதன் பிரதேச உரிமைகளை அங்கீகரிக்க வேண்டும்.
4. பிற நாடுகளின் உள்நாட்டு விவகாரங்களில் தலையிடக்கூடாது.
5. பிறநாடுகளைப் பொறுத்தமட்டில் சமாதான சகவாழ்வு அதாவது நட்பமைதியுடன் கூடிய கூட்டுறவு கொள்கையைக் கடைப்பிடிக்க வேண்டும்.
6. ஏகாதிபத்திய காலனி ஆதிக்கம் எந்த வடிவத்தில் இருந்தாலும் ஒழிக்கப்பட வேண்டும்.
7. இன ஒதுக்கல், நிறவெறிக் கொள்கைகளை ஒழிக்க வேண்டும்.
8. ஆக்கிரமிப்பு, மனோபாவம் அறவே கூடாது.
9. நாடுகளிடையே பொருளியல் கூட்டுறவு ஏற்படுத்தி பொருளாதார ஏற்றத்தாழ்வை முடிந்தமட்டும் குறைத்துப் புதிய பன்னாட்டுப் பொருளியல் முறையை உருவாக்க வேண்டும்.
10. உலக அமைதி, படைக்குறைப்பு, அணு ஆயுத ஒழிப்பு ஆகியவை நிறைவேற்றப்பட வேண்டும்.

**அணிசேரா இயக்கத்தின் விளைவுகள் :**

அணிசேரா இயக்கத்தின் விளைவாக உலகில் கெடுபிடிப்போரின் கடுமை தணிந்துள்ளது. 160 நாடுகள் உள்ள உலக சமுதாயத்தில் 102 நாடுகள் எந்த அணியுடனும் சேராது சுதந்திரமான கொள்கையைப் பின்பற்றுவோம் என்று அறிவித்தது வல்லரசுகளின் அணிகளை பலவீனப்படுத்தியுள்ளது.

இரண்டாவதாக, ஐ.நா. சபை வல்லரசுகளின் ஆதிக்க மேடையாக இருந்த காலம் மாறிவிட்டது. 102 நாடுகளைக் கொண்ட ஒரு அணியைப் புறக்கணித்து விட்டு அவைகள் எதுவும் செய்து விடமுடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

மூன்றாவதாக, உலகப் பிரச்சனைகள் சம்பந்தமாக சுதந்திரமான கொள்கைகளைப் பின்பற்றி அவற்றின் உண்மை நிலையைக் கண்டறிந்து அது சம்பந்தமாக தங்கள் கருத்துக்களை அறிவிப்பதால் பிரச்சனை தீர்வதற்கான வாய்ப்புகள் அதிகரித்துள்ளன. ரொடீஷியா விவகாரம், நமீபியா விடுதலை ஆகிய பிரச்சனைகள் சுமூகமாக தீர்வு பெறுவதற்கும் அணிசேரா நாடுகளின் ஒருமித்த

பாலஸ்தீன அரேபியர்களின் நியாயமான கோரிக்கைகள், தென்னாப்பிரிக்க அரசின் இன வெறிக் கொள்கை ஒழிப்பு ஆகியவை பற்றி ஒருமித்த கருத்து உருவாகவும் உதவியுள்ளன.

இறுதியாக, அணிசேரா நாடுகள் இரு அணியிலிருந்தும் பொருளியல் மற்றும் தொழில் நுட்ப உதவிக்கான வாய்ப்பினை பெற்றுள்ளன. இதற்கு நல்லதொரு எடுத்துக்காட்டு இந்தியா, ரஷியா - அமெரிக்கா ஆகிய வல்லரசுகளிடமிருந்தும் உதவி பெற்று வருகிறது.

**அணிசேரா இயக்கத்தின் குறைபாடுகள் :**

1. அணிசேரா இயக்கம் வேற்றுமையுள் ஒற்றுமை காண முயலும் ஒரு நிறுவனமாகும். முதலில் அணிசேரா இயக்க நாடுகள் ஒரு குறிப்பிட்ட பிராந்தியத்தையோ கண்டத்தையோ சார்ந்தவை அல்ல. ஐந்து கண்டங்களிலும் அவை பரவிக் கிடக்கின்றன. எனவே அவற்றின் தேசிய நலன்களும் பலவகைப்பட்டதாக இருக்கின்றன. இரண்டாவதாக, அவை ஒரே மாதிரியான அரசியலமைப்பு முறைகளைக் கொண்டதல்ல. குடியாட்சி, முடியாட்சி, ஒரே கட்சியாட்சி, சர்வாதிகார ஆட்சி, சமயம் சார்ந்த அரசு, சமயம் சாரா அரசு எனப் பல்வேறு அரசியலமைப்பு முறைகளைக் கொண்டிருக்கின்றன. மூன்றவதாக, அவர்களின் பண்பாடுகள், பொருளியல் நிலை, வாழ்க்கைத் தரம், வரலாற்றுப் பாரம்பரியம் ஆகியவற்றிலும் வேற்றுமைகள் காணக்கிடக்கின்றன. இத்தகைய வேற்றுமை மிக்க நாடுகளை அணி சேராக் கொள்கை என்ற ஒரு அம்சம் தான் இணைத்து வைக்கிறது.
2. கூட்டுசேரா நாடுகள் பெரும்பாலும் பொருளாதார ரீதியில் மிகவும் பின்தங்கியுள்ளன. பொருளியல் வளர்ச்சிக்கும் தொழில் நுட்ப உதவிக்கும் வல்லரசுகளையே சார்ந்திருக்க வேண்டியதிருக்கிறது.
3. அணிசேரா நாடுகள் படை வலிமை மிக்கவை அல்ல. இந்நாடுகள் அனைத்தும் ஒன்று சேர்ந்தால்கூட வல்லரசு ஒன்றின் படை வலிமைக்கு ஈடாகாது. இந்நாடுகளின் பொதுக் கருத்தக்களை வல்லரசுகள் எளிதில் புறக்கணித்து விடலாம்.

4. அணிசேரா நாடுகள் இயக்கம் வெறும் தீர்மானம் போடும் இயக்கமாகவே இருக்கிறது. தீர்மானங்களைச் செயல்படுத்தவல்ல நிரந்தர நிறுவன அமைப்பு எதுவும் இல்லை.
5. அணிசேரா நாடுகளின் தனிப்பட்ட தகராறு, சச்சரவுகள், அவ்வியக்கத்தைப் பெரிதும் பலவீனப்படுத்தியுள்ளன. ஈரான், ஈராக் போர், ஈராக் குவைத் ஆக்கிரமிப்பு கம்பூச்சியா சிக்கல், மொராக்கோ அல்ஜீரியா மோதல், எகிப்து அரபு நாடுகள் சச்சரவு போன்ற தகராறுகளை அணிசேரா இயக்க நாடுகளால் தீர்த்து வைக்க இயலவில்லை.
6. கூட்டுச் சேரா இயக்கம் ரஷியா சார்புள்ள இயக்கமாக செயல்படுவதாகக் குற்றச்சாட்டப்பட்டுள்ளது. அமெரிக்காவின் தவறுகளை உரத்த குரலில் கண்டிக்கும்போது ரஷியாவின் தவறுகளைக் கண்டும் காணாதவாறு விட்டு விடுவதாகக் கூறப்படுகிறது.
7. நாடுகள் சுதந்திர வெளிநாட்டுக் கொள்கையைப் பின்பற்றுவதால் சில முக்கிய உலகப் பிரச்சனைகளில் ஒருமித்த கருத்து உருவாவதற்கு வழியில்லாமல் போய்விடுகிறது.

**அணிசேரா நாடுகளின் எதிர்காலம் :**

வல்லரசுகளிடையே கெடுப்பிடிப்போர் உச்சக்கட்டத்தில் இருந்தபோது, ராணுவக் கூட்டுக்கள் அமைப்பதில் போட்டா போட்டி இருந்தபோது அணிசேரா நாடுகளின் இயக்கத்திற்கு அர்த்தம் இருந்தது. ஆனால் மாறிவரும் பன்னாட்டரசியல் நிலைகளைக் காணும்போது அணிசேரா இயக்கம் இனித் தேவையில்லை என்ற எண்ணம் எழுகின்றது. இருதுருவ அரசியல் மோதல்கள் அநேகமாக மறைந்து விட்டன என்றே கூறலாம். இரு கோட்பாட்டு முகாம்களாகப் பிரித்து வைத்திருந்த இரும்புத்திரை அகற்றப்பட்டு விட்டது. கிழக்கு ஐரோப்பிய நாடுகளான போலந்து, பல்கேரியா, ருமேனியா, செக்கோஸ்லோவாகியா, ஹங்கேரி ஆகிய நாடுகளில் கம்யூனிஸ்ட் கட்சியும், ஆட்சியும் கவிழ்க்கப்பட்டு விட்டன. ஜெர்மனி ஐக்கியமடைந்து விட்டது. படைப் பெருக்கத்தில் முழுமூச்சாய் ஈடுபட்டிருந்த வல்லரசுகள் போட்டி போட்டுக் கொண்டு படைக்குறைப்பிற்கான திட்டங்களை அறிவிக்கின்றன. ரஷிய முகாமின் இராணுவக் கூட்டான வார்சா ஒப்பந்தம் ரத்து செய்யப்படும் என்றும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் ரஷிய தலைவர் கோர்ப்சேவ் அறிவித்துள்ளார். உலகப் பிரச்சனைகளில் வல்லரசுகளுக்குள் நிலவிய கருத்து வேறுபாட்டைப் போக்கவதற்கு அமெரிக்க அதிபர் ஜார்ஜ் புஷ், ரஷிய அதிபர்

வாஷிங்டன், ஹெங்சிங்கி ஆகிய இடங்களில் சந்தித்துப் பேசியுள்ளனர். அதனால் கெடுபிடிப்போர் அநேகமாக முற்றுப்பெற்று விட்டது. இத்தகைய சூழ்நிலையில் அணிசேரா இயக்கத்தின் பணி யாது? என்ற வினா எழுகின்றது. காலத்திற்கு ஏற்றவாறு இந்த இயக்கத்தை மாற்றி நடத்திச் செல்லத்தக்க தலைவர்கள் இப்போது இல்லை. எனினும் உலகில் அவ்வப்போது தோன்றும் பல்வேறு பிரச்சனைகள் பற்றி உலக நாடுகளிடையே ஒருமித்த கருத்துக்களை உருவாக்க இத்தகைய இயக்கங்கள் தேவைதான், பொருளியல் கூட்டுறவு ஒத்துழைப்பு ஏற்படுத்தவும் உதவும்.

## சார்க் அமைப்பு (SAARC)

உலகம் முழுவதிலும் பல பகுதிகளில் பிராந்தியக் கூட்டமைப்புகள் தோன்றி செயல்பட்டு வந்த போது தெற்கு ஆசியப் பகுதிகளிலும் பிராந்தியக் கூட்டமைப்பு ஒன்று இல்லாத குறைபாடு இப்பகுதியில் உள்ள தலைவர்களால் உணரப்பட்டது. தெற்கு ஆசிய சங்க பிராந்தியக் கூட்டமைப்பு (South Asian Association for Regional Co-operation) என்ற கருத்தை முதன்முதலாக **1980**, மே மாதம் வெளியிட்டவர் பங்களாதேஷ் தலைவர் ஜியாவுர் ரஹ்மான் என்பவராவார். இந்தக் கருத்து செயல்திட்டமாகத் தீட்டப்படுவதற்கு ஐந்து ஆண்டுகள் ஆனது. சார்க் அமைப்பு **1985 –** டிசம்பரில் டாக்காவில் நடைபெற்ற முதலாவது உச்சி மாநாட்டில் உதயமானது. இந்த அமைப்பில் இந்தியா, பங்களாதேஷ், பாகிஸ்தான், பூட்டான், ஸ்ரீலங்கா, நோபாளம், மாலத்தீவுகள் ஆகிய ஏழு நாடுகள் உறுப்பு நாடுகளாக உள்ளன. பிராந்தியக் கூட்டுறவே முக்கிய நோக்கமாகக் கொண்டுள்ள சார்க் அமைப்பில் இந்தியா சிறப்பான பங்கெடுத்து வருகிறது.

### சார்க்கின் தோற்றம்

தெற்கு ஆசியாவிலுள்ள நாடுகளுக்கிடையே ஒரு பிராந்திய கூட்டமைப்பை ஏற்படுத்த வேண்டும் என்று பங்களாதேஷ் அதிபர் ஜியாவுர் ரஹ்மான் கூறியபோது ஆரம்பத்தில் அந்தக் கருத்துக்கு உடனடி ஆதரவு கிடைக்கவில்லை. ஆனால், எந்த வெளிநாட்டின் பின்ணியுடன் இந்தக் கருத்து கூறப்படவில்லை என்று உறுதி செய்யப்பட்டவுடன் பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாயின. முதலாவது இந்த ஏழு நாடுகளின் வெளிஉறவுச் செயலர்களின் கூட்டம் கொழும்பு, காத்மண்டு, இஸ்லாமாபாத், டாக்கா, டெல்லி ஆகிய நகரங்களில் நடைபெற்றன. பின்னர் இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ், பூட்டான், ஸ்ரீலங்கா, நேபாளம், மாலத்தீவுகள் ஆகிய நாடுகளின்

வெளிஉறவு அமைச்சர்களின் முதலாவது கூட்டம் **1983** – ஆகஸ்டில் புது டெல்லியில் நடைபெற்றது.

இந்த வெளிஉறவு அமைச்சர்களின் மாநாட்டில் இந்திய வெளிஉறவு அமைச்சர் பி.வி.நரசிம்மராவ் கலந்துகொண்டார். இந்தக் கூட்டத்தில்தான் சார்க்கின் நோக்கங்கள் அடங்கிய சாசனம் தெளிவாக வரையறுக்கப்பட்டது. இந்தக் கூட்டத்தைத் தொடங்கி வைத்துப் பேசிய பிரதமர் இந்திராகாந்தி இந்த ஏழு நாடுகளுக்கு இடையே ஏற்படும் ஒத்துழைப்பு தங்களுக்கு ஏற்படும் அழுத்தங்களைத் தாங்கிக் கொள்வதற்கான சக்தியைக் கொடுக்கும் என்றார். சுதந்திரம், சமாதானம், பிராந்திய ஒற்றுமையை மேம்படுத்தும் என்றும் நம்பிக்கை தெரிவித்தார்.

**1984**, ஜுலையில் மாலேயிலும், **1985**, மே மாதம் திம்புவிலும் நடைபெற்ற வெளிஉறவு அமைச்சர்களின் கூட்டங்களில் விளைவாக சார்க் அமைப்பின் முதலாவது உச்சி மாநாடு டாக்காவில் **1985**, டிசம்பர் **7**–ஆம் தேதி தொடங்கியது. இவ்வாறு சார்க் அமைப்பு **1985**–ஆம் ஆண்டு பிறந்தது.

**சார்க்கின் நோக்கங்கள் :**

சார்க் கீழ்க்கண்ட முக்கியமான நோக்கங்களைக் கொண்டு உள்ளது. தெற்காசிய நாடுகளில் உள்ள மக்களின் வாழ்க்கைத் தரத்தையும் நலத்தையும் உயர்த்துதல், இவர்களின் பொருளாதார வளர்ச்சியையும், சமூக முன்னேற்றத்தையும் பேணுதல், கலாச்சாரப் பாதுகாப்புக்கு ஊக்கம் அளித்தல் ஆகியவையாகும். மேலும், தெற்காசிய நாடுகளுக்கிடையே கூட்டுத் தன்மையை வளர்த்தல், பரஸ்பர நம்பிக்கையை வளர்த்தல், ஒருவரை ஒருவர் நன்கு புரிந்து கொள்ளுதல் ஆகியவையாகும். இறுதியாக பிற வளரும் நாடுகளுடன் ஒத்துழைத்தல், அந்த நாடுகளுடன் பொருளாதார, சமூக, கலாச்சாரம், அறிவியல், தொழில்நுட்பம் ஆகிய துறைகளில் ஒத்துழைத்தல், சர்வதேச அரங்குகளில் பொது நலன்களைப் பாதுகாத்துக் கொள்ள ஒருமித்து செயல்படல், பிற வளரும் நாடுகளும் முன்னேற ஒத்துழைத்தல் ஆகியவையாகும்.

மொத்தத்தில் தெற்காசிய நாட்டு மக்களின் பொதுவான பிரச்சனைகள், நலன்கள், எதிர்பார்ப்புகள் ஆகியவற்றை உணர்ந்து அரசியல் பொருளியல் மற்றும் பண்பாட்டுக் கூறுகளின் அடிப்படையில் கூட்டு முயற்சியில் ஈடுபடவேண்டும் என்பதே சார்க்கின் நோக்கமாகும்.

**முதலாவது சார்க் உச்சி மாநாடு : 1985**

சார்க்கின் முதலாவது உச்சி மாநாடு டாக்காவில் **1995**, டிசம்பர் **7**, **8** ஆகிய தேதிகளில் பங்களாதேஷ் அதிபர் எர்ஷாத் தலைமயில் நடைபெற்றது. இந்தியப் பிரதமர் ராஜுவ் காந்தி கலந்துகொண்டார். ராஜுவ்காந்தி தனது உரையில் சார்க் நாடுகளுக்கு இடையே போர் புரிவதில்லை. என்ற ஒப்பந்தம் செய்துகொள்ளப்பட்ட வேண்டும் என்றும், இரு நாடுகளுக்கிடையே உள்ள தனிப்பட்ட பிரச்சனைகளை சார்க் மாநாட்டில் எழுப்பக் கூடாது என்றும் வலியுறுத்தினார்.

**இரண்டாவது சார்க் உச்சி மாநாடு : 1986**

சார்க்கின் இரண்டாவது உச்சி மாநாடு **1986** நவம்பர் **17**, **18** ஆகிய தேதிகளில் புது டில்லியில் பிரதமர் ராஜுவ் காந்தியின் தலைமையில் நடைபெற்றது. இந்த மாநாட்டில் சார்க் திட்டங்களை ஒன்றுபடுத்தி செயல்படுத்துவதற்கு ஒரு நிரந்தரச் செயலகம் ஒன்றை காத்மண்டில் நிறுவ முடிவு செய்யப்பட்டது. அது **1987**, ஜனவரியில் செயல்படத் தொடங்கியது. பங்களாதேஷ் நாட்டைச் சேர்ந்த அபுல் அஷன் என்பவர் அதன் முதல் செயலாளராகப் பொறுப்பேற்றுக்கொண்டார். மேலும், இந்த மாநாட்டில் சார்க் மாநாடுகளுக்கிடையே சுற்றுலாவை வளர்த்தல், போதைப் பொருள் வர்த்தகத்துக்கு முடிவு கட்டுதல், ஆவணக் காப்பகம் ஒன்றை அமைத்தல், அமைதி, கூட்டுறவு மற்றும் சர்வதேச சட்டங்களைப் பின்பற்றுவதற்கான சூழ்நிலையை உருவாக்குதல், உறுப்பு நாடுகளின் பகுதிகளை பயங்கரவாதிகள் பயப்டுத்துவதைத் தடுத்தல் போன்ற முக்கியமான முடிவுகள் எடுக்கப்பட்டன.

**1987–**ஆம் ஆண்டு ஜுன் மாதம் **16**, **17** தேதிகளில் சார்க்கின் நிலைக்குழு புது டில்லியில் கூடி பயங்கரவாதத்தை ஒழிப்பதற்கான செயல்திட்டத்தைத் தீட்டியது. **1987**, ஜுன் **19–**ல் தெற்காசிய நாடுகளின் வெளிஉறவு அமைச்சர்கள் கலந்துகொண்ட கூட்டத்தை துவக்கி வைத்து உரையாற்றிய ராஜுவ் காந்தி 'சார்க் அமைப்பு நமது குறிப்பிட்ட தேவைகளையும் முன்னுரிமைகளையும் தனித்தன்மைகளையும் பிரதிபலிக்கிறது' என்று குறிப்பிட்டார். சார்க்கின் சாதனைகளை விரிவுபடுத்த வலுப்படுத்த வேண்டியதன் தேவையை அடிக்கோடிட்டுக் காட்டினார்.

**மூன்றாவது சார்க் உச்சி மாநாடு : 1987**

மூன்றாவது சார்க் உச்சி மாநாடு, காத்மண்டில் நேபாள மன்னர் தலைமையில் **1987–**நவம்பர் மாதம் நடைபெற்றது. இந்த மாநாட்டின் வெற்றிக்கும் இந்திய முக்கிய

பங்காற்றியது. பங்களாதேஷ் இந்த மாநாட்டில் கொண்டு வந்த இயற்கை சீற்றத்தினால் ஏற்படும் அழிவுகள் மூலம் உண்டாகும் பிரச்சனைகளைத் தீர்க்க 'இமாலயன் நீர் வளர்ச்சி கார்ப்பரேஷன்' அமைக்கும் தீர்மானத்தை இந்தியா ஆதரித்தது.

**நான்காவது உச்சி மாநாட்டில் இந்தியா : 1988**

சார்க் நாடுகளின் நான்காவது உச்சி மாநாடு **1988** டிசம்பர் **29–ல்** இஸ்லாமாபாத்தில் பாகிஸ்தான் பிரதமர் பெனாசிர் பூட்டோவின் தலைமையில் நடைபெற்றது. இதில் இந்தியப் பிரதமர் ராஜுவ் காந்தி கலந்து கொண்டு எழுச்சியுறையாற்றினார். சார்க் நாடுகள் மேலும் முளைப்புடன் செயல்பட வேண்டும் என்று வலியுறுத்தினார். மேலும், வர்த்தக விரிவாக்கம் சுற்றுச்சூழல் பாதுகாப்பு வளர்ச்சித் திட்டங்களில் மக்களின் பங்கேற்பு போன்ற கருத்துக்களை வலியுறுத்தனார். இந்த மாநாட்டில் போதைப் பொருள் தடுப்பு பற்றிய தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. ராஜுவ்காந்தியின் ஆட்சிக் காலத்தில் சார்க் அமைப்பின் வளர்ச்சியில் இந்தியா ஆக்கப்பூர்வமான பெருமைக்குரிய பணியாற்றியது.

**சார்க்கின் பிற உச்சி மாநாடுகள்**

தெற்காசிய நாடுகளின் பிராந்தியக் கூட்டமைப்பின் ஐந்தாவது உச்சி மாநாடு **1989–ல்** மாலியில் அப்துல் கையூம் தலைமையில் நடைபெற்றது. இதில் இந்தியப் பிரதமர் இந்தியாவின் சார்பில் பிரதமர் வி.பி.சிங் கலந்து கொண்டார். இந்த மாநாட்டில் சார்க் விளையாட்டுப் போட்டிகள் நடத்த முடிவு செய்யப்பட்டது. **1990–ல்** சார்க்கின் ஆறாவது உச்சி மாநாடு கொழும்பில் பிரேமதாசாவின் தலைமையில் நடைபெற்றது. இதில் பொருளியல் ஒத்துழைப்புத் திட்டங்கள் தீட்டப்பட்டன. ஏழவாது மாநாடு **1993–ல்** டாக்காவில் ஷேக்ஹசினாவின் தலைமையில் நடைபெற்றது. எட்டாவது மாநாடு **1995–ல்** டில்லியில் பிரதமர் நரசிம்மராவின் தலைமையில் நடைபெற்றது. இதில் தெற்காசிய நாடுகளிடையே வாணிப சிறப்புச் சலுகைகள் வழங்கப்பட்டன. **1997–ல்** ஒன்பதாவது உச்சி மாநாடு மாலியில் அப்துல் கையூம் தலைமையில் நடைபெற்றது. பத்தாவது மாநாடு **1998–ல்** அதிபர் சந்திரிகாவின் தலைமையில் கொழும்புவில் நடைபெற்றற. பதினோராவது சார்க் மாநாடு **2002**, ஜனவரி நான்காம் தேதி முதல் ஏழாம் தேதி வரை நோபாளத்தின் தலைநகர் காத்மண்டுவில் நோாாளப் பிரதமர் ஷெர்பகதூர் துபேயின் தலைமையில் நடைபெற்றது.

இவ்வாறு தெற்காசிய நாடுகளின் ஒத்துழைப்புக்கான பிராந்தியக் கூட்டமைப்பு இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ், நேபாளம், பூடான், மாலத் தீவுகள் ஆகிய நாடுகளுக்கிடையே சமுதாய, பொருளாதார, கலாச்சாரத் துறைகளில் ஒத்துழைப்பை ஏற்படுத்த முயன்று வருகிறது. ஆனால், பெரிய சாதனைகள் எதையும் புரிந்ததாகத் தெரியவில்லை. காரணம், உறுப்பு நாடுகளுக்கு இடையே காணப்படும் அரசியல் வேறுபாடுகளேயாகும். பாகிஸ்தான் இந்தியாவிலுள்ள காஷ்மீரிலும் பஞ்சாபிலும் பயங்கரவாதத்தை ஊக்குவித்து வருகிறது. இந்தியாவுக்கும் பங்களாதேஷுக்குமிடையே ஆற்று நீர் பங்கீட்டுபூ பிரச்சனை உள்ளது– இலங்கையுடனும் சுமூகமான உறவு இல்லை. மேலும் இந்தியா இந்த சார்க் அமைப்பை பயன்படுத்தி தெற்கு ஆசியாவை தனது செல்வாக்கு மண்டலமாக மாற்ற முயற்சி செய்து வருகிறது என்ற குற்றச்சாட்டும் உள்ளது. ஆனாலும், தெற்கு ஆசிய பிராந்திய நாடுகளுக்குகுள ஒற்றுமையையும், பரஸ்பர நம்பிக்கையையும் அதிகரிக்க சார்க் தொடர்ந்து முயற்சி செய்து வருகிறது என்பதில் ஐயமில்லை.

## வளைகுடாப் போர்
### (Gulf War)

உலகில் எத்தனையோ வளைகுடாக்கள் இருக்கின்றன. ஆனால், இன்று வளைகுடா என்றால் அது பாரசீக வளைகுடாவையே குறிப்பிடும் அளவிற்கு உலகப் புகழ்பெற்று விளங்குகிறது.

இவ்வளவிற்கும் பாரசீக வளைகுடாப் பகுதி வளமாக நிலமோ நல்ல மழைப்பொழிவோ கொண்ட பூமி அன்று. உலகின் வறண்ட பகுதிகளுள் அதுவும் ஒன்று. வெப்பப் பாலைவன தட்பவெப்ப நிலையைக் கொண்டது. ஆனால், இன்று உலகிலேயே மிகவும் வளங்கொழிக்கும் பூமியாகக் கருதப்படுகிறது. அதற்குக் காரணம், கருப்புத் தங்கம் எனப்படும் பெட்ரோலியம் அங்கு மிகதியாகக் கிடைப்பதுதான். உலகில் எண்ணெய் வளத்தின் 60 சதவிகிதம் இந்த வளைகுடாப் பகுதியில்தான் புதைந்து கிடக்கிறது. அந்த வளத்தின் அடிப்படை மீதுதான் மேற்கு நாடுகளின் தொழில் வளர்ச்சியும் நாகரீக முதிர்ச்சியும் அறிவியல் மலர்ச்சியும் கட்டப்பட்டிருக்கின்றன. எனவே, அப்பகுதி வல்லரசுகளின் கவனத்தைக் கவர்ந்ததில் வியப்பில்லை. அங்கு நிகழும் சிறு அரசியல் மாறுதல்கள் கூட, உலக நாடுகளின் கவனத்தை உடனே கவர்கிறது.

**வளைகுடாப் பகுதியிலுள்ள நாடுகள் :**

1. **சௌதி அரேபியா :** வளைகுடாப் பகுதியில் உள்ள முக்கியமான நாடு. ஆண்டிற்கு 33,500 மில்லியன் டாலருக்கு மேல் வருமானம் வரக்கூடிய எண்ணெய் வளம் கொண்டது.

2. **குவைத் :** எண்ணெய் வளத்திலிருந்து ஆண்டுதோறும் 8,500 மில்லியன் வருமானம் பெறுகிறது.

3. **ஈராக் :** ஆண்டிற்கு 22,000 மில்லியன் டாலர் வருமானம்.

4. **ஈரான் :** வளைகுடாப் பகுதியில் மக்கள் தொகை மிகுதியான நாடு. ஆண்டிற்கு 8,500 மில்லியன் டாலர் எண்ணெய் வருமானம் கிடைக்கிறது.

5. **ஐக்கிய அரபு எமிரேட் :** அபுதாபி, துபாய், சார்ஜா போன்ற ஏழு ஷேக்குகள் ஆட்சிப் பகுதிகளைக் கொண்ட நாடு. இங்கு ஆண்டிற்கு 7,000 மில்லியன் டாலர் வருமானம் கிடைக்கிறது.

**எண்ணெய் ராஜதந்திரம் :**

இந்த எண்ணெய் வளம் வளைகுடா நாடுகளின் பொருளியல் வளர்ச்சிக்கு மட்டுமில்லாது, அரசியல் எழுச்சிக்கும் அடிப்படையாக உள்ளது. இந்த அரிதான எண்ணெய் வளத்தை அபூர்வ கருவியாகப் பயன்படுத்தி அரசியல் ஆதாயம் பெற முயன்றன. எண்ணெய் அரசியல் வெல்திறன் கருவியாக அரசுகளின் ராஜதந்திர விளையாட்டுகளில் சக்தி வாய்ந்த சதுரங்கக் காயாகப் பயன்பட்டது. சான்றாக, அரபு நாடுகளுக்கும் இஸ்ரேலுக்குமிடையில் நடைபெற்ற சச்சரவின்போது, நாடுகளின் ஆதரவைப் பெறுவதற்கு எண்ணெய் ஒரு சாதனமாகப் பயன்படுத்தின. இஸ்ரேலை ஆதரித்த மேற்கு நாடுகளுக்கு நெருக்கடி நிர்ப்பந்தங்களை ஏற்படுத்த எண்ணெயைப் பயன்படுத்தினர். எண்ணெய் ஏற்றுமதியை முழுவதும் தடைசெய்தும், விலையைக் கூட்டியும் நிர்ப்பந்தங்கள் மூலம் தங்களை ஆதரிக்குமாறு செய்தன.

## வளைகுடா நெருக்கடி (1990 – '91)

**குவைத்தின் முன்வரலாறு :**

அண்மையில் வளைகுடாவில் ஏற்பட்ட போருக்கும் இந்த எண்ணெய் வளம்தான் அடிப்படைக் காரணம். பத்தொன்பதாம் நூற்றாண்டு வரை இன்றைய குவைத்தும் ஈராக்கும் உதுமானியப் பேரரசின் மாநிலங்களாயிருந்தன. குவைத், பாங்கரா மாநிலத்தின் (தற்பொழுது ஈராக்கில் உள்ளது) ஒரு பகுதியாக இருந்தது. பத்தொன்பதாம் நூற்றாண்டில் உதுமானியத் துருக்கியப் பேரரசு வலுவிழுந்து ஐரோப்பிய நோயாளியாக இருந்தது. தொலைதூரத்தில் இருநூத குவைத் சிபா மரபைச் சேர்ந்த ஷேக் தலைமையில் சுதந்திர நாடானது. எனினும், துருக்கியின் தாக்குதலுக்கு அஞ்சி, 1921–ல் பிரிட்டிஷ் பாதுகாப்பு நாடாக மாறியது. முதல் உலகப் போரில் படுதோல்வியுற்ற துருக்கி, லாசேன் உடன்படிக்கைகளின்படி குவைத் சுதந்திர நாடென அங்கீகரிக்கப்பட்டது. ஈராக் (பாங்கரா மோசூல், பாக்தாத் மாநிலங்கள் அடங்கிய பகுதிகள்) பிரிட்டிஷ் மாண்டேட் பகுதியாகியது. 1923–ல் ஈராக், குவைத் எல்லைகள் வரையறுக்கப்பட்டன.

**ஈராக்–குவைத் பிரச்சனைகள் :**

ஈராக் பிரிட்டிஷ் மாண்டேட் பகுதியாகவும், குவைத் பிரிட்டிஷ் காப்பரசாகவும் இருந்தவரை இரு நாடுகளுக்குமிடையில் பிரச்சனை எழாதிருந்தது. **1932–ல்** ஈராக் பிரிட்டிண் மாண்டேட் ஆட்சியிலிருந்து விடுபட்டு சுதந்திர நாடானது. உடனே அது குவைத்திற்கு உரிமை கொண்டாடியது. எனினும், குவைத் பிரிட்டிஷ் காப்பரசாக இருந்ததால், ஈராக் எதுவும் செய்ய இயலவில்லை.

**1961–ல்** குவைத் மீதான காப்பரசுக் கட்டுப்பாட்டை பிரிட்டன் கைவிட்டது. குவைத் சுதந்திர நாடானது. எனினும், பிரிட்டனுடன் பாதுகாப்பு ஒப்பந்தம் செய்து கொண்டது. இப்போது ஈராக் மீண்டும் குவைத் மீது உரிமை கொண்டாடியது. ஆனால், குவைத் சுதந்திரத்தைப் பிற அரபு நாடுகள் அங்கீகரித்தன. **1963–ல்** ஈராக்கில் ஆட்சியைக் கைப்பற்றிய புதிய அரசு, குவைத்தின் சுதந்திரத்தை அங்கீகரித்தது. ஐ.நா. சபையிலும் உறுப்பினரானது. எண்ணெய் வளம் காரணமாக **1981–ல்** உலகிலே அதிக தனிநபர் வருமானம் கொண்ட நாடாக **(GNP 15,950 பவுன்)** விளங்கியது. குவைத்தன் எண்ணெய்வளம் ஈராக்கின் பேராசைக் கண்களை அகல விரியச் செய்தது. அதன் பாதுகாப்பற்ற நிலை, ஆக்கிரமிப்பு எண்ணத்தைத் தூண்டியது. எனவே, **1973–ல்** ஈராக் இராணுவம் குவைத்தின் எல்லைப் பகுதிகள் சிலவற்றைக் கைப்பற்றியது. ஆனால், அரபு நாடுகள் எதிர்ப்பு காரணமாக அப்படைகள் பின்வாங்கின. அதன்பின் **1980–ல்** ஈராக்–ஈரான் போர் தொடங்கியதால் குவைத்திற்கு ஈராக் பற்றிய அச்சம் தற்காலிகமாக நீங்கியது. போர்க் காலத்தில் குவைத் ஈராக்கை ஆதரித்ததோடு, அந்நாட்டிற்கு முப்பதினாயிரம் கோடி ரூபாய்க்கு மேல் கடனுதவியும் செய்தது.

**ஈராக்கின் ஆக்கிரமிப்பு :**

**1988–ல்** ஈரான்–ஈராக் போர் முடிவுற்றது. இந்த எட்டாண்டுப் போரில் ஈராக் எவ்வித ஆதாயத்தையும் பெறவில்லை. அழிவையும் பெரும் கடன் பளுவையுமே பெற்றது. சீரழிந்த பொருளாதாரத்தைச் சீரமைக்க, புதிய வருவாய் வளங்கள் தேவைப்பட்டன. எனவே, ஈராக்கின் கண் குவைத் மீது திரும்பியது. அதற்கு வேறு பல காரணங்களும் இருந்தன.

ஈராக் அதிபர் சதாம் ஹுசைன், அரபு நாடுகளின் தலைவராகத் திகழ விரும்பினார். படை வலிமையை அதிகரிக்க, ரணியாவிலிருந்து நவீன போர்க் கருவிகளை வாங்கினார். உலகிலேயே நாலாவது பெரிய இராணுவத்தைக் கொண்ட நாடு என்று கூறக்கூடிய வகையில் ஈராக்கின் படைபலம் பெருகியது.

இரண்டாவதாக, குவைத்தின் சுதந்திரத்தை தொடக்க முதலே ஈராக் எதிர்த்து வந்ததை தமக்குச் சாதகமாக ஆக்கிக் கொண்டார். முந்தய நூற்றாண்டு வரை ஈராக்கின் மாநிலமாக இருந்த குவைத்தை மீண்டும் இணைத்துக் கொள்வதில் தவறேதும் இருக்க முடியாது என தமக்குத்தாமே சமாதானம் கூறிக்கொண்டார்.

மூன்றாவதாக, குவைத் மற்றும் ஐக்கிய அரபு எமிரேட் நாடுகள் தங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள அளவைவிட அதிக எண்ணெய் உற்பத்தி செய்ததால் எண்ணெய் விலையில் வீழ்ச்சி ஏற்பட்டது. இதனால் ஈராக் பாதிக்கப்பட்டது. மற்றும் பெட்ரோலிய ஏற்றுமதி செய்யும்

நாடுகளின் நிறுவனக் **(OPEC)** கூட்டத்தில் பெட்ரோலய விலையை அதிகரிக்க வேண்டுமென்று ஈராக் கூறியபோது குவைத் அதனை எதிர்த்தது.

நான்காவதாக, ஈராக்கியற்குச் சொந்தமான ருமைலா எண்ணெய்க் கிணற்றின் தெற்கில் குவைத் திருட்டுத்தனமாக இதுவரை ரூ.4,500/– கோடி மதிப்புள்ள எண்ணெயை எடுத்துள்ளதாகக் குற்றம் சாட்டி, அந்நாட்டின் எல்லையில் படைகளை நிறுத்தியது. உடனே குவைத்தைப் பாதுகாக்க, அமெரிக்க கப்பற்படைகள் பாரசீக வளைகுடாவிற்குச் சென்றன. இதனால் பதட்ட நிலை தோன்றியது.

இறுதியாக, பதட்ட நிலையைத் தணிக்க இரு நாட்டுப் பிரதிநிதிகளும் **1990** ஜூலையில் ஜெட்டாவில் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டனர். ஈராக் தனது ரூமைலா எண்ணெய்க் கிணற்றிலிருந்து முறைகேடாக எடுத்த எண்ணெய்க்கு இழப்பீடு தரவேண்டுமென்றும், போரின் போது குவைத்திடமிருந்து கடனாகப் பெற்றத் தொகையைத் தள்ளுபடி செய்யவேண்டுமென்றும் கோரியது. இதற்கு இணங்கிய குவைத், ஈராக்கை தன்னுடன் ஒரு அமைதி உடன்படிக்கையில் கையெழுத்திட வேண்டுமென்று கேட்டுக் கொண்டது. இதனை ஈராக் மறுத்ததால், பேச்சுவார்த்தை தோல்வியடைந்தது. எனவே, **1990–**ல் ஈராக் படைகள் குவைத்தை ஆக்கிரமித்தன. குவைத், இனி ஈராக்கின் **19–**ஆவது மாநிலம் என அறிவிக்கப்பட்டது.

மேலே கூறியவற்றிலிருந்து ஈராக்கின் நிதி நெருக்கடியும், பொருளாதாரப் பேராசையும், ஆதிக்க வெறியும்தான் குவைத் ஆக்கிரமிப்பிற்கு உண்மையான காரணங்கள் என்பது புலனாகின்றனது.

**ஐ.நா. நடவடிக்கை :**

உடனே இந்த ஆக்கிரமிப்பு ஐ.நா. பாதுகாப்புச் சபைக்கு எடுத்துச் செல்லப்பட்டது. போரை நிறுத்தி, படைகளைத் திரும்பப் பெற்றுக் கொள்ளுமாறு, பாதுகாப்புச் சபை கேட்டுக் கொண்டது. ஆனால், சதாம் ஹுசைன் அதனைப் புறக்கணித்தார். தாம் குவைத்திலிருந்து படைகளைத் திரும்பப் பெறவேண்டுமென்றால், மேற்கு ஆசியாவிலுள்ள அனைத்து ஆக்கிரமிப்புகளும் இஸ்ரேலின் ஆக்கிரமிப்பு உட்பட திரும்பப் பெறப்படவேண்டும் என்று நிபந்தனை விதித்தார். மேலும், குவைத் ஆக்கிரமிப்பு அல்ல. அது ஒரு அணைப்பு. அதன் மூலம் அது ஈராக்கின் மாநிலமாகிவிட்டது. இதை ஒரு போதும் மாற்ற முடியாது என உறுதியாக அறிவித்துவிட்டார்.

எனவே, ஐ.நா. சபை ஈராக் மீது பொருளாதார முற்றுகை விதித்தது. ஈராக்கின் எண்ணெய் ஏற்றுமதி, தடை செய்யப்பட்டது. இந்தப் பொருளாதார முற்றுகையைச் செயல்படுத்த, அமெரிக்கா தலைமையில் பன்னாட்டுப் படையொன்று சௌதி அரேபியாவிற்கு அனுப்பப்பட்டது. பொருளாதார முற்றுகை, சதாம் ஹுசைனின் உறுதியைத் தளர்த்த இயலவில்லை. எனவே, **1991** ஜனவரி **15–**ஆம் நாள் வரை இறுதிக்கெடு விதிக்கப்பட்டது. அதற்குள் குவைத்தை ஆக்கிரமித்த ஈராக் படைகள் திரும்பப் பெறாவிட்டால், உறுப்பு நாடுகள் படைபலம் கொண்டு ஆக்கிரமிப்பை அகற்ற அனுமதிக்கப்பட்டது. எனவே, அமெரிக்கா தலைமையில் 28 நாடுகளின் படைகள் அணி திரண்டன. இதில் பிரிட்டன், பிரான்ஸ் போன்ற மேற்கு நாடுகளின் படைகளும், சிரியா, எகிப்து போன்ற அரபு நாடுகளின் படைகளும் இருந்தன.

**ஈராக் போர் :**

**1991** ஜனவரி **15–**ஆம் நாள் இறுதிக் கெடுவும் முடிந்தது. ஈராக் அசைந்து கொடுக்கவில்லை. எனவே, **17–**ஆம் நாள் அதிகாலையில் பன்னாட்டுப் படையினர் ஈராக் மீது ஆகாய விமானத் தாக்குதலைத் தொடர்ந்தனர். பன்னாட்டினரின் போர் நடவடிக்கைகள் **பாலைவனப் புயல் (Operation Desert Storm)** என அழைக்கப்பட்டது. ஈராக், ஸ்கட் (Scud) ஏவுகணைகளை இஸ்ரேல் மீதும், சௌதி அரேபியா மீதும் ஏவியது. உடனே அமெரிக்கா, ஸ்கட் ஏவுகணைகளை முறியடிக்க பேட்ரியாட் எதிர்ப்பு ஏவுகணைகளை இஸ்ரேலுக்கும் அரேபியாவிற்கும் வழங்கியது. ஆகாய விமானத் தாக்குதல் ஈராக்கில் கடுமையான சேதங்களை ஏற்படுத்தயது. எனினும், சதாம் ஹுசைன் தளவில்லை. அவர் சில எதிர்பார்ப்புகளில் நம்பிக்கை கொண்டிருந்தார்.

இஸ்ரேல் மீது தாக்குதல் தொடங்கினால், அந்நாடும் போரில் குதிக்கும். இததனைப் பன்னாட்டுப் படைகளிலுள்ள அரபு நாட்டினர் விரும்பமாட்டார்கள். பன்னாட்டுக் கூட்டணியில் பிளவு ஏற்பட்டுவிடும்.

அமெரிக்கர் விட்நாம் போரில் அடைந்த தோல்வி, ஹுசைனுக்கு நம்பிக்கை அளித்தது. அமெரிக்கரின் அதிநவீன படைநுட்ப வலிமையைக் குறைத்து மதிப்பிட்டார்.

பாலஸ்தீன அரேபியரின் தாயகக் கோரிக்கையை ஆதரிப்பதன் மூலம், அவர்களது ஆதரவு கிடைக்கும்.

இஸ்லாம் சமயக் காவலனாகத் தன்னைக் காண்பித்து, இஸ்லாமிய நாடுகளின் சமய உணர்வுகளைத் தூண்டிவிடலாம்.

தரைப்போரில் தனது **1,50,000** வீரர்களைக் கொண்ட குடியரசுப் படையின் சாதாரண ஆற்றலில் அபார நம்பிக்கை கொண்டிருந்தார்.

இறுதியாக, தரைச் சண்டையில் **6,000** அமெரிக்க வீரர்களை கொன்றுவிட்டால் போதும், அமெரிக்காவில் போர் எதிர்ப்பு குரலொளி போர் முயற்சிகளை நிலைகுலையச் செய்துவிடும். சமாதானத்தற்குக் கெஞ்சுவார்கள்.

சதாம் ஹுசைன் எதிர்பார்ப்புகள் எதுவும் நடக்கவில்லை. எனினும், பன்னாட்டுப் படைகளின் **40** நாள் தாக்குதல்களை தாக்குப்பிடித்ததன் மூலம், ஹுசைன் மாபெரும் படைத் தலைவராகப் போற்றப்பட்டார்.

பிப்ரவரி **24–**ல் தரைப்படைத் தாக்குதல் தொடங்கப்பட்டது. எல்லா முனைகளிலும் பன்னாட்டுப் படையினர் முன்னேறினர். ஈராக் படை வீரர்கள் பல்லாயிரக்கணக்கில் சரணடைந்தனர். தரைப் போர் தொடங்கி **100** மணி நேரத்திற்குள் சதாம் போரை நிறுத்தி, படைவீரர்கள் பின்வாங்குமாறு ஆணையிட்டார். பிப்ரவரி **28–**ல் குவைத்தை விட்டு வெளியேறிவிடுவதாக அறிவித்தார்.

**போரின் விளைவுகள் :**

நாற்பது நாள் போர், ஈராக்கை சுடுகாடாக்கிவிட்டது. கட்டிடங்கள், அலுவலகங்கள், பாலங்கள், சாலைகள், ஆலைகள் நொறுக்கப்பட்டன. 20,000 ஈராக்கியர் கொல்லப்பட்டனர். 60,000 பேர் காயப்படுத்தப்பட்டனர். ஆற்றல்மிகு குடியரசுப்படை இருந்த இடம் தெரியாமல் போய்விட்டது. பதுங்குகுழிகளில் பதுங்கிய 300 பெண்களும் குழந்தைகளும் கொல்லப்பட்டனர். 1,20,000 கோடி டாலர் மதிப்புள்ள கட்டிடங்கள் நாசமாக்கப்பட்டன.

ஈராக் அதிபர் சதாம்ஹுசைனை பதவியிலிருந்து அகற்ற முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. உள்நாட்டில் குர்டிஸ் இன மக்கள் புரட்சிக் கொடி தூக்கினர்.

ஈராக்கின் படை வலிமையைச் சிதைக்கத் திட்டமிட்ட முயற்சி மேற்கொள்ளப்பட்டது.

ஈராக் தன் பங்கிற்கு குவைத் எண்ணெய்க் கிணறுகளுக்கு தீயிட்டது. சுமார் 400 கிணறுகள் நெருப்பு பிளம்பாகக் காட்சியளித்தன. இது காற்று மண்டலத்தை விஷமாக்கியது.

இப்போர் அமெரிக்க அதிபர் ஜார்ஜ் புஷ்ஷுக்கு தனிப்பட்ட வெற்றி. அடுத்த அதிபர் தேர்தலில் அவரது வெற்றி அப்போதே உறுதி செய்யப்பட்டது.

ஐ.நா. சபை அமெரிக்க கைப்பாவையாக இயங்குவது போல் தெரிந்தது. ரஷியாவும் சீனாவும்கூட அமெரிக்கத் தீர்மானங்களுக்கு ஆதரவளித்தன. ரஷியா தனது உள்நாட்டுப் பிரச்சனையில் தீவிரமாக ஈடுபட்டுக் கொண்டிருந்ததால், ஈராக் போரில் உறுதியான பங்கு பெற இயலவில்லை.

இறுதியாக, இப்போர் இஸ்ரேல் ஆக்கிரமிப்பு உள்ளிட்ட மேற்கு ஆசியப் பிரச்சனை அனைத்திற்கும் உடனடித் தீர்வு காணவேண்டியது அவசியம் என்பதை அமெரிக்காவிற்கு உணர்த்தியது. எனவே, அமெரிக்கா தற்போது அச்சிக்கலுக்குத் தீர்வுகாண ஆக்கப்பூர்வமான வழிவகைகளை ஆராய்ந்து வருகிறது.

## அரபு நாடுகளின் எண்ணெய் வெல்திறன் (Oil Diplomacy)

**முன்னுரை :**

பிற நாடுகளைத் தங்கள் கருத்துக்கு இணங்க வைக்கவும், தங்களுக்குச் சாதகமாக நடக்கச் செய்யவும், பல ராஜதந்திர வழிமுறைகள் பின்பற்றப்பட்டு வருகின்றன. அரசியல் தூது, பேச்சுவார்த்தைகள், மாநாடுகள் ஆகியவை தவிர, சில மறைமுக நிர்ப்பந்தங்களும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. படை உதவி, நிதி உதவி ஆகியவை அரசியல் வெல்திறன் கருவிகளாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. அமெரிக்கா, இலத்தீன் அமெரிக்க நாடுகளைத் தன் கருத்திற்கு இணங்கச் செய்ய ‘டாலரை’ ஒரு ராஜதந்திரக் கருவியாகப் பயன்படுத்தி வருகிறது. பாகிஸ்தான் போன்ற நாடுகளுக்குப் படை உதவியை ஒரு கருவியாகப் பயன்படுத்தி வருகிறது. அதுபோல் மத்தியக்கிழக்கு அரபு நாடுகள் எண்ணெயை (பெட்ரோலியத்தை) ஒரு அரசியல் வெல்திறன் கருவியாக வெற்றிகரமாகப் பயன்படுத்தி வருகின்றன.

**எண்ணெயின் இன்றியமையாமை :**

எண்ணெய் இன்று தொழில் வளர்ச்சி, போக்குவரவு சாதனங்களின் இயக்கம், போர்க்கருவிகளின் இயக்கம், அறிவியல் தொழில்நுட்பம் ஆகியவற்றிற்கு இன்றியமையாப் பொருளாகிவிட்டது. நாகரீக வளர்ச்சிக்கும் வாழ்க்கைக்கும், எண்ணெய் அடிப்படைத் தேவையாகிவிட்டது. வாகனங்களை இயக்கும் சக்தியாக பயன்படுத்தப்படுவதால், போர்க்கள வெற்றிக்கும் உறுதுணையாகிவிட்டது. இரண்டாம் உலப் போரின்போது, அச்சு நாடுகளின் தோல்விக்கு முக்கியக் காரணங்களில் ஒன்று எண்ணெய்ப் பற்றாக்குறையாகும். ஜெர்மனி, ரஷ்யா மீது படையெடுத்ததற்கும், அதன் எண்ணெய் வளம் முக்கிய தூண்டுகோலாய் இருந்தது. மதிப்புள்ள இப்பொருள் '**கருப்புத் தங்கம்**' எனப்படுகிறது. இது உலகின் எல்லாப் பகுதிகளிலும் கிடைப்பதில்லை. குறிப்பாக, மேற்கு ஐரோப்பாவில் உள்ள பிரிட்டன், ஜெர்மனி மற்றும் ஜப்பான் போன்ற தொழில் வளர்ச்சி, நாகரீக சிறப்புமிக்க நாடுகளில் எண்ணெய் செல்வம் பற்றாக்குறையாக உள்ளது. ஆனால், மத்திய கிழக்கு நாடுகள், இரஷ்யா, அமெரிக்கா, வெனிசூலா ஆகிய நாடுகள் இயற்கையிலேயே இவ்வளத்தை மிகுதியாகக் கொண்டுள்ளன. குறிப்பாக, மத்தியக்கிழக்கு நாடுகளனான சௌதி அரேபியா, ஈரான், ஈராக், குவைத் ஆகிய நாடுகளில் உலகின் மூன்றிலிரு பங்கு எண்ணெய் இருப்புகள் உள்ளன. எனவே, வல்லரசுகளின் கழுகுப் பார்வை அப்பிரதேசங்களை வட்டமிடத் தொடங்கியது.

அமெரிக்காவில் எண்ணெய் வளம் கணிசமாக இருந்த போதிலும், அதன் உபயோகம் அங்கு உற்பத்தியைவிட அதிகமாயிருக்கிறது. மேலும், எண்ணெய் இருப்புக்கள் குறைந்து கொண்டேவரும் தன்மை உடையவை. லாரன்ஸ் டின்னி என்பார் ''எண்ணெய்க்காக நாம் போராடுகிறோம்'' என்ற நூலில் அமெரிக்காவில் இருக்கும் எண்ணெய் வளங்கள் 75 ஆண்டுகள் வரையில்தான் நீடிக்கும் என்ற குறிப்பிட்டுள்ளார். ஒலக்காரோ என்ற மற்றொரு ஆசிரியர், மிக அண்மைக் காலத்தில் ரஷ்யா நீங்கலாக பிற உலக நாடுகள் தங்கள் எண்ணெய்த் தேவைக்குப் பாரசீக வளைகுடாவை நம்பியிருக்க வேண்டியிருக்கும் என எச்சரித்துள்ளார். எனவே, நாடுகளின் கொள்கையை உருவாக்கும் கூறுகளுள் ஒன்றாக மத்தியக் கிழக்கு எண்ணெய் திகழ்கிறது என்று எஸ்.என்.தார் சரியாகக் கூறியுள்ளார்.

**மேற்கத்திய ஏகாதிபத்தியர்களின் மேலாதிக்கம் :**

முதல் உலகப் போருக்குப் பின், மத்திய கிழக்கில் மாண்டேட் என்ற புதிய வடிவில் பிரெஞ்சு – பிரிட்டிஷ் ஏகாதிபத்தியங்கள் நுழைந்தன. அச்சசமயத்தில்தான் அப்பகுதியின் எண்ணெய் வளம் தெரிய வந்தது. எனவே, அப்பகுதியில் தங்கள் ஆதிக்கத்தை மிக்க முன்னெச்சரிக்கையுடன் பாதுகாத்து வந்தனர். பிரிட்டனில் மாண்டேட் ஆட்சிப் பகுதியான ஈராக்கிற்கும், துருக்கிக்கும் மோசூல் என்ற இடம் குறித்து சச்சரவு ஏற்பட்டது. அவ்விடத்தில் எண்ணெய் கிடைத்தால், பிரிட்டன் அதனைத் தன் மேலாதிக்கத்தின் கீழ் வைப்பதில் கண்ணுங்கருத்துமாக இருந்தது.

எண்ணெய் வளமிக்க அரபு நாடுகளுக்கு, அதனைக் கொணர்ந்து ஏற்றுமதி செய்யும் தொழில்நுட்பத்திறன் இல்லாதிருந்தது ஒரு பெருங்குறையாக இருந்தது. தொடக்கத்தில் எண்ணெய்த் தொழிலில் பெருமளவு முதலீடு செய்யக்கூடிய அளவிற்கு பொருளியல் வளமும்

பெற்றிருக்கவில்லை. எனவே, அத்தொழில் பொறுப்புக்களை அமெரிக்கா, பிரிட்டிஷ், பிரெஞ்சுக் கம்பெனிகள் மேற்கொண்டன.

**1933**–ல் சௌதி அரேபியாவில் எண்ணெய் கண்டுபிடிக்கப்பட்டதும், ஒரு அமெரிக்கக் கம்பெனி பல சலுகைகளைப் பெற்று, எண்ணெய் எடுக்கும் உரிமையையும் பெற்றது.

அதேபோல் பாரசீகத்தில் ஆங்கிலோ–ஈரான் எண்ணெய் கம்பெனி பல சலுகைகளைப் பெற்றது. உண்மையில் இக்கம்பெனி அரசைவிட அதிக அதிகாரம் பெற்று வலுவுடன் விளங்கியது. இதன் தலைமையகம் இலண்டனில் இருந்தது.

பாரசீக வளைகுடாவில் உள்ள குவைத் போன்ற சிறு அரபு நாடுகளின் எண்ணெய் வளத்திலும் இவ்வாறு மேற்கு நாடுகளின் ஆதிக்கம் நிறுவப்பட்டது.

இரண்டாம் உலகப் போருக்குப் பின், இந்நாடுகளில் அரசியல் விழிப்புணர்ச்சி ஏற்பட்டது. மேற்கத்திய வல்லரசுகள் எவ்வாறு தங்கள் எண்ணெய் வளத்தை உறிஞ்சிக் குடிக்கின்றன என்பதைக் கண்டுகொண்டன. அந்த வளத்தை நல்கும் தங்கள் நாடுகள் வறுமையில் வாடுவதையும் உணர்ந்தன. எனவே அந்த எண்ணெய் வளத்தின் மீது தங்கள் ஆதிக்கத்தை நிலைநாட்டினால்தான் அரசியலில் முழு சுதந்திரத்தை அனுபவிக்க முடியும், பொருளியலில் முன்னேற்றத்தைக் காணமுடியும் என்று தீர்மானித்தன. ஆனால், மேற்கத்திய வல்லரசுகள் இந்தப் ‘பொன்முட்டையிடும் வாத்தை’ தங்கள் கண்போல் போற்றிக் காத்தன.

**எண்ணெயின் அரசியல் வெற்றிகள் :**

மேற்கு ஆசியாவில் உள்ள அரபுநாடுகளின் அரசியல் எதிரி இஸ்ரேல் நாடாகும். ஏற்கனவே தொழில்நுட்ப அறிவியல் துறையில் சிறந்து விளங்கிய இஸ்ரேல் நாட்டினர், அமெரிக்காவிடமிருந்து படை உதவி பெற்றுத் தங்கள் நாட்டை வலுப்படுத்தினர். எனவே, பரப்பிலும், மக்கள் தொகையிலும் மிகுந்திருந்த அரபுநாடுகளை அது எளிதில் தோற்கடித்தது. குறிப்பாக, **1967 – 1973**–ஆம் ஆண்டுப் போர்களில் இஸ்ரேல் மகத்தான வெற்றி பெற்றது. இவ்வெற்றிக்குப் பின்னணியாக அமெரிக்கா மற்றும் மேற்கு நாடுகளின் ஆதரவும், உதவியும் இருப்பதை அரபு நாடுகள் உணர்ந்தன. அந்த நாடுகளை படைபலம் மூலம் பணியவைக்க முடியாது என்றறிந்து, தங்களிடம் உள்ள சக்தி வாய்ந்த ஆயுதமான எண்ணெயைப் பயன்படுத்தத் துணிந்தனர்.

எண்ணெய் உற்பத்தி செய்து ஏற்றுமதி செய்யும் **13** நாடுகள் **1960**–ல் **பெட்ரோலி ஏற்றுமதி செய்யும் நாடுகளின் கழகத்தை (OPEG)** ஏற்படுத்தின. அதில் உள்ள **9** அரபு நாடுகள், தங்களுக்கென தனி கழகத்தை **1968**–ல் ஏற்படுத்தக்கொண்டு ஒருங்கிணைந்து செயல்பட முடிவு கட்டின. எண்ணெயை அரசியல் வெல்திறன் கருவியாக மாற்றி, மேற்கு நாடுகளைத் தங்கள் கருத்துக்கு இணங்க வைக்க முயன்றன.

**1973**–ல் நிகழ்ந்த அரபு – இஸ்ரேல் போரின்போது, அமெரிக்கா, நெதர்லாந்து, டென்மார்க், மேற்கு ஜெர்மனி, ஜப்பான் ஆகிய நாடுகள் இஸ்ரேலுக்கு ஆதரவளித்தன. உடனே அரபு நாடுகள் மீது எண்ணெய் ஏற்றுமதி தடையை விதித்தன. இத்தடையால் அமெரிக்கா பாதிக்கப்பட்டாலும், பிற சக்திச் சாதனங்கள் மூலம் நிலைமையச் சமாளித்துக்கொண்டது. ஆனால், பிற நாடுகள் பெரிதும் இடருற்றன. எனவே, அந்நாடுகள் ஒன்றன்பின் ஒன்றாக

இஸ்ரேல் ஆக்கிரமித்த பகுதிகளிலிருந்து வெளியேற வேண்டும் என்ற கருத்தை ஆதரித்தன. அதன் காரணமாக எண்ணெய்த் தடை நீக்கப்பட்டது.

இஸ்ரேல் ஆக்கிரமிப்பை அகற்றும் வரை, எண்ணெய் உற்பத்தியில் ஐந்து சதவிகிதத்தைக் குறைக்கவும் முடிவு கட்டின.

ஜெருசலேம் நகரை 1989 ஜூலையில் தனது தலைநகராக இஸ்ரேல் அறிவித்தமை, அரேபியர்களின் தேசிய சமய உணர்வுகளைப் புண்படுத்துவதைப் போலிருந்தது. எனவே, புதிய தலைநகருக்கு தங்கள் தூதரகங்களை மாற்றும் நாடுகளை அரபு நாடுகள் எச்சரித்தன. நெதர்லாந்து அரசு இந்த எச்சரிக்கையை அலட்சியம் செய்து, தனது தூதரகத்தை ஜெருசலேம் நகரில் அமைத்தது. எனவே, அந்நாட்டின் மீது எண்ணெய்த்தடை விதிக்கப்பட்டது. வேறு வழியின்றி நெதர்லாந்து பணிந்தது.

அரபு நாடுகள், எண்ணெய் மூலம் மேற்கு நாடுகள் மீது சுமத்திய நிர்ப்பந்த வழிமுறைகளுள் விலை உயர்த்துதலும் ஒன்றாகும். முதலில் 1974 ஜனவரியில் சுத்தம் செய்யப்படாத ஒரு பீப்பாய் எண்ணெயை 241 டாலரிலிருந்து 1065 டாலராக உயர்த்தியது. 1979–லும் 1981–லும் இது மீண்டும் மீண்டும் உயர்த்தப்பட்டு, தற்போது 3500 டாலராக உள்ளது. இந்தப் பயங்கர விலை உயர்வு, மேற்கு நாடுகளின் அந்நியச் செலாவணியைக் கடுமையாகப் பாதித்தது. இந்தியா போன்ற வளர்ச்சியடையும் நாடுகளுக்குத் தாங்கமுடியாத பெரும் சுமையாயிருந்தது.

மேற்கு ஆசியாவில் தோன்றும் அரசியல் குழப்பங்கள், எண்ணெய் ஏற்றுமதியைப் பாதிக்கக்கூடியவைகளாக இருக்கின்றன. சான்றாக 1956–ஆம் ஆண்டு சூயஸ் கால்வாய்த் தகராறின்போது கால்வாய் அடைக்கப்பட்டுவிட்டதால், எண்ணெய் ஏற்றுமதி பெரும் பிரச்சனையாகிவிட்டது. அதுபோல் 1980 செப்டம்பரிலிருந்து ஈரான் – ஈராக போர் காரணமாக அந்நாடுகளில் எண்ணெய் உற்பத்தி குறைந்தது. இது மேற்கு நாடுகளில் கடும் கட்டுப்பாடுகளை உண்டு பண்ணியது.

## மத்தியக் கிழக்கு நாடுகள் (Middle Eastern Countries)

பொதுவாக ‘‘மத்தியக் கிழக்கு’’ எனப்படும் ‘‘மேற்கு ஆசியா’’, சர்வதேச அரசியல் உறவுகளில் முக்கிய இடத்தை வகிக்கின்றனது. பாகிஸ்தானுக்கு மேற்கில் மத்திய தரைக்கடல், தெற்கில் அரபிக் கடல், வடக்கில் கருங்கடல், காஸ்பியன் கடல், ஆகிய கடல்கள் சூழ்ந்த நிலப்பரப்பே மேற்கு ஆசியா எனப்படுகிறது. இந்நாடுகளுடன் ஆப்பிரிக்கா கண்டத்தில் உள்ள எகிப்தும், பண்பாட்டு, மொழி, இன ரீதியில் ஒன்றுபட்டிருந்ததால், அந்நாடும் மத்தியக்கிழக்குப் பகுதியில் உள்ளடங்கியதாகக் கருதப்படுகிறது. மற்றும் ஈரான், ஈராக், ஆப்கானிஸ்தான், லெபனான், சிரியா, துருக்கி, ஜோர்டான், சௌதி அரேபியா ஆகிய முஸ்லீம் நாடுகளும், இஸ்ரேல் நாடும், மேற்கு ஆசியப் பகுதியில் அடங்கியுள்ளன. இப்பகுதியில், வரலாற்றுக் காலந்தொட்டே சர்வதேச அரசியல் முக்கியத்துவம் பெற்று வருகிறது. அதற்கான காரணங்கள் பல.

முதலாவதாக, இப்பகுதி பண்டைய நாகரீகத் தொட்டிலாக விளங்கியது. நைல்நதிச் சமவெளியில் எகிப்திய நாகரீகமும், மெசபடோமியச் சமவெளியில் சுமேரிய நாகரீகமும் கி.மு.2000 ஆண்டுகளுக்கு முன்பே செழித்தோங்கியிருந்தது.

இரண்டாவதாக, புவியியல் அமைப்பு முறையில் இப்பகுதி மூன்று கண்டங்கள் சந்திக்கும் இடத்தில் அமைந்துள்ளது. ஆசியா, ஐரோப்பா, ஆப்பிரிக்கா ஆகிய மூன்று கண்டங்கள் இங்கு சந்திக்கின்றன.

மூன்றாவதாக, உலகின் பல்வேறு பகுதிகளை இணைக்கும் நீர், நில, ஆகாய மார்க்கங்கள் இப்பகுதி வழியாகவே செல்கின்றன. குறிப்பாக, கிழக்கு மேற்கு நாடுகளிடையில் உள்ள போக்குவரவுத் தொலைதூரத்தைப் பாதியாகக் குறைக்கும் சூயஸ் கால்வாய் இங்குதான் உள்ளது. கெய்ரோ, பெய்ரூட், டமாஸ்கஸ், பாக்தாத் போன்ற சர்வதேச ஆகாய விமானத் தளங்களும் இங்குதான் உள்ளன.

நான்காவதாக, உலகின் மாபெரும் சமயங்களான கிறிஸ்துவமும், இஸ்லாமும் இங்குதான் தோன்றியுள்ளன. மற்றும் ஸொராஸ்டிரியன் சமயம், யூத சமயம் ஆகியவற்றின் தாயகமாகவும் விளங்குகிறது. இச்சமயம் சார்ந்த புனித இடங்கள், குறிப்பாக மெக்கா, மெதினா, ஜெருசலேம் ஆகியவை இங்குதான் அமைந்துள்ளது. புனித இடங்களில் ஆதிக்கம் பெறுவது குறித்து இரு சமயத்தவர்களிடையே நீண்ட காலம் போராட்டங்கள் நடைபெற்றுள்ளன. அவற்றுள் இடைக்காலத்தில் நடைபெற்ற சிலுவைப் போர்கள் முக்கியமானவை.

ஐந்தாவதாக, அமெரிக்க–ரஷ்ய கெடுபிடிப்போர் காரணமாக மத்திய கிழக்கு இராணுவ முக்கியத்துவம் பெற்ற இடமாகிவிட்டது. துருக்கியும், ஈரானும் ரஷ்ய எல்லையையொட்டி இருப்பதால், அந்நாடுகளில் அமெரிக்கச் செல்வாக்கு ஏற்படுவதை ரஷ்யா தடுக்க முனைகிறது. ஆனால், ரஷ்யாவின் ‘அடிவயிற்றில் தாக்குவதற்கு’ வசதியான தளமாக இந்நாடுகள் அமைந்திருப்பதாக அமெரிக்கா கருதி, அந்நாடுகளோடு இராணுவ ஒப்பந்தங்கள் செய்து கொள்ள முன்வந்தது. பேராசிரியர் எஸ்.என்.தார் கூறுவது போல், ச.வ்தேசக் கம்யூனிசத்திற்கு எதிராக பாதுகாப்பு செய்ய ஓர் இராணுவ முக்கியத்துவம் வாய்ந்த வளத்தை சுதந்திர உலகிற்கு மத்திய கிழக்கு கொடுக்கிறது.

ஆறாவதாக, கருப்புத் தங்கம் எனப்படும் எண்ணெய் வளம் மத்திய கிழக்கின் முக்கியத்துவத்தை மேலும் அதிகரித்துள்ளது. உலகின் எண்ணெய் வளத்தின் 60 சதவிகிதம் மத்திய கிழக்கு மண்ணில்தான் புதைந்துள்ளது. அவ்வளத்தின் அடிப்படை மீதுதான் மேற்கு நாடுகளின் தொழில் வளர்ச்சியும், நாகரீக முதிர்ச்சியும் கட்டுப்பட்டிருப்பதால், ஒவ்வொரு நாடும் அவ்வளத்தின் மீது தங்கள் கட்டுப்பாட்டை நிறுவ முயன்றன.

ஏழாவதாக, முதல் உலகப்போர் சமயத்தில் அரேபிய உலகில் எழுச்சியுற்ற அரேபியத் தேசியம் மத்திய கிழக்கில் வலுவுள்ள அரசியல் சக்தியாக உருவெடுத்தது. போர்ச்சமயத்தில் துருக்கியருக்கெதிராகப் பிரிட்டீஷாரால் தூண்டிவிடப்பட்ட அத்தேசிய உணர்வுகள், போருக்குப்பின் அவர்களுக்கெதிராகவே திரும்பியது. இரண்டாம் உலகப்போருக்குப் பின், அரேபியர்களிடையே பண்பாட்டு அரசியல் ஒருமைப்பாட்டை உருவாக்கும் பொருட்டு, **(1945)** **‘அரபுலீக்’** என்ற ஒன்றியம் நிறுவப்பட்டது குறிப்பிடத்தக்கது.

எட்டாவதாக, மத்திய கிழக்கில் பொதுவாக அரேபியர்கள் செல்வாக்கு அதிகமாக இருந்தபோதிலும், பிற தேசிய இனத்தவர்களும் அங்கு வாழ்ந்து வந்தனர். துருக்கியிலும், ஆப்கானிஸ்தானத்திலும் துருக்கிய இனத்தவரும், பாரசீகத்தில் ஈரானிய இனத்தவரும் வாழ்ந்து வந்தனர். பாலஸ்தீனத்தில் குறிப்பிடத்தக்க அளவில் யூத இனத்தவர்கள் வாழ்ந்தனர். மற்றும் குர்டிஷ் இனத்தவர்களும் வாழ்ந்தனர். இவ்வினத்தவர்களுக்கிடையில் நல்லுறவு நிலவியதில்லை. சமய ரீதியில் பொதுவில் அனைவரும் இஸ்லாமியர்களாகத் தோன்றிய போதிலும், அதனுள்ளும் உட்பிரிவுகள் இருந்தன. சான்றாக, பாரசீகத்தில் வாழ்ந்த இஸ்லாமியர் ஸியா பிரிவைச் சேர்ந்தவர்கள். இவர்களுக்கும் பிற நாடுகளில் வாழ்ந்த சன்னிப் பிரிவினருக்குமிடையில் மோதல்கள் நிகழ்ந்தவண்ணமிருந்தன. மற்றும் ஆர்மீனியர்களும், கிறிஸ்தவர்களும் வாழ்ந்து வந்தனர். இச்சிறுபான்மையினர், பல பூசல்கள் தோன்றக் காரணமாயிருந்தனர்.

இறுதியாக, அரேபியர்களின் தேசிய உணர்வுகளுக்கு எதிராக ‘‘சீயோனிஸம்’’ (Zionism) அதாவது பாலஸ்தீனத்தில் யூதர்களுக்கு ஒரு தாயகம் (இஸ்ரேல் நாடு) நிறுவப்பட்டது. பல சிக்கல்கள் தோன்றுவதற்கு காரணமாகிவிட்டது. வல்லரசுகள் தலையீட்டிற்கும் வழிவகுத்துவிட்டது.

**ஐசன்ஹோவர் திட்டம் :**

மத்திய கிழக்கின் புவியியல் முக்கியத்துவத்தையும், எண்ணெய் வளத்தையும் உணர்ந்த அமெரிக்கா, அங்கு தன் செல்வாக்கை நிலைநாட்டத் திட்டமிட்டது. அதன் விளைவாக அதிபர் ஐசன்ஹோவர் ஒரு பொருளாதார உதவித் திட்டத்தை வெளியிட்டார்.

**பாக்தாத் இராணுவ ஒப்பந்தம் :**

பொருளாதார உதவித் திட்டத்தை தொடர்ந்து, இராணுவ ஒப்பந்தம் செய்ய விரும்பியது. அதன் பயனாக, பாக்தாத் இராணுவ ஒப்பந்தம் கையெழுத்தானது. இதில் பாகிஸ்தான், ஈரான், ஈராக், துருக்கி ஆகிய நாடுகள் இணைந்தன.

**இரஷ்ய உறவு :**

மத்திய கிழக்கில் அமெரிக்காவின் செல்வாக்கு வளர்வதைக் கண்ட இரஷ்யா, அதற்கு எதிராக அப்பகுதியிலுள்ள நாடுகளுக்கு பொருளியல் இராணுவ உதவி அளிக்க முன்வந்தது. எகிப்து, சிரியா போன்ற நாடுகளுக்கு அவ்வுதவிகளை வழங்கியது.

**அரபு—இஸ்ரேல் போர்கள் :**

இப்போர்களில் இரஷ்யா அரபு நாடுகளை ஆதரித்தபோது, அமெரிக்கா இஸ்ரேலுக்குத் தீவிர ஆதரவளித்தது. இவ்வாறு வல்லரசு தலையீடு காரணமாக மத்திய கிழக்குப் பகுதி வல்லரசுகளின் கெடுபிடிப் போர்க்களமாயிற்று.

## பாலஸ்தீதீப் பிரச்சனை (அரபு – இஸ்ரேல் போர்கள்) (Palestinian Issue)

மேற்கு ஆசியாவில் அமைந்துள்ள பாலஸ்தீனம், சிறப்புமிக்க வரலாற்றுப் பாரம்பரியங்களைக் கொண்டது. யூத சமயமும், கிறிஸ்தவ சமயமும் அங்குதான் தோன்றின.

எனவே, அச்சமயம் சார்ந்த புனித இடங்களும் (ஜெரூசலோம்) பாலஸ்தீனத்தில் அமைந்துள்ளன. கி.பி.7–ஆம் நூற்றாண்டில் அரேபியர் அதனைக் கைப்பற்றினர். அங்குள்ள ஜெரூசலேமில் அல் அகூஷா என்ற புகழ்ப் பெற்ற மசூதியைக் கட்டினர். அதன்பின் அந்நகர் முஸ்லீம்களின் புனித ஸ்தலமாகவும் ஆனது. பாலஸ்தீனம் புகழ் மிக்க ரோமானியப் பேரரசு, பைசாண்டியப் பேரரசு, உமயத் மற்றும் அப்பாஸித் கலிபாக்களின் பேரரசு, உதுமானியப் பேரரசு ஆகிய பேரரசுகளின் ஆதிக்கத்தின் கீழிருந்தது. முதல் உலகப் போருக்குப் பின், அது பிரிட்டிஷ் மாண்டேட் ஆட்சிப் பகுதியாக வந்தது.

**சியோனியம் (Zionism) :**

கி.பி. முதல் நூற்றாண்டில் பாலஸ்தீனம் ரோமானியப் பேரரசின் மாநிலமாக இருந்தபோது, யூதர்கள் அப்பேரரசின் ஆதிக்கத்தை எதிர்த்து கிளர்ந்தெழுந்தனர். கி.பி.70–ல் ரோமானியத் தளபதி டைட்டஸ், ஜெரூசலேமின் மீது படையெடுத்து அதனைத் தாக்கி அழித்து யூதர்களை சிறைப்பிடித்துச் சென்றார். அதன்பின், யூதர்கள் சிதறியோடினர். ஐரோப்பாவில் பல்வேறு நாடுகளில் குடிபுகுந்தனர். சிறுபான்மையினரான அவர்கள், கொடுமைக்கு உட்படுத்தப்பட்டார்கள். பத்தொன்பதாம் நூற்றாண்டில் மனிதாபிமான இயக்கங்களின் வளர்ச்சிக்குப் பின், அவர்கள் வாழ்க்கை நிலை ஏற்றம் பெற்றது. வங்கியாளர்களாகவும், அறிவியல் வல்லுநர்களாகவும் விளங்கினர். அவர்கள் தங்களுக்கென தாயகம் ஒன்று தேவை என்று உணர்ந்தனர். தியோடர் ஹெர்சல் என்ற யூத செல்வந்தர், யூதர்களுக்கென தனித்தாயகம் அமைக்க ஒரு இயக்கத்தைத் தொடங்கினார். அதுதான் சியோனிசம் எனப்பட்டது. அதன்படி பாலஸ்தீனத்தில் பழங்காலத்தில் யூதர்கள் வாழ்ந்த சீயோன் குன்றுப் பகுதிகளில் யூதர்களைக் குடியமர்த்தத் திட்டமிட்டார்.

**பால்ஃபர் அறிக்கை (1917) (Balfour Report) :**

முதல் உலகப்போரின்போது யூதர்களின் ஆதரவைப் பெறும் பொருட்டு பிரிட்டிஷ் வெளியுறவு அமைச்சர் பால்ஃபர் என்பார் ஒரு அறிக்கையை வெளியிட்டார். பாலஸ்தீனத்தில் வாழும் அரேபியரின் உரிமைகளுக்குகுப பாதகமில்லாத வகையில் யூதர்களுக்குத் தாயகம் நிறுவ பிரிட்டிஷ் அரசு ஆதரவளிக்கும் என அதில் குறிப்பிட்டிருந்தார். இது யூத தேசத்தன் 'மகாசாசனம்' எனப் போற்றப்படுகிறது. போரில் துருக்கி தோல்வியுற்றது. பாலஸ்தீனம் பிரிட்டிஷ் மாண்டேட் பகுதியாக ஆக்கப்பட்டது.

**யூதர் குடியேற்றம் :**

அதன்பின் அங்கு யூதர்கள் பெருமளவில் குடியேறத் தொடங்கினர். தொடக்கத்தில் அதனைக் காணாதிருந்த அரேபியர், நாளடைவில் யூதர் எண்ணிக்கைப் பெருக்கம் கண்டு அதிர்ச்சியுற்றனர். யூதர் குடியேற்றம் தங்கள் நலனுக்குப் பாதகம் ஏற்படுத்தும் எனக் கண்டதால், யூதர் குடியேற்றத்தை எதிர்த்தனர். அதனால் இரு இனத்தவர்களுக்கிடையில் சச்சரவு மூண்டது. தீவிரவாதிகள் பயங்கர நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

**பிரிட்டிஷ் மாண்டேட் முடிவு :**

இரு தரப்பினரிடையே மூண்ட சச்சரவைத் தீர்க்க ஆங்கிலேயர் பல குழுக்களை நிறுவினர். வெள்ளையறிக்கை வெளியிட்டனர். பயனில்லை. எனவே, பாலஸ்தீனப்

பிரச்சனைக்குத் தீர்வு காண்பதற்கு அப்பிரச்சனையை ஐ.நா. சபைக்கு எடுத்துச் சென்றனர். ஐ.நா. சபை அப்பிரச்சனையைத் தீர்க்க ஒரு குழுவை நிறுவியது. அக்குழு பாலஸ்தீனத்தை மூன்று பகுதியாகப் பிரிக்கப் பரிந்துரை செய்தது. ஒரு பகுதி யூதர்களுக்கென்றும், மற்றொரு பகுதி பாலஸ்தீன அரேபியர்களுக்கும், மூன்றவாது பகுதி (ஜெரூசலேம்) பன்னாட்டுக் கண்காணிப்பிற்கும் வழங்கப்பட்டன. இப்பிரிவினைத் திட்டத்தை யூதர்கள் ஏற்றுக் கொண்டபோது, அரேபியர் நிராகரித்தனர். எனவே, பாலஸ்தீனத்தல் குழப்பமும் கொந்தளிப்பும் ஏற்பட்டது. நிலைமை மிதமிஞ்சிப் போவதைக் கண்ட பிரிட்டிஷ் அரசு, **1948** மே **15–**ஆம் நாள் பாலஸ்தீனத்தின் மீதான தங்கள் மாண்டேட் ஆட்சியை முடித்துக் கொள்ளப்போவதாக அறிவித்தது.

**இஸ்ரேல் தோற்றம் (1948) :**

உடனே யூதர்கள் ஐ.நா. குழு பரிந்துரையின்படி தங்களுக்கு ஒதுக்கப்பட்ட இடங்களில் தங்கள் ஆதிக்கத்தை நிறுவிக் கொண்டனர். மே **14–**ஆம் நாள் இரவு யூதர்கள் தங்கள் தாயகத்தின் சுதந்திரத்தைப் பிரகடனம் செய்தனர். அதற்கு இஸ்ரேல் எனப் பெயரிட்டனர். டெல் அவிவ் அதன் தலைநகரானது. டாக்டர் வெய்ஸ்மேன் என்பவர் இஸ்ரேல் குடியரசின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். உடனே அந்நாடு ஐ.நா. உறுப்பினராகவும் சேர்த்துக் கொள்ளப்பட்டது.

**முதல் அரபு – இஸ்ரேல் போர் (1948 – ’49) :**

இஸ்ரேல் நாட்டை அமெரிக்காவும் ரஷ்யாவும் அங்கீகரித்தன. ஆனால், அரபு நாடுகளான சிரியா, லெபனான், ஜோர்டான், எகிப்து, ஈராக் ஆகிய நாடுகள் அங்கீகரிக்க மறுத்ததோடன்றி, அந்நாட்டின் மீது போர்த்தொடுத்தன. **20,000** பேர் கொண்ட அரபு நாடுகள் படையை **10,000** பேர் கொண்ட யூதர் படை தோல்வியுறச்செய்தது. **200–**க்கும் மேற்பட்ட அரேபிய கிராமங்களையும், ஹைபா, ஜாபா போன்ற நகரங்களையும் கைப்பற்றிக் கொண்டது. ஐ.நா. சபை, கவுண்ட் என்பவரை பாலஸ்தீனத்தற்கு அனுப்பி பேச்சுவார்த்தை நடத்தப் பணித்தது. அவர் போர் நிறுத்தம் ஏற்படச் செய்வதில் வெற்றி பெற்றார். மேற்கொண்டு அமைதிக்கான ஏற்பாடுகளைச் செய்யுமுன் அவர் யூத பயங்கரவாதியால் கொல்லப்பட்டார். போர் மீண்டும் தொடங்கியது. இஸ்ரேல் நாட்டினுள் வாழ்ந்த ஒரு இலட்சம் அரேபியர் வெளியேறினர்.

போர் நிறுத்ததிற்கு ஏற்பாடு செய்ய ரால்ப் புஞ்ச் என்பவர் ஐ.நா. நடுவராக நியமிக்கப்பட்டார். அவரது அயராத முயற்சி காரணமாகப் போர்நிறுத்தம் ஏற்பட்டது.

இப்போரில், யூதர்கள் தங்களைவிட பரப்பிலும் மக்கள் தொகையிலும் பல மடங்கு அதிகமுள்ள அரபு நாடுகளைத் தோற்கடித்தது வியப்பிற்கு உரியதாயிருந்தது. அதற்கு முக்கியக் காரணம், யூதர்களின் மன உறுதியாகும். இரண்டாயிரமாண்டு தவமிருந்து பெற்ற தங்கள் தாயகத்தன் சுதந்திரத்தைக் காக்க எவ்வித தியாகத்தையும் புரியத் தயாராயிருந்தனர். இரண்டாவதாக, மேற்கு நாடுகளின் ஆதரவும் உதவியும் இஸ்ரேலுக்கு இடைவிடாமல் கிடைத்தன. இறுதியாக, அரேபியரின் ஒற்றுமையின்மையும் பின்தங்கிய நிலையும், யூதர்களுக்குச் சாதகமாக இருந்தன.

இந்தப் போரினால் ஐ.நா. பிரிவினைத் திட்டப்படி யூதர்களுக்கு ஒதுக்கப்பட்ட இடங்களைவிட அதிக இடங்களைக் கைப்பற்றிக்கொண்டனர். ஆனால், தோல்வியுற்ற அரேபியர் துவண்டு போய்விடவில்லை. இஸ்ரேல் பகுதி மீது பல துணிகரத் தாக்குதல்களைத் தொடுத்துக்கொண்டேயிருந்தனர்.

**1956–ஆம் ஆண்டுப் போர் :**

**1956–**ல் எகிப்து அதிபர் நாஸர், சூயஸ் கால்வாயை நாட்டுடமை ஆக்கினார். அதனால் ஆத்திரமடைந்த பிரிட்டனும் பிரான்சும் வன்முறையில் அக்கால்வாயை மீட்கத் திட்டமிட்டன. அப்பகுதியில் எகிப்தின் எதிரியான இஸ்ரேலுடன் சதித்திட்டம் தீட்டினர். இஸ்ரேலை எகிப்து மீது படையெடுக்கத் தூண்டினார். இஸ்ரேலும் எகிப்து மீது தனிப்பட்டப் பகைமை இருந்தததால், அந்நாட்டைத் தாக்கியது. காஜா பகுதி மற்றும் சினாய் பகுதிகளைப் கைப்பற்றி சூயஸ் கால்வாயை நெருங்கியது. பிரிட்டனும், பிரான்சும் எகிப்து மீது குண்டு வீச்சு தாக்குதல் தொடுத்தன. இந்த ஆக்கிரமிப்புப் போர் பற்றி உடனடியாக ஐ.நா. பாதுகாப்புச் சபைக்கு புகார் செய்யப்பட்டது. இச்சமயத்தில் எகிப்துக்கு உதவி புரிய இரஷ்யா முன்வந்தது. போரை உடனடியாக நிறுத்தாவிட்டால் ஏவுகணை கொண்டு தாக்கப்போவதாக பிரிட்டன், பிரான்சை மிரட்டியது. அமெரிக்காவும் அந்நாடுகளின் செயலைக் கண்டித்ததால் பிரிட்டனும், பிரான்சும் போர் நிறுத்தத்திற்கு இணங்கின. இஸ்ரேலும் தன் படைகளைத் திரும்ப அழைத்துக் கொண்டது.

**1967–ஆம் ஆண்டுப் போர் :**

**1956–**ஆம் ஆண்டில் திடீர் தாக்குதல் நடத்திய இஸ்ரேலை எகிப்து அதிபர் நாசர் மன்னிக்கவுமில்லை, மறக்கவும் இல்லை. தம் படை வலிமையைப் பெருக்கி, இஸ்ரேலைப் பழிவாங்கத் திட்டமிட்டார். பிற அரபு நாடுகளும் இஸ்ரேல் மீது ஆத்திரம் கொள்வதற்குக் காரணங்களிருந்தன.

**1.** அரேபிய – இஸ்ரேல் போர் காரணமாக ஒரு மில்லியனுக்கும் அதிகமான அரேபியர்கள் பாலஸ்தீனத்திலிருந்து அண்டையிலுள்ள அரபு நாடுகளில் அகதிகளாகக் குவிந்தனர். இவர்களைப் பராமரிப்பது அந்நாடுகளுக்கும் பெரும்பளுவாக இருந்தது.

**2.** ஜோர்டான் ஆற்று நீர் தாவா, அரபு இஸ்ரேல் நாடுகளுக்கிடையில் பகைமையையும் பதட்ட நிலையையும் அதிகரித்தது.

**3.** இஸ்ரேலுக்கும் அரபு நாடுகளுக்கும் குறிப்பாக சிரியாவிற்கும் இடையில் எல்லைத் தகராறு நிகழ்ந்த வண்ணம் இருந்தது.

**4.** எனவே, எகிப்து அதிபர் நாசர் டிராண் நீர்ச்சந்தியில் இஸ்ரேல் கப்பல்கள் வரக்கூடாதென்று அறிவித்ததோடு, அகாபா வளைகுடாவையும் முற்றுகை இட்டார். இது, இஸ்ரேலின் கடல் வாணிபத்தைப் பாதித்தது.

**5.** காஜா பகுதியில் எகிப்திற்கும் இஸ்ரேரக்குமிடையில் மோதல் ஏற்படுவதைத் தடுக்க ஐ.நா. படைகள் நிறுத்தப்பட்டிருந்தன. இப்போது நாஸர் அப்படைகளை வெளியேறுமாறு

கேட்டுக்கொண்டார். இது, இஸ்ரேலைத் தாக்குவதற்கான முன்னேற்பாட்டுத் திட்டம் என அந்நாடு உணர்ந்தது.

இதனைத் தொடர்ந்து, எகிப்து, சிரியா, ஜோர்டான், ஈராக் நாடுகள் தீவிரமான போர் முன்னேற்பாட்டு நடவடிக்கைகளில் இறங்கின.

அரபு நாடுகள் தன்னைத் தாக்குவது திண்ணம் என்று உணர்ந்த இஸ்ரேல், தாக்குதல் தொடுக்கும் முன்பே அந்நாடுகளின் படைவலிமையைத் தாக்கி அழிக்கத் திட்டமிட்டது. எனவே, 1967 ஜூன் ஆறாம் நாள், இஸ்ரேல், அரபு நாடுகளின் படை நிலைகளைத் தாக்கி அழித்தது. போர் தொடங்கும் முன்னே இஸ்ரேல் வெற்றியை இவ்வாறு உறுதி செய்தது. அதன் பின், போர் நான்கு முனைகளில் நடைபெற்றது.

கோலன் குன்றுகள் காஜா, சினாய், ஜோர்டான், மேற்குக்கரை ஆகிய நான்கு இடங்களில் இஸ்ரேலியர் வெற்றி பெற்றனர். அப்பகுதிகள் முழுவதும் கைப்பற்றப்பட்டன. அத்துடன் ஜெருசலேம் நகர் முழுவதும் இஸ்ரேல் ஆதிக்கத்தின் கீழ் வந்தது.

**பாலஸ்தீனியர் பிரச்சனை :**

ஐ.நா. சபை தலையிட்டு போர்நிறுத்தத்திற்கு வழிவகுத்த இந்த ஆறு நாள் போர், இஸ்ரேலுக்கு மகத்தான வெற்றியாகும். அரபு நாடுகள் தங்கள் அனைத்து ஆற்றலையும் ஒன்றுதிரட்டிப் போர் புரிந்தும், வெற்றி பெற இயலவில்லை. இஸ்ரேல் வெற்றி பெற்றாலும், பாலஸ்தீனப் பிரச்சனை முடிந்துவிடவில்லை. போரின்போது, இஸ்ரேல் தான் கைப்பற்றிய இடங்களிலிருந்து வெளியேற மறுத்தது. ஜோர்டான் மேற்குப் பகுதியில் வாழ்ந்த இலட்சக்கணக்கான பாலஸ்தீனிய அரேபியர் நாடு இழந்தனர். அவர்கள் அண்டை நாடான ஜோர்டானில் குடிபுகுந்தனர். அங்கு பாலஸ்தீன விடுதலை இயக்கம் என்ற அமைப்பினை நிறுவினர். அதன் தலைவராக யாசர் அராபத் விளங்கினார். அவர்கள் தங்கள் தாயகத்தை மீட்க (ஜோர்டான் மேற்கு கரைப்பகுதி) அயராது உழைத்தனர். பயங்கர வன்முறை இயக்கங்களைத் தொடங்கினர். இஸ்ரேல் மீது மறைந்திருந்து திடீர் தாக்குதல் தொடுத்தனர்.

## 1973–ஆம் ஆண்டுப் போர் :

எகிப்தின் புதிய அதிபர் அன்வர் சதாத், 1967–ஆம் ஆண்டு ஏற்பட்ட இழிவைத் துடைக்கத் திட்டமிட்டார். இரஷ்யாவிடமிருந்து நவீன போர்க்கலன்களை வாங்கிப் படையை நவீனப்படுத்தினார். இதற்கிடையில் முஸ்லீம்களை ஆவேசங்கொண்டெழச் செய்யும் நிகழ்ச்சி ஒன்று நடந்துவிட்டது. ஜெருசலேமிலுள்ள முஸ்லீம்களின் மசூதியான அல்அக்ஷா தீ விபத்திற்குள்ளனாது. உடனே உலக முஸ்லீம் நாடுகள் மொராக்கோவில் கூடி, விபத்திற்கு இஸ்ரேல்தான் காரணம் என்று கூறி புனித இடங்களை மீட்க உறுதி பூண்டன.

எனவே, 1973 அக்டோபர் 6–ல் திடீரென எகிப்து, இஸ்ரேல் மீது தாக்குதல் தொடுத்தது. தொடர்ந்து சிரியா, லெபனான், ஜோர்டான் ஆகிய நாடுகளும் போர் தொடுத்தன. எதிர்பாராத இந்தத் தாக்குதலால், இஸ்ரேல் நிலைகுலைந்தது. எகிப்து, தான் ஏற்கனவே இழந்த சில இடங்களை மீட்டது. ஆனால், இஸ்ரேல் விரைவில் திடீர்த் தாக்குதலின் அதிர்ச்சியிலிருந்து விடுபட்டு எதிர்த்தாக்குதல் தொடுக்கத் தொடங்கியது. அமெரிக்காவும் மேற்கு நாடுகளும் இஸ்ரேலை ஆதரித்தபோது, இரஷ்யா மற்றும் அணிசேரா நாடுகள் அரபு நாடுகளை ஆதரித்தன.

உடனே, அரபு நாடுகள் மேற்கு நாடுகளைப் பணியவைக்க, தங்கள் எண்ணெய் ஆயுதத்தைப் பயன்படுத்தின. அந்நாடுகளுக்கு எண்ணெய் ஏற்றுமதியை நிறுத்தின. விலையை உயர்த்தின. இதற்கிடையில் ஐ.நா. சபை போர்நிறுத்தத்திற்கான ஏற்பாடு செய்தது.

**எகிப்து – இஸ்ரேல் அமைதி உடன்படிக்கை :**

**1973–**ஆம் ஆண்டுப் போர், எகிப்தைப் பொறுத்தமட்டில் வெற்றி தோல்வியில்லாத முடிவு. கால் நூற்றாண்டுகளுக்கும் மேலாக இடைவிடாப் போரினால் களைப்புற்ற இரு நாடுகளும் நடைமுறை நிலையை அனுசரித்து, சற்று விட்டுக்கொடுத்து அமைதி காண முன்வந்தன. அமெரிக்க வெளியுறவுச் செயலர் ஹென்றி கிஸ்ஸிங்கர், இரு நாட்டுத் தலைநகர்களுக்கும் பலமுறை தூது சென்றதன் பயனாக, **1974** ஜனவரி **18–**ல் இரு நாடுகளுக்கிடையில் அமைதி ஒப்பந்தம் கையெழுத்தானது. அதேபோல் சிரியாவும் இஸ்ரேலும் அமைதி ஒப்பந்தம் செய்து கொண்டன. இஸ்ரேல் சினாய்ப் பகுதியிலிருந்து வெளியேற இணங்கியது. சிரியாவும் குன்றுகளுக்கு அப்பால் உள்ள இடங்களிலிருந்து பின்வாங்க இணங்கியது.

**1978–**ல் கேம்ப் டேவிட் என்ற இடத்தில் எகிப்து அதிபர் அன்வர் சதாத்தும், இஸ்ரேல் பிரதமர் பெகின் என்பவரும் சந்தித்துப் பேசியதன் விளைவாக, மறு ஆண்டில் வெள்ளை மாளிகையில் இரு நாடுகளும் மீண்டும் ஒரு உடன்படிக்கையில் கையெழுத்திட்டன. எகிப்தின் இந்த நடவடிக்கை தங்கள் முதுகில் குத்திய செயலாகும் என பிற அரபு நாடுகள் கருதின. எனவே, எகிப்தைப் பின்பற்றி பிற அரபு நாடுகள் இஸ்ரேலுடன் ஓர் அமைதி ஒப்பந்தம் செய்துகொள்ள முன்வரவில்லை.

**சுதந்திர பாலஸ்தீன மாநாடு (1988) :**

பாலஸ்தீன அரேபியர் இன்னமும் நாடற்ற அகதிகளாக ஜோர்டானிலும் அதன் பின் லெபனானிலும், அல்ஜுரியாவிலும் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். ஜோர்டான் நதியின் மேற்குக் கரைப் பகுதியில் அவர்களுக்கு சுதந்திர நாடு அமைத்துக் கொடுக்க வேண்டும் என்ற கோரிக்கைக்கு உலக நாடுகள் ஆதரவு கொடுக்க வேண்டும் என்ற கோரிக்கைக்கு உலக நாடுகள் ஆதரவு அதிகரித்துக் கொண்டிருக்கிறது. அமெரிக்காகூட பாலஸ்தீன விடுதலை இயக்கத்தின் மீதான தடையை **13** ஆண்டுகளுக்குப் பின் நீக்கியது. இதற்கிடையில் பாலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவரான யாசர் அராபத், பாலஸ்தீன நாட்டின் (மேற்கு கரை) சுதந்திரப் பிரகடனத்தை **1988–**ல் வெளியிட்டார். இதனை இந்தியா உட்பட பல நாடுகள் அங்கீகரித்தன.

**ஈராக் போர் :**

**1990–**ல் நடைபெற்ற ஈராக் போரின்போது, அந்நாட்டு அதிபர் சதாம் ஹுசைன், பாலஸ்தீன அரபுகளின் விடுதலைக்காக அப்போர் நடைபெறுவதாக அறிவித்தார். அராபத் கூட அதனை வரவேற்று ஹுசைனுக்கு ஆதரவளித்தார். ஆனால், சிரியா, எகிப்து போன்ற அரபு நாடுகள், ஈராக்கிக்கு எதிராகப் போரிட்டுக் கொண்டிருந்ததை மறந்துவிட்டார்.

**மேற்கு ஆசிய அமைதி மாநாடு :**

ஈராக் போர், வல்லரசுகளுக்கு ஒரு விஷயத்தை அறிவுறுத்திற்று. மேற்கு ஆசியச் சிக்கலுக்கு (அதாவது பாலஸ்தீன மற்றும் அரபு இஸ்ரேல் சச்சரவுகளுக்கு) தீர்வு காணுவதை இனியும் ஒத்திப்போடக்கூடாது என்று உணர்ந்தனர். பன்னாட்டரசியல் அரங்கில் வல்லரசுகளின் கெடுபிடிப்போர் சகாப்தம் முடிந்து நட்புறவுடன் கூடிய ஒத்துழைப்பு சகாப்தம் தொடங்கிய இவ்வேளையில் அமைதிப் பேச்சுவார்த்தைகளைத் தொடங்க, பூர்வாங்க முயற்சிகள் எடுக்கப்பட்டன. 1981 ஜூலையில் இரஷ்ய அதிபர் கோர்ப்பசேவும் அமெரிக்க அதிபர் ஜார்ஜ் புஷ்சும் மேற்காசிய சிக்கல்களுக்குத் தீர்வு காண மாநாடு கூட்டப்படும் என்று அறிவித்தனர். அதன்படி, 1991 அக்டோபர் 30–ல் ஸ்பெயின் தலைநகர் மாட்ரிட்டில் மேற்கு ஆசிய அமைதி மாநாடு நடைபெற்றது.

**வாஷிங்டன் உடன்பாடு (1993) :**

மாட்ரீட்டைத் தொடர்ந்து, வாஷிங்டனிலும், மாஸ்கோவிலும், யூத பாலஸ்தீனத் தலைவர்களுடன் கூடிப் பேசியதன் விளைவாக 1993 செப்டம்பரில் வரலாற்றுச் சிறப்புமிக்க இஸ்ரேல் – பாலஸ்தீன உடன்பாடு கையெழுத்தானது. இது, 45 ஆண்டு கால அரபு – இஸ்ரேல் சச்சரவு தீர வழிவகுத்தது. அதன்படி, முதலில் காஜா பகுதி மற்றும் ஜெரிக்கோ நகர்புறப் பகுதிக்கும் சுயாட்சி அளிக்க இஸ்ரேல் இணங்கியது.

அதன்பின் 1995 செப்டம்பர் 28–ல் மற்றுமோர் வரலாற்றுச் சிறப்புமிக்க உடன்பாடு வாஷிங்டனில் கையெழுத்தானது. இது, மேற்கு கரைப்பகுதியில் இருந்து இஸ்ரேல் படிப்படியாக வெளியேற வழிவகுத்தது.

**அமைதி உடன்பாட்டிற்கு இடையூறுகள் :**

இந்த ஒப்பந்தம் செயல்பாட்டிற்கு வந்தபோது 1995 நவம்பர் முதல் தேதி, அமைதிப் பேச்சுவார்த்தை வீரர் இஸ்ரேல் பிரதமர் இட்சாத் ராபினை ஒரு தீவிரவாத யூத இளைஞன் சுட்டுக்கொன்றான். மறு ஆண்டில் இஸ்ரேலில் நடைபெற்றப் பொதுத் தேர்தலில் யூத பழமைவாதக் கட்சி வெற்றி பெற்றது. அக்கட்சியின் தலைவர் நெதன்யாகு பிரதமரானார். அவர் மேற்கு கரைப் பகுதியில் உள்ள சில இடங்களிலிருந்து வெளியேற மறுத்தார். அதனால் உடன்பாட்டை நிறைவேற்றுவதில் சிக்கல் ஏற்பட்டது. இறுதியில் அமெரிக்க அதிபர் பில் கிளிண்டனின் இடைவிடா முயற்சி காரணமாக 1998 அக்டோபர் 23–ல் சிக்கல் தீர்க்கப்பட்டது.